# அனுதினமும் தேவனுடன்

ஜூலை ~ ஒக்டோபர் 2024

காலை மாலை எல்லாம் வேளையிலும்
என்னை நடத்தும் உம் கரங்கள் நான் கண்டேன்
எல்லா நெருக்கத்திலும்
என்னை விழாமல் காக்கும்
அன்பின் நல்ல
கர்த்தரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி:

| | | | |
|---|---|---|---|
| ஜூலை, ஒக்டோபர் சகோதரி சாந்தி பொன்று | ஆகஸ்ட் சகோதரர் நியல் பெர்னாண்டோ | செப்டெம்பர் சகோதரி கிரிஷினி சேவியர் | சனிக்கிழமை சகோதரி வஷ்னி ஏனரிஸ் |

**புதிய முயற்சி - புதிய பயிற்சி:**

இம்முறையும் **சனிக்கிழமைக்கான** பக்கம் வாசகர்களாகிய உங்களுடைய தியானத்திற்கென்று ஒதுக்கப்பட்டுள்ளது. தேவ வசனங்களின் உதவியுடன் **நீங்களே வார்த்தையை வாசித்துத் தியானித்து**, உங்கள் சிந்தனைகளை இந்தப் பக்கங்களில் எழுதிக்கொள்ள ஏதுவாக இந்தப் பக்கங்களைத் தயார்செய்துள்ளோம். இந்த நாட்களின் தியானத்திற்கு உதவியாக **ஆதியாகமம் 10 முதல் 18 வரை** இந்த வெளியீட்டில் தரப்பட்டுள்ளது. இப்புதிய முயற்சிகளில் பயிற்சியெடுங்கள். பயன்பெறுங்கள். உங்கள் கருத்துக்களைத் தெரியப்படுத்துங்கள். நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதினமும் தேவனுடன்

## [DAILY DEVOTIONS]

**ஜூலை – ஒக்டோபர்**

**2024**


நிர்வாக இயக்குனர் :

திரு. மயூக பெரேரா

சத்தியவசன ஊழியங்களின் பொறுப்பாளர் :

திரு. ஜெகராஜ் பெர்ணான்டோ

ஆசிரியர் :

திரு. வஷ்னீ ஏனர்ஸ்ட்



தபால் முகவரி:

சத்தியவசனம்
த.பெ. 1012,
கொழும்பு,
இலங்கை.

நேரில்:

120A,
தர்மபால மாவத்தை,
கொழும்பு 7,
இலங்கை.

(+94) 114691500 | (+94) 76833 6006

sathiyavasanam@backtothebible.lk

www.sathiyavasanam.lk | www.Backtothebible.lk




இது ஒரு சத்தியவசன வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாசகர்களுக்கு,

என்னை யாரும் புகழவில்லை, பாராட்டவில்லை என நீங்கள் நினைத்ததுண்டா? 'அந்த ஸ்திரீகள் ஆடிப்பாடுகையில்: சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடினார்கள்.' (1சாமுவேல் 18:7) தாவீது பெலிஸ்தியனைக் கொன்று திரும்பி வருகின்றவேளையில் நடந்த மிக முக்கிய சம்பவம் இது. அதுவே அவனது வாழ்வுக்கும் ஆபத்தாக மாறியது என்பதை வசனம் 8-9 கூறுவதை நாம் மறந்து விடக்கூடாது. தாவீதை காய்மகாரமாக பார்க்கவும் அழிக்கவும் சவுல் ராஜா முற்பட்டது இச்சம்பவத்திற்குப் பின்பே.

'கேட்காமலே வரும் புகழை, பாராட்டை' வெற்றிப்பாதையில் வந்த ஒவ்வொருவரும் கட்டாயமாக கடப்பார்கள். தாவீது தானாக அந்தப் பாடல்களை எழுதிக் கொடுக்கவில்லை. பணம் கொடுத்தும் தன்னைப் புகழ்ந்து பாடவும் திட்டமிடவில்லை. தன்னை பாராட்டுமாறு கோரிக்கையோ வேண்டுகோளையோ முன்வைக்கவும் இல்லை. கேட்டு வாங்குவது அல்ல. கேட்காமல் கிடைப்பதே புகழ். அவன் அதிலே நின்று அதை சந்தோஷமாக அனுபவித்து அதிலே அவன் கர்வம்கொள்ள ஆரம்பித்துவிட்டால் அத்துடன் அவனது வாழ்க்கை முடிந்துவிடும். மனிதரது புகழ்ச்சியைப் பார்த்து நாம் மயங்கிவிடக்கூடாது. அதுவல்ல எமது முடிவும் இலக்கும்.

தேவன் ஒருவரை உயரே கொண்டு செல்லும் பாதையில் புகழும் பாராட்டும் தேடி வரும். 'உங்களைப்போல் யாருமில்லை. அவர்களைப் போலல்லாது நீங்கள் நன்றாகச் செய்கின் றீர்கள். சமைக்கின்றீர்கள். பாடுகின்றீர்கள்' என சொல்கையில் அதை ஏற்றுக்கொள்ளுங்கள். ரசியுங்கள். அனுபவியுங்கள். பாராட்டுதலில் மயங்கி லயித்துபோய் நின்றுவிடாதீர்கள். தனக்கு எதிராக பாடிக்கொண்டு வருகையில் அதிலே நிற்கவில்லை. 'கோலியாத் தான்தனது ஒரே வெற்றி. கோலியாத் தான் ஒரே எதிரி என்றும் தாவீது கருதவில்லை. அவன் முன்னேறிச் சென்றான். புகழ்பாடும் பெண்களைக் கடந்து சென்றான்.

எனது குடும்பத்தில், சபையில், வேலை ஸ்தலத்தில் யாரும் நான் செய்கின்றவைகளை அடையாளம் காணவில்லை. ஒருவரும் பாராட்டவில்லை என மனதில் புழுங்கிக்கொண்டு இருக்கின்றீர்களா? அதன் நிமித்தம் செய்யவேண்டிய பொறுப்புக்களை மன விருப்பமின்றி செய்கின்றீர்களா? அதேநேரம் மற்றவர்களுக்கு பாராட்டுதலும் புகழும் கிடைக்கும் வேளை யில் பொறாமைப்படாமல், சந்தோஷத்தை அனுபவித்து தேவனுக்குள் மனமகிழ்ச்சியாய் வாழ்வோமா? 'ஜனங்கள் என் மேல் வைத்த எல்லா கிரீடங்களையும் உம் பாதத்திலே வைக்கிறேன்' என ஒரு தேவ மனிதன் கூறியதுபோல் வாழ்வோமா!

**திரு. ஜெகராஜ் பெர்னான்டோ**
சத்தியவசன ஊழியங்களின் பொறுப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: எபிரெயர் 4:6–13

## வடராஜ்யம் வீழ்ந்தது!

*...ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு... எபிரெயர் 4:11*

ஜூலை 1 திங்கள்

வருடத்தின் பாதியை சீக்கிரமாகவே கடந்து ஒரு புதிய மாதத்திற்குள் வந்துவிட்டோம். தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவில் எவ்வளவுக்கு வளர்ந்திருக்கிறோம்? தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிவதில் எவ்வளவுக்கு ஜாக்கிரதையாக இருந்திருக்கிறோம்? இவற்றை சிந்திப்பது நல்லது. தேவனுடனான உறவின் வளர்ச்சிக்கு நமது கீழ்ப்படிவு தான் அளவுகோல் என்பதை அன்றைய வட ராஜ்யமான இஸ்ரவேல் மறந்தது.

இஸ்ரவேலை ஆண்ட சில ராஜாக்களின் வாழ்க்கையை கவனித்து, அதன் அடிப்படையில் நம்மை ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியம். சாலொமோனின் பாவத்தால் அவருடைய மகனின் ஆட்சிக்காலத்தில் ராஜ்யபாரம் இரண்டாகப் பிளந்தது. வட ராஜ்யத்தின் முதல் ராஜாவாக ரெகொபெயாம் ஆண்டான். அவனது ராஜ்யபாரம் அத்துடன் முடிந்தது. அவன் பொன்னினால் இரண்டு கன்றுக்குட்டிகளைச் செய்வித்து, இவைகளைப் பணிந்துகொள்ளும்படி ஜனங்களையும் வற்புறுத்தி, தன் மனதுக்கு ஏற்றபடி பண்டிகைகளையும் ஏற்படுத்தி, பலியிட்டான். மக்களைத் தேவனைவிட்டு வழி விலகச் செய்த அவனுடைய இந்தப் பாவம் இஸ்ரவேலை ஆண்ட ராஜாக்கள் வாழ்விலும் தொடர்ந்தது. தனது மனைவி யேசபேலின் எண்ணத்துக்கு மதிப்புக்கொடுத்து பாகாலுக்கு வணக்கம் செய்த ஆகாப் வரையும் தொடர்ந்த இந்தப் பாவம், கி.மு.732ல் ஓசெயா இஸ்ரவேலின்மீது ராஜாவாகும் வரைக்கும் தொடர்ந்தது. இத்தனைக்கும் எலியா, எலிசா உட்பட பல தீர்க்கதரிசிகளைக் கர்த்தர் எழுப்பி எச்சரித்திருந்தார். ஆனாலும், “அவர்கள் செவிகொடாமல்... தங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் விட்டுவிட்டு, பாகாலைச் சேவித்தார்கள்.” ஆகையால் கர்த்தர் இஸ்ரவேலின்மேல் மிகவும் கோபமடைந்து, அவர்களைத் தம்முடைய முகத்தை விட்டு அகற்றினார் (2இராஜா.17:14-18). வடராஜ்யம் அசீரியாவினால் சிறைப்பிடிக்கப்பட்டு, கி.மு.722ல் முடிவுக்கு வந்தது.

“அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாகவும் வெளியரங்கமாகவுமிருக்கிறது” (எபி.4:13). நம்மால் எதனையும் கர்த்தருக்கு மறைக்கமுடியாது என்று தெரிந்திருந்தும் நாம் ஏன் அடிக்கடி அவரைத் துக்கப்படுத்துகிறோம்? தமது வார்த்தைக்குக் கீழ்ப்படியும் படிக்கு கர்த்தர் புறவினத்தாரிடமா கேட்டார்? இல்லையே! கீழ்ப்படிவு ஒன்றைத்தவிர கர்த்தர் வேறே எதை நம்மிடம் எதிர்பார்க்கிறார்? நமது செயல்கள், சிந்தனைகள், கற்பனைகள் யாவையும் அவர் அறிந்திருக்கிறார். நாம் அவருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்கள். இஸ்ரவேலை தமது முகத்துக்கு முன்னின்று தள்ளியவர் இன்று நமக்கு அருளியிருக்கும் கிருபையை நமக்குச் சாதகமாக்கிவிடாமல், நம்மை ஆராய்ந்து அவரிடம் ஒப்புவிப்போமாக.

*சிந்தனைக்கு:* இஸ்ரவேல் அன்று வெளிப்படையாகவே பாகாலைச் சேவித்து வழிவிலகிப் போனது. இன்று நமக்கு சோதனையாய் நிற்கிறவை எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
2
செவ்வாய்

## இஸ்ரவேலை ஆண்ட ஆகாப்

*தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய, தன்னை விற்றுப்போட்ட ஆகாபைப்போல ஒருவனுமில்லை.*
*1இராஜா. 21:25*

வேத வாசிப்பு: 1இராஜா. 16:21–22, 28–33

வடராஜ்யத்தின் வீழ்ச்சியை தியானித்தாலும், அதன் முக்கியமான ஒரு ராஜாவாகிய ஆகாப்பைக்குறித்து இன்று கவனிப்போம். மனுக்குலம் இன்று தத்தளிப்பில் இருப்பதை மறுக்கமுடியாது. அடுத்த நிமிடம் என்னவாகும் என்று தெரியாத காலத்தில் நாம் வாழுகிறோம். ஆனாலும், சர்வத்தையும் படைத்து ஆளுகைசெய்கிறவரும், கொடிய பாவத்தின் பிடியிலிருந்தும், நித்திய நரகத்தின் பயத்திலிருந்தும் நம்மை மீட்டு நடத்தி வருகிற தேவாதி தேவனைப் பற்றிக்கொண்டு வாழுவோமானால், என்ன நேரிட்டாலும் நாம் பயப்படவேண்டியதில்லை. ஆனால் கர்த்தருடைய கரங்களைவிட்டு விலகினால் என்னவாகும் என்பதை இஸ்ரவேலின் வரலாறு வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது.

சாலொமோனின் பாவத்தால் அவன் மகனின் ஆளுகையில் இரண்டாகப் பிரிந்து வட புறமாகச் சென்ற இஸ்ரவேல் ராஜ்யம் மீண்டும் இரண்டாகப் பிளந்ததை வாசித்திருக்கிறோமா? பின்னர் அவர்களில் ஒருவன் செத்துப்போக மற்றவன் உம்ரி பலத்தான். இவனுடைய மகன்தான் ஆகாப்; தகப்பனின் ஸ்தானத்தில் இஸ்ரவேலுக்கு ராஜாவானான். இவனைக்குறித்த முக்கிய குறிப்பு: ஆகாப், தனக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். மேலும், இந்தப் பாவம் எல்லாம் கொஞ்சக் காரியம் என்பதுபோல, புறவினத்தாளாகிய யேசபேலை விவாகம் பண்ணினதுமல்லாமல், கர்த்தரைவிட்டு பாகாலைச் சேவிக்க ஆரம்பித்தான். ஏற்கனவே தேவனைச் சேவிப்பதில் பின்னின்ற ஒருவனாயிருக்கும்போது, அவன் தெரிந்தெடுத்த விவாக துணை அவனை தேவனைவிட்டு முற்றிலுமாகப் பிரித்துப் போட்டாள். அவனும் அவள் சொற்கேட்டு கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய தன்னை விற்றுப்போட்டான். ஆனால் இதன் விளைவை 1இராஜா.21:20-24 வரை வாசிக்கலாம். தேவனுடைய தீர்ப்பைக் கேட்ட ஆகாப் தன்னைத் தாழ்த்தியதால், தீர்ப்பு மாறவில்லை, அது அவன் மகன் நாட்களில் நடந்தேறியது(2இராஜா.9:30-37).

ஆன்று ஆகாபின் விழுகைக்கு தூண்டுதலாயிருந்தவள் யேசபேல்; இன்று நாம் தேவனை விட்டு சுயவழி செல்ல நமக்குத் தூண்டுதலாய் இருப்பது என்ன? அல்லது யார்? தேவனுக்கு விரோதமான பாவ வழியிலிருந்து நம்மை மீட்டெடுத்த இயேசுவின் இரத்தத்திற்கு இன்று நாம் கொடுத்திருக்கும் மதிப்பு என்ன? எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வேத வாக்கியத்திற்குக் கீழ்ப்படிந்து தேவனைப் பிரியப்படுத்தி அவரைச் சேவிப்பதைத் தவிர நமக்கு வேறென்ன வேண்டும்? தேவனைத் துக்கப்படுத்தாதிருப்போமாக. ஆகாபின் பாவம் சந்ததியைத் தொடர்ந்தது. இன்று நமது காரியம் என்ன? தேவனுக்கு விரோதமாக அவருடனான உறவிலிருந்து என்னை பிரிக்கின்ற காரியம் என்ன?

***சிந்தனைக்கு:*** இன்றைய சூழலில் தேவனை மாத்திரம் பிரியப்படுத்தி வாழ முடியாதபடி நம்மை தூண்டுவது என்ன? அதை தகர்த்தெறிவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: 2இராஜா. 17:1–23

ஜூலை 3 புதன்

## எச்சரிப்பின்றி தேவன் எதுவும்செய்யார்

*பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பி, என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொள்ளுங்கள் என்று ...எச்சரித்துக்கொண்டிருந்தார். 2ராஜா.17:13*

கொடூரங்கள் சம்பவிக்கும்போதும், தனிப்பட்ட ரீதியில் துன்பங்கள் நெருக்கும்போதும் பலகேள்விகள் நமக்குள் எழத்தான் செய்கின்றன. அந்த சமயங்களில் சுய நியாயங்களை நாம் எடுத்துரைப்பதுண்டு. அதாவது, மறைமுகமாக நாம் தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்கிறோம் என்பதை ஏன் சிந்திப்பதில்லை. ஒரு எச்சரிப்போ, ஆலோசனையோ தராமல் நமது தேவன் எந்தவொரு காரியத்தையும் ஒருபோதும் அனுமதிப்பதில்லை.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம், அவருடைய ஓங்கிய புயத்தின் வல்லமைகளை ருசிபார்த்த ஜனம், சுதந்திர பூமியின் காற்றை சுவாசித்த ஜனம், சத்துருக்களுடன் போராடி தேவனுடைய பராக்கிரமத்திற்குச் சாட்சியாய் நின்றிருந்த ஜனம், கர்த்தராலேயே தள்ளப்பட்டுப்போனது. "கர்த்தர் இஸ்ரவேலின்மேல் மிகவும் கோபமடைந்து, அவர்களைத் தம்முடைய முகத்தைவிட்டு அகற்றினார்" (2ராஜா.17:18). வடராஜ்யம் சிதறடிக்கப்பட்டது. இது திடீரென நடக்கவில்லை. ஏற்கனவே அநேக தடவைகள் எச்சரித்திருந்தும், தேவன் இஸ்ரவேலுக்கு இறுதியில் மூன்று தருணங்களைக் கொடுத்திருந்தார் (15:19,29,17:23). முதல் தடவை அசீரியாவின் வருகை எச்சரிப்பாக இருந்தது. இரண்டாவது தடவை சில குடிகளைச் சிறைப்பிடித்துக் கொண்டு போனார்கள். மூன்றாவது தடவை வந்த அசீரியர் இஸ்ரவேலை முற்றிலும் அழித்துப் போட்டு, அநேகரைச் சிறைப்பிடித்தும் சென்றுவிட்டார்கள். வடராஜ்யம் முடிந்தது. தேவனுக்கு விரோதமாக இஸ்ரவேல் செய்தவற்றின் தொகுப்பை இன்று வாசித்தோம். (யூதாவை தேவன் தக்கவைத்திருந்தாலும், அவர்களும் பின்னர் பாபிலோனிடம் கொடுக்கப்பட்டனர்.)

நமது ஆண்டவர் அநியாயமாய் தண்டிக்கிறவரும் அல்ல; எச்சரிக்காமல் எதையும் செய்கிறவரும் அல்ல. அன்று பார்வோனுக்கே எச்சரிப்புக் கொடுத்தவர் தமது பிள்ளைகளுக்கு அநீதி செய்வாரா? கர்த்தருக்கு விரோதமாக நடந்தால் என்னவாகும் என்று இஸ்ரவேலுக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும் அவர்கள் கர்த்தருக்குப் விரோதமாக தங்களைச் சுற்றிலும் இருந்தவர்களைப் பின்பற்றி சோரம்போனார்கள். இப்போது என்ன சொல்லுவோம்! இஸ்ரவேலைக் கர்த்தர் கைவிட்டாரா? இஸ்ரவேல் கர்த்தரைக் கைவிட்டதா? இன்று நம்மைக் குறித்து என்ன முடிவுக்கு வரப்போகிறோம். தேவனுக்காக வாழ அல்லது எனக்கு நானே சுயம் சாக தீர்மானிப்பேனா? அல்லது நாலும் சொல்லுகின்ற இந்த உலகின் பின்னே போவேனா? கர்த்தர் சகலத்தையும் எழுதி நமது கைகளில் கொடுத்திருக்கிறார். கீழ்ப்படிந்தால் மேல்படி நிச்சயம். கீழ்ப்படியாவிட்டால், அவருடைய தண்டனைக்கு எப்படி தப்பித்துக்கொள்வோம்? அவருக்கே சாட்டுச் சொல்லுவது எப்படி?

***சிந்தனைக்கு:*** "நமது தீர்மானமே நமது முடிவு" கடினபாதை என்றாலும் கர்த்தர் நம்மை விட்டு விலகாதபடி எச்சரிக்கையாயிருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை

4

வியாழன்

## தென்ராஜ்யத்தின் முதல் ராஜா

*அவன் (ரெகொபெயாம்) கர்த்தரைத் தேடுகிறதற்குத் தன் இருதயத்தை நோக்காமல் பொல்லாப்பானதைச் செய்தான். 2நாளாகமம் 12:14*

வேத வாசிப்பு: 2நாளா 12:1-16

தாழ்மை, கீழ்ப்படிவைத் தரும்; பெருமை, எதைத் தரும்? தங்களுக்குத் தாங்களே கடவுளானார்கள், கர்த்தருடைய ஆளுகையைப் புறந்தள்ளினார்கள், கீழ்ப்படியாமற் போனார்கள் என்று ஏதேனின் சங்கதிக்குப் பல விளக்கங்களைக் கொடுத்தாலும், முதல் மனிதர் தேவனை விட்டு மூன்றாம் சத்தத்திற்குச் செவிகொடுத்து செயற்பட்டதற்கு சாத்தானின் குணமான பெருமை அவர்களுக்குள் புகுந்ததுதான் முக்கிய காரணம் என்றால் மிகையாகாது.

வடராஜ்யத்தின் முதல் ராஜா, சாலொமோனின் மகன் ரெகொபெயாம். இவன் ராஜாவான போதுதான் ராஜ்யமும் இரண்டாகப் பிரிந்தது. "ரெகொபெயாம் ராஜ்யத்தைத் திடப்படுத்தித் தன்னைப் பலப்படுத்திக்கொண்ட பின்" இதுதான் ரெகொபெயாமின் விழுகைக்கு அடிகோலியது. "அவனும் அவனோடே இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை விட்டுவிட்டார்கள்." இங்கே இஸ்ரவேலர் என்பது தென் ராஜ்ய மக்களாகிய யூதாவையே குறிக்கிறது. ரெகொபெயாம் கர்த்தரைத் தேட முயற்சித்தபோது அவனுடைய ராஜ்யம் திடப்பட்டது. ஆனால் ராஜ்யம் செழிப்படைந்து, பிரபல்யமாகி பலப்பட்டபோது அவன் கர்த்தரை விட்டுவிட்டான். இதன் பலன் அழிவு. ஆம், அவர்கள் கர்த்தரை விட்டுவிட்டதால், கர்த்தர் சீஷாக் என்பவனின் கைகளில் அவர்களை விட்டுவிட்டார் (வச.5).

சுயநம்பிக்கை, சுயதிருப்தி, குறைவற்ற நிலை என்று யாவும் ஒன்றுசேரும்போது பெருமை நமக்குள் ஊர்ந்துவந்து உட்கார்ந்து விடுகிறது. அன்று ரெகொபெயாமுக்கு கர்த்தர் உடனடித் தீர்ப்புக் கொடுத்தார். ஆனால் இன்று தீர்ப்பு தாமதமாகிறதினாலே பெருமை நம்மை மனந்திரும்பவிடாமல், அழிவுக்கே இட்டுச்சென்று விடுகின்ற அபாயம் உண்டு. அன்று செமாயா தீர்க்கதரிசி எச்சரித்தபோது, அவர்கள் தங்களை தாழ்த்தியதைக் கர்த்தர் கண்டார். அப்போது அழிவு நிறுத்தப்பட்டது, ஆனால் தண்டனை இருந்தது.

"கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றவன்" என்று பெயர்பெற்ற தாவீதின் பேரனான ரெகொபெயாமின் சங்கதி நம்மைச் சிந்திக்கவைக்கட்டும். அன்றைய ராஜாவைப்போல நாம் நடக்காவிட்டாலும், தேவனுடைய வார்த்தையை மிக இலகுவாக புறந்தள்ளி, சாட்டுகள் சொல்லி, பெருமை மிக்க சுயத்தின் வழியில் செல்லத்தக்க சோதனைகள் நிறையவே உண்டு. என்றாலும் மனந்திரும்புவதற்குத் தருணமும் உண்டு. மனந்திரும்பும் பாவியைக் கர்த்தர் புறந்தள்ளார். நாம் நம்மைத் தமக்கு அர்ப்பணித்து ஜீவிக்கவேண்டுமென்பதே தேவனுடைய எதிர்ப்பார்ப்பு. அப்போது அவர் நம்மை ஒரு விநாடிகூட கைவிடவே மாட்டார்.

***சிந்தனைக்கு:*** தேவனைப் புறந்தள்ளின சந்தர்ப்பங்கள் இல்லையென்பது போல தெரிந்தாலும், நேரிட்ட பாதகமான சம்பவங்களுக்குக் காரணம் என்ன என்று அமர்ந்திருந்து சிந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: 2நாளா 13:1–22

## அபியா ராஜா

*எங்களுக்கோ கர்த்தரே தேவன். நாங்கள் அவரைவிட்டு விலகவில்லை... 2நாளாகமம் 13:10*

ஜுலை 5 வெள்ளி

எவ்வளவு காலம் வாழுகிறோம் என்பதல்ல; எப்படி வாழுகிறோம் என்பதே காரியம். நாம் எப்படிப்பட்டவர்களாயினும், நமது செயல்கள் நிச்சயம் நினைவுகூரப்படும். அது அடுத்த சந்ததிக்கு பலனுள்ளதாய் இருக்கவேண்டுமென்று வாஞ்சித்து வாழுவது நல்லது அல்லவா.

ரெகொபெயாம் மரித்துப்போக, மகன் அபியா யூதாவுக்கு ராஜாவானான். எருசலேமில் இவனுடைய ஆட்சிகாலம் மூன்று வருஷங்கள் மாத்திரமே. 1இராஜா.15ம் அதிகாரத்தில் அபியா, அபியாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இவனைக் குறித்து, "அவன் இருதயம் ...தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை"(வச.3) என்று இவனைக்குறித்து எதிர்மறையாய் எழுதப்பட்டுள்ளது. 2நாளா.13ல் இவனுடைய நல்ல பக்கங்களைக் காணலாம். இவனுக்கும், இஸ்ரவேலின் ராஜா யெரொபெயாமுக்கும் யுத்தம் நடந்தது. அபியாவின் வீரரைவிட இரண்டு மடங்கு யுத்தவீரரை யெரொபெயாம் எதிராக நிறுத்திய போதும், இஸ்ரவேலரும் யெரொபெயாமும், அபியாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறிந்தோடினார்கள். இது எப்படி முடிந்தது? இஸ்ரவேலுக்கும் ராஜாவுக்கும் முன்பாக அபியா ஒரு மலையின்மீது ஏறி நின்று கர்த்தரை முன்வைத்துச் சாவாலிட்டதுதான் அபியாவைக் குறித்த நேர்மறையான முக்கிய குறிப்பாகும் (வச.4-12). "எங்களுக்கோ கர்த்தரே தேவன், நாங்கள் அவரைவிட்டு விலகவில்லை" என்றும், "இதோ, தேவன் எங்கள் சேனாபதியாய் எங்களோடேகூட இருக்கிறார்" என்றும் அபியா சூளுரைத்தான் என்றால், நெருக்கத்தில் தைரியமாக அவன் எப்படிக் கர்த்தரைச் சார்ந்திருந்தான் என்பது விளங்குகிறது. மேலும், அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். அவன் நல்லவனா கெட்டவனா என்றில்லாமல் தம்மை நோக்கிக் கூப்பிட்ட யூதாவுக்காக அபியாவுக்காக கர்த்தர் யுத்தம்பண்ணினார்.

அபியா பிரபல்யம் இல்லாதவன் என்றாலும், நெருக்கத்தில் கர்த்தரிடம் முறுமுறுக்காமல், அவரை மேன்மைப்படுத்தினான். அவன் தாவீதின் வழியில் நடக்காதிருந்தும், கர்த்தரும் அவன் கூப்பிடுதலுக்குச் செவிகொடுத்தார். இப்படியிருக்க, இன்று இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட பிள்ளைகள் நமது கூப்பிடுதலுக்கு அவர் செவிகொடுக்காமல் விடுவாரா? விசுவாசிகள் துன்புறுத்தப்பட்டு, பேதுரு சிறைவைக்கப்பட்டிருந்தபோது, "அநேகர் கூடி ஜெபம்பண்ணிக்கொண்டிருக்க", கட்டியிருந்த சங்கிலி விழவில்லையா? சிறைச்சாலையின் காவற்கதவுகள் திறக்கவில்லையா? அபியா ராஜாவே "கர்த்தரே தேவன்" என்று அறிக்கையிட்டிருக்க, நாளை மாறிப்போகும் அற்ப பிரச்சனைகளைக் கண்டு நாம் பயப்படுவது ஏன்? "யூதா புத்திரரோ தங்கள் கர்த்தரைச் சார்ந்து கொண்டதினால் மேற்கொண்டார்கள்." இன்று நம்மைக் குறித்து சொல்லப்படக்கூடிய சாட்சி என்ன?

***சிந்தனைக்கு:*** நான் என் சந்ததிக்கும் இந்த உலகுக்கும் விட்டுப்போகக் கூடிய சாட்சி என்ன? எந்த நிலையிலும் கர்த்தரை மாத்திரமே சார்ந்திருக்கிறேனா என்று சிந்திப்பேனாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
6
சனி

## நாடுகளின் வளர்ச்சியும் பரவலும்

*அவனவன் பாஷையின்படியேயும், அவரவர்கள் கோத்திரத்தின்படியேயும், ஜாதியின்படியேயும், வேறுவேறு தேசங்களாய்ப் பகுக்கப்பட்டன. ஆதியாகமம் 10:5*

வேத வாசிப்பு: ஆதி 10:1–32

***தேவனுடைய செய்தி:***

வெள்ளப் பெருக்குக்குப் பிறகு நோவாவின் குடும்பத்திலிருந்து மனித சந்ததி தோன்றியது, இவர்கள் தங்கள் நாடுகளின்படி ஆதியாகமம் 10ல் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். இக்குடும்பங்கள் தோன்றி பூமி முழுவதும் பரவினர். அவர்களிடமிருந்து பல்வேறு இனங்கள் வெளிப்பட்டன.

***தியானம்:***

நோவாவின் பிள்ளைகளால் உருவான குடும்பப்பட்டியல் வளர்ந்து, ஒவ்வொரு குடும்பமும் பெருகி வெவ்வேறு நாடுகளாயின. ஒவ்வொரு நாடும் தனக்கென்று ஒரு தனி மொழியைப் பெற்றது. ஒவ்வொரு இனமும் வாழ்வதற்காக தேவனால் அவர்களுக்கு நாடுகள், தேசங்கள் வழங்கப்பட்டன.

***விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:***

தேவனே பூமி அனைத்திற்கும் சொந்தக்காரர். அவர் தாம் விரும்புகின்ற இடத்தில் மனித இனத்தை குடியமர்த்தினார்.

***பிரயோகப்படுத்தல் :***

யாப்பேத்தின் சந்ததியினரைக் குறித்து (வசனம் 2-3) கூறுவது என்ன?

மத்தியத்தரைக் கடல் பகுதியில் வாழ்ந்த யாப்பேத்தின் சந்ததியினர் குறித்து இன்று உமது கருத்து என்ன? இவர்கள் யார் யார்?

காமின் சந்ததியினரைக் குறித்து (வசனம் 6-20) கூறுவது என்ன?

கர்த்தருக்கு முன்னால் பெரிய வேட்டைக்காரனாக முதலில் மாறியவன் யார்? அவன் கட்டிய நகரங்கள் எவை?

இவனது சந்ததியினர் உலகின் பல பாகங்களிலும் பரவினர். ஆபிரிக்க ஆசிய நாடுகளிலுள்ள இவர்களைக் குறித்து உமது கருத்து என்ன?

சேமின் சந்ததியினரைக் குறித்து (வசனம் 21-31) கூறுவது என்ன?

எபிரெய ஜனங்களுக்கு தந்தையாக கருதப்பட்டவன் ஏபேர் (வசனம் 21) யாருடைய காலத்தில் பூமி பகுக்கப்பட்டது என வேதாகமம் கூறுகிறது?

ஜாதி, இனம், தேசங்களைக் குறித்த உமது பார்வை என்ன?

***எனது சிந்தனை:***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: 2நாளா 15:1–19

ஜூலை 7 ஞாயிறு

## ஆசா இராஜா

*நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார். நீங்கள் அவரைத் தேடினால் உங்களுக்கு வெளிப்படுவார். 2நாளாகமம் 15:2*

நாம் உலகரீதியான ராஜாக்களாக இல்லாவிட்டாலும், நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கிய தேவனுக்கு முன்பாக நாம் ராஜாக்கள்தான். ஆகவே அன்றைய ராஜாக்களைக் குறித்த இத் தியானங்கள் நம்மை சிந்திக்கவைக்கட்டும். ஏறத்தாழ ராஜாக்களின் முடிவு துக்ககரமானதாக இருந்தாலும், யூதாவை ஆண்ட பல ராஜாக்களின் வாழ்வில் பல நல்ல படிப்பினைகள் உண்டு. நம்மை அந்த இடத்தில் நிறுத்தி தியானிப்போம்.

அபியாவுக்கு பின் அவனது மகனாகிய ஆசா யூதாவுக்கு ராஜாவானான். "ஆசா தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்தான்." இதுவே ஆசாவைக்குறித்த முதற் குறிப்பு. அந்நிய தேவர்களின் பலிபீடங்களை மேடைகளை சிலைகளையெல்லாம் அழித்தான். அடுத்ததாக, "பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் தேடவும், நியாயப்பிரமாணத்தின்படியும் கற்பனையின்படியும் செய்யவும் மக்களுக்குக் கற்பித்தான். அதாவது கர்த்தருடைய வார்த்தைக்கு நேராகத் திரும்பினான். முக்கியமான குறிப்பு, அருவருப்பான விக்கிரகத்தை உண்டுபண்ணின தனது தாயான மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு விலக்கிப்போட்டு, அவளுடைய சகலத்தையும் சுட்டெரித்துப் போட்டான். மேலும், எத்தியோப்பியனாகிய சேரா எதிர்கொண்டு வந்தபோது, தன்னிடமிருந்த பலத்தை நம்பாமல், ஆசா கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, "எங்களுக்குத் துணைநில்லும்; உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் வந்தோம்" என்று ஜெபித்தான். கர்த்தரும் அவர்களுக்கு ஜெயத்தைக் கொடுத்தார்.

ஆசாவிடம் பராக்கிரமசாலிகளான வீரர்கள் ஏராளமாக இருந்தனர். என்றாலும், அவன் தன் சுயபெலத்தில் சார்ந்திராமல், தன்னைத் தாழ்த்தி கர்த்தரைத் தேடினான். ஆம், நம்மைத் தாழ்த்தி, கர்த்தரோடிருந்தால் அவர் நம்மோடிருப்பார், நமக்காக வெளிப்படுவார். அன்று ஆசா தன் பெலத்தை நம்பி பெருமையுடன் எத்தியோப்பியனை எதிர்க்கப் புறப்பட்டிருந்தால் ஜெயத்தைப் பெற்றிருக்கமுடியாது. மேலும், கர்த்தர் வெறுக்கின்ற அத்தனையையும் ஆசா வெறுமனே வீசியெறியவில்லை, சுட்டெரித்துப் போட்டான். தன் தாய் என்றும் பாராமல் அவளையும் தள்ளினான். இன்று நாம் கர்த்தர் வெறுக்கின்ற காரியங்கள் எவற்றை இன்னமும் நமக்குள் மறைத்து வைத்திருக்கிறோம். உறவுகளைக் கண்டிக்கவோ தள்ளிடவோ மனதின்றி, அவர்களோடு இசைந்து நின்று தேவனைத் துக்கப்படுத்துகிறோம். சிந்திப்போம். ஆசா கர்த்தரைச் சார்ந்து நின்றான். கர்த்தர் அவனுக்கு ஜெயத்தைக் கொடுத்தார். இன்று நமது தோல்விகளுக்குக் காரணம் என்ன?

*சிந்தனைக்கு:* "உமக்கு லேசான காரியம்" என்று பாட்டிசைத்து பாடுகின்ற நாம் மெய்யாகவே தேவனைச் சார்ந்து நின்று அவருக்குப் பிரியமானதைச் செய்கிறோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை

8

திங்கள்

## முப்புத்தாறாம் வருஷம்

*இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர்.*
*2நாளாகமம் 16:9*

வேத வாசிப்பு: 2நாளா 16:1–13

"இந்த விஷயத்தில்" என்னும்போது, மற்ற விடயங்களில் மதியுடன் நடந்திருக்கலாம் என்று நாம் அர்த்தம்கொள்ளலாம்! ஆம், நாமும் இப்படித்தான்; எல்லா விஷயங்களையும் பார்த்துப் பார்த்துச் செய்துவிட்டு, முக்கிய விடயத்தில் யாவையும் தொலைத்துவிட்டிருப்போம். அந்த ஒன்றினால், அத்தனை காலங்களும் நாம் கட்டிக்காத்துக் கொண்ட நற்பெயரும், நல்ல விடயங்களும் கேள்விக்குறியாகி விடுகிறது.

ஆசா யூதாவை 41 ஆண்டுகள் ராஜ்யபாரம் பண்ணின ஒருவன். இவனது ஆட்சியில் முதல் 10 ஆண்டுகள் அமைதியாக இருந்தது. கர்த்தரின் பார்வைக்குச் செம்மையான யாவற்றையும் செய்தான். பிரச்சனைகள் நெருக்கங்கள் வந்தபோது கர்த்தரையே தேடினான். தேவனையே தேடும்படி தனது ராஜ்யத்தின் மக்களையும் தீர்க்கமாக வழிநடத்திய ஒருவன்தான் இந்த ஆசா. எத்தியோப்பியனாகிய சேரா பத்துலட்சம் பேருடனும் முந்நூறு இரதங்களோடும் யூதாவுக்கு எதிராக வந்தபோது கூட ஆசா கர்த்தரையே நாடினான். கர்த்தர் எத்தியோப்பியரை முறியடித்தார். இப்படியே 35 ஆண்டுகள் நன்றாகவே ஓடியது. முப்பத்தாறாம் வருஷத்தில் இவனுக்கு என்னவாயிற்று? இப்போது இஸ்ரவேலின் ராஜா பாஷா யூதாவுக்கு எதிராக வந்து தடைகளை கட்டினான். இதுவரை கர்த்தரையே நாடிய ஆசா, இப்போது கர்த்தரை நாட மறந்தது என்ன? இவன் இப்போ, சீரியா நாட்டு ராஜாவின் உதவியை நாடுகிறான். அவனும் உதவிசெய்கிறான். கர்த்தரோ, அனானி என்பவனை எழுப்பி, இத்தனை வருடங்களாக உம்மை நடத்திய தேவனை நீர் மறந்ததென்ன என்று கேட்கிறார். "தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது" இதை நீர் மறந்ததென்ன என்று கண்டிக்கிறார். ஆசாவோ இதைக் கேட்டு மனந்திரும்பாமல், அனானியை சிறையில் அடைக்கிறான். அவன் கால்களில் வியாதி கண்டது, அப்போதும் அவன் கர்த்தரைத் தேடவில்லை. பின்னர் அவன் மரித்துப் போனான்; மனந்திரும்பியதாக எழுதப்படவில்லை.

35 ஆண்டுகள் கர்த்தரையே தேடினவன், இறுதிக் காலத்தில் கர்த்தரை விட்டுவிட்டது நமக்குச் சிறந்த எச்சரிக்கையாயிருக்கிறது. நாம் கர்த்தரோடிருந்தால், நம்மோடு அவர் இருப்பார். நாம் அவரைத் தேடினால் அவர் நம்மோடு இருப்பதை அவர் வெளிப்படுத்துவார். நமது பாரங்களை அவர் சுமப்பார். நமது போராட்டங்களில் அவர் ஜெயம் தருவார். நாம் அவரை விட்டுவிட்டால்? "முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்" (மத்.24:13). நாம் தடுமாறவேண்டிய அவசியமில்லை. முடிவுபரியந்தம் நம்மை நிலைநிறுத்துகிற ஆண்டவர் இயேசு இன்று நம்முடன் இருக்கிறார். ஆனால் நாம் அவருடன் நிற்கிறோமா? அவரோடு நடக்கிறோமா?

***சிந்தனைக்கு:*** மாம்சத்தில் போராடும்போது, நாம் விழக்கூடிய சந்தர்ப்பம் பல வரலாம்; ஆனால் விழுந்த இடத்திலே கிடப்பேனா? கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, எழுந்து பணிசெய்வேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: 2நாளா 28:1–4

## யூதாவின் ராஜா ஆகாஸ்

ஜூலை 9 செவ்வாய்

*யூதாவின் ராஜா ஆகாசினிமித்தம் கர்த்தர் யூதாவைத் தாழ்த்தினார். 2நாளாகமம் 28:19*

அந்நாட்களில், ராஜா எவ்வழி நடக்கிறானோ அதையே மக்களும் பின்பற்றவேண்டும். எதிர்க்கிறவர்கள் வாழ்வுக்கு ஆபத்து நேரிடும். அந்தப்படியே ஆகாஸ் எவ்வழி சென்றானோ, யூதா மக்களும் அவ்வழி சென்றார்கள். இதனால் மக்கள் பலவிதங்களிலும் தாக்கப்பட்டார்கள். ஆக, தலைமைத்துவம் எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் சிந்திக்கவேண்டும்.

பதினாறு வருடங்களாக எருசலேமில் ஆட்சிசெய்த ஆகாஸ் தனது தகப்பனாகிய யோதாமின் வாழ்வை மறந்துவிட்டான். "யோதாம் தன் வழிகளைத் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நேராக்கினதினால் பலப்பட்டான்" (2நாளா.27:6) என்று வாசிக்கிறோம். ஆனால் ஆகாஸ், கர்த்தரின் பார்வைக்குச் செம்மையாய் நடவாமல், பாகால்களுக்கு விக்கிரகங்களைச் செய்து, புறவினத்தாரின் அருவருப்புகளின்படியெல்லாம் நடந்தான். கர்த்தர் பலரை எழுப்பி தண்டித்தார். ஒரே நாளில் இலட்சத்திருபதினாயிரம் மக்கள் சீரியரினால் செத்தார்கள், சிறைப்பிடிக்கப்பட்டார்கள். இஸ்ரவேலர் இலட்சத்துக்கும் மேற்பட்ட பெண்களையும் பிள்ளைகளையும் சிறைப்படுத்தினார்கள். ஏதோமியரும் பெலிஸ்தரும்கூட துன்புறுத்தினார்கள். அசீரியனும் நெருக்கினான். ஆனால், "தான் நெருக்கப்படுகிற காலத்திலும் கர்த்தருக்கு விரோதமாய் அந்த ஆகாஸ் என்னும் ராஜா துரோகம் பண்ணிக்கொண்டே இருந்தான்." ஆகாஸ் கர்த்தருக்கு விரோதமாக நடந்ததால், மக்களும் கர்த்தரின் சமுகத்தில் தாழ்த்தப்பட்டுப்போனார்கள்.

இன்று நமது நாட்டில், ராஜ ஆட்சி இல்லை; ஜனநாயகம் இருக்கிறது. என்றாலும் ஒரு குடும்பத் தலைவனாக, ஒரு ஸ்தாபனத்தின் தலைவனாக நாம் ராஜ ஆட்சி நடத்துகிறோமா என்பதே கேள்வி. நமது தெரிவுகள், விருப்பங்களுக்கு மிகுந்த இடமுண்டு என்பதால் மனம்போனபடி நாம் நடக்க சோதிக்கப்படுகிறோம். நமது சுய தெரிவுகள் நம்மை மட்டுமல்ல, சுற்றியிருக்கிறவர்களையும் தேவனைவிட்டு விலக்கிவிடும் ஆபத்தும் உண்டு. தேவனுக்குப் பிரியம் எது, சித்தம் எது, சுயதெரிவுகளின் விளைவுகள் என்ன, எல்லாமே நமக்குத் தெளிவாகத் தெரியும். அன்று தலைவனின் பாவத்தால் மக்களும் தண்டிக்கப்பட்டார்கள். இன்று நமது சுயதெரிவுகள் நம்மையும் நம்மைச் சேர்ந்தவர்களையும்கூட பாதிக்கத்தான் செய்கின்றன. கர்த்தரே சில சோதனைகள் தண்டனைகளை அனுமதிப்பது நம்மை வெறுப்பதால் அல்ல, நம்மைச் சீர்படுத்தவே! அதையும் நாம் உணராதிருக்கிறோம்! இன்று நான் தேவசித்தத்தில் நிற்கிறேனா? இன்று நம்மைக் குறித்து தேவன் எழுதுவாரென்றால் என்ன எழுதுவார்? என் நிமித்தம் வேறு யார் யார் பாதிக்கப்படுகின்றார்கள்?

***சிந்தனைக்கு:*** என் தெரிவுகள், வழிகளினால் நான் மாத்திரமல்ல, என்னைச் சுற்றி இருக்கிறவர்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதை இன்று சிந்தித்து என்னைச் சரிசெய்வேனாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை

10

புதன்

## எசேக்கியா ராஜா

*அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும்... ஒருவனும் இருந்ததில்லை. 2இராஜாக்கள் 18:5*

வேத வாசிப்பு: 2இராஜா. 18:5-8

அநேகமாக ஆரம்பங்கள் நன்றாகவும் சிறப்பாகவும் இருப்பதுண்டு; ஆனால், காலம் கடந்து செல்ல செல்ல அதே சிறப்பு இருக்குமா? இன்னும் மெருகூட்டப்படுமா? அல்லது தேய்ந்துபோகுமா? நமது வாழ்வின் அனுபவங்களிலிருந்தே இதற்கான பதிலை நாம் கண்டுகொள்ளலாம்.

எசேக்கியா ராஜா, யூதா ராஜாக்களுக்குள் முக்கியமானவர்களில் ஒருவன். சுவர்ப்புற மாக தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு அழுதவன் யார் என்று கேட்டால், உடனடி யாகவே எசேக்கியா என்று சொல்லிவிடுமளவுக்கு இவனும் இவனது ஆட்சி காலமும் இன்றும் நம் மத்தியிலும் பேசப்படுகின்ற ஒன்று. இவனைக் குறித்து, “கர்த்தர் அவனோ டிருந்தார்; அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அனுகூலமாயிற்று” என்று வாசிக்கிறோம். இது எப்படி அனுகூலமாயிற்று? அதற்கான பதில் இதுதான். எசேக்கியா வைக் குறித்து வேதாகமம் தந்திருக்கிற சாட்சி, வேறு எவரைக் குறித்தும் கொடுக்கப் படவில்லை. யூதாவின் ராஜாவாகிய ஆகாஸ் மரித்த பிற்பாடு அவன் குமாரன் எசேக்கியா யூதாவை அரசாள தனது இருபத்தைந்து வயதில் ஆரம்பித்தான். “இவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப் போல் ஒருவனும் இருந்ததில்லை.” இப்படியொரு அறிக்கையை இன்று நம்மைக் குறித்துக் கர்த்தர் கொடுப்பாரா? மேலும், அவன் கர்த்தரையே சார்ந்திருந்தான் என்று பார்க்கிறோம். இன்னும் முக்கியமாக, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைகளை எசேக்கியா கைக்கொண்டு நடந்தான். ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார்.

இன்று கர்த்தர் நம்மோடிருக்கிறாரா? அவரை நம்பி விசுவாசிப்பதாகக் கூறுகின்ற நாம் மெய்யாகவே நமது நம்பிக்கையை முழுதாக அவரில் கொண்டிருக்கிறோமா? அந்த நம்பிக்கை உறுதியானது என்றால், அவரைவிட்டு நம்மால் விலகவும் முடியாது; அவருடைய கற்பனைகளை கட்டளைகளை உதாசீனம்செய்யவும் முடியாது. இன்று நமது கைகளிலே தேவனுடைய அன்பின் சுவிசேஷம் இருக்கிறது; கர்த்தருடைய அன்பின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் நம்மைக் கரம்பிடித்து நடத்த ஆயத்தமாய் இருக்கின்றன. ஆனால் நாம் அந்த வார்த்தைகளில் நிலைத்திருக்கிறோமா என்பதே கேள்வி. நிலைத்திருந்தால், எந்த நிலையிலும் கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்ற நம்பிக்கை நமக்குள் ஊன்றித் திளைத்திருக்கும். இந்த உலகமோ, பகைவனோ நம்மை அசைக்கமுடியாது.

*சிந்தனைக்கு:* எந்த சந்தர்ப்பத்திலும் கர்த்தர் என்னோடிருக்கிறார் என்று என்னால் உறுதியாக அறிக்கை செய்ய முடியுமா? அதற்கு ஒரே வழி, நான் கர்த்தரோடிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: 2இராஜா. 18:1-4 எண். 21:5-10

ஜூலை 11 வியாழன்

# நிகுஸ்தான்

*அவன் (எசேக்கியா) தன் தகப்பனாகிய தாவீது செய்த படியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். 2இராஜாக்கள் 18:3*

தாவீது ராஜா எப்படி கர்த்தருக்குப் பிரியமானவற்றைச் செய்தாரோ(அப்.13:22) அப்படியே எசேக்கியாவும் செய்தான். இவன் கர்த்தருக்குப் பயந்து கர்த்தரையே கனப் படுத்தி ராஜ்யபாரத்தை உத்தமமாய் நடத்தினான் என்பது விளங்குகிறது. விக்கிரகங் களை உண்டுபண்ணின தனது தாயையே தள்ளிப்போட்ட ஆசா ராஜாவுக்கு இவன் சளைத்தவன் அல்ல என்பதுபோல யூதாவிலே எசேக்கியா செயற்பட்டான்.

கானானை அண்மித்த நிலையில் இஸ்ரவேலர் தேவனுக்கும் மோசேக்கும் விரோத மாகப் பேசி, கர்த்தர் கொடுத்த உணவையும் வெறுத்து முறுமுறுத்தபோது, கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார் என்றும், அவை கடித்ததால் அநேகர் செத்தார்கள் என்றும் வாசிக்கிறோம். ஜனங்கள் தமது பாவத்தை உணர்ந்தபோது, மோசே விண்ணப்பம் பண்ணியபோது, அந்த சர்ப்பத்தின் உருவத் தைச் செய்து, அதைக் கம்பத்தில் உயர்த்தி வைக்கும்படிக்கும், கடிக்கப்பட்டவன் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான் என்றும் கர்த்தர் சொன்னார். அப்படியே மோசே செய்துவைத்தான். அதை நோக்கிப் பார்க்கிறவர்கள் அந்த சர்ப்பத்தின் உருவத்தால் குணமடையவில்லை. மாறாக, தங்கள் பாவத்தின் கோரத்தை அந்த உருவத்தில் கண்டதுமல்லாமல், கர்த்தருடைய சமுகம், அவருடைய வல்லமை, அவருடைய இரக்கம் மன்னிப்பு யாவையும் அது அவர்களுக்கு நினைவூட்டியது. அதைப் பார்த்து தேவனை ஆராதிக்கவேண்டிய மக்கள், அந்த உருவத்தையே ஆராதனைப் பொருளாக மாற்றிவிட்டிருந்தார்கள். அந்த சர்ப்பத்தின் சிலையானது யூதாவின் ஜனத்திற்குள் எசேக்கியா ராஜாவின் காலம் வரைக்கும் நீண்டகால மாக இருந்ததைக் காண்கிறோம். எசேக்கியா ராஜா, இந்த நீண்டகால பாவத்தைத் துடைத்தெறிந்தார். அந்த சர்ப்பத்தின் உருவத்தை, மக்களின் ஆராதனைப் பொருளா யிருந்த விக்கிரகத்தை உடைத்துப்போட்டார்.

ஆராதனைக்குத் தூண்டுதலாக இருக்கிறவைகள் ஒருபோதும் ஆராதனைக்குரியவை களாக மாறக்கூடாது. இது கர்த்தருக்கு அருவருப்பான செயலாகும். தேவனுடைய பிரசன்னத்தை, அவர் அளித்த மன்னிப்பு, தயவு யாவையும் நமக்கு நினைவூட்டுகின்ற விடயங்களே இன்று நமக்குத் தெய்வங்களாகிவிட்டன என்பதை உண்மை மனதுடன் சிந்தித்தால் ஆவியானவர் நமக்கு நிச்சயம் உணர்த்துவார். நமது முழுமையான ஆராதனைக்கும் பாத்திரர் கர்த்தர் ஒருவரே. அந்த இடத்தை எது எடுத்துக்கொண்டா லும் அது விக்கிரகம்தான். அந்த விக்கிரகத்தை நமது சந்ததிக்கும் கடத்துவது சரியா? இதை உடைக்க இன்னுமொரு எசேக்கியா எழும்பமுடியாது. இன்றே நம்மை ஆராய்ந்து, நம்மை ஆட்கொண்டிருக்கிற அசுத்தங்களை அழித்துப்போடுவோம்.

***சிந்தனைக்கு:*** முந்தின ராஜாக்கள் செய்யாததை எசேக்கியாவினால் எப்படி செய்ய முடிந்தது. இன்று நம்மை ஒட்டியுள்ள அருவருப்பானவற்றை அழித்துப்போட நம்மால் முடியுமல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
12
வெள்ளி

## பூட்டப்பட்ட ஆலயக் கதவுகள்

*ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம். 1கொரி. 3:17*

வேத வாசிப்பு: 2நாளா 29:1–15

அன்று கர்த்தருடைய ஆலயத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தின் கிருபாசனத்திலிருந்து தேவ பிரசன்னம் இஸ்ரவேலை நடத்தி வந்தது. சாலொமோன் ராஜா இதைக் கட்டி முடித்தபோது மேகமானது அந்த ஆலயத்தை நிரப்பிற்று. கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று (1இராஜா.8:10-11) என்றும் வாசிக்கிறோம். ஆம், ஆலயம் அங்கீகரிக்கப்பட்டது.

ஆனால் ராஜாக்கள் ஆளத்தொடங்கிய பிற்பாடு, பலர் இந்த ஆலயத்தைக் கனப்படுத்தாமல் விட்டுவிட்டார்கள். கர்த்தரைத் தேடுவதை விடுத்து, கர்த்தருடைய ஆலயத்தின் பொன் வெள்ளியினால் செய்யப்பட்ட பணிமுட்டுகளை புறவின ராஜாக்களுக்குக் கொடுத்து, அவர்களிடம் உதவி கேட்டு கர்த்தரைக் கோபப்படுத்தினார்கள். அந்த வரிசையில் மிக முக்கியமானவன் ஆகாஸ் ராஜா. தான் நெருக்கப்பட்ட வேளையிலும் கர்த்தரைத் தேடாமல், சீரியரின் தெய்வங்கள் அவர்களுக்குத் துணைசெய்வதுபோல தனக்கும் துணைசெய்யும் என்று நம்பி, அவற்றுக்குப் பலியிட்டான். "தேவனுடைய ஆலயத்தின் பணிமுட்டுகளைத் துண்டுதுண்டாக்கி, கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைப் பூட்டிப்போட்டு, எருசலேமில் பலிபீடங்களை உண்டுபண்ணி... கர்த்தருக்குக் கோபமூட்டினான்" (2நாளா.28:22-25). தன்னை முறியடித்த தமஸ்குவின் தெய்வங்களுக்குப் பலியிட்டான். இது, அவனும் இஸ்ரவேல் அனைத்தும் நாசமாகிறதற்கு ஏதுவாயிற்று. ஆம், கர்த்தருடைய ஆலயக் கதவுகள் பூட்டப்பட்டாயிற்று. தேவனுடைய பிரசன்னத்தை ஆகாஸ் தடுத்துவிட்டான். கர்த்தருடைய பிரசன்னம், அவரது வார்த்தை இல்லாத எதுவும் செத்ததற்குச் சமமல்லாவா!

மக்களுடைய கீழ்ப்படியாமையினால் காலப்போக்கில் அந்த ஆலயம் இடிக்கப்பட்டுப் போயிற்று. இன்று தேவன் தங்கி வாழும் ஆலயங்களாக தமது பிள்ளைகளாகிய நம்மையே காண்கிறார். அன்று ஆகாஸ் அந்நிய தெய்வங்களை நாடி கர்த்தருடைய ஆலய கதவுகளை அடைத்து போட்டான். தேவபிரசன்னமும் தடுக்கப்பட்டு, மக்களும் தொழுதுகொள்ள முடியாதுபோனது. இன்று தேவன் தங்கி வாழும் ஆலயமான நமது இருதயத்தின் கதவுகள் கர்த்தருக்காக திறந்திருக்கிறதா? அல்லது, உலகத்தையும் அந்நிய காரியங்களையும் நாடி, கர்த்தரை ஒதுக்கிவிட்டு, இருதயத்தின் கதவுகளை நாமே அடைத்துப்போட்டுள்ளோமா? கர்த்தரையே சார்ந்து, எல்லா நிலையிலும் அவர் நம்மோடிருப்பார் என நம்பி, எவ்வித நெருக்கங்களிலும் அவரில் மாத்திரமே நிலைத்து நிற்க நாம் தடுமாறுவது ஏன்? நாம் நிச்சயமாக அந்நிய தெய்வங்களை நாடமாட்டோம்; ஆனால் கர்த்தரை முழுதாக நம்பமுடியாமல் போவது ஏன்? நமது கதவுகள் அடைக்கப்பட்டால் பிற மக்களும் கர்த்தரை நம்மில் காணவும் முடியாதே!

***சிந்தனைக்கு:*** இருதய ஆலயக் கதவு திறந்திருந்தால் தேவபிரசன்னம் என்னில் வெளிப்படவேண்டும், பிறரும் மகிழவேண்டும். என் கதவுகள் திறந்திருக்கிறதா? மூடியிருக்கிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ஆதி 11:1-9

ஜூலை 13 சனி

## கர்த்தர் கவனிக்கிறார்

*...நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள்.*
*ஆதியாகமம் 11:4*

***தேவனுடைய செய்தி:***

தேவநாம மகிமைக்காக ஒன்றுபட்டால் மட்டுமே உண்டு வாழ்வு.

***தியானம்:***

வெள்ளப்பெருக்குக்குப் பிறகு முழு உலகமும் ஒரே மொழியைப் பேசியது. எல்லா ஜனங்களும் ஒரே விதமாகப் பேசினர். உலகமெங்கும் பேசிய அந்த ஒரே மொழியைக் கர்த்தர் குழப்பிவிட்டபடியால் அந்த இடத்தை பாபேல் என்று அழைத்தார்கள்.

***விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:***

சொந்த பேர், புகழ், பெறுமையை தேடுவது தேவனுடைய வழிமுறையல்ல. தேவனே அதைத் தருவாரானால், அதைவிட மேன்மை எதுவுமில்லை.

***பிரயோகப்படுத்தல் :***

இன்று ஒரே மொழி தேவையா? ஏன் உலகில் பல மொழிகள் தேவை?

ஜனங்கள் கற்களைப் பயன்படுத்தாமல் செங்கற்களைப் பயன்படுத்தி வீடு கட்டினர். சாந்துக்கு பதிலாக (நிலக்கீழ்) தாரைப் பயன்படுத்தினர். இந்த மாற்றம் உங்களுக்கு உணர்த்துவது என்ன?

பூமி எங்கும் பரவிப் போகாமல் இருக்க மக்கள் சிந்தித்த காரியம் என்ன?

கர்த்தர் பூமிக்கு இறங்கி வந்து, ஜனங்கள் நகரத்தையும் கோபுரத்தையும் பாபேலிலே கட்டுவதைப் பார்வையிட்டது ஏன்? அவரது அதிகாரம் என்ன?

ஒரு நகரத்தை நிர்மாணிக்க, வானத்தை எட்டுமளவு பெரிய கோபுரத்தை இன்றும் கட்ட நினைப்பது தவறா? புகழ் பெற நினைப்பது தவறா?

அவ்விடத்திலிருந்து பூமியெங்கும் பரவிப் போகச் செய்தவர் யார்? ஏன்?

தமக்கு பேர் உண்டாகச் செய்யும்படி இன்று மனிதர்கள் செய்வது என்ன? உண்மையில் தமக்கான மகிமையை தேடுபவர்களைக் குறித்து வேதாகமம் கூறுவது என்ன?

***எனது சிந்தனை:***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை

14

ஞாயிறு

## மன நிர்ணயம்

*...கர்த்தருடைய உக்கிரகோபம் நம்மைவிட்டுத் திரும்பும்படிக்கு, அவரோடே உடன்படிக்கை பண்ண என் மனதிலே நிர்ணயித்துக்கொண்டேன். 2நாளாகமம் 29:10*

வேத வாசிப்பு: 2நாளா 29:1–11

வாழ்வில் தேவனுக்கே முதலிடம் கொடுக்கவேண்டும் என்பது தெளிவான சத்தியம். ஆனால், எல்லா வேளைகளிலும் தேவனுக்கே முதலிடம் கொடுக்கிறோமா? ஒரு காரியத்தை ஆரம்பிக்கும்போது ஜெபத்துடனே ஆரம்பிப்போம்; ஆனால் அது எமது உள்ளார்ந்த ஜெபமா அல்லது பழகிப்போன ஒன்றா? எந்தச் சூழ்நிலையிலும் முதலாவது தேவனைத் தேட மூடியிருக்கிற நமது இதயக் கதவுகளைத் திறப்போமாக.

எசேக்கியா ராஜா தன் ராஜ்யபாரத்தை ஏற்றுக்கொண்ட அந்த மாதத்திலேயே, கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்து, அவைகளைப் பழுதுபார்க்கும் முழு முயற்சியிலே இறங்கினான். தனது தகப்பன் பூட்டிப்போட்ட ஆலயக் கதவுகள் தான் (2நாளா.28:24) எசேக்கியாவின் இருதயத்தில் முதலில் வந்துநின்றது. இவன் ராஜாவாகும்போது இவனுக்கு வயது 25, வாலிப வயது; தகப்பன் இறந்ததும் முதலாவது அவன் ஆலயத்தையே நோக்கினான் என்றால், தகப்பன் ஆலயக் கதவுகளை மூடிய போது இவனது இருதயம் பட்டிருக்கக்கூடிய வேதனையை நம்மால் கற்பனைபண்ணிப் பார்க்கமுடியும். ஆசாரியரை லேவியரை அழைத்த எசேக்கியா, “முதலில் உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்” என்றான். ஏனெனில் அவர்கள் பணிசெய்யவேண்டிய இடம் கர்த்தருடைய ஆலயம். ஆலயப் பணியில் ஈடுபடுகிறவர்களின் பரிசுத்தம் மிக முக்கியம் என்பதை எசேக்கியா அறிந்திருந்தான். அடுத்ததாக, “அசுத்தமானதைப் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியே கொண்டுபோங்கள்” என்றான். அவர்களும் முதல் மாதம் முதல் திகதியிலே தங்கள் வேலையைத் தொடங்கி, பதினாறாம் திகதியிலே அதை முடித்தார்கள் (2நாளா.29:17). இத்தனைக்கும் காரணம், எசேக்கியா கர்த்தரோடே உடன்படிக்கைபண்ண தன் மனதிலே நிர்ணயித்துக்கொண்டான் என்பதே.

பிதாக்கள் செய்த துரோகம், அதனாலுண்டான தேவ கோபம், அதன் விளைவுகள் யாவும் எசேக்கியாவின் இருதயத்தை வாதித்திருந்தது என்பது விளங்குகிறது. ஆக, முதலாவது அவன் தன் இருதயத்தைத் திருப்பி, பிதாக்கள் உடைத்துப்போட்ட கர்த்தருடனான உடன்படிக்கையை மீள்செய்ய மனதிலே நிர்ணயம்பண்ணிக் கொண்டான். இன்று நமது மனதின் நினைவுகள் என்ன? உலக நெருக்கங்களா? நம்மைக் குறித்த குடும்பத்தைக் குறித்த கவலையா? வியாதி வேதனைகளால் உண்டான தொல்லையா? அல்லது, கர்த்தருடைய ஆலயங்களாக திகழவேண்டிய ஏராளமான மக்கள் அழிவை நோக்கி ஓடுகிறார்களே அந்தப் பாரமா? கர்த்தருடைய ஆலயமாக இருக்கிற தேவ மக்கள் இதயக் கதவுகளைப் பூட்டி, வார்த்தையைவிட்டு விலகி நிற்கிறார்களே, அந்தப் பாரமா? இன்று நமது மனதில் நாம் எதை நிர்ணயிக்கப்போகிறோம்.

***சிந்தனைக்கு:*** எல்லா செயற்பாடுகளுக்கும் நமது மனதின் நிர்ணயம்தான் முதற்காரணம் என்பதை உணர்ந்திருக்கிறேனா? இன்று நான் என்ன நிர்ணயிக்கப்போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

†
வேத வாசிப்பு: 2நாளா 29:12-19

ஜூலை 15 திங்கள்

## ஆலய சுத்திகரிப்பு

*...கர்த்தருடைய வசனங்களுக்கொத்த ராஜாவினுடைய கற்பனையின்படியே கர்த்தருடைய ஆலயத்தைச் சுத்திகரிக்க வந்தார்கள். 2நாளாகமம் 29:15*

ஒரு காரியத்தைக் குறித்து மனதிலே நிர்ணயம்பண்ணிக்கொண்டால், அதாவது தீர்மானித்துவிட்டால், அதை முன்னெடுப்பதற்குத் தாமதிப்பது நல்லதல்ல. தாமதம், சிலசமயம் இல்லை என்ற நிலைக்கு நம்மைத் தள்ளிப்போடவும் கூடும்.

பிதாக்கள் கர்த்தரைக் கோபப்படுத்தியதையும், கர்த்தருடைய வாசஸ்தலத்தை விட்டு அவர்கள் திரும்பி முதுகைக் காட்டியதையும், தனது தகப்பனாகிய ஆகாஸ் தேவனுடைய ஆலயத்துக்குச் செய்தவைகளையும், பலிகளை நிறுத்தி, தூபங்காட்டாமல் விளக்குகளை அணைத்து, கதவுகளைப் பூட்டிவிட்டதையும் வாலிபனான எசேக்கியா கவனித்திருந்திருக்கிறான் என்பதை அவனுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்பமே நமக்கு உணர்த்துகிறது. அவன் தன் ராஜ்யபாரத்தின் முதலாம் வருஷம் முதலாம் மாதத்தில் பூட்டப்பட்டிருந்த ஆலயக் கதவுகளைத் திறந்தான் என்றும் (வச.3), முதல் மாதம் முதல் தேதியிலே (வச.17) ஆலய சுத்திகரிப்பு வேலை ஆரம்பிக்கப்பட்டது என்றும் காண்கிறோம். ஆசாரியரையும் லேவியரையும் அழைப்பித்து, தங்கள் மக்களின் சாவுக்கும், சிறையிருப்பில் அகப்பட்டதற்குமான காரணத்தை விளக்கி, கர்த்தருடைய ஆலயப் பணியைச் செய்வதற்கு இவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று அவர்களுக்கு உணர்த்தி, பணியை ஆரம்பிக்க ஊக்குவிக்கிறார். அவர்களும் தங்களைச் சுத்திகரித்துக்கொண்டு, பணியை ஆரம்பிக்கிறார்கள். இங்கே கவனிக்கவேண்டியது என்னவெனில், "கர்த்தருடைய வசனங்களுக்கொத்த ராஜாவினுடைய கற்பனையின்படியே கர்த்தருடைய ஆலயத்தைச் சுத்திகரிக்க வந்தார்கள்" என்பதே. அதாவது, கர்த்தருடைய வசனத்துக்கு ஏற்ப ராஜா அவர்களுக்குக் கட்டளைகொடுத்தான், அதனால் அவர்களும் கீழ்ப்படிந்தார்கள்.

எசேக்கியாவின் வார்த்தைகள் கர்த்தருடைய வார்த்தைக்கு ஒத்ததாக இருந்ததை அறிந்து, அவர்கள் சகலவித சுத்திகரிப்பையும் செய்து, ஆகாஸ் செய்த அத்தனை அசுத்தங்களையும் மாற்றிப்போட்டார்கள். இன்று நாம் பலவித பிரச்சனைகள் சோதனைகளுக்குள் இழுவுண்டு சத்துருவின் தந்திரத்திற்குள் அகப்பட்டிருக்கிறோமா? இதற்கெல்லாம் காரணம், நமது முன்னோர்களோ, பிறரோ அல்ல; கர்த்தருடைய வார்த்தைக் கேற்றபடி நமது வாழ்வு இருக்கிறதா என்பதே கேள்வி. வார்த்தைக்கு ஏற்புடையதல்லாத எதுவானாலும் அதை அகற்றிப்போட மனதிலே நிர்ணம்பண்ணிக்கொண்டு, தாமதமின்றி அதை இன்றே செயற்படுத்துவோமாக. அது கடினமாக இருந்தாலும், கர்த்தருடைய வசனங்களுக்கொத்த எதுவானாலும் அதைச் செய்ய கர்த்தரே நமக்குக் கிருபை தருவார். எசேக்கியாவின் துணிகரம் நமக்குள்ளும் வரட்டும்.

*சிந்தனைக்கு:* கர்த்தருடைய வசனத்தின்படி வாழுவதற்கு எனக்கிருக்கும் தடை என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
16
செவ்வாய்

## ஆராதனை மீண்டும் ஆரம்பித்தது

*...இவ்விதமாய்க் கர்த்தருடைய ஆலயத்தின் ஆராதனை திட்டம்பண்ணப்பட்டது. 2நாளாகமம் 29:35*

வேத வாசிப்பு: 2நாளா 29:21–36

பூட்டப்பட்டிருந்த நமது கிராமத்து வீட்டுக்குப் போனபோது மகிழ்ச்சி ஒருபுறம் இருந்தாலும், அதன் தோற்றம் கவலையைக் கொடுத்தது. பனை ஓலைகள் காற்றில் அசைந்து எழுப்பிய ஓசை பழைய இனிய நினைவுகளை நினைவூட்டினாலும், அதை இழந்து விட்ட துக்கமும், வீட்டின் தோற்றமும் நெஞ்சை அடைக்கத்தான் செய்தது. இன்று அந்த வீடு திருத்தப்பட்டு, மறுபடியும் பாவனைக்குரியதாக மாறியபோது நமக்கிருந்த சந்தோஷம் சொல்லி முடியாது.

ஆலயம் சுத்திகரிக்கப்பட்டு, சகல பணிமுட்டுகளும் புதுப்பிக்கப்பட்ட செய்தியைக் கேட்ட ராஜா, காலமே எழுந்திருந்து, நகரத்தின் பிரபுக்களைக் கூட்டிக்கொண்டு, கர்த்தரின் ஆலயத்திற்குப் போனான் (2நாளா.29:20) என்பதில் கர்த்தருடைய ஆலயத்தின்மீது எசேக்கியாவுக்கு இருந்த வாஞ்சை தெளிவாகிறது. "கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் பலியிடுங்கள்" என்று கட்டளையிட்டான் ராஜா. பலிகள் செலுத்தப்பட்டன; பாவநிவாரண பலியும் செலுத்தப்பட்டது. லேவியரையும் ஆசாரியரையும் நிறுத்தி, கீத வாத்தியங்களும் பூரிகைகளும் முழங்கத் தொடங்கின. கர்த்தருடைய துதி எழுந்தது; யாவரும் மகிழ்ச்சியோடே துதிசெய்து, தலைகுனிந்து கர்த்தரைப் பணிந்துகொண்டார்கள். மக்களும் சர்வாங்க தகனபலிகளையும் ஸ்தோத்திர பலிகளையும் கொண்டு வந்து செலுத்தினார்கள். "இவ்விதமாய்க் கர்த்தருடைய ஆலயத்தின் ஆராதனை திட்டம் பண்ணப்பட்டது" (2நாளா.29:35). ராஜாவும் மக்களும் சந்தோஷப்பட்டார்கள். கைவிடப்பட்டு, அசுத்தப்படுத்தப்பட்டு இருந்த ஆலயம் மறுபடியும் சீரமைக்கப்பட எசேக்கியா கர்த்தரால் தூண்டப்பட்டு, சகலமும் செய்து முடித்தான் என்றால், அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையாய் நடந்ததால், கர்த்தரும் அவனைக்கொண்டே தமது ஆலயத்தை கர்த்தர் மீண்டும் எழுப்பினார் என்பதைக் கவனிக்கவேண்டும்.

அன்று கர்த்தருடைய ஆலயமும், ஆராதனையும், பலிசெலுத்துதலும் இஸ்ரவேலில் முக்கிய பங்கு வகித்திருந்தது. அதை ஒருவன் தீட்டுப்பண்ணினான். அவன் மகன் அதை சீரமைத்தான். இன்று கர்த்தர் தங்கிவாழும் ஆலயமாகிய நமது இருதயத்தின் நிலை என்ன? "என்னை ஜீவபலியாய் ஒப்புவிக்கிறேன்" என்று துணிகரமாகப் பாடுகின்ற நமது பலிகள் எங்கே? பலி இல்லாமல் அதை ஆராதனை என்று கூறமுடியாது. பண்டிகைகள் யாவும் அதன் பின்னர்தான். இன்று நமது வாழ்வு தேவனை ஆராதிக்கும் புனித இடமாக இருக்கிறதா? சபையாக ஏறெடுக்கின்ற ஆராதனை மெய்யாகவே சர்வாங்க தகனபலியாக நம்மை ஒப்புக்கொடுத்த ஆராதனைகளாக இருக்கிறதா? நாம் தேவனைத் துக்கப்படுத்த முடியாது, அவர் பார்வைக்கு நாம் செம்மையாய் நடக்கத் தீர்மானித்தாலே அவர் மிகுதியைச் செய்துமுடிப்பார்.

***சிந்தனைக்கு:*** என் இருதயமும் என் வாழ்வும் தேவனுக்குப் பிரியமான ஆராதனையாக இருப்பதற்கு ஏற்ப அவைகள் சுத்திகரிக்கப்பட இன்றே என்னை ஒப்புவிப்போனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

†
வேத வாசிப்பு: 2நாளா 30:1–9, 15–27

ஜூலை 17 புதன்

## பண்டிகைகள் ஆரம்பமாயின!

*எருசலேமில் மகா சந்தோஷம் உண்டாயிருந்தது. சாலொமோன் என்னும் இஸ்ரவேலுடைய ராஜாவின் நாட்கள் முதற்கொண்டு இப்படி எருசலேமில் நடந்ததில்லை.*
*2நாளாகமம் 30:26*

ஒரு மகிழ்ச்சியான குடும்பம் உருவாகும்போது மிக்க மகிழ்ச்சியும் உண்டாயிருக்கும். ஆனால் அந்தக் குடும்பம் உடையுமானால் அந்த வேதனை சொல்லி முடியாது. அந்தக் குடும்பம் மீண்டும் மனதார ஒன்றிணையுமானால் அதனால் உண்டாகும் மகிழ்ச்சி முந்தியதிலும் அதிகமானதாவே இருக்கும் என்பதை மறுக்கமுடியாது.

இதுதான் அன்று எசேக்கியா ராஜாவின் காலத்தில் யூதாவிலும் நடந்தது. ஆலயக் கதவுகள் மூடப்பட்டு, ஆலயம் அசுத்தப்படுத்தப்பட்டு, ஆராதனைகள் நிறுத்தப்பட்டு, பண்டிகைகள் மறக்கப்பட்டிருந்த காலம் அது. யாவையும் எசேக்கியா புதுப்பித்து, கர்த்தரை மகிழ்வித்தார். அடுத்தபடியாக பண்டிகைகளை ஆசரிக்கும்படி ராஜா ஒரு கட்டளை பிறப்பித்தார். இஸ்ரவேலுக்கு மிக முக்கியமானது எகிப்திலிருந்து அவர்கள் மீட்கப்பட்ட பஸ்கா பண்டிகை. இதை நினைவுபடுத்தும்படி வருடந்தோறும் பண்டிகையினை ஆசரிக்கும்படி கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். அப்படியே ஆசரித்து வந்தாலும் இடையிலே இப்பண்டிகை மாத்திரமல்ல ஆலயமும் பண்டிகைகளும் இஸ்ரவேலினால் புறக்கணிக்கப்பட்டிருந்தன. இப்போது ஏறத்தாழ 200 ஆண்டுகளின் பின்னர் எசேக்கியாவின் தூண்டுதலினால் பஸ்கா ஆசரிப்பின் ஆயத்தங்கள் ஆரம்பமாயின. மக்கள் எழும்பி, அந்நிய பலிபீடங்களை அகற்றி, பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளை அடித்தார்கள். ஆசாரியர்கள் மக்களை எழுப்பி செய்யவேண்டிய செயலை, மக்களே செய்ததால், ஆசாரியரும் லேவியரும் வெட்கிப்போகுமளவுக்கு மக்கள் மிகுந்த சந்தோஷத்துடனே பஸ்கா ஆசரிப்பை ஆரம்பித்தார்கள். தங்கள் இனம் விடுவிக்கப்பட்ட அந்த சந்தோஷத்தை நினைத்து கொண்டாடினார்கள். இந்த ஆரவாரம் பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்தில் வந்து எட்டினது என்று வாசிக்கிறோம். ஆம், கர்த்தர் மகிழ்ந்திருந்தார்.

பாவத்திலிருந்து விடுதலையும், ஆவிக்குள்ளே மறுபடியும் பிறப்பதுவும் ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் முக்கியம். அடுத்தது, சத்துருவின் உறவு அறுந்து, பரிசுத்த தேவனுடனான உறவுக்குள் வந்த எவனும், தான் விடுதலையடைந்து இப்போது தேவ உறவுக்குள் இருப்பதை ஒரு கணமேனும் மறந்துபோனால், மறுபடியும் சத்துருவின் ஆக்கிரமிப்பு அவனைத் திண்டாட வைக்காது என்று சொல்லமுடியாது. 200 வருடங்களுக்குப் பிற்பாடு யூத சமூகம் தாம் விடுதலையடைந்ததை உணர்ந்து தேவனைக் கொண்டாடி, கர்த்தருடனான உறவைப் புதுப்பித்தபோது அவர்களுக்குள் இருந்த மகிழ்ச்சி ஆரவாரத்தை நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம். முதலாவது நாம் மீட்கப்பட்டவர்களா? அப்படியானால், தினம் தினம், விநாடிக்கு விநாடி நம்மை மீட்ட இரட்சகரை, மீட்கப்பட்ட நாட்களை நினைந்து தேவனைக் கொண்டாட வேண்டாமா?

***சிந்தனைக்கு:*** நமது மீட்பரை, எந்நிலையிலிருந்து அவர் நம்மை மீட்டுக் கொண்டார் என்பதை, நாம் மீட்கப்பட்ட சந்தோஷத்தை நினைந்து கர்த்தரைத் துதிப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
18
வியாழன்

# குவியல்கள்

*இந்தக் காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டுவரத் தொடங்கினது முதல் நாங்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்தோம். இன்னும் மிச்சமும் இருக்கிறது.*

*2நாளாகமம் 31:10*

வேத வாசிப்பு: 2நாளா 31:1, 4–12

இன்று, ஊழியப்பணியில் பணத்தேவைகளைச் சந்திக்க நிகழ்ச்சிகள் நடாத்துவதும், ஆலயத்தில் உறைகள் கொடுப்பதும், தனிப்பட்ட கோரிக்கை விடுப்பதும் என்று பல முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. மோசே வாசஸ்தலத்தை அமைத்தபோது மக்கள் எகிப்திலிருந்து கொண்டுவந்திருந்த பொன் வெள்ளியை அள்ளிக் கொடுத்தார்கள். தாவீது தேவனுடைய ஆலயப்பணிக்காக தானும் சேகரித்து, மனப்பூர்வமாய் கொடுக் கிறவர்கள் கொடுக்கும்படிக்கு அழைப்பு விடுத்தபோது, போதும் போதும் என்று மக்கள் கொடுத்ததுமன்றி, கொடுத்ததற்காக சந்தோஷப்பட்டார்கள் என்றும் வாசிக்கிறோம் (1நாளா.29:9). கர்த்தருக்கென்று அள்ளிக் கொடுக்கும் இந்த மனப்பான்மை இன்று எங்கே?

எசேக்கியாவின் நாட்களிலும், ஆலய சுத்திகரிப்பு முடிந்து, பண்டிகைகள் ஒழுங்கு படுத்தப்பட்டு, தேசம் சுத்திகரிக்கப்பட்ட பின்னர், கர்த்தருடைய கட்டளைப்படி முதற் பலன்களையும் தசமபாகங்களையும் கொடுப்பதற்கு எசேக்கியா மக்களை ஆயத்தம் பண்ணினார். அந்த சம்பவம் பற்றி, "தங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தம் பண்ணப்பட்டவைகளில் தசமபாகத்தையும் கொண்டுவந்து குவியலாக வைத்தார்கள்" என்று வாசிக்கிறோம். ஐந்து மாதங்களாக குவியல்கள் குவிக்கப்பட்டன. கற்பனை பண்ணமுடிகிறதா? கர்த்தரது ஆலயத்திற்கென்று கொடுக்கத் தொடங்கியது முதல் அவர்களும் திருப்தியாகப் புசித்து, மிச்சமும் இருந்தது. "கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதித்ததினால் இந்தத் திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது என்றார்கள்." இவையெல்லாவற்றிலும் அவர்கள் உண்மையுள்ளவர்களாய் இருந்தார்கள்.

இன்று ஊழியப்பணிக்காக ஏன் தடுமாற்றம்? 1990 ஆண்டில் ஓமான் நாட்டில் சபை ஒன்றுகூடுகையில் தேவனுக்குக் கொடுப்பதைக் குறித்து ஒரு சிறிய செய்தி கொடுக் கப்பட்டது. பின்னர் கற்றதைச் செயற்படுத்த அழைப்பு விடுக்கப்பட்டபோது, சேர்க்கப் பட்ட பணத்தாள்கள், பொன் நகைகள் யாவையும் மேடையில் குவியலாகக் குவித் ததை நானே கண்டேன். பணிக்கு மாத்திரமல்ல, கர்த்தருடைய நாமத்தினிமித்தம் கொடுப்பதால் உண்டாகும் பேரின்பத்தை, கொடுத்தால்தான் அனுபவிக்க முடியும். இன்றைய பொருளாதார நெருக்கடிகளும், உயர்ந்துவிட்ட வாழ்க்கைச் செலவும் நம்மைக் கட்டிப்போட்டிருக்கிறது. என்றாலும், நமக்காகத் தம்மையே கொடுத்த கர்த்தருக்காக நாம் எதைச் செய்தாலும் அவர் நம்மை ஒருபோதும் கைவிடவே மாட்டார். இந்த விசுவாசம் நம் ஒவ்வொருவரிடமும் இருக்குமானால் இன்றைய நிலை நிச்சயம் மாறுமல்லவா!

*சிந்தனைக்கு:* தேவ பணிக்கென்றும், தேவநாமத்தில் தேவையிலுள்ளவர் களின் தேவைகளைச் சந்திப்பதற்கென்றும் கொடுப்பதற்கு எனக்கிருக்கும் தடைகள்தான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| † வேத வாசிப்பு: | 2இராஜா 18:5–7,13 2நாளா 32:20–21 |

## சோதனைகள் வரும்!

*அவனோடிருக்கிறது மாம்ச புயம், நமக்குத் துணை நின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர்தானே. 2நாளா. 32:8*

ஜுலை
19
வெள்ளி

கர்த்தரை அதிகமாக தேடத் தேட சோதனைகளும் அதிகரிக்கிறது என்று பலர் சொல்வதுண்டு. உண்மைதான், சோதிக்கப்படாத எந்தவொரு காரியமும் உறுதிப்படுத்தப்பட முடியாது. அதேசமயம், "உலகத்தில் இருப்பவனிலும் நம்மிலிருக்கிறவர் பெரியவர்" என்று சொல்லி ஜெபிக்கக் கற்றிருக்கிற நாம், மெய்யாகவே நமது யுத்தங்களை நடத்த வல்லவரை சார்ந்திருக்கிறோமா? சார்ந்திருப்போமானால் சோதனைகளில் இடறிப்போக முடியாதல்லவா!

எசேக்கியா ராஜாவைக் குறித்து சொல்லப்பட்டிருக்கின்ற சில விடயங்களை மற்ற ராஜாக்களின் வாழ்வில் பார்ப்பது அரிது. ஒன்று, வேறெந்த ராஜாக்களிலும்பார்க்க கர்த்தர்பேரில் இவன் வைத்திருந்த நம்பிக்கை ஒப்பற்றதாக இருந்தது. அடுத்தது, இவன் கர்த்தரைவிட்டுப் பின்வாங்காமல், அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டான். மேலும், கர்த்தருக்கு முன்பாக, மனுஷரின் புகழை பெற்றுக்கொள்ள அல்ல, நன்மையும் உண்மையுமானதை முழு இருதயத்தோடும் செய்தான். இதன் பலன், கர்த்தர் எசேக்கியாவுடன் இருந்தார். இன்று நாம் அடிக்கடி தள்ளாடுவது ஏன்? நாம் கர்த்தரோடு இருந்தால் கர்த்தரும் நம்மோடு இருப்பாரே! ஆகவே, இன்று நமது கஷ்ட சூழ்நிலைக்கு கர்த்தர் அல்ல, நாமே காரணர் என்பதை உணர்ந்து, கர்த்தரோடு மாத்திரம் இருக்கும்படி மனந்திரும்புவோமாக.

இப்படியாக, நாம் கர்த்தரோடும், கர்த்தர் நம்மோடும் இருந்தால் உலக வாழ்வு உல்லாசமாக மாறிவிடும் என்று எண்ணக்கூடாது. நமக்கு நிச்சம் சோதனைகள் வரும். அது வந்தால்தான் நமது சார்ந்திருத்தல் உண்மையானதா என்பது தெரியவரும். எசேக்கியாவுக்கும் இப்படி ஒரு சோதனை வந்தது. அசீரியா ராஜா இஸ்ரவேலை சிறைப்பிடித்த பின்னர், யூதா பக்கம் திரும்பினான். முதலில் சற்று தடுமாறிய எசேக்கியா, பின்னர் தானும் 'திடன்கொண்டு', 'அவனோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம். "நமக்குத் துணைநின்று நம்மோடிருந்து நம்முடைய யுத்தங்களை நடத்துவது நாம் அல்ல, நம்முடைய தேவனாகிய கர்த்தர்" என்று சொல்லி மக்களையும் திடப்படுத்தித் தேற்றினான். நாம் கர்த்தரை விசுவாசிக்கிறோம், அவரையே நம்பியிருக்கிறோம்; இதில் சந்தேகமில்லை. ஆனால் கஷ்டங்கள் நெருக்கடிகள், முக்கியமாக பலதரப்பட்ட வியாதிகள், மரண உபாதைகள் நெருங்கி வரும்போது நமது நம்பிக்கை தளர்ச்சியடைவது ஏன்? நமது குடும்பத்தைத் திடப்படுத்த நாம் தடுமாறுவதும் ஏன்? கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்தால், நாம் தள்ளாடி பிற அனுகூலங்களை நாடி ஓடுவதும் ஏன்?

*சிந்தனைக்கு:* 'நான் உன்னைக் கைவிடமாட்டேன்' என்பது தேவவாக்கு என்றால் அவர் கைவிடவேமாட்டார்; இந்த நம்பிக்கை சோதிக்கப்படும் போது என் பதிலுரைதான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
20
சனி

## சேம் குடும்ப வரலாறு

*... அவர்களுடனே ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தை விட்டு, கானான் தேசத்துக்குப் போகப் புறப்பட்டான். ஆதியாகமம் 11:31*

வேத வாசிப்பு: ஆதி 11:10–32

*தேவனுடைய செய்தி:*

நாம் எங்கு வாழ்கின்றோம், எவ்வளவு காலம் வாழ்கின்றோம் என்பது முக்கியமல்ல. வாழ்கின்ற காலத்தில், வாழ்கின்ற இடத்தில், என்ன செய்தோம் ஏற்படுத்திய செல்வாக்கு, தாக்கம் என்ன என்பதே முக்கியமானது.

*தியானம்:*

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு சேமுக்கு அர்பக்சாத் என்னும் மகன் பிறந்தான். அர்பக்சாத்துக்கு 35 வயதில் சாலா, சாலாவுக்கு 30 வயதில் ஏபேர், ஏபேருக்கு 34 வயதில் பேலேகு, பேலேக்குக்கு 30 வயதில் ரெகூ, ரெகூவுக்கு 32 வயதில் செரூகு, செரூகுக்கு 30 வயதில் நாகோர், நாகோருக்கு 29 வயதில் தேராகு, தேராகுக்கு 70 வயதானபோது அவனது மகன்கள் ஆபிராம், நாகோர், ஆரான் பிறந்தார்கள்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

பிறப்பு, வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் இவற்றை தீர்மானிப்பது எமது கையில் இல்லை.

*பிரயோகப்படுத்தல் :*

வெள்ளப்பெருக்கிலிருந்து ஆபிராம் பிறக்கும்வரை வருடங்கள் எத்தனை? வேத வசனத்தின் அடிப்படையில், நீங்களாகவே கணக்கிடுங்கள்.

இதுவரை பாபிலோனியாவில் ஊர் என்ற இடத்தில் வாழ்ந்தவர்களில் யார் யார் அங்கிருந்து வெளியேறினார்கள்? அவர்கள் எங்கே போக திட்டமிட்டார்கள்?

தேராகு எத்தனை வருடங்கள் வாழ்ந்தான்? அவன் எங்கே மரித்தான்? தேராகுவின் மகன்மார் யார்? யார்? தேராகுவின் பேரன் யார்?

தந்தை உயிரோடிருக்கையில் மகன் மரித்த நிலையை கண்டதுண்டா? (ஆரான் தனது பிறந்த நகரமான ஊர் என்ற இடத்தில் மரணமடைந்தான்.) இப்படிப்பட்ட நிலையில் உள்ளோருக்கு உமது ஆலோசனை என்ன?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| † வேத வாசிப்பு: | 2ராஜா. 18:28–36 2நாளா. 32:9–22 |

## பிரதியுத்தரம்

*ஒரு வார்த்தையும் பிரதியுத்தரமாகச் சொல்லாமல் மவுனமாக இருந்தார்கள்.*

*2ராஜாக்கள் 18:36*

ஜூலை
21
ஞாயிறு

பேசாமல் அமைதியாயிருப்பது மனிதராகிய நமக்குக் கடினமான விடயமேதான். நமக்கு எதிராக சவாலிடுகிறவர்கள், குற்றப்படுத்திப் பேசுகிறவர்கள் (குற்றம் நமதாகவுமிருக்க லாம், இல்லாமலும் இருக்கலாம்) கோபமாக சத்தமிடுவது வழக்கம். இவர்களின் முன்னிலையில் நாமும் சத்தமிட்டால், நமக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம்? இன்னொரு புறத்தில், நாம் நல்லது என்று செய்திருக்க, அதைப் புரிந்துகொள்ளமலும் அவர்கள் நம்மை வைய இடமுண்டு. எதுவானாலும், கிறிஸ்துவின் பிள்ளைகள் நாம் மறு உத்தரவு கொடுப்பது எப்படி?

எசேக்கியாவின் பதினான்காம் வருஷத்திலே அசீரியா ராஜா யூதாவுக்கு எதிராக வந்தான். எசேக்கியா அவனுக்குக் காணிக்கைகளைக் கொடுத்து திரும்பி போய்விடும் படி கேட்டும், அவன் திரும்பவில்லை. பதிலுக்கு, மக்களையும் ராஜாவையும் பேசியே சோர்ந்துபோகப்பண்ணும் வியூகத்தைக் கடைப்பிடித்தான். தனது கைக்கு எந்த தேவர் களாலும் யூதாவைத் தப்புவிக்க முடியாது என்று ஜனங்கள் கேட்க உரத்து பேசினான். 'கர்த்தர் தப்புவிப்பார்' என்று எசேக்கியா கூறி ஏமாற்றுவான் என்றும் சொன்னான். ஜனங்களோ ராஜா சொன்னபடி மறுஉத்தரவு எதுவும் கொடுக்காமல் அமைதியாயிருந் தார்கள். ராஜா தன்னையும் திடப்படுத்தி, "நமக்குத் துணை நின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் கர்த்தர்" என்று மக்களையும் திடப்படுத்தி னான். அசீரியா ராஜா இஸ்ரவேலின் தேவனை நிந்திக்க ஆரம்பித்தபோதும் எசேக்கியா வும் ஏசாயாவும் தங்கள் சுயபெலத்தில் எதுவும் செய்யவில்லை; மாறாக, வானத்தை நோக்கி அபயமிட்டார்கள். "அப்பொழுது" கர்த்தரின் கரம் உயர்ந்தது. அன்று இராத்திரி யிலே கர்த்தருடைய தூதன் புறப்பட்டு அசீரியரின் பாளயத்தில் 1,85,000 பேரைச் சங்கரித்தான். கர்த்தர் யுத்தத்தைச் செய்துமுடித்தார். அசீரியன் தோற்று திரும்பினான்.

சுயத்தில் நாம் செயற்படுமளவும் தேவனுடைய கரம் உயரமுடியாது. நாம் மறுஉத்தரவு கொடுத்து எதிரியின் தொனியில் சத்தமிடுவோமானால், நமது நீதியை நாமே நிலை நாட்டுவது போலாகும். "நானே பேசவா, அல்லது தேவகரத்தில் விட்டுவிடவா" என்ற தடுமாற்றம் நிச்சயம் வரும். அதிலும் நாம் செய்த தவறு தெரியாதவிடத்து, இன்னும் அதிகமாக நமக்குள் ஒரு வேகம் எழும்பும். வாழ்வில் எவ்வேளையிலும் நாம் ஏறிட்டு பார்க்கவேண்டியது நமது ஆண்டவரையே! அடிக்கப்பட்டவராய் யூதரின் முன்னே நிறுத்தப்பட்டபோது, இயேசு அமைதியாகவே நின்றிருந்தார் (மத்.26:63). யோவான் எழுதியபடி (யோவா.18:36-37, 19:11) பிலாத்துவிற்கு சில உத்தரவுகளை சொன்னாலும், எந்த இடத்திலும் தாம் குற்றமற்றவர் என்று இயேசு தமக்காக வழக்காடவில்லை. எதுவானாலும் கர்த்தரிடத்தில் விட்டுவிட்டு, அமைதியாக காத்திருக்கப் பழகுவோமா?

***சிந்தனைக்கு:*** குற்றம் சுமத்தப்படும்போது, அமைதி காப்பதா? நமக்காக நாமே வாதிடுவதா? எது கடினமாக காரியம்? எது நமக்கு தீதாக முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
22
திங்கள்

## மரண நாள்

*நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்தும். நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். 2இராஜாக்கள் 20:1*

வேத வாசிப்பு: 2இராஜா. 20:1–11

"மரணம்" இந்நாளில் அல்லது இந்த நாட்களில் நிகழும் என்று நமக்கு அறிவிக்கப் பட்டால் நாம் என்ன செய்வோம்? தேவனை சந்திக்கும்படி அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வோமா? அல்லது அழுது புலம்புவோமா? கடுமையான வியாதியால் அவஸ்தைப்படுகிறவர்கள் சாவு வராதா என்று ஏங்குவதுண்டு. அது, அந்த அவஸ்தை யிலிருந்து விடுதலை வேண்டும் என்பதற்காகவேதான் அநேகமாக இருக்குமே தவிர, சாவை சந்திப்பதற்காக அல்ல. எனினும் மரண விளிம்பில் தேவனைச் சந்திக்கும் மகிழ்ச்சியுடன் ஜீவன் பிரிகிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

கர்த்தருடைய பெரிதான கிருபையால் பல வெற்றிகளைக் கண்ட எசேக்கியாவுக்கு வியாதி வந்தது; மாத்திரமல்ல, அது மரணத்துக்கு ஏதுவாயிருந்தது. சிலநேரங்களில் வைத்தியர்கள் கைவிட்ட நிலை சிலருக்கு இன்றும் ஏற்படுவதுண்டு அல்லவா! இங்கே ஏசாயா தீர்க்கன் எசேக்கியாவிடத்தில் வந்து, அவருடைய மரணம் நெருங்கிவிட்டது என்றும், வீட்டுக் காரியங்களை ஒழுங்குசெய்யும்படிக்கு கர்த்தர் அறிவிப்பதாக கூறினார். கர்த்தர் கூறினால் கூறியதுதான். "அப்பொழுது எசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புற மாகத் திருப்பிக்கொண்டு, கர்த்தரை நோக்கி..." எசேக்கியாவைக்குறித்த இக்குறிப்பை நாம் யாவரும் அறிவோம். தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக்கொண்டு, அதாவது யாரும் தன் முகத்தைப் பார்க்க அவன் விரும்பவுமில்லை, எவரையும் அவனும் பார்க்க விரும்பவில்லை. எசேக்கியா கர்த்தரை நோக்கி இரக்கத்திற்காக மன்றாடியபோது, கர்த்தரும் இரங்கி, "உன் கண்ணீரைக் கண்டேன்" என்கிறார். அவனுடைய நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன் என்கிறார். இதற்கு அடையாளமாக மூன்றாம் நாளிலே ஆலயத்திற்குப் போவாய் என்கிறார். எசேக்கியாவும் அடையாளம் கேட்டான். அதுவும் உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால் பின்னர் நடந்தவற்றைப் பார்க்கும்போது, கர்த்தர் அனுமதித்த மரண நாளை ஏற்றுக்கொண்டிருந்தால் நலமோ என்று எண்ணத் தோன்றுகிறது. யூதாவின் வரலாற றிலே ஏறத்தாழ 100 ஆண்டுகளில் (கி.மு.732-640) எசேக்கியா ராஜாதான் கர்த்தருக்கு உண்மையாயிருந்தான். அவனுடைய உண்மைத்துவம் மாற்றங்களைக் கொண்டு வந்தது. கர்த்தரும் அதை மதித்து அவனது விண்ணப்பத்தைக் கேட்டு சுகம் கொடுத்து, ஆயுசு நாட்களையும் கூட்டிக்கொடுத்தார். ஆனால் இந்த உண்மைத்துவம் இறுதி வரைக்கும் இருக்கவேண்டும். விசுவாசத்துடன் கூடிய ஜெபம் வல்லமைமிக்கது; ஆனால் அந்த விசுவாசம் உண்மைத்துவத்துடன் கூடி இருக்கவேண்டும். கர்த்தர் நமக்குச் செய்த எதனையும் நாம் மறக்கக்கூடாது. பாவிகளாய் துரோகிகளாயிருந்த நம்மை அவர் தூக்கி எடுத்தாரே, இதை மறக்கிறவன் நிச்சயம் தவறிப்போவான். எசேக்கியா எங்கே தவறினான்?

***சிந்தனைக்கு:*** என் ஜெபம் கேட்கப்படுகிறதா, இல்லையா? இல்லாவிடில், நான் உண்மையுள்ளவனா, என் ஜெபம் விசுவாசத்துடன் கூடியதா என்பதை சிந்திப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எசேக்கியாவுக்கும் சோதனையா?

*எசேக்கியா தனக்குச் செய்யப்பட்ட உபகாரத்திற்குத் தக்கதாய் நடவாமல் மனமேட்டிமையானான்.*

*2நாளாகமம் 32:25*



செழிப்பு உபதேசங்கள் நிறைந்துள்ள இந்நாட்களில், கஷ்டங்களும் சோதனைகளுமே நம்மை உருவாக்கும் 'தேவனுடைய உபகரணங்கள்' என்றால் நம்மால் ஏற்க முடியுமா? ஆண்டவர் நமக்குச் செய்த நன்மைகளை நாம் திரும்பிப்பார்க்க வேண்டும். அவர் நம்மை இரட்சித்து, தமது பிள்ளையாக்கினாரே, இதற்கும் மேலான ஒரு அற்புதம் இருக்கமுடியாது. இப்படியிருக்க உண்மையாகவே நாம் கர்த்தருக்கு முன் உண்மையுள்ளவர்களாய் இருக்கிறோமா?

சகலமும் நன்றாய் நடந்து, வெற்றிகள் கிடைத்து, செழிப்பு பெருகும்போது நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இந்த இடத்தில்தான் இன்று அநேகர் விழுந்துபோகிறார்கள். இது மன மேட்டிமைக்கு வழிவகுக்கும். அன்று எசேக்கியாவுக்கும் இதுதான் நடந்தது. கர்த்தர் தனது வியாதியைக் குணமாக்கி, ஆயுசைக் கூட்டி ஆசீர்வதித்த பின்னர், அவனுக்குள் மனமேட்டிமை உண்டானது. தேவன் பெருமையுள்ளவர்களை எதிர்க்கிறார் என்று வேதத்தில் காண்கிறோம்.

"அவன் இருதயத்தில் உண்டான எல்லாவற்றையும் அறியும்படி அவனைச் சோதிக்கிறதற்காக தேவன் அவனைக் கைவிட்டார்" (2நாளா 32:31). இந்த வாக்கியம் நம்மையும் எச்சரிக்கட்டும். எசேக்கியாவுக்கு நடந்த அதிசயத்தைக் கேள்வியுற்று பாபிலோன் ராஜா பிரபுக்களை அனுப்பிவைத்த விடயத்தில், எசேக்கியா என்ன செய்கிறான் என்பதைக் கவனிப்பதற்காக கர்த்தர் ஒரு அடி பின்னே நின்றார் என்று சொல்லலாம். மாறாக, கர்த்தர் அவனை சோதிக்கவில்லை. சற்று தள்ளி நின்று கவனித்தார். எசேக்கியாவோ அவர்களை அங்கீகரித்து, தேவனுக்கு மகிமை செலுத்துவதைவிட்டு, தான் சவரித்ததுபோல், சகல பொக்கிஷங்களையும் அவர்களுக்குக் காண்பித்து பெருமைப் பட்டான். இதன் விளைவாக சகலமும் பாபிலோனால் கைப்பற்றப்படும் என்றும் அவனது சந்ததியும் பாபிலோனிலே வேலைக்காரராவார்கள் என்றும் சொல்லப்பட்டது.

பெருமை, மனிதனைக் கொல்லுகின்ற நஞ்சூட்டப்பட்ட ஆயுதம் என்றால் மிகையாகாது. நாம் விடுகின்ற மூச்சுக்கூட தேவனுடைய கிருபையே. நமக்கு உண்டாயிருக்கிற அனைத்தும் அவராலே மட்டும்தான் ஆகிறது. ஆசீர்வாதங்களைக் குறித்து பெருமைப்படும்போது ஆசீர்வதித்தவரை நாம் புறம் தள்ளிப்போடுகின்ற அபாயமுண்டா? ஆண்டவர் இயேசு தாம் வாழ்ந்த காலத்தில் ஒருமுறை தன்னும் தமது தெய்வீகத்தை வெளிப்படுத்தவே இல்லை. மரணம் நேரிட்டபோதும், அந்தத் தாழ்மை அவரில் ஜொலித்துக்கொண்டே இருந்தது. இன்று நம்மை ஆராய்ந்து சகல மேன்மையையும் கர்த்தருக்கே செலுத்தி, "நான்" என்ற பெருமை வாழ்வின் எந்த மூலையில் இருந்தாலும் இப்போதே அதை அகற்றிப்போடுவோமாக.

*சிந்தனைக்கு:* பெருமையுள்ளவனுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். இதை விசுவாசிக்கிறேன் என்றால், கர்த்தருக்குமுன்பாக என்னைத் தாழ்த்த நான் என்ன செய்கின்றேன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
24
புதன்

## மனந்திரும்பிய மனாசே

*கர்த்தரே தேவன் என்று அப்பொழுது மனாசே அறிந்தான்.*
*2நாளாகமம் 33:13*

வேத வாசிப்பு: 2இராஜா. 21:1–17 2நாளா. 33:11–16

தண்டனைகளும் அடிகளும்போல மனிதனைச் சீர்ப்படுத்த வேறு எந்த ஆயுதமும் சரிவராது. மறுபுறத்தில் தன் தவறுகளை உணர்ந்தோ, அல்லது தண்டிக்கப்படும் போதோ, மெய்யாகவே மனந்திரும்புகிற எவரையும், முன் செய்த அட்டூழியங்கள் நிமித்தம் வெறுத்துவிடாமல், மன்னித்து ஏற்றுக்கொள்கின்ற மனதுருகுகின்ற கர்த்தரே நமது கர்த்தர். அதற்காக அவருடைய மனதுருக்கத்தை நமக்குச் சாதகமாக்கிக் கொள்ளக்கூடாது. அப்படிச் செய்தால், அதையும் கர்த்தர் அறிவார். மெய்யான மனந்திரும்புதல் பெரிய மாறுதலை நிச்சயம் கொண்டுவரும்.

“கர்த்தரிடத்தில் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல ஒருவனும் இருந்ததில்லை” என்று பெயரெடுத்த எசேக்கியாவின் மகன்தான் மனாசே. இவன் ராஜாவாகும்போது பன்னிரண்டு வயது. வயது ஏற ஏற வாலிப வயதின் மிடுக்கோ என்னவோ, எசேக்கியா தகர்த்துப்போட்ட அத்தனை பாகால் மேடைகள் விக்கிரகங்களை இவன் மீண்டும் எழுப்பி, எருசலேம் தேவாலயத்தையே தீட்டுப்படுத்தினான். கர்த்தரைவிட்டு வானத்தின் சேனையெல்லாம் வணங்கினான். கர்த்தருக்குக் கோபமுண்டாக அவர் பார்வைக்கு மிகுதியும் பொல்லாப்பானதைச் செய்து, மக்களையும் வழிதப்பிப்போகப் பண்ணினான். கர்த்தர் அவர்களுடன் பேசினார்; ஆனால் அவர்கள் கவனியாதே போனார்கள். இதனால் கர்த்தர் அசீரியாவை வரவழைத்து, மனாசேயைப் பிடித்து, சங்கிலியால் கட்டி, பாபிலோனுக்குக் கொண்டுபோய்விட்டார்கள். “இப்படி அவன் நெருக்கப்படுகையில், தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கெஞ்சி, தன்னை மிகவும் தாழ்த்தினான்” என்று வாசிக்கிறோம். கர்த்தர் அவன் கெஞ்சுதலைக் கேட்டு அவனைத் திரும்பவும் எருசலேமுக்கு வரப்பண்ணினார். அப்பொழுது மனாசே விழிப்படைந்து, கர்த்தரே தேவன் என்று அறிந்து, தான் இதுவரை விட்ட அத்தனை தவறுகளையும் சரிப்பண்ணி, கர்த்தருடைய பலிபீடத்தையும் செப்பனிட்டு, பலிகளையும் செலுத்தி, மக்களையும் சரியான வழிக்குத் திருப்பினான்.

தம்மிடத்தில் வருகிற எவரையும் புறம்பே தள்ளாத தேவன் நமது தேவன். மாத்திரமல்ல, “மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்” என்று இயேசுவே சொல்லியிருக்கிறார். கர்த்தர் மனதுருக்கமுள்ளவர். உள்ளபடியே அவரிடத்தில் வருவதற்கு நாம் தயக்கம் காட்டவேண்டிய அவசியம் இல்லை. அவர் தண்டித்தால் நாம் தாங்கமாட்டோம். எமது சுயநீதிகளை அறுத்தெறிந்துவிட்டு, நமது தவறுகளை உணர்ந்து, கர்த்தரிடத்தில் திரும்புவோம். மன்னிப்பு மாத்திரமல்ல, அவருடைய பிள்ளைகள் என்ற நிச்சயமும் நமக்குண்டு அல்லவா.

***சிந்தனைக்கு:*** என் வாழ்வில் மனந்திரும்பி, அதன் மகிழ்ச்சியை நான் அனுபவித்ததுண்டா? அல்லது, மனந்திரும்ப என்னிடத்தில் எதுவுமில்லை என்று கர்வம் கொண்டிருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: 1இராஜா. 13:1–5

ஜூலை 25 வியாழன்

## முன் அறிவிக்கப்பட்டவன்

*இதோ தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான். 1இராஜாக்கள் 13:2*

நாம் பிறப்பதற்கு முன்னரே நமது பெயர்கள் கர்த்தரால் அறியப்பட்டிருந்தன என்றால் எவ்வளவு ஆச்சரியம்! "உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே" (எபே.1:4); அதாவது, உலகம் தோன்றுவதற்கு முன்னரேயே தேவனுடைய இருதயத்தில் நாம் இருந்திருக்கிறோம், நமது பெயர் அறியப்பட்டிருந்தது என்பது சத்தியம்.

சாலொமோனின் பாவத்தாலும், மகன் செய்த தவறாலும் இரண்டாகிய இஸ்ரவேலின் வட ராஜ்யத்தை யெரொபெயாமும், தென் ராஜ்யமாகிய யூதாவை ரெகொபெயாமும் அரசாண்டார்கள். தேவாலயம் எருசலேமில் இருந்ததால், மக்கள் பலிகளைச் செலுத்த எருசலேமுக்குப் போவார்கள், அதனால் மனம் மாறக்கூடும் என்று எண்ணிய யெரொபெயாம், பொன்னினால் இரு கன்றுக்குட்டிகளை உண்டாக்கி, உங்களை எகிப்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள் என்று சொல்லி, முன் செய்த பாவத்திற்கு மக்களை திருப்பி, ஒன்றைப் பெத்தேலிலும் ஒன்றைத் தாணிலும் வைத்து, பலிபீடங்களை உருவாக்கி பலிசெலுத்தி, தான் நினைத்தபடியே யாவையும் செய்தான். முதலாவது, அவன் இதைச் செய்ததே பாவம்; அடுத்து ராஜா தூபங்காட்ட முடியாது; இவனோ தூ பங்காட்ட பலிபீடத்தண்டையில் நின்றான். அப்போது, தேவனுடைய மனுஷன் ஒருவன் யூதாவிலிருந்து பெத்லகேமுக்கு வந்து, "பலிபீடமே பலிபீடமே, இதோ, தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒருவன் பிறப்பான்" என்று கூறி, இந்தப் பலிபீடத்தின்மீது தூபங்காட்டுகிறவர்களை அவன் பலியிடுவான் என்றும் அறிவித்து, அதற்கான அடையாளத்தையும் தெரிவித்து, அதுவும் அப்படியே ஆகி, ராஜாவின் கையும் முடங்கிவிட்டது. அதற்காக யெரொபெயாமோ, அவனுக்குப் பின்வந்த ராஜாக் களோ இதைக் கருத்தில்கொண்டு மனந்திரும்பினார்களா? இல்லையே!

"உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்; அவைகளைச் சிருஷ்டித்தவர் யார்? அவர் அவைகளின்சேனையை இலக்கத்திட்டமாகப்புறப்படப்பண்ணி, அவைகளையெல் லாம் பேர்பேராக அழைக்கிறவராமே" (ஏசா.40:26). மேலும், "அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணி, அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார்" (சங்.147:4). யோசியா ராஜா பிறப்பதற்கு 300 வருடங்களுக்கு முன்னரே பெயர் முதற்கொண்டு கர்த்தர் அறிவித்தபடி யோசியா பிறந்தானென்றால், இன்று ஆண்டவருடைய இரத்தத் தால் மீட்கப்பட்ட நமது பெயர்களை, நாம் பிறக்கவேண்டிய காலங்களை கர்த்தர் அறியாதிருந்திருப்பாரா? இந்த ஆண்டவரை நாம் துக்கப்படுத்தலாமா? நம்மை முன்னறிந்து முன்குறித்த ஆண்டவருக்கு நாம் உண்மையாக இருப்போமாக.

*சிந்தனைக்கு:* என் பெயர் உலகம் தோன்றுவதற்கு முன்னரே தேவனுடைய இருதயத்தில் இருந்தது என்ற சிந்தனை என் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துகிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
26
வெள்ளி

## யோசியா ராஜா

*அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, தன் தகப்பனாகிய தாவீதின் வழியிலெல்லாம் வலது இடதுபுறம் விலகாமல் நடந்தான். 2இராஜா. 22:2*

வேத வாசிப்பு: 2இராஜா. 22:1–13 2நாளா. 34:1–21

கர்த்தர் சொன்னால், சொன்னதைச் சொன்னபடி செய்வார் என்பதை நாம் விசுவாசிக்கி றோம்; ஆனால், சந்தர்ப்பங்கள் நெருக்கும்போதும் அந்த விசுவாசத்தில் உறுதியாய் நிற்கிறோமா என்பதே கேள்வி. "நான் உன்னோடு கூடவே இருப்பேன்", "நான் பெரிய காரியம் செய்வேன்" என்றெல்லாம் கர்த்தருடைய ஏராளமான வாக்குகளை நாம் மனதில் வைத்திருக்கிறோம். ஆனால், அதை நம்பி, கர்த்தர் செய்வாரென எதிர்பார்த்து, காத்திருக்கிறோமா? கண்டிப்புகள், தண்டனைகள்கூட கர்த்தர் சொன்னதைச் செய்வார்; ஆனால் ஒருபோதும் அவர் திடீரென நம்மைத் தண்டிப்பதுமில்லை, தள்ளிவிடுவது மில்லை. நாம் மனந்திரும்ப அவர் நமக்கு ஏராளமான தருணத்தைத் தருகிறார். பார்வோனுக்கு என்ன செய்தார் என்பதையும், இஸ்ரவேலுக்கு என்ன செய்தார் என்பதை யும் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

முன் அறிவித்தபடி, ஏறத்தாழ 290 ஆண்டுகளுக்குப் பின்னர், யோசியா ராஜாவானான். அப்போது அவனுக்கு வயது எட்டு. இளமையிலேயே இவன் கர்த்தரைத் தேட ஆரம் பித்தான். இவனுடைய தகப்பன் ஆமோனையும், பேரன் மனாசேயும் போலல்லாமல், தன் பூட்டனான எசேக்கியா ராஜாவைப்போலவே பல வழிகளிலும் இவன் செயற்பட் டான். இந்த இருவரும் தேவனுடன் நல்லுறவில் இருந்தார்கள்; மக்களை தேவனது வழிகளில் நடத்த மிகவும் பிரயாசப்பட்டார்கள். இருண்ட காலத்திலும், அதாவது கீழ்ப்படியாத அரசர்கள் மத்தியிலும், இவர்கள் இருவரும் கர்த்தருக்கு முன்னிலையில் தங்கள் கீழ்ப்படிவைக் காட்டினார்கள். தனது ராஜ்யத்தில் ஆவிக்குரிய பஞ்சம் நிறையவே இருப்பதை யோசியா தன் இளவயதிலேயே உணர்ந்தான். தேவனுடைய ஆராதனைக்குப் புறம்பான சகலத்தையும் அழித்துப்போட தாமதமின்றி செயற்பட்டவன் தான் யோசியா. தாவீதின் தேவனைத் தேட ஆரம்பித்த இவன், சகல விக்கிரக ஆராதனைகளையும் ஒழித்து, அவற்றின் பூசாரிகளையும் அழித்துப்போட்டான். மொத்தத்தில் யூதாவையும் எருசலேமையும் இவன் சுத்திகரித்தான். அதாவது தேவனுடைய மனுஷன் சொன்னபடியே யோசியா செய்துமுடித்தான் (1ராஜா.13:2)

1ராஜா.13:2 இல் கர்த்தர் சொன்னது சொன்னபடியே 2ராஜா.22:1 இல் நிறைவேறியது. ஏறத்தாழ 290 ஆண்டுகள் இடைவெளி. இஸ்ரவேலுக்கு நடந்ததையும் கண்ட யூதா, தனக்குக் கொடுக்கப்பட்ட கால இடைவெளியைப் பயன்படுத்தி மனந்திரும்பவில்லை. கர்த்தரோ பொறுமையாய் இருந்தார். கர்த்தர் எதையும் சொல்லாமல், நேரம் கொடுக் காமல் செய்வதில்லை. இன்று நம் மத்தியில் நடப்பவைகூட முன் அறிவிக்கப்பட்ட வையே. இன்று ஆண்டவராகிய இயேசு தாமே பேசிச் சொல்லிய வார்த்தைகளைக் கொண்டிருக்கிற நாம், அவற்றை உணர்ந்து மனந்திரும்பி, தேவனைச் சார்ந்து ஜீவிக்கிறோமா?

***சிந்தனைக்கு:*** கர்த்தர் சொன்னதைச் செய்வார் என்பதை நான் என் வாழ்வில் எவ்வளவு தூரம் விசுவாசிக்கிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ஆதி 12:1–9

ஜுலை 27 சனி

## ஆபிராமுக்கு ஒரு அழைப்பு

*கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்றார். அப்பொழுது அவன் தனக்குத் தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினான். ஆதியாகமம் 12:7*

*தேவனுடைய செய்தி:*

ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், சபிக்கிறவனைச் சபிப்பேன்.

*தியானம்:*

ஆபிராமை அழைத்த தேவன், அவர் வாழ்ந்த இடம், இனத்தார் அனைத்தையும் விட்டு பிரிந்து செல்லும்படி கூறி ஆபிராமை ஆசீர்வதித்தார்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

நம் பேரைப் பெருமைப்படுத்துபவர் தேவன் மாத்திரமே. நமது முயற்சியோ, பிறருடைய புகழோ நமக்கு நிரந்தர பெருமையை தராது.

*பிரயோகப்படுத்தல் :*

உன் பெயரைப் பெரிதாக்குவார், உன் சந்ததியினரை ஒரு பெரிய தேசமாக்கி, அத்துடன் அவர் மூலமாக பூமியின் மக்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பார் என தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்தபோது அவனது நிலைமை என்ன? இங்கு அவர் மூலமாக என குறிப்பபடுவது யாரை?

கர்த்தர் கட்டளையிட்டபடியே ஆபிராம் செய்தாரா? அவர் எங்கே சென்றார்? யாருடன் சென்றார்?

ஆபிராம் எங்கே பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டான்? ஏன்? அவனுக்கு கூறப்பட்டது என்ன?

இன்று நாம் கடவுளுக்குக் கீழ்ப்படிவதானது எதிர்கால சந்ததியினருக்கு பெரும் ஆசீர்வாதங்களின் அடித்தளமாக அமையுமா?

நான் ஆண்டவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள இன்று செய்ய வேண்டியவைகள் என்ன?

இன்று நான் மற்றவர்களுக்கு எவ்விதத்தில் ஆசீர்வாதமாக இருக்கின்றேன்? அதற்கான எனது முயற்சிகள், பிரயாசங்கள் என்ன?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
28
ஞாயிறு

நாசமலை

*அவனைப்போலொத்த ராஜா அவனுக்கு முன் இருந்ததுமில்லை, அவனுக்குப் பின் எழும்பினதுமில்லை.*
*2இராஜாக்கள் 23:25*

வேத வாசிப்பு: 2இராஜா. 23:1–20

இப்படியொரு அறிக்கை சொல்லப்படுவதற்கு உலகம் போற்றத்தக்க பெரிய அதிசயங்களை யோசியா ராஜா செய்யவில்லை. அவன் செய்ததெல்லாம், கர்த்தருடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து, தன்னையும் மக்களையும் தேசத்தையும் சுத்திகரித்தான், அவ்வளவும்தான். ஆனால் இது இல்லாமல் எதுவுமே இல்லை!

கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை எழுதிய மோசே, விடுதலையின் வருஷத்தின் முடிவிலே கூடாரப்பண்டிகையில், கர்த்தருடைய சந்நிதியில், இஸ்ரவேலர் எல்லாரும் கேட்க இதை வாசிக்கவேண்டும் என்று கட்டளையிட்டார் (உபா.31:9-13). ஆனால், தீய ராஜாக்களின் நீண்ட ஆட்சிக்காலங்களில் இந்தப் புத்தகம் மறக்கப்பட்டுப்போனது. யோசியாவின் காலத்தில் ஆசாரியன் இல்க்கியா, ஆலய சுத்திகரிப்பின்போது அதைக் கண்டெடுத்து, ராஜாவிடத்தில் அனுப்பினான். அதை வாசிக்கக்கேட்ட ராஜா, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இதைக் கைக்கொள்ளாதே போனபடியினால்தான் கர்த்தருடைய உக்கிரம் நம்மேல் மூண்டது என்று சொல்லி அழுதான். மேலும், பிரமாணங்களின்படி நடக்க உடன்படிக்கை பண்ணினான். கர்த்தருக்கு அருவருப்பான அனைத்தையும் (2இராஜா.23:4-12) சுட்டெரித்து, சூரியனுக்கென்று வைத்திருந்த குதிரைகளை அகற்றி, இரதங்களை சுட்டெரித்து கீதரோன் ஆற்றங்கரையில் கொட்டினான். எருசலேமுக்கு எதிரே இருந்த நாசமலையின் வலதுபுறத்தில் சாலொமோன் உண்டாக்கிய அருவருப்புகளையெல்லாம் உடைத்து நிர்மூலமாக்கினான்.

தற்போதைய ஒலிவமலைதான், நாசமலை என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. ஏனெனில் விக்கிரக மேடைகளின் முக்கிய இடமாக அன்று இந்த இடம் அமைந்திருந்தது. சாலொமோன் (1இராஜா.11:7) முதற்கொண்டு பல ராஜாக்கள் இங்கேதான் மேடைகளை அமைத்தார்கள். ஆனால் எசேக்கியாவும் யோசியாவும், இவற்றை அழித்தார்கள். இயேசுவின் காலத்தில் அவர் ஒலிவமலைமீது உட்கார்ந்திருந்து, தமது சீஷர்களுக்குப் போதித்ததைக் காண்கிறோம் (மத்.24:3). இறுதியில் ஆண்டவர் பாதம் ஒலிவமலையின்மேல் நிற்கும் (சக.14:4).

இன்று தேவனுடைய வார்த்தைகளைப் படிக்கும்போது, நமது இருதயத்தைக் கிழித்து நாம் மனந்திரும்புகிறோமா? அன்று, எருசலேமுக்கு எதிரே இருந்த ஒலிவமலையை, இஸ்ரவேலர் நாசமலையாக்கி வைத்திருந்தார்கள். அதைச் சுத்திகரிக்க யோசியாவுக்கு ஊன்றுகோலாயிருந்தது கர்த்தருடைய வார்த்தைகள்தான். இன்று கர்த்தருடைய பரிசுத்த வேதாகமம் நம்மிடம் உண்டு; நாமே நமக்கு உண்டாக்கிய நாசமலைகளை அழித்துப்போடுமளவுக்கு அது நமது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த இடமளித்திருக்கிறோமா? சிந்திப்போம்.

*சிந்தனைக்கு:* என் முன்னே நாசமலை, அதாவது தேவனுக்கு அருவருப்பான விடயங்கள் குவிக்கப்பட்டு இருக்குமானால் இன்றே நான் அதைச் சுட்டெரித்துப்போட ஆயத்தமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: 2நாளா 35:1–7 16–19

# மறக்கக்கூடாத ஆரம்பம்

ஜூலை 29 திங்கள்

*யோசியாவும், எருசலேமின் குடிகளும் ஆசரித்த பஸ்காவைப்போல இஸ்ரவேல் ராஜாக்களில் ஒருவரும் ஆசரித்ததில்லை. 2நாளாகமம் 35:18*

முன்னர் எப்படி இருந்தோம், எந்த சேற்றின் பள்ளத்தாக்கிலிருந்து ஆண்டவர் நம்மை தூக்கி எடுத்தார், இன்றைய நமது வாழ்வுக்கு வித்திட்டது எது என்று நமது ஆரம்பங்களை ஒருபோதும் மறக்கக்கூடாது. ஆனால் அது நமக்குள் அழிக்கமுடியாத பெருமையைத் தோற்றுவித்து, நமது அழிவுக்குக் காரணமாகிவிடவும் இடமளிக்கக்கூடாது.

இளவயதிலேயே தேவனைத் தேட ஆரம்பித்த யோசியா ராஜா, முதலில் ஆலயத்தைச் சுத்திகரித்து, தீட்டான சகலத்தையும் சுட்டெரித்து, நியாயப்பிரமாண புத்தகத்தில் எழுதப்பட்ட வார்த்தைகளின்படி நடப்பதாக தானும் ஜனங்களும் உடன்படிக்கை பண்ணி முடித்த பின்னர், எல்லாம் முடிந்தது என்று இருக்கவில்லை. தன் முன்னோர்களின் பூர்வீகத்தைத் தேடினான். அவர்கள் கொண்டாடிய பண்டிகைகள் எவை, காரணம் என்ன, எப்படி கொண்டாடப்படவேண்டும் என்பதை பிரமாணங்களில் தேடினான். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலை கர்த்தர் எப்படி விடுதலையாக்கினார் என்பதை உணர்ந்தான். அதன்படி முதலில் பஸ்கா பண்டிகையை ஆசரிக்க எழுந்தான். 2நாளா.35:1-19 வரையிலும் வாசிக்கும்போது, எப்படி இவர்கள் பஸ்காவை முழு மனதுடன் ஆசரித்தார்கள் என்பது விளங்கும். இன்று தங்கள் நிலைமைக்குத் தங்கள் மூதாதையினரின் விடுதலையே காரணம் என்பதை உணர்ந்து, கர்த்தர் மோசேக்குப் பணித்து, மோசேயினால் இஸ்ரவேலுக்குப் பணித்தபடியே, நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மகிழ்ச்சியுடன் பஸ்காவை ஆசரித்தனர். இதை முன்னெடுத்தவன் இந்த யோசியா ராஜாவே.

நமது முன்னான வாழ்வை நாம் மறக்கக்கூடாது; அதை நினைந்து துக்கப்படவோ, அதற்குத் திரும்பவோ கூடாது. ஆனால் எதிலிருந்து நாம் மீட்கப்பட்டோம் என்பதை நினைக்கவேண்டும். "முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை; இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்" என்று எழுதுகின்ற பேதுரு, முன்னர் அந்தகாரத்திலிருந்த நாம் இன்று தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியும், ஆசாரியக்கூட்டமும், பரிசுத்த ஜாதியும், தேவனுக்குச் சொந்த ஜனமுமாயிருக்கிறோம் என்று விளக்குகிறார் (1பேது.2:9,10). இரட்சிப்பின் சத்தியம் மாறாதது; ஆனால் நமது அனுபவங்கள் வேறாயிருக்கலாம். நாம் பாவ சேற்றிலிருந்து தூக்கியெடுக்கப்பட்ட அந்த நாளுக்காகவோ, அந்த சம்பவத்திற்காகவோ வருடத்தில் ஒருதடவை அல்ல, தினமும் தேவனை நாம் கொண்டாட வேண்டாமா? சத்துருவின் கோட்டையைத் தகர்த்து இயேசு நம்மை விடுவித்திருக்காவிட்டால் நாம் அழிந்திருப்போமே! அந்தக் கிருபைக்காக தினமும் ஒவ்வொரு விநாடியும் கர்த்தரை ஸ்தோத்தரிப்போமாக.

*சிந்தனைக்கு:* என் கடந்த கால நிகழ்வுகளையோ பாவங்களையோ அல்ல; என் இயேசு என்னைத் தூக்கிவிட்டதை அல்லும் பகலும் நினைந்து அவரைத் துதிப்பேனாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
30
செவ்வாய்

## யோசியாவுமா?

*நேகோ சொன்ன தேவனுடைய வாயின் வார்த்தைகளுக்குச் செவிகொடாமலும், அவனோடே யுத்தம்பண்ண வேஷம்மாறி, . . . வந்தான். 2நாளாகமம் 35:22*

வேத வாசிப்பு: 2நாளா 35:20–27

கர்த்தர் யாருடன் பேசுவார், யார் மூலமாகப் பேசுவார் என்பதெல்லாம் கர்த்தருடைய திட்டமும் சித்தமுமாகும். அதைப் பகுத்தறியத்தக்க கிருபை நமக்கு அவசியம். தேவனுடைய செய்தி நாம் எதிர்பாராத வழிகளில் வரலாம். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கர்த்தர் புறவின ராஜாக்களுடன் பேசிய சம்பவங்களை நாம் பார்க்கிறோம் (உதாரணமாக ஆதி.12:17-20). அவர் இன்றும் தமது காரியமாக யாரையும் பாவிப்பார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இன்று நாம் வாசித்த சம்பவம் கி.மு. 609ல், அசீரியாவின் தலைநகரம் நினிவே மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பாபிலோனில் அழிக்கப்பட்ட பின் நடந்தது என்று அறியப்படுகிறது. பாபிலோன் வலுத்துவிடும் என்று பயந்த எகிப்திய ராஜா நேகோ. அசீரியாவுக்கு விரோதமாகப் போனபோது, யோசியா ராஜா அவனுக்கு எதிராக எழும்பினான். அப்போது, நோகோ அவனிடம் ஆள் அனுப்பி, "நான் உமக்கு விரோதமாக வரவில்லை, இன்னொருவனுக்கு விரோதமாகவே போகிறேன். நான் சீக்கிரமாகப் போகவேண்டும் என்று தேவன் சொன்னார், தேவன் என்னோடிருக்கிறார்; அவர் உம்மை அழிக்காதபடி, அவருக்கு எதிரிடை செய்வதை விட்டுவிடும்" என்று தெளிவாகச் சொல்லி அனுப்பினான். ஆனால் யோசியாவோ இந்த புறவினத்தானுடன் தேவன் பேசுவாரா என்று நினைத்தாற்போல, நேகோ சொன்ன தேவனுடைய வர்த்தைக்குச் செவிகொடாமல் யுத்தம்பண்ணப்போய், அம்பெய்யப்பட்டு, பின்னர் மரணமடைந்தான். என்ன பரிதாபம்! இளவயது முதற்கொண்டு கர்த்தருக்கென்று வைராக்கியமாய் இருந்தவன் அநியாயமாக மாண்டுபோனான்.

யூதாவின்மீது தேவகோபம் இருந்தது (2ராஜா.23:26-27). ஆகவே கர்த்தர் சொன்னபடி நடந்தது என்றாலும், யோசியாவைப் பொறுத்தளவில், தனது வாழ்வு முழுவதும் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தருக்கும் அவருடைய வார்த்தைக்கு முதலிடம் கொடுத்து தானும் நடந்து, தன் ராஜ்யபாரத்தையும் சிறப்பாக நடந்தியிருந்தபோதும், ஒருதடவை தேவனுடைய வார்த்தையைப் புறக்கணித்தான்; அதுவே அவனுக்கு விக்கினமாக மாறியது. அவன் தன் வாழ்வை இழந்துபோனான். இது நமக்கு இன்று எச்சரிக்கையாக இருக்கட்டும். இந்த இடத்தில் நாம் மோசேக்கு மறுக்கப்பட்ட கானான் பிரவேசத்தையும் நினைத்துப் பார்ப்பது நல்லது. முடிவுபரியந்தம் நிலைத்திருக்கும் பாக்கியத்தைத் தேவனிடம் கேட்டுப் பெற்றுக்கொள்வோமாக. நாம் தேவனுக்கென்றே வாழ்ந்து வந்தும், ஒரு சந்தர்ப்பத்தில் நாம் அவருடைய வார்த்தையை விட்டு விலகிவிடுகின்ற அந்தத் தருணத்தில் நமது மரணம் நேரிடுமானால், ஆண்டவரின் வருகை இருக்குமானால் நமது நிலை என்ன? சிந்திப்போம்.

***சிந்தனைக்கு:*** இரட்சித்த ஆண்டவர் எப்படியாவது பரலோகம் கொண்டு செல்வார் என்பதை விடுத்து, இறுதி மூச்சுவரை அவருடன் வாழும் கிருபையை கேட்டுப் பெற்றுக்கொள்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| † வேத வாசிப்பு: | 2நாளா 36:1–21 | |

ஜூலை 31 புதன்

## யூதாவும் சிறைப்பட்டது!

*கர்த்தர் எரேமியாவின் வாயினாலே சொன்ன வார்த்தை நிறைவேறும்படிக்கு... 2நாளாகமம் 36:21*

யோசியாவிற்குப் பின்னர் யோவகாஸ் ராஜாவானபோது, எகிப்தியர் வந்து இவனைத் தள்ளி இவன் தம்பியை ராஜாவாக்கிற்று. இவனும் தேவனுக்கு விரோதமாக நடந்தான். இதன் பின்னர் கர்த்தர் சொன்னபடியே பாபிலோன் மூன்று தடவைகளாக எருசலேமுக்குள் நுளைந்தது (2நாளா. 36:6,10,18). யோயாக்கீமின் பின் சிதேக்கியாவின் நாட்களுடன் யூதா சிறைப்பட்டது. பாபிலோன் வருவான், நகரத்திலே தரிக்கிறவன் சாவான், அவனுடன் புறப்பட்டுப்போகிறவன் பிழைப்பான் என்று எரேமியா மூலம் கர்த்தர் சொன்னதை சிதேக்கியா கேட்கவில்லை. இறுதியில் பாபிலோன் தேவனுடைய ஆலயத்தைத் தீக்கொளுத்தி, பணிமுட்டுகளையும் கைப்பற்றினான். சிதேக்கியாவின் குமாரர் கண்கள் முன்பாக வெட்டப்பட்டு, இவன் கண்களும் குருடாக்கப்பட்டு, விலங்கிடப்பட்டு பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்டான்.

இந்த சகல சம்பவங்களும் இன்று நமக்கு எச்சரிக்கையாக வைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் சிந்திக்கவேண்டும். இது ராஜாக்களின் கதை என்று நம்மால் விலக்கி வைக்க முடியாது. தங்களுக்கென்று ஒரு ராஜாவைக் கேட்ட காலத்திலிருந்து ராஜாக்களின் காலமெல்லாம் நடந்தவற்றையும், அந்தந்தக் காலத்தில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களையும், வடராஜ்யத்தின் முடிவையும், யூதா ராஜ்யத்திற்கு நடந்ததையும் சிந்திக்கும்போது நமது ஆண்டவரைக்குறித்து இரண்டு காரியங்களை நாம் கற்றுக் கொள்கிறோம். ஒன்று, ஆண்டவர் முன் அறிவிப்பு ஆலோசனையின்றி, எச்சரிப்பின்றி எதையும் செய்கிறவரே அல்ல. ஆம், அவர் சொல்லாமல் எதையும் செய்யார். இரண்டாவது, தருணம் கொடுக்காமல் (2நாளா.36:15), மனந்திரும்ப காலம் கொடுக்காமல் திடீரென தண்டிக்கிறவரும் அல்ல. அன்று சிதேக்கியா, எரேமியாவின் சொல் கேட்டு பாபிலோனுக்குப் போயிருந்தால் தப்பியிருப்பான் அல்லவா!

இன்றும் நமக்கு சகலமும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சாட்டுப்போக்குச் சொல்ல இடமில்லை. கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட நமக்கு அவர் ஏராளமான தருணத்தையும் எச்சரிப்பையும் தந்திருக்கிறார். ஒவ்வொரு நாளும் அவர் நமக்கு மனந்திரும்புதலுக்கான தருணத்தையே தருகின்றார். இப்படியிருக்க, வேத வாக்கியங்களில் அவர் முன் அறிவித்தபடியே இயேசு வரும்போது, நியாயத்தீர்ப்பின் நாளில் நாம் நிறுத்தப்படும்போது, நாம் நமது ஆண்டவரை எப்படி எதிர்கொள்வோம்? இன்று தேவன் தருகின்ற எச்சரிப்பின் வார்த்தைகளை சிந்திக்கின்றோமா? அந்த எச்சரிப்பின் வார்த்தையின் மத்தியிலும் கிருபையாக தந்துள்ள தருணங்களுக்காக அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கின்றேனா என சிந்திப்போம்.

*சிந்தனைக்கு:* இறுதியில் வெட்கப்பட்டுப்போகாதபடிக்கு, கர்த்தரது எச்சரிப்பை உணர்ந்து, கிருபையாக அளிக்கப்பட்ட தருணங்களை பயன்படுத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்
1
வியாழன்

## ஜீவ புத்தகம்

*...அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது. பிலிப்பியர் 4:3*

வேத வாசிப்பு: லூக்கா 10:1–12

உலகிலே, எவராலும் நிலைநாட்டப்படாத சாதனைகளைப் புரிந்தவர்களின் பெயர்கள் "கின்னஸ்" புத்தகத்திலே எழுதப்படும். இப்புத்தகத்தில் தமது பெயர்கள் எழுதப்பட, எத்தனையோ முயற்சிகளைச் செய்கிறவர்கள் இருக்கிறார்கள். அதற்காகவே அவர்கள் எண்ணுக்கணக்கற்ற தியாகங்களைச்செய்து அந்தப் புத்தகத்தில் தங்களது பெயர் எழுதப்படும்வரை சோர்ந்துபோகாமல், இறுதிவரை முயற்சிப்பார்கள். இறுதியாக, அந்த முயற்சியிலே வெற்றியைக் கண்டுகொள்ளும்போது, அவர்களது மகிழ்ச்சிக்கு அளவேயிராது. எனினும் இந்த மகிழ்ச்சி இவ்வுலகில் வாழும்வரை மட்டுமே செல்லும். நித்தியத்திற்கான மகிழ்ச்சிக்காக நாம் செய்ய வேண்டியது என்ன?

ஆனால், ஒரு மனிதன் இவ்வுலக வாழ்விலும் அவனது மரணத்தின் பின்னும் மகிழ்ச்சி யோடு ஜீவிக்கவேண்டுமேயானால். அவனது பெயர் "ஜீவ புத்தகத்தில்" எழுதப் பட்டிருக்கவேண்டும் என்பதாக வேதாகமம் கூறுகின்றது. இப்படியாக ஜீவபுத்தகத்தில் பெயர் பதிக்கப்படுகிறவர்கள் வாழவேண்டிய ஒரு வாழ்க்கை முறையுண்டு. அவர்கள் தாங்கள் விரும்பியபடி வாழமுடியாது. அவர்கள் தங்கள் வாழ்வைக்குறித்து மிகவும் ஜாக்கிரதை உள்ளவர்களாகக் காணப்படவேண்டும். எப்படியெனில் ஜீவமார்க்கத்தை அறிந்து, அந்த ஜீவ வழியைத் தெரிந்து, அதிலே நடக்க எப்போதும் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களாகவே அவர்கள் ஜீவிக்கவேண்டும்.

தனது வாழ்க்கையிலே தன்னுடைய ஜீவனை ஆதாயப்படுத்திக்கொள்ள விரும்பிய தாவீது ராஜா, தேவனை நோக்கி, "ஜீவ மார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்" ஏனெனில், "உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உமது வலதுபாரிசத் தில் நித்திய பேரின்பமும் உண்டு" (சங்.16:11) என்று விண்ணப்பம் செய்தார். இன்று நமக்கு முன்பாக இரு வழிகள் உண்டு. ஒன்று ஜீவ வழி, மற்றது மரண வழி. "இதோ நான் உங்கள் முன்னே ஜீவ வழியையும், மரண வழியையும் வைக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே.21:8). அருமையான தேவபிள்ளையே, இந்த இரு வழிகளில் நாம் எதைத் தெரிந்துகொண்டிருக்கிறோம்? ஜீவ புஸ்தகத்தில் நமது பெயர் எழுதப்படும் என்ற நிச்சயம் நமக்கு உண்டா? நமது பெயர் ஜீவ புத்தகத்தில் எழுதப்படவேண்டும் என்பது நமது உள்ளத்தின் வாஞ்சையானால் இந்த நிமிடமே ஜீவ வழியில் செல்ல நம்மை கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுப்போம். இன்றுமுதல் அவருடைய ஜீவ வழியிலே நடக்கத் தீர்மானம் செய்வோம். கர்த்தர் நிச்சயம் நமது பெயரை ஜீவபுஸ்தகத்தில் இடம்பெறச்செய்து தம்முடைய ஜீவ மார்க்கத்தில் நடக்க நமக்கு உதவி செய்வார். அப்படிப்பட்ட சிலாக்கியம் பெற்றவர்களே உண்மையில் பாக்கியவான்கள்.

***சிந்தனைக்கு:*** மரண வழியையும் ஜீவ வழியையும் பகுத்தறிந்து நடப்பது எப்படி? தேவனுடைய வார்த்தைக்கு இன்றே திரும்புவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வேத வாசிப்பு: | உபா 7:1–16 |

## அந்நிய நுகம்

*...அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?*
*2கொரிந்தியர் 6:15*

ஆகஸ்ட்
2
வெள்ளி

பொதுவாக இரட்சிக்கப்பட்ட வாலிபப் பிள்ளைகள் கடவுளை அறியாதவர்களோடு திருமண பந்தத்தில் இணையக்கூடாது என்பதைக் குறிப்பிடுவதற்கு இந்த வசனத்தைப் போதிப்பதுண்டு. ஆனால் இந்த வசனம் திருமண வாழ்வுக்கு மட்டுமல்ல, நம்மை அவிசுவாசிகளோடு பிணைக்கக்கூடிய எந்தவித உறவுகளாக இருந்தாலும், உதாரணத்திற்கு வியாபாரமாக இருந்தாலும், தொழிலாக இருந்தாலும், நாம் அவர்களோடு நம்மைப் பிணைத்துக்கொள்ள இடமளிக்காதபடி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கிறது.

சாதாரணமாக ஒரு வியாபார காரியத்திலே அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளோடு பிணைக்கப்படாதபடி ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமேயானால், எவ்வளவு கவனம் எடுப்பது அவசியம்? கடைசிவரை இணைந்திருக்கவேண்டிய ஒரு திருமண பந்தத்திலே எவ்வளவு ஜாக்கிரதையாய் இருப்பது அவசியம்? இன்று கிறிஸ்துவை அறிந்த தேவ பிள்ளைகள் என்று கூறிக்கொள்பவர்களும்கூட பலவேளைகளில் தேவ கட்டளையாக இருக்கும் இந்த வசனத்தை மறந்து, அவிசுவாசியுடன் தமது வாழ்க்கையை இணைத்துக்கொள்ளத் தீர்மானிப்பது எவ்வளவு வேதனைக்குரியது. சிலர் "அவிசுவாசியான என் துணையை, திருமணத்திற்குப் பின்பு கிறிஸ்துவண்டை வழிநடத்த என்னால் கூடும்" என்று தம்முடைய தவறான தீர்மானத்திற்கு சாக்குப்போக்குக் கூறுவதும் உண்டு. ஆனால், நாட்கள் செல்லச்செல்ல வேதனையும் கண்ணீரும் நிறைந்த வாழ்க்கை, கணவன் மனைவிக்கிடையே தர்க்கங்கள், குடும்பங்களுக்கிடையே சண்டை சச்சரவுகள், இறுதியில் விவாகரத்துக்கள் என எத்தனை பரிதாபமான விளைவுகள்?

எகிப்திலிருந்து மீட்கப்பட்ட தமது ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகளில், "அந்நிய ஜனங்களோடே சம்பந்தம் கலவாயாக, உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக" (உபா.7:3) என்று கர்த்தர் தெளிவாகவே கூறியுள்ளார். தேவனோடு நெருங்கி ஜீவித்த சாலொமோன் ராஜாகூட, தேவ பிரசன்னத்தை இழந்து, பாவம் செய்ய ஏதுவாக இருந்த காரியம் அந்நிய பெண்களோடு அவர் கொண்டிருந்த பிணைப்பாகும். இயேசு கிறிஸ்துவை தமது வாழ்கையில் சொந்த இரட்சகராக ஏற்று, அவருக்காக வாழ வாஞ்சையோடிருக்கும் சகோதரனே, சகோதரியே, ஒரு அவிசுவாசியின் அன்பிலே அழகிலே மயங்கி, திருமணத்தில் தவறான தீர்மானம் செய்ய எத்தனிக்கிறாயா? சாலொமோன் ராஜாவின் வாழ்க்கை உனக்கு எச்சரிக்கையாக இருக்கட்டும். அந்நிய சிந்தனை உன்னை ஆள இடம்கொடாதே. உனது சரீரம் தேவனுடைய ஆலயமாக இருக்கின்றது என்பதையும் மறந்துவிடாதே.

***சிந்தனைக்கு:*** எனது உறவுகள் எப்படிப்பட்டவை? அதைச் சரிசெய்ய இப்போதே தேவ ஆவியானவரின் கிருபையை நாடுவோமா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்

3

சனி

# எகிப்தில் ஆபிராம்

*ஆபிராமுடைய மனைவியாகிய சாராயின் நிமித்தம் கர்த்தர் பார்வோனையும், அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதித்தார். ஆதியாகமம் 12:17*

வேத வாசிப்பு: ஆதி 12:10-20

***தேவனுடைய செய்தி:***

வாழ்வில் ஏற்படும் இக்கட்டு, நெருக்கடி, எதிர்ப்பு, சதி ஆகியவற்றினூடே தேவனுடைய மீட்பின் திட்டம் தடைபடாமல் நிறைவேறும் என்பதே வரலாறு.

***தியானம்:***

மழை இல்லாததால் ஏற்பட்ட பஞ்சத்திற்கு தப்ப, ஆபிராம் எகிப்திற்கு பிழைக்கச் சென்றான். தன் மனைவி அழகாக இருக்கிறாள் என எண்ணிய அவன், எகிப்தியருக்கு அஞ்சி, அவளை சகோதரி என அழைத்தான். ஆபிராமின் மனைவியை பார்வோன் எடுத்துக்கொண்டதினால் கொடிய வியாதியினால் கர்த்தர் பார்வோனை தண்டித்தார்.

***விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:***

எமக்கான பாதுகாப்பு தேவனுடைய கரத்திலேயே இருக்கின்றது.

***பிரயோகப்படுத்தல் :***

வாக்களிக்கப்பட்ட நாடு, பஞ்சம் மிகுந்த நாடாக இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? பிழைப்பிற்காக வெளிநாடு செல்வது குறித்த உங்கள் கருத்து என்ன? ஆபிராம் செய்தது என்ன?

ஆபிராமைவிட சாராள் மிகவும் இளமையாக இருந்தாள் என கருத இடமுண்டா? இப்படிப்பட்ட தம்பதியினரைக்குறித்து உமது சிந்தனை என்ன?

பிறருக்குரியதை இச்சித்தால் தேவன் தண்டிப்பாரா? பார்வோனுக்கு தேவன் மகா வாதையை அனுமதித்தது ஏன்?

வரலாற்றில் செயற்படுகின்ற தேவன், சாராளைப் பாதுகாத்தாரா? யாருக்காக பாதுகாத்தார்? நம்மைக் குறித்த தேவனுடைய கரிசனை என்ன?

ஆபிரகாம் தன்னை ஏமாற்றியதை பார்வோன் அறிந்துகொண்டபோது அவன் செய்தது என்ன?

பஞ்சத்திலும், எகிப்திலும் ஆபிராமின் குடும்பத்தை பாதுகாத்தது யார்? இன்று எனது நம்பிக்கை யார் மீது காணப்படுகின்றது?

***எனது சிந்தனை:***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: 1கொரி 3:16,17

## தேவனுடைய ஆலயம்

*...நீங்களே அந்த ஆலயம்*
*1கொரிந்தியர் 3:17*

ஆகஸ்ட் 4 ஞாயிறு

ஆலயத்துக்கு வருகிற அனைவரையும் கவரக்கூடிய அந்தத் தேவாலயம் அன்றைய தினம் சுத்தமாக்கப்படாததாலும் அலங்காரம் செய்யப்படாததாலும் அலங்கோலமாக காணப்பட்டது. வழமைபோலவே ஆலயம் மக்களால் நிரம்பி வழிந்தது, ஆனாலும் அனைவரது முகங்களிலும் ஒரு கேள்விக்குறி, "அழகான இந்த ஆலயம் இன்று இத்தனை அலங்கோலமாக காணப்படுகிறதே! போதகர் ஏன் இதைக் கவனிக்க வில்லை? ஆலயத்தைச் சுத்தம் செய்பவனுக்கு இன்று என்ன நடந்தது?" என சிந்தித்துக் கொண்டிருந்தனர். ஆராதனையை ஆரம்பிக்க முன்னால் வந்துநின்ற போதகர், சபை மக்கள் அனைவரது முகங்களையும் ஒருமுறை நோக்கிப் பார்த்துவிட்டு, "நீங்கள் உங்கள் உள்ளத்தில் என்ன சிந்தித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். அதற்கான பதிலை பின்னர் சொல்கிறேன்" எனக் கூறிவிட்டு ஆராதனையைத் தொடர்ந் தார். பிரசங்கவேளை வந்ததும் ஏசாயா 66:1 லிருந்து "வானம் எனக்குச் சிங்காசனம்; பூமி எனக்குப் பாதபடி, நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது?" என்று ஆரம்பித்தார்.

பின்பு ஆலயத்தின் பரிசுத்தத்தைக் குறித்துக் கூறி, இறுதியாக, "நீங்களே அந்த ஆலயம். இன்று உங்கள் ஆலயம் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்று கர்த்தர் கேட்கிறார்" என பிரசங்கத்தை முடித்தார். இதைக் கேட்ட அனைவரும் தங்கள் இருதயங்களிலே உணர்த்தப்பட்டவர்களாய் வீடு திரும்பினர். தாம் வழிபடும் ஆலயத் திற்கு பரிசுத்தமும், அலங்காரமும் எந்தளவு முக்கியமோ அதைவிட மேலாக தேவ னின் ஆலயமாக இருக்கும் தமது வாழ்க்கை, எத்தனை தூய்மையாக பரிசுத்த அலங்காரத்துடன் காணப்படவேண்டும் என்பதை உணர்ந்து கர்த்தருக்குப் பிரியமான வாழ்க்கை வாழ ஆரம்பித்தனர்.

தேவனுடைய ஆலயத்தை அலங்கரிக்கவேண்டும், பரிசுத்தத்தைக் காத்துகொள்ள வேண்டுமென கவனம் செலுத்தும் தேவபிள்ளையே, இன்று, தேவ ஆலயமாயிருக்கும் நமது வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று சற்று ஆராய்ந்து பார்ப்போம். நமது வாழ்க்கை பரிசுத்தத்தினாலும், ஆவிக்குரிய குணங்களினாலும் அலங்கரிக்கப்பட்ட வாழ்வாகக் காணப்படுகிறதா? தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் தேவன் அவனைக் கெடுப்பார் என்பதாக பரிசுத்த வேதாகமம் நம்மை எச்சரிக்கிறது. எனவே நமது சரீரமாகிய தேவனுடைய ஆலயத்தைத் தூய்மையோடும் பரிசுத்த அலங்காரத்தோடும் காத்துக் கொள்ளத் தீர்மானம் செய்வோமாக.

*சிந்தனைக்கு:* தேவனுடைய ஆலயமாகிய நமது சரீரம், நமது இருதயம் தேவனுக்கேற்ற அலங்காரத்துடன் காணப்படுகிறதா என்பதை உண்மை உள்ளத்துடன் ஆராய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்
5
திங்கள்

## எனக்காக....

*கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்.*
*சங்கீதம் 138:8*

வேத வாசிப்பு: சங்கீதம் 138:1–8

தாவீது ராஜாவின் வாழ்க்கையிலே எப்போதும் சத்துருக்களின் பயமுறுத்தல்களும், போர்ச் சூழ்நிலைகளும் அதிகமாய் இருந்தன. ஆனால், தாவீது ராஜாவோ, "எனக்கு விரோதமாய்ச் சுற்றிலும் படையெடுத்து வருகிற பதினாயிரம் பேருக்கும் நான் பயப்பட்டேன்" என்று தைரியத்தோடு கூறினார் (சங்.3:6). அதுமட்டுமன்றி மரணம் அண்மித்த அநேக சந்தர்ப்பங்கள் அவர் வாழ்க்கையில் ஏற்பட்டன. ஆனால் அவரோ, "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்" என்று நம்பிக்கையோடு பறைசாற்றினார் (சங்.23:4). இப்படியாக பாதகமான சூழ்நிலைகளிலும் தாவீது ராஜா தைரியத்தோடு தன் தேவனைப் பாடித் துதித்துக்கொண்டிருந்தார். ஏன் தெரியுமா? தான் நம்பியிருக்கிற கர்த்தர் தனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

அன்று இயேசு கிறிஸ்து மரித்து அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாள், இயேசுவின் சரீரத்திற்குச் சுகந்தவர்க்கமிடும்படி கல்லறையினிடத்திற்கு வந்த ஸ்திரீகள் ஒருவரை ஒருவர் பார்த்து, "கல்லறையின் வாசலில் இருக்கிற கல்லை எமக்காக யார் புரட்டித் தள்ளுவான்" என்று கூறிக்கொண்டனர். ஆனால், என்ன ஆச்சரியம்! அவர்கள் கல்லறையினிடத்திற்கு வந்தபோதோ, அது ஏற்கனவே புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டார்கள் (மாற்.16:1-5). ஆம்! அவர்களுக்காகக் கர்த்தர் யாவையும் செய்து முடித்திருந்தார். அந்த ஸ்திரீகளால் புரட்டித்தள்ள முடியாதிருந்த கல்லை கர்த்தருடைய தூதன் புரட்டி அவர்களுக்கு வழிசெய்து கொடுத்தான்.

தேவனுடைய பிள்ளையே, இன்று நம்மால் சுமக்கமுடியாத பாரங்கள், தாங்க முடியாத வேதனைகள், இவற்றை யார் நமக்காகத் தாங்குவார்? யார் சுமப்பார் என மனதில் ஏங்குகின்றாயா? கலங்கவேண்டாம்! அன்று கல்லறையின் வாசலில் உயிர்த்தெழுந்தவராய் காட்சியளித்த ஆண்டவராகிய இயேசு இன்றும் ஜீவிக்கிறார். அவர் நமது வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் தடைகள் அனைத்தையும் நீக்கி, நமக்காக யாவையும் செய்து முடித்தவராய் நமக்கு முன்னே நிற்கிறார் என்பதை நாம் மறந்துபோகக்கூடாது. அவர் மீது விசுவாசமுள்ளவர்களாக முன்னேறுவோம். ஒருவேளை, பலவிதமான தடைகள், தாமதங்கள், வியாதிகள், வாழ்வைத் தடுத்து நிறுத்த முற்படும் வலிகள், தாங்கமுடியாத துயரங்களோடு, தவிக்கும் தேவ பிள்ளையே, தயாபரன் இயேசு உன் தடைகளை நீக்குவார். அவர் மாத்திரமே நமக்காக யாவையும் செய்து முடிப்பவர். ஆகையால், தயங்காமல், அவரிடம் இன்றே சரணடைந்து விடுவோமாக.

***சிந்தனைக்கு:*** நமது வாழ்வில் ஏற்படுகின்ற தடைகள், பிரச்சனைகள் நம்மைத் தடுமாறச் செய்யும்போது, கர்த்தரிடம் முழு விசுவாசம் வைத்துக் காத்திருக்க நம்மால் முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: எபிரெயர் 11:8–19

ஆகஸ்ட் 6 செவ்வாய்

## வாக்கில் உண்மையுள்ள தேவன்

*வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. எபிரெயர் 10:23*

தமது ஜனங்களை அடிமைத்தனத்தின் வீட்டிலிருந்து மீட்டெடுத்த அன்பின் தேவன், அவர்களுக்கு அநேக வாக்குத்தத்தங்களைக் கொடுத்து, அவர்களைக் கைவிடாமல் காப்பாற்றி வழிநடத்தி, தாம் வாக்குப்பண்ணிய கானான் தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தார். அந்த உன்னத தேவன் "நான் அல்பாவும் ஓமேகாவும், முந்தினவரும், பிந்தினவருமாயிருக்கிறேன்" (வெளி.1:11) என்று கூறி இன்றும் நம்மை நடத்தி வருகிறவராயிருக்கிறார். அன்று மீட்கப்பட்ட தம் ஜனத்திற்கு எப்படியாக வாக்குத்தத்தங்களைக் கொடுத்து, அவர்களை வழுவாது வழிநடத்தினாரோ, இன்றும் அப்படியே நம்மையும் வழிநடத்த வல்லவராயிருக்கிறார் என்பதை நாம் விசுவாசிக்கிறோமா?

"நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்" என்பதை நாம் அறிந்திருந்தால் இன்றும் அவருடைய வாக்குத்தத்தங்களை நமதாக்கி, அவற்றை நமது இருதயத்திலே பதித்து, அவருக்குள் மகிழ்ச்சியாயிருப்போம் அல்லவா. அப்பொழுது கார்மேகங்கள் நமது வாழ்க்கையை நிரப்பினாலும், எப்பெரும் தடைகள் நமது வாழ்க்கையில் வந்தாலும், எத் துன்பம் நமது வாழ்க்கையை மூடினாலும், நாம் தயங்காது, கலங்காது முன் செல்வோம்.

தேவன் அருளும் வாக்குத்தத்தங்களாவன:- "பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்" (ஏசா.41:10). "நான் கர்த்தர் எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை" (ஏசா.49:23). "நான் அவர்களுக்குச் சவுக்கியமும், ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும், சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்" (எரே.33:6). "நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" (யாத்.15:26). "கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார், இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார், இனித் தீங்கைக் காணாதிருப்பாய்" (செப். 3:15). "உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருகஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்" (உபா. 28:4). ஏனென்றால், நீ கர்த்தருடைய பிள்ளை.

அதுமட்டுமல்ல, இன்னும் ஏராளமான வாக்குத்தத்தங்கள் வேதாகமத்தில் நமக்காக தரப்பட்டுள்ளது. அவற்றை விசுவாசித்துக் காத்திருப்பதில் நமக்கு என்ன தடங்கல்? விசுவாசிப்போம், தேவ மகிமையைக் காண்போமாக.

***சிந்தனைக்கு:*** தேவன் வாக்கு மாறாதவர். ஆனால் நாம் அவருடைய வாக்குத்தத்தங்களைச் சுதந்திரமாக்கிக்கொள்ள நம்மை ஒப்புவிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்
7
புதன்

## யார் மறந்தாலும்...

*...நான் உன்னை மறப்பதில்லை.*

*ஏசாயா 49:15*

வேத வாசிப்பு: ஏசாயா 51:1-16

வாழ்க்கையில் துன்ப துயரங்கள் அதிகரிக்கும்போது, சூழ்நிலைகள் மாறும்போது, பயம், தனிமை ஆட்கொள்ளும்போது, அல்லது இழப்புகள் ஏற்படும்போது, யாராவது எம்மைப் பார்த்து, "நீ பயப்படாதே., நான் உன்னை மறப்பதில்லை. எந்த சூழ்நிலையிலும், எந்தத் துன்பவேளையிலும், உன் அருகில் இருந்து உதவி செய்வேன்" என்று கூறினால் நாம் என்ன செய்வோம்? அவர்களை நம்புவோம்; உள்ளத்தைத் திறந்து அவர்களோடு பேசுவோம் அல்லவா!

பலவிதமான சோதனைகளாலும் வேதனைகளாலும் தாக்கப்பட்டுக் கொண்டிருந்த ஒரு வாலிப சகோதரனைப் பார்த்து, ஒரு தேவ ஊழியன், "தம்பி பயப்படாதே, எந்த வேளையிலும் நான் உன்னோடுகூட இருந்து உனக்கு உதவி செய்வேன்" என்று கூறி, அவனைக் கவனித்து வந்தார். ஆனால், சடுதியாக அந்த தேவஊழியன் வெளிநாடு செல்லவேண்டி வந்தது. இதையறிந்த வாலிபன் மிகவும் துக்கப்பட்டான். பல வழிகளிலும் உடைபட்ட அவன் உள்ளம் இன்னும் அதிக வேதனையால் நிறைந்தது. 'வெளிநாடு சென்ற இந்த ஊழியன் என்னை மறந்துவிடுவாரோ' என்று ஏங்கி அழ ஆரம்பித்தான். இதை அறிந்த அந்த ஊழியன் அவனை அழைத்து, "தம்பி, இன்னுமா நீ என்னை நம்பவில்லை. பயப்படாதே, நான் எங்கே இருந்தாலும் 'உன்னை மறப்பதில்லை' உன்னோடு என் தொடர்பு எப்போதும் இருக்கும் என்று ஆறுதல் கூறிச் சென்றுவிட்டார். நாட்கள் நகர்ந்தன. அவர் கூறியதுபோலவே, கடிதத் தொடர்பு கொண்டார். ஆனால், மேலும் நாட்கள் நகர்ந்தன. முன்புபோல கடிதங்கள் வரவில்லை. இறுதியில் முற்றுமாக நிறுத்தப்பட்டது. இதனால் வேதனையடைந்த அந்த வாலிபன் ஒரு நாள், 'இவ் உலகிலே யாரைத்தான் நம்புவது? என்னை மறக்காது உதவிசெய்ய இவ்வுலகிலே யாரும் உண்டோ?' என்ற கேள்வியோடு, கண்ணீரோடு ஆலயத்தில் அமர்ந்திருந்த வேளை, தேவன் அவனோடு பேச ஆரம்பித்தார். அந்நாள் அவனுக்கு கிடைத்த வாக்குத்தத்தம் "நான் உன்னை மறப்பதில்லை" என்பதே. அவன் வாக்குத்தத்தத்தை இறுகப்பற்றிக்கொண்டு, கர்த்தருக்குள் வளர ஆரம்பித்தான். நாட்கள் செல்லச்செல்ல, வாக்குமாறாத கர்த்தர் அவன் அறியாத அநேகரை எழுப்பி, இக்கட்டுகள், கஷ்டங்கள்; துன்பங்கள் அனைத்திலுமிருந்து அவனை விடுவித்தார். எத்தனை மகிழ்ச்சி!

அருமையான தேவபிள்ளையே, கலங்காதே. வல்ல ஜீவ வாக்குத்தத்தங்கள் தந்து தேவன் நம்மைத் தாங்குவார். மனிதர் நம்மை மறந்துவிடலாம். ஆனால், தேவன் மறப்பதில்லை. எப்போதும் நம் அருகிலேயே இருப்பார். ஆகவே அவரையே பற்றிக் கொண்டு, நமது உள்ளத்தை அவரிடம் ஊற்றிவிடுவோமாக.

***சிந்தனைக்கு:*** என்னையும் நினைத்திருக்கிற ஒரு கர்த்தர் எனக்கிருக்க, ஒருபோதும் என்னை மறவாத பிதா எனக்கிருக்க எனக்கு என்னதான் குறை இருக்கப்போகிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ஏசாயா 43:1–5

## முன்னே நடப்பவர்

*...கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்துபோவார்.*
*மீகா 2:13*

ஆகஸ்ட் 8 வியாழன்

அடிமைத்தனத்தில் இருந்து தமது மக்களை மீட்ட தேவன், காடு மேடுகளுக்கூடாக வும், வனாந்தரப் பாதைக்கூடாகவும் சென்றபோதிலும், எதிராளிகள், கள்வர்கள் கொள்ளைக்காரர் நடுவிலே, தமது ஜனம் சிக்கிக்கொள்ளாதபடி, அவர்களுக்கு முன்சென்று, இறுதிவரை வழிநடத்திச் சென்றார் என்பதை நாம் அறிவோம்.

பாவத்திற்கு அடிமையாக இருந்த நாம், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப் பட்டு, அவருடைய பிள்ளைகளாக அவருடைய வழியில் நடந்து வருகிறோமல்லவா! இப்படியிருக்க இன்று பாடுகள் பாதையை மூட, தொடர்ந்து முன்செல்ல முடியாது பதறித் திகைத்து நிற்கிறோமா? பகைவரின் பயமுறுத்தல்கள், முன் செல்லாதபடி நம்மைத் தடுத்து நிறுத்துகிறதா? அல்லது, செல்லவேண்டிய பாதையைக் கண்டு கொள்ள முடியாதபடி பலவிதமான சூழ்நிலைகள் நம்மைக் குழப்புகிறதா? சற்று நாம் கடந்துவந்த பாதையைத் திரும்பிப் பார்ப்போமாக. இதுவரை காலமும் நமது வாழ்வில் எத்தனைத் தடைகள், தாமதங்கள், எதிர்ப்புகள், இன்னும் அநேக காரியங் கள் முன்செல்ல முடியாது நம்மைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம். ஆனால், அந்த இடத்திலேயே நாம் நின்றுவிட்டோமா? இல்லையே, அப்படிப்பட்ட கடினமான பாதை களுக்கூடாக நம்மை நடத்தியவர் இனியும் நடத்த மாட்டாரோ! பின்னே நாம் ஏன் கலங்கவேண்டும்? திகைக்க வேண்டும்?

“பயப்படாதே, உன்னை மீட்டுக்கொண்டேன், உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன். நீ என்னுடையவன், நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப் பேன். நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை. நீ அக்கினியில் நடக்கும்போது, வேகாதிருப்பாய்” என்று மாத்திரமன்றி, “நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்” (ஏசா. 45:2) என்றெல் லாம் வாக்குரைத்த தேவன், இன்றும் நமக்கு முன்பாகச் செல்லும் கர்த்தராய் நமக்கிருப்பதை நாம் மறக்கலாமோ?

ஆம்! “பின் செல்வேனே, மீட்பர் பின் செல்வேனே, எங்கேயும் எப்போதும் பின்னே செல்லுவேன்” என்ற உறுதியோடும், நம் மீட்பர் நமக்கு முன்னே செல்லுகிறார் என்ற விசுவாசத்தோடும் முன்செல்வோமாக. முன் செல்லும் மீட்பர் பின்னே செல்லு கின்ற நாம், கடந்த நாட்களில் அவர் நம்மை நடத்தியதை மறந்துவிடாமல், வரும் நாட்களிலும் அவரே முன்சென்று, பாதைகளையெல்லாம் செவ்வைபண்ணி, நம்மை நடத்திச் செல்வார் என்ற விசுவாசத்தோடு தொடர்ந்து முன் செல்லுவோமாக.

***சிந்தனைக்கு:*** கர்த்தர் என் முன் செல்கிறார் என்ற உறுதி எனக்குண்டா? கடந்த நாட்களின் அந்த அனுபவங்களை சற்று தியானிப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்
9
வெள்ளி

## தனிமையிலும் உறவாகுவார்

*...நான் தனித்திரேன், பிதா என்னோடேகூட இருக்கிறார்.*
*யோவான் 16:32*

வேத வாசிப்பு: பிலி 4:6–9

அன்பான பெற்றோர், சகோதரர், உற்றார், உறவினர்கள் யாவரும் நம்மைச் சுற்றி இருப்பினும், தனிமை உணர்வினால் பலர் தாக்கப்படுவதுண்டு. ஆனால் கிறிஸ்தவ ஜீவியத்தில் தனிமையான நேரங்கள் எப்போதும் ஆசீர்வாதமான நேரங்களாகவே இருக்கும்; ஏனெனில், நமது தனிமையில் கிறிஸ்து நம்மோடுகூடவே இருப்பார். அப்படியில்லாவிட்டால், சாத்தான் நமது சிந்தனையை ஆட்கொண்டு, தேவ சித்தத்தின் பாதையிலிருந்து நம்மை விலக்கிப்போடுவான்.

தகப்பனால் அதிகம் நேசிக்கப்பட்டு வாழ்ந்தவன், இப்போது சகோதரரால் பிரிக்கப்பட்டு, அந்நிய நாட்டிலே சிறையில் வாழ்ந்து வந்தான். சிறையில் வாழ்ந்தாலும், தனிமை உணர்வு தன்னை ஆட்கொள்ள இடமளிக்காததால், நித்திய பிதாவின் பிரசன்னம் அவன் உள்ளத்தை நிரப்பியது. அதனால், அநேக தேவ இரகசியங்களைத் தேவனிடத்திலிருந்து கற்றறிந்தான். இறுதியாக, தன் குடும்பத்திற்கும், மற்றும் அனைவருக்கும் ஆசீர்வாதமாக மாறினான். அவன்தான் யோசேப்பு. அதைப்போல தாவீது ராஜாவின் வாழ்க்கையில் பலவேளைகளிலும் தனிமை அவரை ஆட்கொண்டது. ஆனாலும் அவர் அதனால் சோர்ந்துபோகவில்லை. தனிமை வேளைகளில் தேவ பிரசன்னத்தினால் தன் இருதயத்தை நிரப்பி தேவனோடு வாழ்ந்தார் தாவீது. நம்மை நடத்தும் நல்ல நாதர் இயேசு கிறிஸ்து தனிமையையே நாடிச்சென்று ஜெபத்தில் தன் நேரத்தைச் செலவிட்டு, தன் பிதாவின் பிரசன்னத்தைப் பெற்று, வல்லமையோடு தேவ சித்தத்தை நிறைவேற்றினார்.

ஆம்! தேவன் ஒரு நோக்கத்தோடேயே நமது வாழ்க்கையிலும்கூட தனிமையை அனுமதிக்கிறார். தனிமையில் நாம் சோர்ந்துபோகாமல், ஜெபத்திலும் வேதவாசிப்பிலும் நேரத்தைச் செலவிடுவோமாக. நமது தேவனோடு உள்ளத்திலே பேசுவோமாக. தனிமையின் உணர்வு நம்மைவிட்டு படிப்படியாக மறைய, தேவபிரசன்னமும், வழிநடத்துதலும், தேவ இரகசியங்களும் நமது வாழ்க்கையில் அற்புதமாக வெளிப்படும்.

தனிமை உணர்வினால் நம்மில் யாராவது பரிதவித்து நிற்கிறேமா? "கர்த்தர் நித்தமும், உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார். நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்" (ஏசா.58:11). ஆக தனிமையில் தற்பரன் இயேசுவின் பிரசன்னத்தை நாடுவோம். நமது இருதயத்தில் அவருடனான உறவை பேணுவோம். அவர் நம்மை விட்டு விலகாமல், நம் கூடவேயிருந்து நம்மைத் தேற்றி பாதுகாப்பார்.

***சிந்தனைக்கு:*** தனித்திருத்தல் வேறு, தனிமை உணர்வு வேறு. இவை இரண்டுக்குமுள்ள வேறுபாடு என்ன? இன்று என் நிலைமை என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ஆதி 13:1-11

ஆகஸ்ட் 10 சனி

## பிரிவு

*...வாக்குவாதம் வேண்டாம். நாம் சகோதரர்.*
*ஆதியாகமம் 13:8*

*தேவனுடைய செய்தி:*

உமது சொந்த வாழ்வில் மட்டுமல்ல, பிறர் வாழ்விலும் ஆர்வங்காட்டுங்கள்.

*தியானம்:*

பார்வோனிடம் பொய் சொன்ன பிறகு, ஆபிராம், லோத்து, சாராய் ஆகியோர் எகிப்தை விட்டு வெளியேறி, நெகேப் (தெற்கு கானான்) வழியாகப் பயணம் செய்து பெத்தேலுக்கு வந்தனர். அங்கு ஆபிராமும் லோத்தும் பிரிந்து செல்ல விரும்பினர். லோத்து கிழக்கே சென்று யோர்தான் நதி பள்ளத்தாக்கில் வாழ முடிவு செய்தார். ஆபிராம் மேற்கில் கானானில் குடியேறினார்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. (பிலிப்பியர் 2:4 ஐயும் கவனியுங்கள்)

*பிரயோகப்படுத்தல் :*

வசனம் 2, 6 ன்படி, ஆபிராம் மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானாய் மாறியதெப்படி? லோத்துவின் ஆஸ்தி மிகுதியானது எப்படி? இன்று சொத்து அதிகரித்தவர்களின் நிலை என்ன?

லோத்து ஆபிராமுடன் ஒருமித்து குடியிருக்க முடியாமற் போனது ஏன்? ஒருமித்து வாசம்பண்ண முயற்சிக்க நாம் என்ன செய்யலாம்?

மற்றவர்களுக்குப் பிரயோஜனமான காரியங்களை செய்வது எப்படி?

உங்களுக்குத் தருகிற மரியாதையைவிட மற்றவர்களுக்கு அதிக மரியாதை செலுத்துவது எப்படி? அதற்கு நான் ஆயத்தமா?

நீர்வளம் பொருந்திய வளமிக்க தேசத்தை லோத்து எடுத்துக்கொண்டவுடன், ஆபிராமின் மனநிலை எப்படியிருந்திருக்கும்? பிறர் ஆசீர்வதிக்கப்படுவதைக் காணும் நமது மனப்பான்மை என்ன?

வேலைக்காரர் சண்டையிடுவதை தடுத்ததுபோல, நாமும் எமக்கு கீழ் இருப்பவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த என்ன செய்ய வேண்டும்?

*எனது சிந்தனை:*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்
11
ஞாயிறு

## தேவனுக்குப் பிரியம்

*என் பிரியமே!...*
*உன்னதப்பாட்டு 1:15*

வேத வாசிப்பு: மத்தேயு 3:13–17

தன் தகப்பனைப் பிரியப்படுத்தும் மகன், எப்போதும் தன் தகப்பனுக்குக் கீழ்ப்படிகிறவனாகவும், தகப்பன் சித்தத்தையே தன் வாழ்க்கையில் நிறைவேற்றுகிறவனாகவும் இருப்பான். தகப்பனும் அவனைக் குறித்து மகிழ்ச்சியடைவான். அவன் தன் தகப்பனுக்கு பிரியமுள்ள மகனாயிருப்பான்.

பரம பிதா தமது குமாரனைக்குறித்து, "இவர் என்னுடைய நேச குமாரன்; இவரில் பிரியமாயிருக்கிறேன்" (மத்.3:17) என்று சாட்சி கொடுக்கிறார். குமாரனாகிய இயேசு கிறிஸ்து பிதாவுக்கு ஒரேபேறான குமாரனாக இருந்தும், மனுக்குலத்தின் பாவத்தை நீக்க, விண்ணுலகம்விட்டு மண்ணுலகிற்கு பிதா அவரை அனுப்பியபோது, கீழ்ப்படிவோடு, தம்மைத் தாழ்த்தி இவ்வுலகம் வந்தார். உலகிலே வாழ்ந்தபோது, தமது தகப்பனுடைய சித்தத்தையே தமது வாழ்க்கையில் நிறைவேற்றி மனுமக்கள் அனைவருக்கும் பாவத்தில் இருந்து மீட்பைப் பெற்றுத் தந்தார். இப்படிப்பட்ட மகன் உண்மையாகவே தமது பிதாவுக்கு "பிரியமான" குமாரனாகவே இருந்திருப்பார் என்பதில் ஐயமே இல்லை அல்லவா!

இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் கிறிஸ்தவனே, இன்று நமது பரம பிதா நம்மைக்குறித்து, "என் பிரியமே" என்று கூப்பிடவும், மற்றவர்கள் மத்தியில் "இவன் எனக்குப் பிரியமானவன்" என்று சொல்லக்கூடியதாகவும் நாம் வாழுகிறோமா? பரம பிதாவின் சித்தத்தை மாத்திரம் நிறைவேற்றி, அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறோமா? இது மிகவும் கடினமானது என்று நாம் நினைக்கலாம். ஆனால், 'கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷன்' என்று பெயர் பெற்ற தாவீது ராஜா பலவேளைகளிலும், "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" (சங்.40:8) என்றும், "உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன், உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக" (சங்.143:10) என்றும், விண்ணப்பம் செய்து, கர்த்தருக்குப் பிரியமானதை தன் வாழ்க்கையில் நிறைவேற்றுவதையே வாஞ்சித்து வாழ்ந்தார். நாமும் அதையே வாஞ்சிப்போமா!

நாம் உண்மையாகவே தேவனுடைய பிள்ளைகள் என்றால் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதில் உறுதியாக இருப்போம். "நான் என் நேசருடையவன், அவர் பிரியம் என்மேல் இருக்கிறது" என்று தைரியமாகக் கூறி, நமது ஆத்தும நேசரோடு என்றும் ஜீவித்து, அவருக்குப் பிரியமானதையே வாழ்க்கையில் நிறைவேற்ற, அவரே நம்மைத் தமது வழிகளிலே வழிநடத்துவாராக.

***சிந்தனைக்கு:*** உலகத்தில் பல உறவுகள் நம்மைச் சூழ்ந்து நிற்க, இன்று தேவனை மாத்திரமே பிரியப்படுத்தி வாழுவதில் நமக்கிருக்கும் சவால், போராட்டம் என்ன?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: எபிரெயர் 9:7–22

# ஆத்தும காப்புறுதி

ஆகஸ்ட் 12 திங்கள்

*...அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன். யாத்திராகமம் 12:13*

இன்றைய உலகில், நம்மில் பலர் பலவிதமான "காப்புறுதிகளைச்" செய்திருக்கலாம். வீடுகள், பொருட்கள், சொத்துக்கள், வாகனங்கள் மாத்திரமல்ல, எம் வாழ்க்கைக்கும் இன்று பலவித காப்புறுதி முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் காப்புறுதி என்பது என்ன? நம்முடைய பணத்தை நாமே முன் கூட்டி முதலீடு செய்து, மாதத்திற்குரிய தவணைப் பணத்தையும் செலுத்தி, நமக்கு எதிர்பாராத நஷ்டம் அல்லது இழப்புக்கள் ஏற்படும்போது அந்த காப்புறுதி நம்மைத் தாங்கும் என்று நம்புகிறோம். சுருக்கமாகச் சொன்னால், இது பாதுகாப்பிற்காக நமக்கு நாமே ஏற்படுத்துகிற முன்னேற்பாடு.

ஒன்றைக் கவனித்துப் பார்ப்போமேயானால், நாம் எடுக்கின்ற இந்தப் பாதுகாப்பு முயற்சிகளும், அது தற்காத்துத் தருகின்ற காரியங்களும் இவ் உலக வாழ்வு முடிந்துபோகும்போது, அவையும் அழிந்துபோகும் காரியங்களாகவே இருக்கும். அத்துடன் அந்தக் காப்புறுதி நமக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுசெய்யுமே தவிர, அந்த நஷ்டம் நமக்கு வராதபடி நம்மைக் காப்பாற்ற முடியாது. ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, எந்தக் காப்புறுதியானாலும் அது நமது ஆவி, ஆத்துமாவைக் காப்பாற்றிக்கொடுக்க முடியாது. அழிந்துபோகின்ற சகலத்திற்கும் காப்புறுதியைக் கொடுக்கின்ற இந்த உலகத்திற்கு, அழியாத நமது ஆத்துமாவிற்குக் காப்புறுதி கொடுக்கவே முடியாது. ஏனெனில் இவ்வுலகமே ஒருநாள் அழிந்துபோகுமே! அப்படியானால் நமது ஆத்துமாவிற்கு காப்புறுதி கொடுப்பது யார்?

ஒரு நல்ல செய்தி தெரியுமா? நாம் முதலீடு செய்யாமல், மாதாந்த தவணைப் பணம் செலுத்தாமல், நமது அழியாத ஆத்துமாவிற்குக் காப்புறுதி ஒழுங்கு செய்யப்பட்டாயிற்று. இந்த ஒழுங்கை தேவன் அநாதியாய் செய்துவிட்டார். அதற்கான சகல முதலீட்டையும் செலுத்திவிட்டார். ஆம், அந்த முதலீட்டுக் கிரயம் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மாசற்ற இரத்தமே. அந்தத் திட்டத்தில் நாமும் பங்கடைந்து நமது ஆத்துமாவைக் காத்துக்கொள்ள வேண்டுமானால் நாம் செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான். எனக்காக ஒருவர் காப்புறுதிக் கிரயத்தைச் செலுத்திவிட்டார் என்று விசுவாசிக்கவேண்டும். அவ்வளவுதான். இயேசு எனக்கான எல்லாவற்றையும் சிலுவையில் செலுத்தி தீர்த்துவிட்டார். இனி நான் விடுவிக்கப்பட்டவன். அழியாத நமது ஆத்துமா தேவனை விட்டு அழியாமல் காக்கப்பட இந்த ஆத்தும காப்புறுதித் திட்டத்தில் இணைந்து கொள்ள நம்மை இன்றே ஆண்டவருக்கு அர்ப்பணிப்போமாக. அவரது இலவச மீட்பில் இன்றே இணைந்து பயனடைவோமாக.

*சிந்தனைக்கு:* பாவியாகிய எனது ஆத்துமா அழிந்துபோகக்கூடாது என்று என்னில் ஒருவர் கரிசனை கொண்டு தம்மையே கொடுத்தார் என்ற சிந்தனை என்னில் எவ்வித தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்
13
செவ்வாய்

## கிறிஸ்துவின் அடிச்சுவடு

*நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக.*
*கலாத்தியர் 6:9*

வேத வாசிப்பு: கலா 6:6–9

கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கும் ஒருவன், தானும் கிறிஸ்துவைப்போல ஜீவிக்கவேண்டுமென்றே எப்போதும் விரும்புவான்; அதற்காக முயற்சிப்பான். அந்த ஆவல் நமக்குள் இருக்கிறதா? அப்படியானால் கிறிஸ்து எப்படிப்பட்டவர் என்பது முதலாவது நமக்கு தெரியவேண்டும். பாவமற்றவராக உலகிற்கு வந்து, மனுக்குலத்தின் பாவத்தைத் தம்மேல் சுமந்து, மனிதனுக்காகவே மரித்து, உயிர்த்தெழுந்து இன்றும் எம்மோடு ஜீவித்துக்கொண்டிருக்கிற நமது ஆண்டவரே இயேசு கிறிஸ்து என்பதை நாம் அறிவோம். இந்தக் காரியத்தை அவர் வெகு இலகுவாக செய்துமுடிக்கவில்லை. இந்த மீட்பைச் சம்பாதித்துக் கொடுப்பதற்காகவே இவ்வுலகிலே பல நிந்தைகள், அவமானங்கள், எதிர்ப்புக்கள், கோபங்கள் போன்றவற்றை அவர் எதிர்நோக்கவேண்டியிருந்தது. ஆனாலும், தாம் வந்த நோக்கத்திலிருந்து அவர் பின்வாங்கவில்லை. தாம் வந்த நோக்கத்தை நிறைவு செய்யும்வரை சோர்ந்துபோகாமல் அவர், "நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்தார்" (அப்.10:38).

கிறிஸ்து நிறைவேற்றிய மகா இரட்சிப்பின் கிரியையை அவரைத் தவிர யாராலும் செய்யமுடியாது; அதற்கு அவசியமும் இல்லை. ஆனால் அவர் நடந்த பாதையில் நடக்கவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்து நடந்த பாதை எதிர்ப்புகள், போராட்டங்கள், அவமானங்கள், நிந்தைகள் நிறைந்த வாழ்க்கை என்றால், அவர் பாதையில் நடக்க வாஞ்சிக்கும் நம்மையும் அவை யாவும் நிச்சயம் எதிர்கொள்ளும். அவற்றின் மத்தியிலும் நாம் ஆண்டவரைப்போல நன்மை செய்கிறவர்களாக வாழ முடியுமா? நமக்குத் தீமை செய்த ஒருவன் ஆபத்திலே சிக்கித் தவிக்கும்போது அவனுக்கு நன்மை செய்ய நம்மால் தீவிரமாக செல்லமுடியுமா? இது கடினம், இது கூடுமான காரியம் இல்லை என்று சொல்வோமானால், கிறிஸ்துவின் சாயலைத் தரித்துக்கொள்வதும் நமக்குக் கடினமாகவே இருக்கும்.

கிறிஸ்துவுக்குள் கிறிஸ்துவைப்போல வாழ வாஞ்சிக்கிறோமா? இனி "உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள். நீங்கள் தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லுங்கள்" (ரோம.12:9,21). "ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" (யாக். 4:17). ஆகவே, நன்மை செய்வதால் பாடுகள், நெருக்கங்கள், அவமானங்கள் வந்தாலும், நாம் சோர்ந்துபோகாமல், கிறிஸ்துவைப்போல, உயிரோடு இருக்கும்வரை நன்மை செய்கிறவர்களாகவே வாழத் தீர்மானம் செய்துகொள்வோமாக. பிறருக்கு நன்மை செய்வதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக.

***சிந்தனைக்கு:*** உலகம் கொண்டுவந்த பலவித இக்கட்டுகள் மத்தியிலும் இயேசு எப்படி வாழ்ந்தார் என்பதை ஒருவிசை எழுதிப் பார்ப்போமா! அது அவர் வழிநடக்க நமக்கு உதவுமல்லவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வேத வாசிப்பு: | யோவான் 20:1–17 |
|---|---|

## கண்ணை மறைக்கும் ஏமாற்றம்

*...இயேசு நிற்கிறதைக் கண்டாள். ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள்.* யோவான் 20:14

ஆகஸ்ட் 14 புதன்

மகதலேனா மரியாள் என்னும் பெண், ஏழு பிசாசுகளினால் கட்டப்பட்டு அதிக வேதனைப்பட்டுக்கொண்டிருந்தாள். அவளை இயேசு குணப்படுத்தினார். அப்போதே அவள் தன் வாழ்க்கையிலே இயேசுவை ஏற்றுக்கொண்டாள் (லூக்.8:2). இயேசுவின் போதனைகளைக் கேட்டு அவருக்குப் பின்சென்றாள். இயேசுவின் மரணநேரத்தில் மாத்திரமல்ல, அவரை அடக்கம் செய்தபோதும்கூட இயேசுவோடு இருந்தாள். மரித்து மூன்றாம்நாள் கல்லறையண்டைக்குச் சென்ற அவளிடம், "சிலுவையில் அறைந்த நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவைத் தேடுகிறீர்கள். அவர் உயிர்த்தெழுந்தார்" (மாற்.16:6) என்று தூதர்கள் கூறினார்கள். ஆனாலும், அவள் தொடர்ந்தும் அழுது கொண்டிருந்தாள். அவளிடம் அதிக அன்புகூர்ந்த இயேசு, "ஸ்திரீயே ஏன் அழுகி றாய்? யாரைத் தேடுகிறாய்?" என்றார். அப்போதுகூட, இத்தனை காலமும் கேட்டுப் பழகின அக்குரலை அவள் அறியாதவளாய், அவரைத் தோட்டக்காரன் என்று எண்ணி, "ஐயா அவரை வைத்த இடத்தைச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக் கொள்வேன்" என்றாள்.

ஆம்! மரித்துப்போன தன் ஆத்தும நேசரின் சரீரத்திற்குப் பரிமளதைலம் பூச ஓடி வந்தவளுக்கு வெறுமையான கல்லறை "ஏமாற்றத்தைக்" கொடுத்தது. இந்த ஏமாற்றம், தன் ஆத்துமநேசர் எப்படிப்பட்டவர் என்பதையும் அவரது குரலையும்கூட மறக்கச் செய்தது. அதனால் அருகில் நின்ற இயேசுவை, அவர்தான் இயேசு என்று அவள் அறியாதிருந்தாள்.

கிறிஸ்துவை நன்கு அறிந்த பிள்ளைகளின் வாழ்க்கையிலும்கூட இன்று பலவிதமான ஏமாற்றங்கள் ஏற்படத்தான் செய்கிறது. பிள்ளைகளின் அன்புக்காகக் காத்திருக்கும் பெற்றோர் வாழ்க்கையில் ஏமாற்றம்; பெற்றோரின் சொத்துக்காகக் காத்திருந்த பிள்ளை களுக்கு ஏமாற்றம்; இன்னும் எத்தனையோ வழிகளில் ஏமாற்றம். இவ் ஏமாற்றத் தால் இன்று நாமும்கூட மனமுடைந்து வெறுப்போடு ஜீவிக்கலாம்? இதனால் நமது அருகில் நிற்கும் இயேசுவைக்கூட அடையாளம் காணமுடியாமல் இருக்கலாம். இந்நிலை மைக்குக் காரணம் என்ன தெரியுமா? பாவத்தில் இருந்து நம்மை மீட்டுக்கொண்ட நாள் முதற்கொண்டு, இன்றுவரை நம்மைப் போஷித்து, வழிநடத்தும் நமது ஆத்தும நேசரைவிட நமது ஏமாற்றம்தான் நம்மை அதிகமாக ஆட்கொண்டிருக்கிறது. அது நமது கண்களை மறைத்துப்போடுகிறது. ஆண்டவரை நம்மால் உணரமுடியாதிருக்கிறது. "மரியாளே" என்று அன்று அழைத்தவர் நம்மையும் பெயர் சொல்லி அழைக்கிறார். ஏமாற்றங்கள் சந்தேகங்களை விட்டுவிட்டு இயேசுவிடம் வந்துவிடுவோமாக.

*சிந்தனைக்கு:* எனது துக்கங்களால் ஆவிக்குரிய கண்கள் மங்கிவிடாதபடி, பார்வையை இழந்துவிடாதபடி எப்போதும் இயேசுவையே அண்டி வாழ என்னைத் தருவேனாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்
15
வியாழன்

## சுவிசேஷ பணியில் பின்வாங்காதே!

*நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை. ...எனக்கு அநேக ஜனங்கள் உண்டு. அப்.18:10*

வேத வாசிப்பு: அப் 18:1–18

இரட்சிப்பின் சுவிசேஷம் அறிவிக்கப்படாதபடி தடைகள் எழும்பும் கடைசிக்காலத்தில் ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். வேதவசனமே கேட்கக் கூடாதபடி கதவுகள் பூட்டப்படுகின்ற இருளான காலங்கள் நெருங்கிவிட்டன. இப்படியான வேளையில், தேவனுடைய வசனத்தை வல்லமையோடு பரப்புவதற்காக விரைந்து செல்லும் தேவபிள்ளைகள் அநேகர் இருக்கிறார்கள். இவர்களில் ஒருவனாக, தேவபிள்ளையே, நாம் இருக்கிறோமா? சத்துரு நமது வாழ்க்கையில் பல வழிகளிலும் எதிர்ப்புகளையும் பயமுறுத்தல்களையும் கொண்டுவந்து, நம்மைப் பின்னடையச் செய்கிறானா? எதிர்ப்புகள் அதிகரிப்பதனால், அவ்விடத்தைவிட்டே சென்றுவிட்டால் நலம் என்று எண்ணுகிறோமா? ஒரு கணம் அமர்ந்திருந்து தேவனுக்காக அயராது உழைத்த, தேவசித்தத்தைப் பூரணமாகத் தன் வாழ்க்கையில் நிறைவு செய்த அப்போஸ்தலனான பவுலின் வாழ்வை சற்றுத் சிந்திப்போமாக.

பவுலின் சுவிசேஷப் பணியில் எத்தனை இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்படக் கூடாதபடி தடைகள் ஏற்பட்டன. மூப்பர்கள், பரிசேயர்கள், சதுசேயர்களால் பயமுறுத்தல்கள் உண்டாயின. பல இடங்களில் பவுல் பலவித உபத்திரவங்களை அனுபவித்தார், சிறையிலடைக்கப்பட்டார். ஆனாலும், பவுல் பின்வாங்கிப்போகவில்லை. யாராலும் அவரைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. தேவகரம் பவுலோடு இருந்ததால், அவர் பயமின்றி கடைசிவரை இரட்சிப்பின் செய்தியைக் கொடுத்து வந்தார்.

ஆம்! நம்மைத் தமக்கென்று பெயர் சொல்லி அழைத்தவர் உண்மையுள்ள தேவன். அவர் "தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்" (சங்.91:4); "தமது கரத்தின் நிழலினால் உன்னை மூடுவார்" (ஏசா.51:16). தமது கண்மணிபோல் உன்னைப் பாதுகாத்து, உனக்காகத் தமது தூதர்களுக்குக் கட்டளையிடுவார் (சங்.91:11). மனிதனால் கொடுக்கமுடியாத பாதுகாப்பைக் கொடுக்கும் அன்பின் தேவன் இன்று நம்முடன் இருக்கும்போது, நாம் பயப்படத் தேவையில்லை.

தேவன் நம்மை வைத்திருக்கும் இடத்தில், அவரது சுவிசேஷத்தை அறிவிப்போமாக. அந்த இடத்தில் இன்னும் அநேக ஆத்துமாக்களை இரட்சிப்பிற்குள் கொண்டுவருவது தேவ சித்தமாயிருந்தால், அவர் ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டார். ஒருவனும் நம்மேல் கைபோட முடியாதபடி அவர் பாதுகாப்பார். அவருடைய சத்தத்தைக் கேட்கின்ற ஜனங்கள் அநேகம் உண்டு. அவர்களுக்கு அவரது வசனத்தை தைரியமாக எடுத்துரைப்போம். எம் காலங்கள் தேவனுடைய கரத்திலேயே உள்ளன.

*சிந்தனைக்கு:* சுவிசேஷ பாரம் எனக்குள் உண்டா? அதுவே ஆண்டவரின் பாரம் என்று விசுவாசித்து அதற்காக உழைக்க எவ்வித தடைகளையும் தாண்டிச்செல்ல நான் தயாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: சங்கீதம் 10:1-18

ஆகஸ்ட் 16 வெள்ளி

## ஆண்டவர் காப்பார்!

*திக்கற்றவர்களாய்ப்போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்.*

*எரேமியா 49:11*

இனத்திற்கு இனம் சண்டை; நாட்டுக்கு நாடு போர்; இவைகளில் சிக்கித் தவிக்கிற வர்கள், பாதுகாப்பை நாடி, சொந்த இடத்தைவிட்டு இடம் பெயர்ந்து செல்லும்போது தங்கள் குடும்பம், இனம் எல்லாவற்றிலுமிருந்து பிரிக்கப்படுகிறார்கள். இதனால், அவர்கள் பலவழிகளிலும் தாக்கப்பட்டு பரிதாபமான நிலையில் ஜீவிக்கிறார்கள். தேவபிள்ளையே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்மில் யாராவது அகப்பட்டிருக்கி றோமா? நாம் பாதுகாப்பாய் இருந்தாலும், நமது அன்பானவர்களைக் குறித்த பாதுகாப்பு நமக்குக் கவலை தருவதாக இருக்கலாம்.

"ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும், உங்கள் பிதாவின் சித்தமில்லாமல் அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால், பயப்படாதிருங்கள்; அநேக அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்" (மத்.10:29-31) என்று கூறிய இயேசு கிறிஸ்து, "மரித்தேன், ஆனாலும், இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" (வெளி. 1:18) என்று வாக்குப்பண்ணியுள்ளார். இந்த ஆண்டவரிடம் ஏன் நாம் நமது அன்பான வர்களை ஒப்புவிக்கக்கூடாது? கலக்கம் வேண்டாம். அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நமது குடும்பத்தவர்கள் கர்த்தருக்கு விசேஷித்தவர்கள். நாம் அவருக்கு விசேஷித்தவர்கள். இதை நாம் மறந்துவிடக்கூடாது.

வாக்குத்தத்தத்தின் ஜனமாகிய இஸ்ரவேலர் எத்தனைமுறை அந்நிய ஜனங்களின் ஆளுகைக்குட்படுத்தப்பட்டு, சிதறடிக்கப்பட்டுப் போனார்கள். ஆனாலும், இரக்கமும் மன உருக்கமும் உள்ள வாக்குமாறாத தேவன் அவர்களைக் கைவிடவில்லை. கண்மணிபோல அவர்களைப் பாதுகாத்து திரும்பவும் அவர்களது தேசத்தில் கூட்டிச்சேர்த்தார். அவர்கள் வாழ தேசத்தையும் கொடுத்தார்.

"நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்" (யோவான் 14:18) என்று வாக்குக் கொடுத்த இயேசு கிறிஸ்து, நமது அன்பானவர்களுக்காக நாம் ஏறெடுக்கும் சகல விண்ணப்பங்களையெல்லாம் கேட்கிறார். திக்கற்றவர்களாக இருக்கும் அவர்கள் மீது அவர் நோக்கமாயிருக்கிறார். எந்த ஆபத்தும் அவர்களை அணுகாதபடி, என்றும் அவர்களை உயிரோடே காப்பாற்றுவார் என்பதை நாம் முழு நிச்சயமாய் நம்புவோ மாக. வேற்றிடங்களில் முக்கியமாக வெளிநாடுகளில் வசிக்கும் நம்முடையவர் களுக்காக நாம் செய்யும் ஜெபம் கேட்டு, கர்த்தர் அவர்களைத் தாங்குவார் என்று நான் நம்புவேனா?

***சிந்தனைக்கு:*** "திக்கற்ற பிள்ளைகளுக்கு சகாயர் அவரே". அவரில் என்றும் தஞ்சம்புகுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்
17
சனி

## எண்ணமுடியாத ஆசீர்வாதம்!

*நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்துதிரி. உனக்கு அதைத் தருவேன்.*

*ஆதியாகமம் 13:17*

வேத வாசிப்பு: ஆதி 13:12–18

*தேவனுடைய செய்தி:*

தேவன் எம்மை மட்டுமல்ல, எமது அடுத்த பரம்பரையையும் ஆசீர்வதிக்க விரும்புகிறார். அவர் மட்டுமே ஆசீர்வதிக்க வல்லவர்.

*தியானம்:*

லோத்து கிழக்கே சென்று நீர்வளம் பொருந்திய வளமிக்க சமவெளியில் வாழ்கிறார். ஆபிராம் கானானில் குடியேறியபோது, லோத்தைவிட்டு பிரிந்த போது, கர்த்தர் ஆபிராமிடம், "உன்னைச் சுற்றிலும் உள்ள வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு பகுதியை பார். இந்தப் பூமியை நான் உனக்கும் உன் சந்ததியினருக்கும் கொடுக்கிறேன்" என்றார்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

செழிப்பிற்காக உங்கள் ஆத்துமாவை ஆபத்தில் ஆழ்த்தாதீர்கள்.

*பிரயோகப்படுத்தல் :*

வசனம் கூறுகின்றபடி லோத் ஏன் வளமுள்ள பகுதியை தெரிந்துகொண்டான்? இன்று வசதியை தேடி ஓடுபவர்களின் நிலை என்ன?

படிப்படியாக சோதோமுக்குள் லோத்து செல்கிறான். உளவியலின் அடிப்படையில் பாவத்தின் இன்பம் ஒருவனை படிப்படியாக கொண்டுசெல்வது எங்கே?

வசனம் 13ன்படி, கர்த்தருக்கு எதிராகப் பாவம் செய்துகொண்டிருப்பவர்களைக் கண்டதுண்டா? அம் மக்களுடைய கருத்து என்ன? கெட்ட சகவாசம் எவ்வாறு நல்லொழுக்கத்தை அழிக்கின்றது?

எவராவது புழுதியை எண்ண முடியுமா? உன் சந்ததி ஜனங்களின் தொகை அந்தளவு பெருகும் என தேவன் ஆபிராமுக்கு கூறினார். இன்று இது எத்தனை உண்மை? சிந்தித்ததுண்டா?

தன்னலமில்லாத ஆபிராமுக்கு ஏன் இத்தனை ஆசீர்வாதம் தேவனால் வழங்கப்படுகின்றது? அதைக் கைப்பற்ற அவன் செய்ய வேண்டியது என்ன?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ஏசாயா 54:6–14

ஆகஸ்ட் 18 ஞாயிறு

## இருதயத்தை ஊற்றிவிடு!

*நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன். 1சாமுவேல் 1:15*

தேவபயத்துடன், தேவனுடைய பாதையில் மகிழ்ச்சியோடு வாழ்ந்துகொண்டிருந்த ஒரு குடும்பத்தில், சடுதியாக புயல் வீச ஆரம்பித்தது. வெளிநாடு சென்று தன்னுடைய குடும்பத்திற்காக உழைக்கச் சென்ற கணவன் பிரிந்துபோனான். கையில் இருந்த பணம் குறைவடைந்தது, இறுதியில் எல்லாமே முடிந்து கஷ்ட நிலைமைக்குள் தள்ளப்பட்டாள் அந்த மனைவி. அவளுடைய சகோதரிகளின் குடும்பங்கள் சிறிது காலம் உதவி செய்தனர். பின் ஒருவர் பின் ஒருவராக பின்வாங்கி, அனைவருமே கையை விரித்துவிட்டனர். செய்வதறியாதவளாகக் கலங்கி நின்றாள். துக்கமும் வேதனையும் அவளைத் தாக்கியது. கண்ணீரே அவள் தஞ்சமாயிற்று. "என் இருதயத்தின் பாரத்தையும், வேதனைகளையும் என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லையே" என்று அடிக்கடி கூறுவாள். ஆனாலும் வறுமையிலும், மற்றவர்களின் ஏளனமான பேச்சுக்கள் மத்தியிலும் வாழ்ந்த அவளுடைய வாழ்க்கையிலும் மறுமலர்ச்சி ஒளிகொடுக்க ஆரம்பித்தது. அவளும் பிள்ளைகளும் கிறிஸ்துவண்டை வழிநடத்தப்பட்டார்கள். தம்மைத் தாங்கி வழிநடத்தும் தற்பரன் இயேசுவின் கரங்களை இறுகப் பிடித்தார்கள். என்ன ஆச்சரியம்! கஷ்டங்கள் வேதனைகள் மத்தியிலும் மகிழ்ச்சியைக் கண்டார்கள். நெருக்கங்கள் மத்தியிலும் வழிகள் திறந்ததைக் கண்டார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தனக்கொருவர் இருக்கிறார் என்ற நிச்சயம் அவளுக்கு உண்டாயிற்று. இந்த மாற்றத்திற்கு காரணம் என்ன என்று கேட்டபோது, அவள், "தேவாலயத்திலே என் இருதயத்தை ஊற்றினேன். என் வேதனைகளையெல்லாம் என்னைத் தாங்கும் இயேசுவின் கரத்தில் கொடுத்தேன்; அன்றிலிருந்து, இதுவரை அறிந்திராத மகிழ்ச்சி என் இருதயத்தை நிரப்பிற்று. இதனால் நெருக்கங்கள் மத்தியிலும், நானும் என் பிள்ளைகளும் சமாதானத்தோடு வாழுகிறோம்" என்று கூறினாள்.

ஆம்! "நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன். இதற்காக நான் விழித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்" (எரே.31:25,26) என்று கூறிய கர்த்தர் நமது அருகிலேயே இருக்கும்போது, நமது நிலைமையைக் குறித்தும், நமது குடும்பத்தின் நிலைமையைக் குறித்தும் ஏன் இன்னும் ஏங்கிக் கலங்கிக் கண்ணீரோடு வாழவேண்டும்? இன்றே, இயேசுவின் சமுகத்தில் நமது இருதயத்தின் வேதனைகளை பாரங்களை தேவைகள் அனைத்தையும் ஊற்றிவிடுவோமாக. இடர்கள் மத்தியில் ஜெபிக்க கஷ்டமாயிருப்பதை உணர்ந்திருக்கிறோமா? என்றாலும் கர்த்தர் பாதத்தில் இருதயத்தை ஊற்றி ஜெபிக்க என்னைத் தருவேனாக. சஞ்சலமும் தவிப்பும் மறைந்து, சந்தோஷமும் மகிழ்ச்சியும் நமது இருதயத்தை நிச்சயம் நிரப்பும்.

***சிந்தனைக்கு:*** கர்த்தர் பாதத்தில் இருதயத்தை ஊற்றி ஜெபிக்க ஆயத்தமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்
19
திங்கள்

## தேவனை நம்பு

*எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்.*
*அப்போஸ்தலர் 27:25*

வேத வாசிப்பு: எபிரெயர் 11:1-6

பின்லாந்து தேசத்திற்கு அருகிலுள்ள கடலிலே, கப்பலொன்று அமெரிக்கா தேசம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அந்தக் கப்பலின் கப்டன் கடமையுணர்வுள்ள தேவனுக்குப் பயந்த ஒருவர். அவர் கூறினார், "ஐந்து கிழமைகளுக்குமுன் இந்தக் கடற்பாதைக்கூடாக கடைசியாக நான் கப்பலை ஓட்டிச்சென்றபோது, என் வாழ்க்கையிலே ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. காரணம், ஜோர்ஜ் முல்லர் ஐயா, எம்மோடு பயணம் செய்துகொண்டிருந்தார். சடுதியில் நமது கடல்வழி, பனியால் நிறைந்திருந்ததைக் கண்டேன். 24 மணிநேரமாக கப்பல் முன்னே செல்லமுடியாதபடி இருந்தது. அப்போது முல்லர் ஐயா என்னிடத்தில் வந்து, "கப்டன், கியூபெக்கில் நான் சனிக்கிழமை மத்தியானம் நிற்கவேண்டுமே" என்றார். நானோ, "அது முடியாது" என்றேன். அதற்கு அவர், "நல்லது, நான் போய்ச்சேரவேண்டிய இடத்திற்கு உனது கப்பல் என்னைக் கொண்டுபோய்ச் சேர்க்காவிட்டாலும், என் தேவன் வேறுவழியால் என்னைக் கொண்டுபோய்ச் சேர்ப்பார். கடந்த 47 வருட அனுபவத்தில், ஒருநாள்கூட போகவேண்டிய இடத்திற்கு, குறிப்பிட்ட நேரத்துக்குப் போக நான் தவறியதில்லை. நாம் ஜெபிப்போம்" என்றார். நானோ இவருக்குப் பைத்தியமோ என்று நினைத்தேன். நான் அவரிடம், "முல்லரே, இது எத்தனை அடர்த்தியான பனி என்பதை நீர் அறிவீரா" என்று கேட்டேன். அவரோ, "இல்லை" என்று பதிலளித்தார். தொடர்ந்தும், "என் கண்கள், இத்தனை அடர்ந்த பனியில் இல்லை; உயிருள்ள தேவனிடத்தில், வாழ்வின் சகல சூழ்நிலைகளையும் கட்டுப்படுத்துகிறவரிடத்தில் உள்ளது" என்று சொல்லிவிட்டு முழங்கால்படியிட்டார். மிகவும் சுருக்கமான ஒரு ஜெபம் செய்து எழுந்தார். அதைத் தொடர்ந்து நானும் ஜெபிப்பதற்காகச் சென்றேன். முல்லர் அவர்களோ என் தோள்களில் கையை வைத்து, "சகோதரனே, நீர் ஜெபிக்கத் தேவையில்லை, ஏனெனில் தேவன் பதில் கொடுப்பார் என்பதை நீர் விசுவாசிக்கவில்லை. ஆனால், அவர் பதில் கொடுத்துவிட்டார் என்பதை நான் விசுவாசித்தேன். ஆகவே இனிமேல் நீர் ஜெபிப்பதற்கு ஒன்றுமில்லை" என்றார். இருவரும் எழுந்து வெளியே வந்துப் பார்த்தோம். என்ன ஆச்சரியம்! பனி மறைந்துவிட்டிருந்தது.

அன்று பவுலும் இதைத்தான் சொன்னார். அவரோடு சென்ற அனைவரும் தேவ வழிநடத்துதலைக் கண்டனர். ஆம்! இயேசு கிறிஸ்துவை முழுமையாக நம்பி விசுவாசித்திருப்பின் நாம் ஏன் கலங்கவேண்டும்? அவர் சகலத்தையும் செய்ய வல்லவர் என்பதை நம்புவோமாக. கலங்கித் தவிக்காமல் தாமதிக்காமல் அவர் நடத்தும் பாதையில் தொடர்ந்து செல்வோமாக. முல்லர் அவர்களின் ஜெபத்தைக் கேட்டவர், பவுலுக்கு வாக்களித்தபடியே ரோமாபுரியில் சேர்த்தவரே நமது தேவன் என்பதை நமது நெருக்கடிகளில் ஏன் நம்பமுடியாமல் தவிக்கிறோம்?

***சிந்தனைக்கு:*** தேவன் நமக்கு முன்னே செல்லுகிறார் என்பதை முழு உள்ளத்துடன் நம்புவோமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| † வேத வாசிப்பு: | சங்கீதம் 101:1–6 |

## உத்தமத்தில் நிலைத்திரு

*...தேவன் உத்தமனை வெறுக்கிறதுமில்லை...*
*யோபு 8:20*

ஆகஸ்ட்
20
செவ்வாய்

என் வழிகளிலெல்லாம் உத்தமமாயிருந்தும், வாழ்வில் ஏன் இத்தனை எதிர்ப்பும், போராட்டமும், வேதனையும் என்று ஏக்கத்தோடு நம்மில் எத்தனைபேர் போராடிக் கொண்டிருக்கிறோம்? உத்தமர்களைக் குறித்து நமது பரிசுத்த வேதாகமம் என்ன சொல்கிறது என்று பார்ப்போமா!

1. "கர்த்தரின் வழி உத்தமர்களுக்கு அரண்." (நீதி. 10:29)
2. "உத்தமனுடைய நீதி அவன் வழியைச் செம்மைப்படுத்தும்." (நீதி. 11:5).
3. "உத்தமர்களின் வாய் அவர்களைத் தப்புவிக்கும்." (நீதி. 12:6).
4. "உத்தமர்களை மோசப்படுத்தி, பொல்லாத வழியிலே நடத்துகிறவன், தான் வெட்டின குழியில் தானே விழுவான்; உத்தமர்களோ நன்மையைச் சுதந்தரிப்பார்கள்." (நீதி. 28:10).

கர்த்தருக்குப் பயந்தவனும், உத்தமனுமாயிருந்த யோபுவின் வாழ்க்கையில்தான் எத்தனை இழப்புகள், வேதனைகள், போராட்டங்கள். அவருடைய சிநேகிதர்கள் பல வித வார்த்தைகளைக்கூறி அவரைத் தடுமாற வைத்தார்கள். ஆனாலும், யோபுவோ, "என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை விட்டுவிலகேன்" (யோபு 27:5) என்று கூறினார். ஏனெனில் யோபு, "தேவனுடைய வழி உத்தமமானது" (சங்.18:30) என்றும், அவர் "உத்தமனை வெறுக்கிறதுமில்லை" (யோபு 8:20) என்றும் நன்கு அறிந்திருந்தார். யோபு மாத்திரமா, நோவாவைப் பாருங்கள். நோவாவின் காலம் அக்கிரமமும் பாவமும் நிறைந்த காலமாயிருந்தது. அப்படிப்பட்ட காலத்திலும் நோவா இறுதிவரை தன் உத்தமத்தில் தவறவில்லை. அழிவு வந்தபோது, நோவாவும் அவருடைய வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்பட்டார்கள். "கர்த்தர் உத்தமர் என்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதி இல்லையென்றும்" (சங்.92:14) அறிந்த தாவீது ராஜா, "நீர் என் உத்தமத்திலே என்னைத் தாங்கி, என்றென்றைக்கும் உம்முடைய சமுகத்தில் என்னை நிலைநிறுத்துவீர்" (சங்.41:12) என்று ஜெபித்தார். அந்த உறுதியோடு, தான் எதிர்கொண்ட போராட்டங்கள், பயமுறுத்தல்கள் அனைத்தையும் மேற்கொண்டு வெற்றியோடு முன்சென்றார்.

நமது உத்தமம் நம்மைக் காப்பதில்லை. ஆனால் கர்த்தருக்குமுன் உத்தமமாய் நடப்பவர்களுடைய வாழ்க்கையில் போராட்டங்கள் வந்தாலும் தேவன் அவர்களைக் கைவிடவே மாட்டார். ஆகவே நமது வழிகளை உத்தமமாய் காத்துக்கொள்வோம். உத்தமர்களை தேவன் ஒருபோதும் வெறுக்கவே மாட்டார்.

*சிந்தனைக்கு:* குற்றஞ்சாட்டப்படாத வாழ்வே உத்தம வாழ்வு. என் சுயத்தில் இப்படி வாழமுடியாது என்பதை உணர்ந்து, கர்த்தருக்கு முன்பாக உத்தமமாக நடக்க என்னை ஒப்புக்கொடுக்கலாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்
21
புதன்

## துக்கம் மகிழ்ச்சியாய் மாறும்

*...நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன?*
*நெகேமியா 2:2*

† வேத வாசிப்பு: நெகே 1:1-11

நெகேமியா என்பவர் பெர்சிய ராஜாவின் பானபாத்திரக்காரனாக இருந்தவர். யூதாவில் இருந்து வந்த சில மனுஷர்களிடம், சிறையிருப்பில் மீந்து தப்பிய யூதர்களின் செய்தியை இவர் கேட்டறிந்தார். தேசத்திலே மக்கள் மகா தீங்கு அனுபவிப்பதையும், எருசலேமின் அலங்கம் இடிபட்டும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாகக் கிடக்கிறதை அறிந்த நெகேமியாவின் உள்ளம் துக்கத்தால் நிறைந்தது. ஆகவே எப்படியாகிலும் எருசலேமுக்குச் சென்று தன் சகோதரரையும், இடிபட்ட அலங்கத்தையும் பார்த்து வரவேண்டும் என்று தீர்மானித்தார். இதற்காக ராஜாவின் கண்களில் தனக்குத் தயவு கிடைக்கவேண்டுமென்று ஜெபித்தார். தனது ராஜாவிடம் சென்ற நெகேமியாவின் முகம் வாடிப்போய், துக்கத்தால் நிறைந்திருந்தது. தன் சமுகத்தில் எப்போதும் மகிழ்ச்சியாயிருக்கிற நெகேமியாவின் முகம் வாடி இருந்ததைக் கண்ட ராஜா, அதைக்குறித்து விசாரித்து, நெகேமியாவின் விருப்பத்தை நிறைவேற்றினார். அவன் துக்கம் மகிழ்ச்சியாய் மாறியது.

"அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும் ஒலிவ மரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டு மந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடுகள் இல்லாமற்போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்; என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்" (ஆப.3:17,18) என ஆபகூக் கூறியதுபோல, "வாழ்க்கையின் எந்தச் சூழ்நிலையிலும், எத் துன்பம் வரினும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் ஜீவிப்பேன்" என்று பாடல் பாடி மகிழ்ந்திருக்கும் நாம், அப்பப்போ அந்த மகிழ்ச்சியை இழந்து துக்கத்தோடே இருப்பதன் காரணம் என்ன? சிந்திப்போம்.

அன்று நெகேமியாவின் விண்ணப்பத்திற்குச் செவிகொடுத்து ராஜாவின் கண்களில் தயை செய்த அதே தேவன், இன்றும் நமது ஜெபங்களைக் கேட்கிறார் என்பதை நாம் ஏன் மறந்துபோகிறோம்? நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, "துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவருமாயிருந்தார். அவர் நம்முடைய பாடுகளை ஏற்று நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்" (ஏசா.53:3,4) என்று வாசிக்கிறோம். அன்று துக்கத்தைச் சுமந்தவர் இன்று நமது துக்கத்தை உணராமல் போவாரோ? ஆறுதல் தராமல் விட்டிடுவாரோ? நமது துக்கம் எதுவாயிருப்பினும், அதை அப்படியே ஆண்டவரிடம் கூறி ஜெபிப்போமாக. இன்று நான் வெளிப்படுத்தும் சந்தோஷம் போலியானதா? உண்மையானதா? உள்ளர்த்தமாக நமது பாரங்களை ஆண்டவரிடம் கொடுத்து விடுவோமாக.

***சிந்தனைக்கு:*** அவர் நமது துக்கத்தை மகிழ்ச்சியாய் மாற்றுவார். அது உலகம் தரக்கூடாத மகிழ்ச்சியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: அப் 22:8–16

# இன்னமும் தாமதம் ஏன்?

*இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன?*
*அப்போஸ்தலர் 22:16*

ஆகஸ்ட் 22 வியாழன்

கிறிஸ்துவின் பிள்ளைகளைத் துன்பப்படுத்தி, இரட்சிப்பின் செய்தி அறிவிக்கப்படாத படி தடை ஏற்படுத்தத் தீவிரித்தவன் சவுல். இந்த சவுலையே, கர்த்தர் சந்தித்தார். தான் துன்பப்படுத்துகிறவர் யார் என்றும், அவர் எதற்காகத் தன்னைத் தெரிந்து கொண்டார் என்பதையும் அறிந்துகொண்ட சவுல், முகங்குப்புற விழுந்து தன்னை ஒப்புக்கொடுத்தார். கர்த்தர் கட்டளையிட்டபடி, தேவனுக்குச் சாட்சியாக விளங்கப் போகின்ற இந்த சவுலிடம் வந்த அனனியா, "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு?" என்றான்.

பின்னர் பவுலாகிய இந்த சவுல், 'முன்னமே தெரிந்தெடுக்கப்பட்ட' ஒருவர். தேவனுடைய திருச் சித்தத்தை அறிந்து, அவரைத் தரிசித்து, அவருடைய வார்த்தையைக் கேட்டு, தேவனுக்கே சாட்சியாக இருக்கும்படிக்கு தேவன் அவரை அழைத்திருந்தார். அப்படிப்பட்ட மேன்மையான அழைப்பைப் பெற்றிருந்தாலும் அவர் செய்யவேண்டிய சில காரியங்கள் இருந்தன. தேவன் அழைத்தார் என்ற நிச்சயத்தை அனனியா மூலம் அறிந்தவுடன் அவர் அவசரப்பட்டு எழுந்துபோக முடியாது. அவர்தாமே நிறைவேற்ற வேண்டிய சில காரியங்கள் இருந்தன. முதலாவது பவுல் தன் பாவங்கள் போகக் கழுவப்படவேண்டும். ஆண்டவர் இரட்சித்ததன் மேன்மையான அடையாளத்தை அவர் முதலில் தரித்துக்கொள்ளவேண்டும். இரட்சிப்பின் செய்தியை பிறருக்கு அறிவிப்பதற்கு முன்னர், அந்த இரட்சிப்பின் நிச்சயத்தை அவர் பெற்றுக்கொண்டு சில நியமங்களை நிறைவேற்றவேண்டும். ஆண்டவராகிய இயேசுவும்கூட தமது ஊழியத்தை ஆரம்பிக்க முன்னர் தேவநீதியை நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தவராக தாமே தம்மை ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

இப்படியிருக்க இந்நாட்களில் இரட்சிப்பின் செய்தியை பிறருக்கு அறிவிக்க தீவிரிக்கும் பலர், தாமே தமக்குள் இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறாதவர்களாகவும், முற்றிலும் தேவனுடைய சித்தத்திற்கும் நீதிக்கும் தம்மை ஒப்புவிக்காதவர்களாகவும் இருப்பது துக்கத்துக்குரியது. அதற்கு ஒரு காரணம், அவர்களுக்குள் இருக்கும் பயம். சமுதாயத்திற்குப் பயந்து தேவனை முழு மனதோடு சேவிக்கப் பயம். இது தவறு. முதலாவது தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும். நமக்கு மீட்பு வேண்டும். என் பாவங்கள் கழுவப்பட்ட நிச்சயம் எனக்கு வேண்டும். அந்த நிச்சயத்தை பெற்றுக்கொண்டவர்களாக தேவசித்தத்தை செய்ய நம்மை அர்ப்பணிப்போமாக.

*சிந்தனைக்கு:* என் பாவமறக் கழுவப்பட்டு, இயேசுவின் இரத்ததால் நாம் மீட்கப்பட்ட நிச்சயம் எனக்கு உண்டா என்பதை உண்மை மனதுடன் ஆராய்ந்து பார்ப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்
23
வெள்ளி

## தேவனைக் கனம்பண்ணுங்கள்

*நான் பிதாவானால் என் கனம் எங்கே? ...என்று சேனைகளின் கர்த்தர் ...கேட்கிறார்.*
*மல்கியா 1:6*

வேத வாசிப்பு: 1சாமு 2:27–36

மகன் தகப்பனைக் கனம்பண்ணுகிறான். மனைவி புருஷனைக் கனம்பண்ணுகிறாள். வேலைக்காரன் எஜமானைக் கனம்பண்ணுகிறான், ஊழியன் தன் அதிகாரியைக் கனம்பண்ணுகிறான். இப்படியே ஒவ்வொருவரும் நமக்குமேல் உள்ளவர்களைக் கனம் பண்ணுகிறோம். ஆனால், இவர்கள் எல்லாரிலும் மேலாகவும் ஒருவர் இருக்கிறார். அவரே முழுமையான கனத்துக்குப் பாத்திரர்.

கர்த்தருக்குப் பயந்தவனும், தாழ்மையுள்ளவனும் ஆசாரியனுமான ஏலியின் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட வேண்டியதற்குப் பதிலாக, தேவ கோபாக்கினைக்கு ஆளானது. காரணம் என்ன? ஏலியின் பிள்ளைகள் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டிய கனத்தைக் கொடுக்கவில்லை. பலிபீடத்தை அசுத்தமாக்கி, தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்து, பாவ வாழ்க்கை வாழ்ந்தார்கள். ஏலி கர்த்தருடைய ஆசாரியனாயிருந்தும், அவருடைய பிள்ளைகளான இவர்கள் தங்கள் தகப்பனையும் தேவனையும் கனப்படுத்த தவறிவிட்டிருந்தார்கள்.

கிறிஸ்துவுக்குள் வாழும் அன்பின் சகோதரனே, சகோதரியே, நம்மை நேசித்து, நமக்கு ஆலோசனை சொல்லி, பாதுகாத்து, வழிநடத்தி வருகின்ற ஆண்டவரை நாம் கனம் பண்ணுகிறோமா? அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறோமா? ஒருநாளை ஆரம்பிக்கும்போது, முதலாவது நமது பரம பிதாவின் பிரசன்னத்தை நாடி, அவருடைய ஆசீர்வாதத்தோடு அந்த நாளை ஆரம்பிக்கும்படி அவரை முதலில் கனம்பண்ணுகிறோமா? கர்த்தர் தருகின்ற வருவாயில் அவருடைய ஊழியத்துக்கு அள்ளிக் கொடுத்து, நமது பரம பிதாவைக் கனம்பண்ணுகிறோமா? நமது உயர்விலும் தாழ்விலும் அவரைக் கனம்பண்ணுகிறோமா? “என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம்பண்ணுவேன்; என்னை அசட்டைபண்ணுகிறவர்கள் கன ஈனப்படுவார்கள்” என்று கர்த்தரே கூறியுள்ளார் (1சாமு.2:30).

பெற்றோரே, உங்கள் குடும்பத்தின் தலையாக இருக்கும் இயேசு கிறிஸ்துவை நீங்கள் கனம்பண்ணுகிறீர்களா? அவர் வார்த்தைக்கு முதலிடம் கொடுக்கிறீர்களா? உங்கள் பிள்ளைகளும் முதலாவது தேவனைக் கனம்பண்ணுகிறார்களா என்பதைக் கவனிக்கிறீர்களா? வாலிபரே, உங்கள் காரியம் என்ன? ஏலியின் பிள்ளைகளின் நிலைமை உங்களுக்கு வரக்கூடாது. “நான் உங்களுக்குப் பிதாவானால் என் கனம் எங்கே” என்று கர்த்தர் கேட்கிறார். கர்த்தரைக் கனம்பண்ணுவது, பெற்றோரை, மூத்தோரைக் கனம்பண்ணுவது இன்று சமுதாயத்தில் குறைவுபட்டு வருவதற்குக் காரணம் என்ன? சிந்தித்து மனந்திரும்புவோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பார்!

***சிந்தனைக்கு:*** இப்போதே மனந்திரும்பி தேவனைக் கனம்பண்ணுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ஆதி 14:1–13

# லோத்து பிடிக்கப்படுதல்

*லோத்து சோதோமிலே குடியிருந்தபடியால், அவனையும், அவன் பொருள்களையும் கொண்டுபோய்விட்டார்கள்.*
*ஆதியாகமம் 14:12*

ஆகஸ்ட்
24
சனி

*தேவனுடைய செய்தி:*

எப்பொழுதும் தேவனுடைய பிள்ளைகளை விட்டு விலகி இருக்கவேண்டாம்.

*தியானம்:*

ஐந்து ராஜாக்கள் (பேரா சோதோமின் அரசன், பிர்சா கொமோராவின் அரசன், சிநெயா அத்மாவின் அரசன், செமேபர் செபோயீமின் அரசன், சோவார் பேலாவின் அரசன்.) நான்கு ராஜாக்களுடன் (அம்ராப்பேல் சிநெயாரின் அரசன், அரியோகு ஏலாசாரின் அரசன், கெதர்லாகோமேர் ஏலாமின் அரசன், திதியால் கோயம் தேசத்தின் அரசன்.) யுத்தம் செய்தார்கள். முடிவில் நான்கு ராஜாக்கள் ஜெயித்தார்கள். லோத்தும் கைது செய்யப்பட்டான்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

செல்வத்தின் மிகுதியால், தேவனை விட்டும் அவருடைய ஜனத்தை விட்டும் பிரிந்துசெல்லக் கூடாது.

*பிரயோகப்படுத்தல் :*

வசனம் 1,2 ன் அடிப்படையில் எந்த நான்கு அரசர்கள் எந்த ஐந்து அரசர்களுடன் யுத்தம் செய்கின்றார்கள்? அவர்களின் தேசங்கள் என்ன?

ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேயை சேவித்தவர்கள் யார்? எத்தனை வருடங்கள் சேவித்தார்கள்? அவனுக்கு எதிராக கலகம் பண்ணியவர்கள் யார்? அவன் யார் யாரை ஜெயித்தான்?

சோதோம் கொமோரா தேவனால் அழிக்கப்படுவதற்கு முன்பு, எல்லாவற்றை யும் யுத்தத்தில் இழந்தார்கள். அவர்களோடு லோத்து இருந்தது ஏன்?

தோல்வியின் செய்தியை கேள்விப்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? லோத்து சிறைபிடிக்கப்பட்டதை கேட்ட ஆபிராமின் உணர்வு என்ன?

இன்று நீங்கள் மற்றவர்களினால், எந்த விடயத்தில் அடிமையாக்கப்பட்டு இருக்கின்றீர்கள்? உங்களுக்கு உதவிசெய்யும்படி தேவன் அனுப்பிய தேவ மனிதர்களை விட்டு விலகி இருந்தமைக்கு காரணம் என்ன?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்
25
ஞாயிறு

# உள்ளத்தில் உண்மை

*...உங்களிடத்தில் உண்மை உண்டோ இல்லையோ...*
*ஆதியாகமம் 42:16*

வேத வாசிப்பு: சங்கீதம் 89:1–52

தங்களால் விற்றுப்போடப்பட்ட தம்பியிடம்தான், இப்போது உணவு தேடி வந்திருக்கிறோம் என்பது அந்தச் சகோதரருக்குத் தெரியாது. ஆனால் அவர்களை அடையாளம் கண்ட தம்பியாகிய யோசேப்பு, அவர்கள் திருந்தியிருக்கிறார்களா இல்லையா என்பதைச் சோதிக்கும்படி, அவர்களை வேவுகாரர் என்று பொய் குற்றம்சாட்டி, தன் தம்பி பென்யமீனைக் காணவிரும்பி, அவனை அழைத்துவரும்படி கட்டளையிடுகிறான். இது அவர்களுடைய உண்மைத்துவத்துக்கு வந்த சோதனை. நமது உண்மைத்துவத்தையும் கர்த்தர் சோதித்து அறிகிறார் என்பதையும் நாம் சிந்திக்கவேண்டும்.

உண்மையுள்ள தேவனை தெய்வமாகக் கொண்டிருக்கின்ற நாம், உண்மையாய் இருக்கவேண்டியது எத்தனை அவசியம்! தேவன் ஆவியாயிருக்கிறார். நாம் அவரைத் தொழுதுகொள்ளும்போது, "ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்"(யோவா.4:23,24). நம்மிடத்தில் சரி பிழைகள் இருக்கலாம். ஆனால் அவற்றையும் அறிக்கை செய்துவிடுகின்ற உண்மையான இருதயம் நம்மிடம் உண்டா? ஒருவன் உண்மையான உள்ளத்தோடு, தேவனைத் தொழுதுகொள்ளும்போது, தேவன் அவனை உற்றுநோக்குகிறார். அவனை நிறைவான ஆசீர்வாதங்களினால் நிரப்புகிறார். இக்கட்டுக்கள் எல்லாவற்றிலுமிருந்து காத்துக்கொள்ளுகிறார். உண்மையாகவே தம்மை நோக்கிக் கூப்பிடும் தமது பிள்ளைகளுக்கு உத்தரவு அருளிச்செய்வார். மாத்திரமல்ல, உண்மையுள்ளவனை ஏற்றவேளையில் அவனது சத்துருக்களுக்கு மேலாக அவர் உயர்த்துவார்.

பலவிதமான இக்கட்டுகளில் அகப்பட்டுத் தவிக்கும் தேவபிள்ளையே, "நான் தேவனை நேசிக்கிறேன். ஆனால், என் வாழ்க்கை ஆசீர்வதிக்கப்படவில்லையே" என்கிறாயா? கஷ்டங்கள் இன்னும் தீரவில்லை, கூப்பிடுதலுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை, வேலை ஸ்தலத்தில் இன்னும் ஒரு உயர்வுமில்லை என்றெல்லாம் ஏங்குபவர்கள் பலர். தேவன் என்னை ஆசீர்வதிக்கவில்லை என்று சொல்லுகின்ற நாம், முதலில், தேவனுக்கு முன்பாக உண்மையுள்ளவனாக இருக்கிறோமா என்பதை சிந்திக்க வேண்டும். நமது வெளிவாழ்விலே நல்ல கிறிஸ்தவன்போல ஜீவிக்கலாம். ஆனால் உள்ளம் உண்மையுள்ளதா? ஏனெனில் தேவன் உள்ளத்தைத்தான் பார்க்கிறார்; முகத்தை அல்ல. ஆகவே நாம் எந்தெந்த இடத்தில் உண்மையற்றவர்களாய் இருந்தோமோ, இருக்கிறோமோ அவற்றையெல்லாம் உண்மையோடு அறிக்கைசெய்து மனந்திரும்புவோமாக. உண்மையுள்ள தேவன் உள்ளத்தின் உண்மையைக் கண்டு, நம்மை நிச்சயம் ஆசீர்வதிப்பார்!

*சிந்தனைக்கு:* உள்ளத்தில் உண்மை என்பது, ஒளிவு மறைவற்ற வாழ்வு. ஆகவே தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக உண்மையுள்ள உள்ளத்துடன் வாழ இன்றே நான் மனந்திரும்புவேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: மத்தேயு 26:59–63

# பேசாமலிரு!

*இயேசுவோ பேசாமலிருந்தார்...*
*மத்தேயு 26:63*

ஆகஸ்ட் 26 திங்கள்

மக்கள், பாவத்திலிருந்து விடுதலை பெற்றார்கள். நோயிலிருந்து சுகம் பெற்றார்கள். பசியுற்றவேளையில் உணவுபெற்றதோடு பாரச்சுமைகள் நீங்கி ஆறுதலடைந்தார்கள். இன்னும் எத்தனையோ நன்மைகளை இயேசுவிடமிருந்து இவர்கள் பெற்றிருந்தார்கள். அவருக்குப் பின்னால் சென்று, அவர் கூறும் அருளுரைகளையும் கேட்டார்கள். ஆனாலும் இந்த ஜனங்களோ, குற்றமற்றவரான இயேசுவின்மீது, பொய்யான குற்றங்களைச் சுமத்தியபோது, "அவரைச் சிலுவையில் அறையும்" என்று கூக்குரலிட்டார்கள். இயேசுவை விசாரித்தவர்கள்கூட ஆச்சரியப்பட்டு, அவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைக் குறித்து விசாரித்தார்கள். ஆனால் இயேசுவோ, பதில் அளிக்காமல் 'பேசாமலிருந்தார்'.

இப்படியொரு இடத்தில் நாம் நிறுத்தப்பட்டால் என்ன செய்வோம்? 'இத்தனை நன்மைகளையும் என்னிடத்தில் பெற்றவன் இன்று என்மேல் பொய்க் குற்றங்களை அநியாயமாய்க் கூறுகிறானே; நான் எப்படி பேசாமலிருப்பது? எனக்கு ஏற்படுத்தின அவமானங்கள் அனைத்தையும் மன்னித்து, மறந்து, திரும்பவும் என் நண்பனாக ஏற்று அன்பு செலுத்தினேனே. ஆனால், இன்று அவற்றையெல்லாம் மறந்து, பொய்யான குற்றச்சாட்டுக்களை என் அதிகாரிக்கும் கூறுகிறானே; நான் இன்னும் எப்படி பேசாமலிருப்பது? அவனைப் பழிக்குப்பழி வாங்கலாமா' என்று சிந்திக்கமாட்டோமா? ஆனால் நாம், ஆண்டவரின் பிள்ளைகள் அப்படி நடந்துகொள்வது தவறு.

"ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு. வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு சமயமுண்டு" (பிர.3:1). ஆம், தேவபிள்ளைகளும் பேசாமல் இருக்க வேண்டிய காலமும் வரும். சகோதரனே! உன் வேலைஸ்தலத்தில், அநியாயமாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள உனக்கு, உன் குற்றமற்ற நிலையைச் சத்தம்போட்டுச் சொல்லி, உன் அதிகாரியோடு பேசித்தீர்க்க வேண்டும்போல இருக்கிறதா? வேண்டாம், 'பேசாமலிரு'. சகோதரி, உன் குடும்பத்தில் உனக்கு எதிராக பேசப்படும் பேச்சுக்களைத் தாங்கிக்கொண்டு மௌனமாக இருந்த நீ, இன்றே, எல்லாப் பேச்சுக்கும் ஒரு முடிவு கொண்டுவர முயற்சிக்கிறாயா? வேண்டாம், 'பேசாமலிரு'. ஏன் தெரியுமா? குற்றமற்ற ஆண்டவர் அன்று நமக்காகவே பேசாதிருந்தார். சகல அநியாயங்களையும் மௌனமாகவே சகித்தார். அநியாயமாக சிலுவையில் அறையப்பட்டார். அதற்காக அவர் தோற்றுப்போனாரா? அவர் உயிர்த்தெழுந்தபோது எல்லோரும் வெட்கி நாணிப் போனார்களே. அந்த இயேசுதாமே நமக்காக நமது சத்துருக்களோடு வழக்காடி, நமது குற்றமற்ற நிலையை வெளியரங்கமாக்கட்டும். நீயோ, அதுவரை 'பேசாமல் இரு'.

*சிந்தனைக்கு:* பேசாமல் இருப்பது, அதிலும் அநியாயமாகக் குற்றப் படுத்தப்படும்போது பேசாமலிருப்பது நிச்சயம் கடினமே. ஆனாலும் கர்த்தர் நமது வழக்கை நடத்தட்டுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்
27
செவ்வாய்

## கண்கள் திறக்கட்டும்!

*...இயேசு தாமே சேர்ந்து அவர்களுடனேகூட நடந்து போனார். ஆனாலும் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது. லூக்கா 24:15,16*

வேத வாசிப்பு: லூக்கா 24:13–35

இயேசுவின் சீஷர்கள், மூன்றரை வருடங்களாக அவருடனேகூட வாழ்ந்து, பல காரியங்களை அவரிடமிருந்து கற்று, அற்புதங்களைக் கண்டு அனுபவித்தார்கள். இருந்தும் அவர் சிலுவையிலே மரித்து அடக்கம் பண்ணப்பட்டபின், அவர் உயிர்த்த செய்தியைக் கேள்விப்பட்டும், அவரது சீஷர்களில் இருவர் குழப்பம் அடைந்தவர்களாய் எம்மாவு என்னும் ஊருக்குப் போய்க்கொண்டிருக்கையில், அவர்கள் அருகிலே இன்னும் ஒருவர் நடந்து வந்தார். அவரும் இவர்களின் சம்பாஷணையில் கலந்துகொண்டார். இவர்கள் அவருக்கு இயேசுவைப்பற்றி தாம் கேள்விப்பட்டவைகளையெல்லாம் கூறினார்கள். ஆனாலும் தம்மோடு நடந்து வந்த "அவர் யார்" என்று அறியாதவர்களாகவே இருந்தார்கள். கடைசியாக அவர்கள் உணவு அருந்த அமர்ந்த போது, அவர்தாமே அப்பத்தை எடுத்து, அதை ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தபோதுதான் அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அதுவரை தம்மோடு நடந்து வந்தவர், தங்கள் ஆண்டவராகிய இயேசு என்பதை உணர்ந்துகொண்டார்கள்.

இயேசுவுக்கு என்ன நடந்ததோ என்ற கவலையோடு எருசலேமை விட்டு எம்மாவூருக்குப் பயணமான சீஷர்கள், அவர் உயிர்தெழுந்தவராக தமக்கு அருகிலே இருந்ததைக் கண்டும் உணராமல் இருந்தது ஏன்? ஆம், இயேசுவைப் பிரிந்ததும் கவலை வேதனை அவர்கள் கண்களை மறைத்தது. அநேக சமயங்களில் நமது வாழ்விலும் இப்படித்தான் நேரிடுகிறது.

ஆண்டவரோடு நெருங்கி ஜீவித்து, அவருடைய வழிநடத்துதல்களை, ஆசீர்வாதங்களை நாம் அனுபவிக்கின்றோம். அவருக்குள் மகிழ்ந்திருக்கிறோம். ஆனால் வாழ்வில் பாடுகள், கவலை, கண்ணீர் வரும்போது நமக்கு அருகிலேயே இருக்கும் ஆண்டவரை அவருடைய பிரசன்னத்தை உணரமுடியாதபடி சோர்வடைந்து, அத் துக்கத்திலேயே மூழ்கிப்போய் விடுகிறோமே. தேவபிள்ளையே, கலங்காதே. "நான் என்றும் உங்களோடுகூட இருந்து உங்களை வழுவாது வழிநடத்துவேன்" என்று இஸ்ரவேலுக்கு வாக்களித்த தேவன், இன்றும் நமக்கு அருகிலே நம்முடன் கூடவே நடந்து வருகிறார்.

துக்கம் நமது கண்களை மறைத்துவிட இடமளிக்கக்கூடாது. விசுவாசக் கண்களைத் திறப்போமாக. சந்தோஷங்களில் கர்த்தரைத் தேடி மகிழ்ந்திருக்கும் நாம் துக்க நேரங்களில் தடுமாறுவது ஏன்? மரண இருளின் பள்ளத்தாக்கிலும்கூட என்னோடு நீர் கூடவே இருக்கின்றீர் என்று நம்மால் ஏன் அறிக்கையிட முடியவில்லை?

***சிந்தனைக்கு:*** ஆண்டவர் நம்மோடு கூடவே வழிநடந்துவருவதை நிச்சயம் நாம் உணருவோம்! நமது கண்கள் பிரகாசமடைய இன்றே தேவனது கரத்தில் நம் வாழ்வை ஒப்புவிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: சங்கீதம் 18:1-30

ஆகஸ்ட் 28 புதன்

## திரி அணையாமல்...

*தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர், என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார்.*

*சங்கீதம் 18:28*

வெளிச்சம் வேண்டுமானால் வெளிச்சம் கொடுக்கும் விளக்கின் திரி தொடர்ந்து எரிந்துகொண்டேயிருக்கவேண்டும். அதற்கு எண்ணெய் குறைவுபடாமல் ஊற்றப்பட வேண்டும். இல்லையேல், திரி அணைந்து, இருள் சூழ்ந்துவிடும். இருளிலே விஷப் பூச்சிகளும், துஷ்டமிருகங்களும் தங்கள் ஆதிக்கத்தை ஆரம்பித்துவிடும். கிறிஸ்தவ வாழ்க்கையும் ஒளிகொடுக்கும் திரியைப் போன்றது. அது மங்கி அணைந்துபோக இடமளிக்கக்கூடாது. கிறிஸ்துவுக்குள்ளான நமது வாழ்க்கை அணைந்துபோகுமானால், இருளின் அதிபதியாகிய சாத்தான் அதனைத் தனது இருப்பிடமாக மாற்றிப் போடுவான். இப்படியிருக்க, இருளின் வாழ்வை வெறுத்து, நித்திய ஒளியாகிய இயேசு கிறிஸ்துவை நமது வாழ்விலே ஏற்றுக்கொள்வோமாக.

இயேசுவின் ஒளியைப் பெற்று, நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு வெளிச்சமாக வாழ உறுதியோடு ஆரம்பித்த நாம், இன்று ஒளிமங்கி, அணைந்துபோகும் நிலையில் இருப்பது ஏன்? தேவனோடுள்ள அந்த உறவில் நாம் குறைவுபட்டுப் போனோமா? மங்காமல் பாதுகாக்கும் வார்த்தையான ஒளியை நாம் விட்டுவிட்டோமா? அல்லது அனுதினமும் நம்மை உற்சாகப்படுத்தி வழிநடத்தும் பரிசுத்தாவியானவரை விட்டு விலகிப் போனோமா?

கர்த்தருக்காக வைராக்கியமாக ஜீவித்த தாவீது ராஜாவின் வாழ்விலும் பலவேளைகளில் ஒளி மங்கிப்போகக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டன. ஆனாலும், "கர்த்தாவே, உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும் (சங்.4:6)" என்று தாவீது ஜெபித்தார். தேவன், அவர் விண்ணப்பதிற்குச் செவிகொடுத்து, அவரது வாழ்க்கையைத் திரும்பவும் பிரகாசமடையும்படி செய்தார். இன்றும், ஒளி கொடுக்கும் தேவபிள்ளைகளின் வாழ்க்கைத் திரியை அணைத்துப்போட, சாத்தான் பல வழிகளிலும் கிரியை செய்து வருகிறான். வேலைப்பளுவைக் கூட்டி ஜெபவேளைகளைக் குறைத்துவிடச் செய்கிறான். ஆண்டவரோடுள்ள இந்தத் தொடர்பு குறையும்போது தேவபிரசன்னமும் நமது வாழ்க்கையிலே குறைந்துவிடும். உள்ளமும் குழம்பிவிடும்; சோர்வு ஏற்படும். வாழ்வும் மங்க ஆரம்பித்துவிடும். இதற்கு இடமளிக்கலாமா?

தேவபிள்ளையே, நமது விளக்கை ஏற்றி வைக்க, நமக்கு ஆண்டவர் இருக்கிறார். நமது விளக்கின் திரி மங்கிப்போகாமல் பாதுகாக்கப்பட தூய ஆவியானவர் நமக்கு துணை நிற்கிறார். ஆகவே, இப்போதே நமது மங்கிப்போன நிலைமையை அறிக்கை செய்து, 'தேவரீர் என் விளக்கை ஏற்றி, இருளை வெளிச்சமாக்கும்' என்று ஜெபிப்போமா!

*சிந்தனைக்கு:* ஒரு விளக்கின் வெளிச்சம் எப்படி இருளை விரட்டி அடிக்கிறதோ, அதே பிரகாரம் என் வாழ்வும் வெளிச்சமாயிருக்க நாம் என்னதான் செய்யவேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்
29
வியாழன்

## உனக்கொருவர் இருக்கிறார்!

*...நெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கியெரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார்.*

*மத்தேயு 12:20*

வேத வாசிப்பு: சங்கீதம் 142:1–7

"சர்வத்தையும் படைத்த என் சர்வ ஜீவ தயாபர பிதாவே, ஒரு சிறு நாணற்புல்லாக என்னையும் படைத்தீரே. இதுவரை காலமும் என்னை ஆச்சரியமாகப் பாதுகாத்து, போஷித்து வளர்த்து வந்தீர். நன்றி! ஆனால் இன்று நான் என்னைச் சுற்றியுள்ள மரங்களாலும், கற்களாலும், வழிப்போக்கராலும் அதிகமாய் நெருக்கப்பட்டு முறிந்து போகும் நிலையில் இருக்கிறேனே. நெருக்கத்தை நீக்கி, எனக்கு நியாயம் செய்து என்னை விடுவித்தருளும். அப்போது உமக்காக என்னை நான் கொடுப்பேன்" என்று ஜெபித்ததாம், நெரிந்துபோன நிலையிலிருந்த ஒரு 'நாணற் புல்'. அவ்வழியே வந்த ஒரு பெண், அந்தப் புல்லைக்கண்டு அதனை மெதுவாகத் தூக்கி, ஒரு தாபரத்தைக் கொடுத்து தண்ணீர் கிடைக்க வழியும் செய்துவிட்டுப் போனாளாம். அந்தப் புல் தேவனுக்கும் அவளுக்கும் நன்றி கூறியது. நாட்கள் நகர்ந்தன. எபிரெய ஆண் குழந்தைகளைக் கொன்றுவிடும்படி எகிப்து ராஜாவினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. தனது அழகான ஆண் குழந்தையை எப்படிக் காப்பாற்றுவது என்ற குழப்பத்தோடு, நதியோரம் நடந்து வந்த அதே பெண்ணின் மன ஆதங்கத்தை அறிந்த அந்த நாணற்புல், 'இதோ என்னையெடுத்து ஒரு பெட்டி செய்து உன் குழந்தையைக் காப்பாற்று' என சொல்லுவதுபோல் காற்றில் அசைந்தாடியதாம். அதுவே குழந்தை மோசேயை காப்பாற்றிய நாணற்புல் பெட்டியாக மாறியது. (இது ஒரு கற்பனைக் கதை) எனினும், அழிந்துபோக இருந்த தன்னை எடுத்துப் பயன்படுத்தும்படி கூறி, வாழ்வை தந்த தேவனுக்கு அது நன்றி சொன்னதே பாராட்டத்தக்கது.

"எல்லாப் பக்கமும் நெருக்கப்பட்டு, முறிந்துபோகும் நிலையில் சோர்ந்துபோயிருக்கும் என்னை யார் விடுவிப்பார்? யார் எனக்கு நியாயம் செய்வார்" என்று மனம் உடைந்திருக்கும் தேவபிள்ளையே, "தீங்கின் காலத்திலும், நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்குச் சகாயஞ் செய்வேன்" (எரே. 15:11) என்று வாக்களித்த ஒருவர் நமக்கு இருக்கிறார். அவர் நீதியுள்ளவர், அன்புள்ளவர், இயல்பாகவே நம்மை வழிநடத்த வல்லவர். நமது ஆவியில் நாம் நொந்திருக்கும்போது அவர் நம்மை ஒதுக்கமாட்டார், நொறுக்கமாட்டார். "ஒன்றுக்கும் உதவாதவன்" என்று நம்மை அவர் தள்ளமாட்டார். மெதுவாகத் தூக்கி, நம்மை நடத்துவார். ஒளி மங்கும் வாழ்வை, அதன் ஒளியை அணைக்கமாட்டார். அதை இன்னும் பற்றியெரியச் செய்வார். உலகம் நம்மை உதவாது என்று தள்ளலாம். நம்மை மிதிக்கலாம். நம்மை வெறுக்கலாம். ஆனால் ஆண்டவர், நம்மைத் தாங்குவார். அவர் நம்மை உள்ளங்கையில் வரைந்து வைத்திருக்கிறார். அவரை நோக்கி நாம் கூப்பிடுவோம். அவரே நம்மை விசாலத்திலே வைப்பார்.

***சிந்தனைக்கு:*** நெரிந்துபோனாலும் மங்கிப்போனாலும் நாம் அழிந்து விடாதபடி நம்மைக் காக்க, நமக்கு ஒரு ஆண்டவர் நமக்கு இருக்கும் போது, அவசியமற்ற கவலைகளால் நான் சோர்ந்துபோகலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: பிலி 4:4-19

## எந்த நிலைமையிலும்...

*நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்.*
*பிலிப்பியர் 4:11*

ஆகஸ்ட் 30 வெள்ளி

ஏழ்மையான அல்லது கஷ்டமான நிலையில் வாழுவோர், எந்த நிலையிலும் வாழக் கற்றுக்கொள்வார்கள். ஆனால் சகல வசதிகளோடும் வாழுகிறவர்கள், சடுதியான மாற்றங்கள் இழப்புகள் ஏற்படும்போது, இருப்பதுபோதும் என்ற மனநிறைவோடு வாழ முடியாதவர்களாய் மிகவும் கஷ்டப்படுவார்கள். அத்துடன் தாம் வாழ்ந்த வாழ்க்கையைத் தொடருவதற்காக கடன் வாங்கவும் தயங்கமாட்டார்கள்.

அநேக வருடங்களின் பின்னர் சொந்த இடத்திற்குத் திரும்பிய ஒரு சகோதரி, தன் சிநேகிதியைச் சந்திக்கச் சென்றபோது, திகைத்துவிட்டாள். இதைக் கவனித்த அந்த சிநேகிதி, "ஏன் அப்படியே திகைத்துப்போய் விட்டாய், உள்ளே வா" என்று கூப்பிட்டாள். "சகல வசதிகளோடும் வாழ்ந்த என் சிநேகிதி இந்த ஏழ்மையில் எப்படியாக வாழுகிறாள்" என்ற கேள்வி இவளின் உள்ளத்தில் எழுந்தது. அதை அடக்கிக் கொள்ள முடியாமல் தன் சிநேகிதியை நோக்கி, "சகல வசதிகளோடும் வாழ்ந்த நீ, இந்த ஏழ்மையான நிலையில் மனநிறைவோடும், சந்தோஷத்தோடும் எப்படி வாழுகிறாய்?" என்று கேட்டாள். அதற்கு அவள், "நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன். அவர் என் குறைகளையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் என்ற உறுதி, எந்த நிலையிலும் நான் சந்தோஷமாயிருக்க எனக்கு உதவி செய்கிறது" என்றாள்.

ஆகாயத்துப் பட்சிகளிலும் மேலானவர்கள் நாம். அப்பட்சிகளைப் போஷித்து வழி நடத்தும் தேவன், தமது சாயலாகவே நம்மை உருவாக்கியவர், நமது தேவைகளை ஏற்றவேளையிலே சந்திப்பார் என்ற விசுவாசம் ஏன் நம்மிடம் இல்லை? இந்த விசுவாசம் இருக்குமானால், இந்த உறுதி, கிறிஸ்து இயேசுவுக்குள், எந்நிலையிலும் மனநிறைவோடும், சந்தோஷத்தோடும் ஜீவிக்க நம்மை வழிநடத்தும். "ஈவை எண்ணு. சொல்லி ஒவ்வொன்றாய், அப்போ தேவ ஈவு ஏராளம் என்பாய்" என்று எப்போதும் பாடி, வறுமையிலும் கர்த்தருக்குள் சந்தோஷமாக நாட்களைக் கழிக்கமுடியுமா?

ஏன் எனக்கு இந்த வறுமை? இதனால் குடும்பத்தில் நிம்மதி இல்லையே என்றெல்லாம் பலர் வேதனைப்படுவதுண்டு. ஆண்டவர் நமக்கு அருளிய ஆசீர்வாதங்களை ஒரு கணம் எண்ணிப் பார்ப்போமாக. இவற்றில் ஒன்றுகூட இல்லாமல் பலர் இருக்கிறார்களே என்பதை நம்மால் உணரமுடியும். தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுகளுக்காக அவரைத் துதிப்போமாக. அப்பொழுது எந்நிலையிலும் மனரம்மியமாக இருக்கக் கற்றுக்கொள்ளுவோம்.

*சிந்தனைக்கு:* இன்று இப்போது என் மனநிலை எப்படிப்பட்டதாய் இருக்கிறது? குறைவுகளில் நிறைவும், நிறைவுகளில் தாழ்மையும் நமக்கு அவசியம். அதுவே மனரம்மியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்
31
சனி

## உன்னதமான தேவனின் ஆசீர்வாதம்

*உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம்...*
*ஆதியாகமம் 14:20*

வேத வாசிப்பு: ஆதி 14:13-24

*தேவனுடைய செய்தி:*

நாம் விடுதலை பெற சக தேவ பிள்ளைகளுடைய உதவி தேவை.

*தியானம்:*

ஐந்து ராஜாக்களை தோற்கடித்த நான்கு ராஜாக்கள் வெற்றி பெற்றதோடு லோத்தை கைதுசெய்திருந்தனர். இதை தப்பியோடி வந்த ஒருவன் ஆபிராமிடம் கூறுகிறான். மம்ரே, எஸ்கோல், ஆநேர் ஆகியோர் ஆபிராமுக்கு உதவுவதாகவும் ஒப்பந்தம் செய்திருந்தனர். ஆபிராமோ தனது வீட்டிலே பிறந்த 318 பேருடன் சென்று அவர்களை ஜெயித்து லோத்தை காப்பாற்றுகிறான். பின்பு, சாலேமின் ராஜா மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து ஆபிராமை தேவனுடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கிறான்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் தேவனுடைய பிள்ளைகளுக்கு உரித்தானதே.

*பிரயோகப்படுத்தல் :*

கெதர்லாகோமரை தோற்கடிக்க ஆபிராம் செய்த ஆயத்தம் என்ன?

சத்துருக்களை ஆபிராம் எப்போது தோற்கடித்தார்? அவர் திருப்பிக்கொண்டு வந்தது என்னென்ன?

வசனம் 24ன்படி, யுத்த வெற்றிபெற்ற ஆபிராம் தன்னுடன் வந்த ஆநேர், எஸ்கோல், மம்ரே வீரர்களுக்கு பங்கை கொடுத்தாரா? வசனம் 13ன்படி, அவர்களோடு உடன்படிக்கை செய்திருந்ததினால் வந்த நன்மை என்ன?

ஆபிராமை ஆசீர்வதித்தவர் யார்? அவர் எப்படிப்பட்டவர்? அவர் என்ன சொல்லி ஆசீர்வதித்தார்? அத்துடன் எதை கொடுத்தார்?

தன்னை ஆசீர்வதித்தவருக்கு ஆபிராம் கொடுத்தது என்ன? கைதுசெய்யப்பட்டிருந்த அரசர்களிடம் ஆபிராம் திருப்பிக்கொடுத்தது என்ன? ஏன்?

பிறருடைய பொருட்களை நாம் திருப்பிக் கொடுத்ததுண்டா? ஆபிராமினது மனப்பான்மை நமக்கு கற்றுக்கொடுப்பது என்ன?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: யாத் 14:10-31

செப்டெம்பர் 1 ஞாயிறு

## கண்டதினால் விசுவாசித்தார்கள்

*கர்த்தர் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர் கண்டார்கள், அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள். யாத். 14:31*

அற்புதங்களையும் அடையாளங்களையும் நோக்கி மக்கள் இன்றும் ஓடியவண்ணமே தான் இருக்கிறார்கள். வானத்திலே ஜெபிக்கும் கரங்கள் தெரிவதுபோலவும், இயேசு வின் முகம் தெரிவதுபோலவும் செய்து, அது இன்றும் இணையத்தளம் மூலம் வைரலாகி பரவி வருகிறது. அதை உண்மையென்று நம்பி பலரும் பலருக்கு மாறி மாறி அனுப்பிய யவர்களும் உண்டு. அற்புதத்தைக் கண்டால்தான் மக்கள் விசுவாசிப்பார்களோ?

அன்று இஸ்ரவேலரும் இதுபோலவே இருந்தார்கள். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவித்துக் கொண்டுவந்ததே ஒரு பெரிய அற்புதம்தான். ஆனாலும் மீண்டும் ஆபத்து வந்ததும், ஆண்டவரின் வழிநடத்துதலையெல்லாம் ஒருநொடியில் மறந்துவிட்டு, முறுமுறுக்கத் தொடங்குகிறார்கள். "எகிப்தில் பிரேதக்குழிகள் இல்லை யென்றா எங்களை இங்கே கொண்டுவந்தீர்?" என்கின்றனர். இப்போதும் தேவன் பொறுமையாக, மோசேக்கு வழிமுறைகளைச் சொல்லி எகிப்தியருக்கு ஒரு பெரிய அழிவையும், இஸ்ரவேலருக்கு ஒரு அற்புதத்தையும் நிறைவேற்றினார்.

கர்த்தர் எகிப்தியருக்குச் செய்த மகத்தான கிரியைகளைக் கண்டு கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும், மோசேயிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள். கர்த்தர் மகத் தான கிரியைகளை எப்போதுமே செய்து கொண்டுதான் இருக்கிறார். ஆனால் இஸ்ரவே லர்தான் அவற்றை மறந்தவர்களாய், விசுவாசத்தில் குறைவுபட்டவர்களாய், எப்போ தும் குறை பேசுகிறவர்களாய், முறுமுறுக்கிறவர்களாக இருந்தனர். அன்று மோசேயை அழைத்த தேவன், மோசேக்கூடாக மகத்தான கிரியைகளை செய்தவண்ணமே இருந் தார். ஆனால் மக்களோ ஆபத்து, பிரச்சனை என்று வந்ததும் அந்த மோசேயைக்கூட கல்லெறிந்து கொல்லுமளவுக்குத் துணிவுகொண்டனர்.

நாமொன்றும் இதற்குக் குறைந்தவர்கள் அல்ல. நாமும் எமது அன்றாட வாழ்விலே இதையேதான் செய்துகொண்டு இருக்கிறோம். எப்போதும் நமக்கு அடையாளங்களும், ஆசீர்வாதங்களும் கிடைத்துக்கொண்டே இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அப்போது ஆண்டவரை மகிமைப்படுத்திக்கொண்டு இருப்போம். கடினமான காரியங்கள் வாழ்க்கையில் வரும்போது அதையும் ஆண்டவர் சரிப்படுத்துவார் என்ற விசுவாசம் அற்றவர்களாய், முறுமுறுக்கிறவர்களாய், தேவனை நோக்கி கேள்வி கேட்பவர்களாய் மாறிவிடுகிறோம். நாம் எப்போதுமே கண்டதினால் விசுவாசிக்கிறவர்களாகவே இருக்கி றோம். ஆனால் ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன? "அதற்கு இயேசு: தோமாவே நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக் கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்." யோவான் 20:29

***சிந்தனைக்கு:*** நமது விசுவாசம் எப்படிப்பட்டது? ஒரு அற்புதம் நடந்தால்தான் அவர் கர்த்தரா? கடினபாதையிலும் அவரே கர்த்தர் என விசுவாசிப்போமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்
2
திங்கள்

## இரட்சிக்கும் விசுவாசம்

*இயேசு: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம் முதல் அந்த ஸ்திரீ சொஸ்தமானாள். மத்தேயு 9:22*

வேத வாசிப்பு: மத்தேயு 9:18–22

கிறிஸ்தவம் என்பது விசுவாசத்தை அடிப்படையாகக்கொண்டது. ஆனால் இன்று விசுவாசிப்பதற்கு உத்தரவாதம் என்ன என்றும், எப்படி நம்புவது என்றும், நம்பி நடக்காமற்போனால் என்ன செய்வது என்றும் குதர்க்கமாய்ப் பேசுகின்ற அநேகர் உண்டு.

இங்கே இந்தப் பெண்ணுக்குள் இருந்தது ஒரு அற்ப விசுவாசம்தான். அவளது உதிரப் பெருக்கால் பல இன்னல்களை அனுபவித்த அவள், பலராலும் ஒதுக்கித் தள்ளிவிடப் பட்ட அவள், ஜனக்கூட்டத்தின் மத்தியில் யாரும் காணாத நேரத்தில் இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டால் குணமாகிவிடுவேன் என்று முழுமையாக நம்பினாள். "மக்கள் யாரும் என்னை இயேசுவிடம் அறிமுகம் செய்யவேண்டியதில்லை, நான் சுகமடைய நானே அவரது வஸ்திரத்தைத் தொடுவேன், அது போதும், நான் குணமாவேன்" என்று அவள் முழுமையாக விசுவாசித்தாள். அவளுக்குள் இருந்தது ஒரு சிறிய விசுவாசமாக இருந்தாலும், அது ஆணித்தரமானதாக இருந்தது. இதைத்தான் ஆண்டவரும் ஒரு கடுகளவு விசுவாசம் இருந்தால், இந்த மலையைப் பெயர்ந்து போகும்படி கூறினால் அது பெயர்ந்து போகும் என்றார்.

ஆண்டவர் இயேசு அவளைப் பார்த்து, "நான் உனக்கு சுகம் தந்தேன்" என்று கூறவில்லை. "உன்னுடைய விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்றே கூறினார். நாம் இரட்சிப்படைவதற்கும் இந்த விசுவாசமே நமக்குத் தேவை. எமது இரட்சிப்புக்கான சகலவற்றையும் இயேசு செய்து முடித்துவிட்டார். அவர் செய்த அந்த மீட்பின் திட்டத்தை விசுவாசித்து, அவரை எமது இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, நாம் இரட்சிப்படைகிறோம். இன்று நாம் இந்த விசுவாசத்தில் தழும்பிப்போய் நிற்கிறோமா? அல்லது விசுவாசமே இல்லாமல் நிற்கிறோமா? விசுவாசத்தை விட்டுப் பின்வாங்கி போனோமா? நாம் எங்கே நிற்கிறோம் என்பதை சிந்தித்துப் பார்ப்போம். வாழ்க்கையிலே போராட்டங்களும், வேதனைகளும் வரும்போது விசுவாசத்தில் உறுதியாயிருக்க வேண்டும். அவைகளுக்கூடாகவே எமது விசுவாசம் இன்னமும் வலுப்பெறும்.ஆனால் நாம் விசுவாசத்தை விட்டு விலகிச்சென்றால், இலக்கை விட்டு வழிவிலகிவிடுவோம்.

இன்றைக்கு பிசாசானவன் நமக்குள் இருக்கும் விசுவாசத்தை வளரவிடாமல், அதை அழித்துப்போடவே வழிபார்க்கிறான். அன்று ஏவாளைக் கேள்வி கேட்டுப் பாவத்தில் வீழ்த்தியவன் இன்றும் கேள்விகளை எழுப்பியே அநேகரை வீழ்த்திய வண்ணம் இருக்கிறான். நாமும் ஜாக்கிரதையாய் இருப்போம். "அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார்." மாற்கு 4:40

***சிந்தனைக்கு:*** தேவனுடைய வார்த்தையும், அவரோடுள்ள உறவுமே நம்மை விசுவாசத்தில் உறுதியாய் நிற்க உதவும். அது நம்மிடம் உண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: மாற்கு 4:35-41

## ஏன் பயப்பட்டீர்கள்?

செப்டெம்பர் 3 செவ்வாய்

*அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார்.*
*மாற்கு 4:40*

வாழ்வில் பல தடவைகளில் பயப்படும் சூழ்நிலைகளுக்குள் நாம் தள்ளப்படுகிறோம். திடீரென நெருக்கடிகளைச் சந்திக்கிறபோதும், வியாதிப்படும்போதும், எதிர்காலத்தைக் குறித்த நிச்சயமற்றிருக்கும்போதும் பயம் நம்மை ஆட்கொள்ளுகிறது. நாம் அதிகமாக பயத்துக்குள்ளாகும் சூழ்நிலைகளை சற்று சிந்தித்துப் பார்த்தால், அங்கே விசுவாசத் திற்கு இடமேயிருக்காது. பயமும், விசுவாசமும் சேர்ந்திருக்க முடியாது.

இன்றைய தியானப்பகுதியில் நாம் காண்பது, "அக்கரைக்குப் போவோம் வாருங்கள்" என்று அழைத்தவர் இயேசுதான். படகில் ஏறி நிம்மதியாக தூங்கிக்கொண்டிருப்பவரும் அதே இயேசுதான். ஆனால் கடலில் காற்று அதிகமாகி ஜலம் கொந்தளித்தபோது, சீஷர்கள் மிகவும் பயந்தார்கள். அந்நேரத்தில் ஒருகணம் இயேசு நம்மோடு இருக்கி றாரே என்று எண்ணிப்பார்க்க அவர்களால் முடியவில்லை. அவர்கள் கண்களையும், இருதயத்தையும் பயம் மறைத்துப்போட்டது. மடிந்து போகப்போகிறோமே என்ற மரண பயம் அவர்களை ஆட்கொண்டது. அந்நேரத்தில் பயத்தின் நிமித்தம், "நாங்கள் மடிந்து போகிறது உமக்குக் கவலையில்லையா" என இயேசுவைப் பார்த்துக் கேட்கிறார்கள்.

அவர்கள் ஆபத்திலே சிக்கிவிட்டதாக சொல்லவில்லை. தங்களைக் காப்பாற்றும்படி முறையிடவும் இல்லை. 'நாங்கள் மடிந்து போகிறோம் உமக்குக் கவலையில்லையா?' என்று இயேசு தூங்கிக்கொண்டு இருக்கிறாரே என்று கேட்கிறார்கள். விசுவாசம் ஒரு துளிகூட அவர்களுக்குள் இல்லை. இருந்திருந்தால் ஆண்டவர் காப்பாற்றுவார் என்ற விசுவாசத்துடன் தைரியமாயிருந்திருப்பார்கள். ஆனால் அவர்களது கண்களை பயம் மறைத்துப்போட்டது. அதனால்தான் ஆண்டவர் கேட்கிறார். "ஏன் இப்படிப் பயந்தீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்று?"

நாமும் பலதடவைகளிலும் இப்படியே பிரச்சனை வந்ததும் பயந்து போகிறோம். ஆண்டவர் என்ன பார்த்துக்கொண்டுதானே இருக்கிறார் என்கிறோம். ஆண்டவர் என்னைக் காணவில்லையா என்கிறோம். பயம் நம்மை ஆட்கொண்டதால் விசுவாசத் தைக் கைவிட்டுவிடுகிறோம். "விசுவாசிக்கிறவன் பதறான்" என்று வேதாகமம் கூறுகிறது. விசுவாசம் நமக்குள் இருந்தால் எந்த சூழ்நிலையையும் நம்மால் எதிர்கொள்ள முடியும். "ஆண்டவர் பார்த்துக்கொள்வார். நான் அவருடைய கரத்துக்குள்ளே இருக்கி றேன். நான் அவரின் பிள்ளை, என்னை எதுவுமே அசைக்க முடியாது" என்ற அந்த விசுவாசம் நமக்குள்ளே உண்டா? நாம் கர்த்தருக்குள் திடமாய் நிற்போம். எந்த சூழ்நிலை நம்மை அணுகினாலும் கர்த்தர் நம்முடன்! என்ற உறுதி நமக்கு வேண்டும். "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." 2தீமோத்தேயு 1:7

*சிந்தனைக்கு:* நமக்குள் விசுவாசம் இருக்குமானால் பயத்துக்கு இடமிராது. சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்கும் தைரியம் உண்டாயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்
4
புதன்

## கடுகளவு விசுவாசம்

*கடுகளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம் போகும். மத்தேயு 17:20*

வேத வாசிப்பு: மத்தேயு 17:14–21

கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிது என்பார்கள். சிறிய பிள்ளைகள் பெரிய வம்பு பண்ணினால், கடுகளவாக இருந்துகொண்டு செய்கிற காரியத்தை பார் என்பார்கள். ஆம், கடுகு மிகவும் சிறியதுதான், ஆனால் அதன் காரம் பெரியது.

ஒரு மனிதன் இயேசுவிடம் வந்து, தனது மகன் சந்திரரோகியாய் மிகவும் கஷ்டப்படுகிறான். அவனைக் குணமாக்கும்படிக்கு சீஷரிடத்தில் கொண்டு வந்தும், அவர்களால் கூடாமற்போயிற்று என்று கூறுகிறான். இயேசு அவர்களைக் கடிந்துகொண்டு, அந்த மகனைப் பிடித்திருந்த பிசாசை அதட்டி விரட்டினார். தங்களால் ஏன் இது செய்யக்கூடாமற்போயிற்றென்று சீஷர்கள் கேட்டபோதுதான் ஆண்டவர் இந்த கடுகைப் பற்றிக் கூறுகிறார். அதாவது கடுகளவு விசுவாசம் இருந்தால், இந்த மலையைப் பார்த்து அப்பாலே பெயர்ந்து போ என்றால் அது ஆகும் என்கிறார். இந்த இடத்திலே ஆண்டவர் கூறுவது சிறிய விசுவாசம் பெரிய காரியங்களைச் சாதிக்கும் என்பது மட்டுமே.

இதை வைத்துக்கொண்டு சிலர், நமக்கு ஒரு சிறிய விசுவாசம் இருந்தாலே போதும் என்று நினைப்பதுண்டு. அப்படிக் கிடையாது. நாம் விசுவாசத்தில் வளரவேண்டும். இன்னுமொரு இடத்தில் ஆண்டவர் கடுகு விதையை பரலோக ராஜ்யத்துக்கு ஒப்பிட்டுப் பேசும்போது, அது வளர்ந்து எவ்வளவு பெரிய மரமாக வருகிறதென்றும், அந்த மரத்திலே பறவைகள் கூடு கட்டுவதற்கும் இடமுண்டு என்றும் கூறுகிறார். அதுபோலவே நமது விசுவாசமும் வளரவேண்டும். உறுதிகொள்ள வேண்டும். எப்பொழுதும் கடுகு போலவே சிறிய விசுவாசமாய் இராமல், அது வளர்ந்து பெரிதாகவேண்டும்.

கிறிஸ்துவோடு எங்கள் உறவு வளர, விசுவாசமும் வளரும். கிறிஸ்தவ வாழ்வென்பதே விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டதே. கடைசி காலத்தில் நின்று கொண்டிருக்கும் நமக்கு இன்று விசுவாசப் பரீட்சைகளும், விசுவாசத்தைச் சவாலிடும் பல காரியங்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தங்களும் நேரிடலாம். ஆனால் சோர்ந்துபோகாமல் துணிந்து நிற்போம். இன்று அநேகர் விசுவாசத்தை விட்டு வழிவிலகிச் செல்வதையும் நாம் காண்கிறோம். அன்று ஆதாம் ஏவாளை பிசாசானவன் எப்படியாக கர்த்தருடைய வார்த்தையைச் சந்தேகிக்க வைத்து விழுத்தினானோ, அதுபோலவே இன்றும் மக்களை கர்த்தருடைய வார்த்தையை நம்பாமல் சந்தேகிக்க வைக்கவும் வீழ்த்தவுமே அவன் வகைதேடுகிறான். ஆனால் ஆண்டவரின் வார்த்தையில் சொல்லப்பட்ட யாவுமே ஒவ்வொன்றாய் நிறைவேறி வருவதை நாம் கண்டுகொண்டிருக்கிறோம். "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது." மாற்கு 5:34

***சிந்தனைக்கு:*** வாழ்வின் ஒவ்வொரு அடியையும் விசுவாசத்தோடு ஆண்டவரை நோக்கி வைப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: லூக்கா 22:31–34

செப்டெம்பர் 5 வியாழன்

## ஒழிந்துபோகாத விசுவாசம்

*நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன். லூக்கா 22:32*

மிகவும் உயரத்திலே ஒரு கயிற்றைக் கட்டி அதன்மீது ஒருவன் நடந்து சென்றான். இதைப் பார்த்த அனைவரும் கைதட்டி அவனைப் பாராட்டினார்கள். பின்னர் அவன் அந்தக் கயிற்றின்மீது ஒரு சைக்கிளை ஓட்டிச் சென்றான். அதைக்கண்டு இன்னும் அதிகமாக பாராட்டினார்கள். அப்பொழுது அந்த மனிதன் மக்களைப் பார்த்து, "இப்போது நான் உங்களில் ஒருவனைச் சுமந்துகொண்டு இந்த கயிற்றில் நடப்பேன் என்பதை நம்புகிறீர்களா" என்று கேட்டான். எல்லோரும் "ஆம்" என்று ஆரவாரம் செய்தனர். அப்பொழுது அவன், "சரி என்னால் முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்கள். இப்போது யாராவது ஒருவர் வாருங்கள், நான் உங்களைச் சுமந்துகொண்டு இந்தக் கயிற்றில் நடக்கிறேன்" என்றான். யாருமே முன்வரவில்லை. ஆரவாரம் குறைந்து அமைதி நிலவியது.

"கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல உங்களைப் புடைக்கிறதற்கு சாத்தான் உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்" என்று இயேசு சொன்னபோது, அதற்கு சீமோன், "ஆண்டவரே, நான் காவலிலும், சாவிலும் உம்மைப் பின்பற்றி வர ஆயத்தமாய் இருக்கிறேன்" என்று உறுதியளித்தான். அப்போது இயேசு, "இன்றைக்கு சேவல் கூவுவதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மறுதலிப்பாய்" என்கிறார். நாம் எல்லோருமே விசுவாசத்தில் மிகவும் உறுதிகொண்டவர்கள் போலவே இருப்போம். ஆனால் அது சோதனை வரும்வரைக்கும்தான். நாம் மேலே வாசித்த கதையைப் போல அந்த மனிதனால் முடியும் என்ற நம்பிக்கையோடு ஆரவாரித்தவர்கள், தாம் அந்த மனிதனின் கைக்குப் போகவேண்டும் என்ற நிலை வந்ததும் அமைதியாகிவிட்டனர். அவர்களது நம்பிக்கை அவ்வளவும்தான். நாமும் தேவன் எல்லாம் பார்த்துக் கொள்வார், அவர் வழிநடத்துவார் என்றெல்லாம் வீரவசனம் பேசுவோம். ஆனால் சோதனை வந்ததும் அந்த வீரவசனமெல்லாம் காணாமற் போய்விடும்.

இயேசுவோடு மரிக்கவும் ஆயத்தம் என்று சொன்ன சீமோன், "நீ இயேசுவோடு இருந்தவன்தானே" என்றதும் தனக்கு என்ன நேரிடுமோ என்று பயந்து இயேசுவை மறுதலித்தான். நமக்குள் விசுவாசம் இருப்பதும், நாம் விசுவாசிகளாய் இருப்பது முக்கியமல்ல. எந்த சந்தர்ப்பத்திலும் நமது விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு ஜாக்கிரதையாய் இருப்பதே முக்கியம். அதற்கு அவசியம் விசுவாசத்துடன் கூடிய ஜெபம். அப்போது சோதனைகளை விசுவாசம் என்னும் கேடயத்தால் ஜெயிக்கமுடியும். பொல்லாங்கள் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக, விசுவாசம் என்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாய் நில்லுங்கள். எபேசியர் 6:16.

***சிந்தனைக்கு:*** சோதனையில் தான், விசுவாசம் இன்னும் உறுதிப்படும், நிலை நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்
6
வெள்ளி

# கிருபை வேண்டுமா?

*எல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள். ...தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார். 1பேது. 5:5*

வேத வாசிப்பு: 1பேதுரு 5:1-14

அநேகர் ஜெபிக்கின்றபோது, "நாங்கள் நிற்பதும், நிர்மூலமாகாமலிருப்பதும் உமது சுத்த கிருபையே" என்று சொல்லி ஜெபிப்பதைக் கேட்டிருப்போம். ஆனால், பேசுகின்ற போது, தேவனுடைய கிருபையைக் குறித்து பேசுகின்ற பலர்தான், சபைக்குள்ளும் ஐக்கியத்துக்குள்ளும் அதிகமாகவே தங்கள் பெருமைகளைப் பேசுகிறவர்களாகவும், பதவிகளுக்கு ஆசைப்பட்டு மோதுகிறவர்களாகவும் இருப்பதைக் காணும்போது மனம் வேதனைப்படுவதுண்டு. நாம் அப்படிப்பட்டவர்களா? தேவன் அதை விரும்புவதில்லை.

ஆண்டவரின் சீஷனாக மூன்றரை வருடங்கள் வாழ்ந்த பேதுரு, எப்போதும் எல்லாவற்றிற்கும் முந்திக்கொண்டு நிற்பதை சுவிசேஷங்களில் காணலாம். ஆண்டவர் தமது மரணத்தைக் குறித்துப் பேசியபோதும், "யார் இடறலடைந்தாலும் நான் இடறலடையேன், உமக்காக ஜீவனையும் கொடுப்பேன்" என்கிறார் பேதுரு. அப்பொழுது இயேசு, பேதுரு இடறலடைந்து தம்மை மறுதலிக்கப்போவதைக் குறித்து அவருக்கு எச்சரிக்கிறார். இயேசுவின் மரணத்துக்குப் பின் எல்லாரையும் சேர்த்துக்கொண்டு, மறுபடியும் மீன்பிடிக்கச் சென்றவரும் இந்தப் பேதுருதான். கடைசியில், உயிர்த்தெழுந்த ஆண்டவர் அவரை சந்தித்து, "நீ உண்மையாகவே என்னை நேசிக்கின்றாயா?" என்று கேள்வி எழுப்பியபோதுதான், பேதுரு முற்றிலுமாய் தன்னைத்தானே தாழ்த்தினார். தான் ஒன்றுமில்லையென்று உணர்ந்தவராக, "ஆண்டவரே நீர் அனைத்தையும் அறிவீர்" என்று தன்னை ஒப்புக்கொடுத்தார்.

அப்படிப்பட்ட பேதுரு இப்போது தனது நிருபத்தை எழுதியபோது, துடிப்புடன் இருக்கும் இளைஞருக்கு, "மூப்பருக்குக் கீழ்ப்படிந்திருங்கள். ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள். ஏனெனில் பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்" என்று ஆணித்தரமாக எழுதியுள்ளார். பிரியமானவர்களே, இப்போது நமக்குப் புரிகிறதா? யாருக்குத் தேவன் கிருபை அளிப்பார் என்றால், அது தாழ்மையுள்ளவர்களுக்கு மட்டுமே. தேவனுடைய கிருபையை அதிகமாக நமது வாழ்க்கையில் பெற்றுக்கொள்ள வேண்டுமா? அதிகமாக நம்மைத் தாழ்த்துவோம். உடையை நாம் எப்போதும் அணிந்துகொள்வதுபோலவே, மனத்தாழ்மையையும் அணிந்துகொள்ளும்படி எப்போதும் நாம் ஜாக்கிரதையாயிருப்போம். எப்போதும் தேவ கிருபையைக் குறித்து பேசிக்கொண்டிருப்பவர்களுக்கல்ல, தாழ்மையோடிருப்பவர்களுக்கே தேவன் கிருபையை அளிப்பார். அந்நாளிலே தன்னைத் தாழ்மைப்படுத்தாத எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான். லேவி.23:29.

***சிந்தனைக்கு:*** இயேசுவே தம்மைச் சிலுவைபரியந்தம் தாழ்த்தினார் என்றால், நாம் எந்த நிலைவரைக்கும் நம்மைத் தாழ்த்தவேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ஆதி 15:1–11

செப்டெம்பர் 7 சனி

## சுதந்திரவாளி

*நீ பயப்படாதே. நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்.*
*ஆதியாகமம் 15:1*

*தேவனுடைய செய்தி:*

ஆண்டவருக்கு நான் முதலிடம் கொடுக்க வேண்டும். அவர் பணிக்காக நேரத்தை செலவிட வேண்டும்.

*தியானம்:*

கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டானது. அதற்கு பதிலாக, ஆபிராம் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறான். அப்போது ஆண்டவர் வானத்து நட்சத்திரங்களைப்போல உன் சந்ததி பெருகும் என்றார். ஆபிராம் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

தேவன் கூறியதை விசுவாசிப்பவர்கள் பாக்கியவான்கள்.

*பிரயோகப்படுத்தல் :*

"நான் உனக்குப் பெரிய பரிசு தருவேன்" என்று ஆண்டவர் அல்லது யாராவது உங்களிடம் கூறினால், நீங்கள் எதிர்பார்ப்பது என்ன? ஆபிராம் தனக்கு ஒரு பிள்ளை வேண்டும் என எதிர்பார்த்தது சரியானதுதானே?

நாம் யாரை தேடவேண்டும், அது ஏன் என்பதைக் குறித்து சிந்தியுங்கள்.

எனக்குப் பிள்ளை இல்லை. எனவே நான் மரித்த பிறகு எனக்குரிய பொருட்கள் முழுவதும் எனது வீட்டில் பிறந்த அடிமைக்கு உரிமையாகுமே என்ற ஆபிராமுக்கு தேவன் கொடுத்த பதில் என்ன?

பிள்ளை இல்லாதவர்களுக்கு, சொந்த வீடு, சொந்த நாடு இல்லாதவர்களுக்கு, வாழ்க்கைத் துணையற்றவர்களுக்கு தேவையான ஆலோசனை என்ன? எமது வாழ்வின் எதிர்பார்ப்பு யாரிடத்தில் இருக்கவேண்டும்?

"ஊர் என்னும் பட்டணத்திலிருந்து அழைத்து வந்து, இந்தத் தேசத்தை உனக்குக் கொடுக்கிறேன். இது உனக்கே உரியதாகும்" என ஆண்டவர் ஆபிராமிடம் கூறியபோது அவன் தேவனிடம் கேட்ட கேள்வி என்ன?

உடன்படிக்கை செய்வதற்காக ஆபிராமிடம் தேவன் கூறியதென்ன?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்
8
ஞாயிறு

## கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படு

*கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள். அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார். யாக்கோபு 4:10*

வேத வாசிப்பு: யாக் 4:1–10

மனுஷருக்கு முன்பாகப் பெருமை பேசினால் ஒருவேளை அவர்களுக்கு அது தெரியாமல் இருக்கலாம். ஆனால் தேவனுக்கு முன்பாக நின்று பெருமை பேசினால் அவருக்குத் தெரியாதா என்ன! இது ஏன் பலருக்கும் புரிவதில்லை? "உமது ஊழியத்தைச் செய்வதற்காகவே நான் கார் கேட்கிறேன். அதை நீர் கட்டாயம் தரத்தான் வேண்டும் என்றேன். ஆண்டவரும் தந்துவிட்டார்" என்று கூறுகிறவர்களும் இருக்கிறார்கள். "நீங்களும் தயங்காமல் கேளுங்கள். தேவன் தருவார், உரிமையோடு கேளுங்கள்" என்பார்கள். கேட்பது தவறில்லை. ஆனால், நினைவிருக்கட்டும்: தேவன் சொல்வதைக் கேட்டு நாம் நடப்பதா, நாம் சொல்வதைக் கேட்டு தேவன் நடப்பதா?

யாக்கோபு நிருபத்தை எழுதியவர், இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு. எப்படியாக தேவகுமாரன் இயேசு, தம்மைத் தாழ்த்தி, பிதாவின் சித்தத்தைச் செய்யவென்று, மனிதனாய் கன்னியின் வயிற்றில் வந்து பிறந்த வரலாற்றை நன்கு அறிந்தவர் இந்த யாக்கோபு. தனது நிருபத்தில் பல இடங்களிலும் இந்தத் தாழ்மையைக் குறித்து இவர் எழுதுவதைக் காணலாம். தேவகுமாரனே, பிதாவின் சித்தத்தைச் செய்யவென்று தம்மைத் தாழ்த்தி ஒப்புக்கொடுத்திருக்க நாம் எம்மாத்திரம்?

தேவன் நம்மை உயர்த்தவேண்டுமானால், நாம் அவருக்கு முன்பாகத் தாழ்மைப்பட வேண்டும். ஜெபிக்கும்படியாக தேவனுடைய சமுகத்துக்குப் போன பரிசேயன், ஆயக்காரனின் கதை நமக்கு நன்கு தெரியும். பரிசேயன் தனது ஜெபத்தில் எவ்வளவாக தன்னை உயர்த்த முடியுமோ அவ்வளவாய் தன்னை உயர்த்திப் பெருமை பேசினான். ஆனால் ஆயக்காரனோ தன் கண்களை வானத்துக்கும் ஏறெடுக்கத் துணிவற்றவனாய், "ஆண்டவரே, பாவியான என்மேல் கிருபையாய் இரும்" என்று வேண்டிக்கொண்டான். கடைசியில் அவனே தேவனுடைய கிருபையைப் பெற்றவனாகச் சென்றான் என்று காண்கிறோம். தேவன் தாமே நம்மை உயர்த்தவேண்டும். நாம் நம்மைத் தாழ்த்த தாழ்த்த தேவன் நம்மை உயர்த்துவார். அவரது கிருபைகளையும் தாராளமாய்த் தருவார். நாம் தாழ்மையில் எங்கே நிற்கிறோம்? எதற்கெடுத்தாலும் பெருமை பேசித்திரிகிறோமா? கர்த்தரின் சமுகத்தினின்று பெருமை பேசியதாலேயே லூசிபர் தேவசமுகத்திலிருந்து தள்ளப்பட்டான். விடிவெள்ளி நட்சத்திரமாய் மிகவும் மகிமை பொருந்தியவனாயிருந்த அவனே நான் வானங்களுக்கு ஏறுவேன், சர்வவல்லவருக்கு ஒப்பாவேன் என்று பெருமை பேசினான். கீழே விழத் தள்ளப்பட்டவனாய், இன்று சாத்தானாய், தேவனுக்கு விரோதமானவனாய், ஜனங்களைத் தேவனிடத்தினின்று பிரிக்கின்றவனாய் இருக்கிறான். இத்தனைக்கும் காரணம் அவனுக்குள் இருந்த பெருமையே. மனுஷன் தன் செய்கையைவிட்டு நீங்கவும், மனுஷருடைய பெருமை அடங்கவும் செய்கிறார். யோபு 33:17

***சிந்தனைக்கு:*** என்னில் பெருமை இருக்கிறதா என அறிய தாழ்மை தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: 2கொரி 10:1–18

## யாரைப் பிரதிபலிக்கிறோம்?

*தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல, கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்.*
*2கொரிந்தியர் 10:18*

செப்டெம்பர் 9 திங்கள்

கண்ணாடியில் பார்க்கும்போது, நமது தோற்றம் இன்னதென்று தெரிகிறது. ஆம், கண்ணாடியைப் பார்த்து நமது தோற்றத்தைச் சரிசெய்கிறோம். தலைமுடியைச் சரி செய்கிறோம், முகத்தை மெருகூட்ட அதிக அலங்காரங்களையும் செய்துகொள்ளுகிறோம். அதுபோல திருவசனத்தைத் தினமும் பார்த்துப் படிக்கும்போது, அது நமது ஆத்துமாவின் கண்ணாடியாகத் திகழ்கிறது. அது நம்மில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டி, நம்மில் மாற்றவேண்டியவற்றை மாற்றி, திருத்தவேண்டியவற்றைத் திருத்தி, இயேசுவைப் பிரதிபலிக்கிறவர்களாக நம்மை மாற்றும் என்பதில் ஐயமில்லை.

பவுல் நீதிச்சட்டங்களையும், நியாயப்பிரமாணங்களையும் கற்றுத்தேறியவர். கமாலியேலின் பாதத்தில் இருந்து அனைத்தையும் கற்றறிந்தவர். அப்படிப்பட்ட பவுல், "நான் உங்கள் முன்பாக இருக்கும்போது, தாழ்மையாய் இருக்கிறேன்" என்று எழுதுகிறார். அதுமட்டுமல்ல, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குள் சிறைப்படுத்துகிறவர்களாய் இருப்போம் என இந்த அதிகாரத்தில் பல ஆலோசனைகளையும் கொரிந்தியருக்கு எடுத்துரைக்கிறார். தேவையற்ற சிந்தனைகள், கோபங்கள், பொறாமைகள், பெருமைகள், மேட்டிமையான எண்ணங்கள் அனைத்தையும் கிறிஸ்துவுக்குள் சிறைப்படுத்தி கீழ்ப்படுத்துகின்றபோது, அது நம்மை கிறிஸ்துவின் சாயலில் மெருகேற்றும். நமது வாழ்வு அவரை மட்டுமே பிரதிபலிக்கும்.

"தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்ளுகிறவர்கள்" என்று பன்னிரண்டாம் வசனத்தில் குறிப்பிடுகிறார். இப்படி அநேகர் இருக்கிறார்கள். தாங்கள் பிழைவிடமாட்டார்கள்; தாங்கள் செய்வது, சொல்வது எல்லாமே எப்போதுமே சரியாக மட்டுமே இருக்கும் என நினைப்பவர்கள் இவர்கள். சபைக் காரியங்களில் கூட வசனத்தையல்ல, ஒழுங்குமுறைமைகளை, சட்டதிட்டங்களை ஒழுங்காகக் கடைப்பிடிப்பதில் வைராக்கியம் காட்டுவார்கள். இவர்களே, கிறிஸ்துவின் சாயலற்ற கிறிஸ்தவர்கள். தங்களைக்கொண்டே தங்களை அளப்பவர்கள். தங்களைக்கொண்டே தங்களை மெச்சிக்கொள்ளுபவர்கள். இவர்கள் புத்தியற்றவர்கள். இவர்கள் கொரிந்து சபையில் மட்டுமல்ல, இன்று நமது சபைகளிலும் மலிந்து கிடக்கிறார்கள்.

பதின்முன்றாம் வசனத்தில், "நாம் அளவுக்கு மிஞ்சி மேன்மைபாராட்டோம். கிறிஸ்து நமக்கு அளந்த அளவின்படியே காரியங்களை செய்கிறோம்" என்று சொல்லுவது, தாழ்மையையே காட்டுகிறது. நாம் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கிறவர்களாய் இருக்கப் பிரயாசப்படுவோமாக. இகழ்வோரை அவர் இகழுகிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார். நீதிமொழிகள் 3:34

*சிந்தனைக்கு:* பாவத்தில் விழுந்து தேவனது குணாதிசயங்களை நாம் மாசுபடுத்திவிட்டாலும், இயேசுவின் தாழ்மை நம்மைச் சிந்திக்க வைக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்
10
செவ்வாய்

## தாழ்மையானவர்களை உயர்த்தினார்

*பலவான்களை ஆசனங்களில் இருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார்.*
*லூக்கா 1:52*

வேத வாசிப்பு: 1சாமு 16:1–13

ஒரு விழா நடத்துவதற்காக, தன்னாலான ஒரு சிறுதொகை பணத்தைக் கொடுத்து உதவிய ஒருவர், எல்லாருடைய மனங்களிலும் உயர்ந்து நின்றார். ஆனால் விழா முடிந்து நன்றியுரை சொல்லப்பட்டபோது, உதவிசெய்த இவரது பெயரை அதிலே சேர்க்க மறந்துவிட்டார்கள். விழா முடிந்ததும் நன்றியுரையில் தனது பெயர் சேர்க்கப் படாததற்கு அவர் கொடுத்த குடைச்சல் அனைவரது மனங்களிலும் உயர்ந்திருந்த அவரை இல்லாமலேயே அழித்தொழித்துப் போட்டது.

சவுல் ராஜா தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல், தன்னுடைய இஷ்டப்படி நடந்துகொண்டபோது, தேவன் அவனை ராஜா ஸ்தானத்திலிருந்து தள்ளி, அவனுக்குப் பதிலாக தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணினார். தாவீதை தேவன் ராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறபோது, அவன் ஒரு குடும்பத்தில் கடைசிப் பிள்ளையாக, தகப்ப னின் ஆடுகளை மேய்த்தவனாக இருந்தான். சாமுவேல் தீர்க்கதரிசி, ஈசாயைப் பார்த்து உனது குமாரரை எனக்கு முன்பாகக் கொண்டு வா என்றபோதுகூட, ஈசாய்க்கு தாவீ தின் ஞாபகமே வரவில்லை. எல்லாக் குமாரரும் கடந்துபோயும் அதில் தேவன் யாரை யும் தெரிந்துகொள்ளவில்லை என்றதும், சாமுவேல் ஈசாயைப் பார்த்து, உனது குமாரர் இவ்வளவுதானா என்கிறான். அப்பொழுதுதான் ஈசாய் தனது கடைசி மகன் ஆடுகளை மேய்ப்பதாகக் கூறி அவனை அழைப்பிக்கிறான். அங்கே வந்த தாவீதை, சாமுவேல் அபிஷேகம் பண்ணுகிறான். குடும்பத்தில் மூத்த சகோதரர் இருந்தார்கள்; அதிலும் சவுலுக்குப் போர்வீரராகக்கூட அவர்கள் இருந்தார்கள். அப்படியிருக்க, ஆடு மேய்த்துக்கொண்டிருந்த தாவீதுக்கு அந்த அபிஷேகம் கிடைத்தது. சாதாரணமாக இப்படியொரு காரியம் நடந்தால், அதைப் பெற்றுக்கொண்டவருக்கு ஒரு பெருமை, தான் உயர்ந்தவர் என்றதான பெருமிதம் இப்படியெல்லாம் வருவது இயல்பு. ஆனால் தாவீதோ, அபிஷேகத்தைப் பெற்ற பின்பும் அதே ஆடுகளையே மேய்த்துக்கொண்டிருந் தான். தகப்பன் யுத்தத்திற்குப்போன சகோதரரின் சுகம் விசாரித்து வா என்றதும், ஆடுகளைக் காவலாளிகள் வசம் விட்டவனாக, விரைந்து செல்கிறான்.

தாழ்மைக்கு முன்னுதாரணமாக தாவீது விளங்கினான். தன்னை ராஜாவாக தேவன் அபிஷேகம் பண்ணியதைக் குறித்து, சற்றேனும் அவன் பெருமைகொள்ளவில்லை. பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தும் தேவன், தாவீதை உயர்த்தினார். ஆனால் தாவீது சிங்காசனத்தில் அமருவதற்குப் பல காலம் எடுத்தது, தாவீது பல போராட்டங்களைச் சந்திக்க நேர்ந்தது. ஆனாலும் அவன் தாழ்மையாய் தேவனின் நேரத்துக்காகக் காத்துக் கிடந்தான். தேவன் ஏற்ற காலத்தில் அவனை உயர்த்தினார். கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மை யுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார். சங்கீதம் 138:6.

*சிந்தனைக்கு:* தாழ்மை என்பது வெளிவேஷம் அல்ல; அது இருதயத்தில் ஆரம்பிக்கவேண்டும். அதையே கர்த்தர் காண்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வேத வாசிப்பு: | யோவான் 8:1–11 |
|---|---|

## கிறிஸ்து தாழ்மையாயிருந்தார்

*அவர் நீதியுள்ளவரும், இரட்சிக்கிறவரும், தாழ்மையுள்ள வரும், கழுதையின்மேலும், கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார். சகரியா 9:9*

செப்டெம்பர் 11 புதன்

வீட்டு வாசலிலே யாசகம் கேட்டு ஒருவர் சத்தமிட்டுக் கொண்டிருந்தார். உள்ளிருந்து வந்த ஒரு பெண் ஒன்றுமில்லை என்று சொல்லி அந்த மனிதனை அனுப்பினார். அப்பொழுது உள்ளிருந்து வந்த அந்தப் பெண்ணின் மாமியார், "இந்தாப்பா, இங்க வா" என்றார். அந்த மனிதனும், இந்த அம்மா ஏதோ தரப்போகிறார்கள் என்று எண்ணி ஆவலோடு ஓடிவந்தான். "இவள் சொல்லி நீ என்ன போகிறது, இப்ப நான் சொல் றேன், வெளியே போ" என்றார்களாம். இது மாமியாருக்குரியதான தனிப்பெருமை.

விபச்சாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டதாகக் கூறி ஒரு பெண்ணை இயேசு வுக்கு முன்பாக நிறுத்தினார்கள். அப்படியானால் அந்தப் பெண்ணோடு விபச்சாரத்தில் ஈடுபட்ட அந்த ஆண் எங்கே? அவன் ஒருவேளை குற்றஞ்சாட்டும் அந்தக் கூட்டத்தில் கூட இருந்திருக்க வாய்ப்புண்டு. இங்கே இயேசுவோ, நீதியுள்ளவராக, பாவமற்றவராக இருக்கிறார். ஆனால் அவர் தரையிலே குனிந்து எதையோ எழுதியவராக, உங்க ளில் பாவமில்லாதவன், அவள் மீது முதலாவது கல்லை வீசட்டும் என்கிறார். அப்போது அவ்விடத்தினின்று ஒவ்வொருவராக விலகிச் செல்கின்றனர். அப்பொழுது இயேசு, "யாரும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா" என்று வினாவினவராக, "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை, நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே" என்கிறார். உங்களில் பாவமில்லாதவன் முதலாவது கல்லையெறியட் டும் என்றவுடன் ஒவ்வொருவராக விலகிச் சென்றபோது, இயேசு அவ்விடத்திலே பாவமில்லாதவராகவே இருந்தார். அவர் முதலாவது கல்லை எறிந்து, தான் எவ்வள வேனும் பாவமில்லாதவராக இருப்பதை மனுஷர் முன்பாகக் காண்பித்திருக்கலாம். அவர் அப்பெண்ணுக்குத் தண்டனை கொடுத்து, பாவமில்லாமல் தம்மைப்போல இருக்க முடியும் என்று நிரூபித்துக் காட்டி தனது பெருமையை நிலைநாட்டியிருக்க லாம். ஆனால் அவரோ தாழ்மையாய் இருந்தார். தாழ்மையாய் இருப்பதையே கற்றுக்கொடுத்தார்.

இன்று நம்மில் எத்தனைபேர் எல்லாத் தராதரங்களும் உள்ளவர்களாய் இருந்தும், தாழ்மையாய் இருக்கப் பிரயாசப்படுகிறோம். இப்படிப்பட்டவர்களைக் காண்பது இன்று அரிதாகவே உள்ளது. ஒரு உயர்வு கிடைத்ததும் அதை வைத்துக்கொண்டு, ராஜ்யத் தையே பிடித்தவர்களாக எண்ணித் துள்ளிக் குதிக்கிறவர்களாகவே இருக்கிறோம். நாம் எவ்வளவு தாழ்மையுள்ளவர்கள் என்பதையே பெருமையாய் சொல்லிக்காட்டு கிறவர்களாக இருக்கிறோம். எம் நிலை குறித்து வெட்கப்படுவோமாக. கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவோம். நீதி அவருக்கு முன்பாகச் சென்று, அவருடைய அடிச்சுவடுகளின் வழியிலே நம்மை நிறுத்தும். சங்கீதம் 85:13

***சிந்தனைக்கு:*** எனக்குள் அப்பப்போ துளிர்விடுகின்ற பெருமையை அகற்றிட, என்னை ஆண்டவரிடம் கொண்டுவருவேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்
12
வியாழன்

# இறுமாப்பான இருதயம்

*அழிவு வருமுன் மனுஷனுடைய இருதயம் இறுமாப்பாயிருக்கும். மேன்மைக்கு முன்பானது தாழ்மை.*
*நீதிமொழிகள் 18:12*

வேத வாசிப்பு: தானி 4:1-37

எவ்வளவுதான் அறிவுரைகள் சொன்னாலும் ஒருசிலர் கேட்கமுடியாது என்றும், தாம் நினைத்ததைத்தான் செய்வோம் என்று இறுமாப்பாக இருப்பார்கள். ஆனால் ஞானம் உள்ளவனோ அறிவுரைகளுக்குச் செவிகொடுப்பான்.

இங்கே நேபுகாத்நேச்சார் ஒரு தரிசனம் காண்கிறான். அதற்கு விளக்கம் கேட்டு நின்ற போது, சாஸ்திரிகள், கல்தேயர், குறிசொல்லுகிறவர்கள் யாராலும் அதற்கு அர்த்தத் தைச் சொல்லக்கூடாமற்போனது. அப்போது பெல்தெஷாத்சார் என்று அழைக்கப்பட்ட தானியேல் அதற்கான அர்த்தத்தைச் சொன்னான். அது ராஜாவுக்குக் கலக்கமாய் இருந்திருக்கலாம். "நீர் உமது ராஜ்யபாரத்தினின்று தள்ளப்படுவீர், மிருகங்களோடே புல்லைத் தின்பீர்" என்று அவனுக்குச் சொல்லப்பட்டது. "ஆகையால் நீர் மனந்திரும் பும், நீதியைச் செய்யும். உமது பாவங்களை அறிக்கையிட்டு, சிறுமையானவர்களுக்கு இரங்கும்" என்று தானியேல் அவனுக்கு ஆலோசனை கூறினான். அப்படிச் செய்தால் ஒருவேளை உமது இராஜ்யம் நிலைநிற்கலாம் என்றான். இதெல்லாம் நடந்து 12 மாதமாகியும், ராஜா சொல்லப்பட்ட எதற்கும் செவிமடுக்காமல், உப்பரிக்கையின்மேல் உலாவிக்கொண்டு, "இது என் வல்லமையின் பராக்கிரமத்தால், என் மகிமைப் பிரதாபத் துக்கென்று நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா" என்றான். இந்த வார்த்தை ராஜாவின் வாயிலிருந்தபோதே, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, "ராஜாவா கிய நேபுகாத்நேச்சாரே, உனது ராஜ்யபாரம் தள்ளுண்டு போனது, நீ மனுஷரிலிருந்து தள்ளப்படுவாய்" என்றிற்று. அவன் மறுபடியும் தன் தவறை உணர்ந்து, மனந்திரும்பிய போது, அவனது ஸ்தானம் மீண்டும் ஸ்திரப்பட்டது.

அவன் தரிசனத்தில் எச்சரிக்கப்பட்டும், அதற்குக் கீழ்ப்படியாமல் இறுமாப்பாய் இருந்தான். அழிவு வருமுன் எப்படியாக மனுஷருடைய இருதயம் இறுமாப்படைகிறது என்பதைப் பார்த்தீர்களா? இன்று நம்முடைய நிலை என்ன? வேதவாக்கியம் நமக்கு கொடுக்காத எச்சரிப்புத்தான் என்ன? அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் இறுமாப்பாய் இருக்கிறோமா? பாவத்தின்மேல் பாவத்தைச் சேர்த்துக்கொண்டு, "ஆண்டவரிடம் கேட்டால் மன்னித்துவிடுவார்" என்று கேலி பேசுகிறோமா? இன்று இந்த எச்சரிப்பு நமக்காகக்கூட இருக்கலாம். ஆண்டவரின் வார்த்தையை உதாசீனம் செய்யவேண் டாமே. தேவனுடைய வார்த்தைக்குக் கட்டுப்படுவோம். கிறிஸ்துவைப்போல மாறுவோம். அவருக்குள் இருந்த அந்த தாழ்மை நமக்குள்ளும் வரட்டும். ஆகாப் இந்த வார்த்தைகளைக் கேட்டபோது "உபவாசம்பண்ணி, இரட்டிலே படுத்துத் தாழ்மையாய் நடந்துகொண்டான்." 1இராஜாக்கள் 21:27. நாம் எப்படி?

***சிந்தனைக்கு:*** நேபுகாத்நேச்சார் இறுமாப்பாய் இருந்தான், ஆகாப் தாழ்மையாய் நடந்தான். நான் யாராய் இருக்கிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: எபே 5:21-33

# உறவுகளில் தாழ்மை

*அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன், மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள். எபேசியர் 5:33*

செப்டெம்பர் 13 வெள்ளி

கணவன் மனைவிக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இறங்கி வந்து பேச அவர்களுக்குள்ளிருந்த அகந்தை விடவில்லை. பேசாமலேயே நாட்கள் கடந்தன. ஒருநாள் விடிகாலையில் கணவன் வெளியில் புறப்படவேண்டி இருந்ததால், "நாளை காலை 6 மணிக்கு என்னை எழுப்பிவிடு" என்று ஒரு கடதாசியில் எழுதி வைத்துவிட்டுத் தூங்கச்சென்றார். விடிகாலையில் திடுக்குற்று விழித்ததும் காலை 7மணியாகி விட்டிருந்தது. கோபத்தோடு தனது கடதாசியை மனைவி படித்தாளா என்று பார்த்தார். அங்கே இன்னுமொரு கடதாசியில், இப்போது காலை 6 மணி என எழுதப்பட்டிருந்தது.

எபேசியர் 5ம் அதிகாரத்தில், கணவன் மனைவி உறவை, கிறிஸ்துவுக்கும் சபைக்குமான உறவுக்கு ஒப்பிட்டு பவுல் எழுதுவதைக் காண்கிறோம். கிறிஸ்து தனது சபையில் எவ்வளவாய் அன்புகூர்ந்தார். சபைக்காகத் தமது ஜீவனையும் கொடுக்குமளவுக்கு தம்மைத் தாழ்த்தினார். சபையை மன்னித்தார். சபை தேவனுக்குள்ளாக வளரவேண்டும், அன்பிலே பெருகவேண்டும் என்று கரிசனையுள்ளவராக, சபையோடு எப்போதும் உறவை பேணும்படி தம்மைத் தாழ்த்தினார். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார்.

கணவன் மனைவி உறவிலே இந்த அகந்தை முன்நிற்பது ஏன்? இது எங்கிருந்து வந்தது? கிறிஸ்து சபையிலே அன்புகூர்ந்ததுபோலவே, கணவன், மனைவியில் அன்புகூரவேண்டும். மனைவிகளும் கணவனுக்கு எல்லாக் காரியத்திலும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அதற்குத் தாழ்மை அவசியம். தாழ்மையின் சிந்தை இல்லாவிடில் கீழ்ப் படிதல் வராது. நான் யார், எனது அந்தஸ்து என்ன, நான் எப்படிப்பட்ட குடும்பத்தில் இருந்து வந்தேன், இப்போது எவ்வளவு கையிலே உழைக்கிறேன் என்றெல்லாம் எண்ணினால், இந்த எண்ணங்களுக்குப் பின்னால் தாழ்மை காணப்படாமலேயே போய்விடும். அதேபோல கணவன்மாரும், கிறிஸ்து எவ்விதம் எதிர்பார்ப்பில்லாத அன்பை சபையில் வெளிப்படுத்தினாரோ, அதேபோல எவ்வித எதிர்பார்ப்புமில்லாத அன்பை தங்கள் மனைவிமீது செலுத்தவேண்டியது அவசியம். இவள் இப்படி நடந்தால் தான், அல்லது இதைச் செய்தால்தான் நான் அன்பைக் காட்டுவேன் என்று எண்ணக் கூடாது. குடும்பங்களிலே முரண்பாடுகள் வாக்குவாதங்கள் வருவது சகஜம். இல்லா விட்டால் அது குடும்பமே அல்ல. அதை நாம் எப்படித் தீர்த்துக்கொள்ளுகிறோம் என்பதில்தான் எமது குடும்பத்தின் வெற்றி அடங்கியிருக்கிறது. அதற்கு முதலாவது இருவரும் தங்களுக்குள் இருக்கும் அகந்தையைத் தூக்கியெறிந்துவிட வேண்டும். தாழ்மையோடு ஒருவரையொருவர் அணுகுங்கள். இதினிமித்தம் மனுஷன் தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாய் இருப்பார்கள். எபேசியர் 5:31

*சிந்தனைக்கு:* நல்ல குடும்ப உறவுகளிலே அகந்தைக்கு இடமில்லை. தாழ்மைக்கே உண்டு. நமது குடும்ப உறவு எப்படியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்
14
சனி

## ஆபிராமோடு தேவனின் உடன்படிக்கை

*அவன் கர்த்தரை விசுவாசித்தான்.*
*அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்.*
*ஆதியாகமம் 15:6*

வேத வாசிப்பு: ஆதி 15:12–21

***தேவனுடைய செய்தி:***

தேவனுடனான உங்கள் உறவை சரிசெய்து அவரை விசுவாசியுங்கள்.

***தியானம்:***

"உன் வருங்கால சந்ததிக்கு இத் தேசத்தை கொடுக்கிறேன், இது உனக்கே உரியது" என ஆண்டவர் கூறியபோது, அதை "எப்படி உறுதிப்படுத்திக் கொள்வது?" என ஆபிராம் கேட்க, தேவன் ஒரு உடன்படிக்கையை அவனோடு செய்தார். அவனுக்குப் பின்வரும் சந்ததியினர் எகிப்தில் 400 வருடம் அடிமையாக இருப்பதைக் குறித்தும் மீண்டும் இத்தேசத்துக்கு வருவதைக் குறித்தும் எதிர்வு கூறினார்.

***விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:***

தேவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பதில் பொறுமை மிக அவசியம். தேவன் எப்பொழுதும் அவசரப்படுவதில்லை. அவர் நித்தியமானவர்.

***பிரயோகப்படுத்தல்*** :

வசனம் 9-11 ன்படி ஆபிராம் உடன்படிக்கைக்காக எதை கொண்டுவந்தான்? என்ன செய்தான்?

ஆபிராமின் சந்ததி அடிமையாக இருப்பதையும், அந்நிய நாட்டினரை தேவன் தண்டிப்பதையும் குறித்து தேவன் கூறியது என்ன? ஏன் தேவன் எல்லாவற்றையும் ஆபிராமுக்கு வெளிப்படுத்தினார்?

எமோரியரை தண்டிக்க தேவன் தாமதித்தது ஏன்? ஆபிராமின் சந்ததியினர் அவர்களை எப்போது துரத்திவிடுவார்கள்?

எகிப்து நதி முதல் யூப்ரடீஸ் நதி வரையுள்ள இடத்தை தேவன் கொடுக்க முதல் அங்கு வாழ்ந்த ஜாதியார் யார் யார்?

தேவனுடைய நேரத்திற்காக நான் காத்திருந்ததுண்டா? அவசரப்பட்டு காரியங்களைச் செய்ததினால் ஏற்பட்ட விளைவுகள் என்ன?

***எனது சிந்தனை:***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: எபேசியர் 6:1–10

செப்டெம்பர் 15 ஞாயிறு

## கண்டிப்பிலே தாழ்மை

*பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக. எபேசியர் 6:4*

மகளின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் அன்று தகப்பனால் கலந்துகொள்ள முடியவில்லை. எதிர்பாராத சில வேலைகளை அலுவலகத்தில் முடிக்க வேண்டியிருந்ததால் காலதாமதம் ஆயிற்று. அதனால் கொண்டாட்டம் முடிந்து அனைவரும் வீடு திரும்பினர். தகப்பன் வரவில்லையென்ற சோகத்தில் மகளும் படுக்கைக்குச் சென்றுவிட்டாள். மறுநாள் காலையில் முதல்வேலையாக தகப்பன் மகளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அன்று முழுவதும் லீவுபோட்டு, மகளுடனேயே நேரம் செலவிட்டார். பிள்ளைகளிடம் மன்னிப்புக் கேட்கும் பெற்றோர் எத்தனைபேர்?

பிள்ளைகள் எப்படி பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்று எழுதும்போது, பெற்றோரும் எப்படியாக பிள்ளைகளுடன் நடந்துகொள்ளவேண்டும் என்றும் பவுல் குறிப்பிடுவதைக் காணலாம். பெற்றோரைக் கனம்பண்ணுவது என்பது வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனை. அதற்காக, பெற்றோர் எப்படியும் நடந்துகொள்ளலாம், எதையும் பேசிவிடலாம், தாங்கள் சொல்லுவது, செய்வது எல்லாமே சரியென்ற எண்ணம் கூடாது. தாங்கள் எதைச் செய்தாலும் காரியமில்லை, காரணம் தாங்கள் பெற்றோர் என்று சில பெற்றோர் நினைக்கிறார்கள். இந்த எண்ணம் தவறானது. பெற்றோராகிய நாம் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாய் இருக்கவேண்டும். நாங்கள் கற்பித்துக் கொடுப்பதை முதலாவது நாங்கள் பின்பற்றவேண்டும். நாங்கள் தவறு செய்யும்போது தாழ்மையுடன் அதை ஒத்துக்கொள்ளப் பழகவேண்டும்.

பிள்ளைகளைச் சிட்சிக்கும் சிட்சிப்பில், கண்டனம் மட்டுமல்ல, தாழ்மையும், மன்னிப்பும் கலந்திருக்கவேண்டும். தாழ்மையுடனேயே கண்டித்து உணர்த்தவேண்டும். பெற்றோராகிய நாம் தவறுவிடும்போது, அதைத் தாழ்மையுடன் ஒத்துக்கொள்ள பழகவேண்டும். நாம் செய்யாத ஒன்றை, அல்லது நம்மால் செய்யமுடியாது என்று நினைப்பவற்றை நமது பிள்ளைகள் செய்யவேண்டும் என்று நிர்ப்பந்திக்கவும் கூடாது. பிள்ளைகளின் மனதைப் புரிந்துகொண்டு நடக்கும்போது பெற்றோர் பிள்ளைகள் உறவு மிகவும் சுகமானதாகவே இருக்கும். எனவே, முதலாவது நாம் பிள்ளைகள் முன்பாக முன்மாதிரிகளாய் இருக்கக் கற்றுக்கொள்வோம். எமது கண்டனத்திலே எப்போதும் தாழ்மையையும் சேர்த்துக்கொள்வோம். உங்களுக்கு முன்பாக இருக்கும்போது தாழ்மையாயும், தூரத்திலே இருக்கும்போது உங்கள்மேல் கண்டிப்பாயும் இருக்கிற பவுலாகிய நான் கிறிஸ்துவினுடைய சாந்தத்தையும், தயவையும் முன்னிட்டு உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். 2கொரிந்தியர் 10:1. நாமும் எமது பிள்ளைகளுக்கு புத்தி சொல்லுவோம். முன்மாதிரியுள்ளவர்களாக வாழுவோம்.

*சிந்தனைக்கு:* பெருமைக்குரிய பெற்றோராய் வாழ தாழ்மையை நமது வாழ்வில் சேர்த்துக்கொள்வது அவசியம். இதில் என்ன கஷ்டம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்
16
திங்கள்

## ஐக்கியத்தில் தாழ்மை

*அவர் ஒளியில் இருக்கிறதுபோல, நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்.*
*1யோவான் 1:7*

வேத வாசிப்பு: 1யோவா 1:1–10

அன்பானவர்களும், நல்லவர்களும், விட்டுக்கொடுப்பவர்களும் சேர்ந்திருக்கும் ஒரு குழுதான் ஐக்கியமான குழு என்று சொல்லமுடியாது. எல்லாவிதமான குணாதிசயங்களுடனும், வித்தியாசமான நபர்களாக, வித்தியாசமான கருத்துள்ளவர்களாக, கிறிஸ்துவின் அன்பினால் இணைக்கப்பட்டவர்களாக இருப்பதே ஐக்கியமாகும்.

யோவான் இந்த நிருபத்தில் பல காரியங்களைக் குறிப்பிட்டு எழுதுகிறார். முதலாவது, எமது ஐக்கியம் பிதாவோடும் அவர் குமாரனாகிய கிறிஸ்துவோடும் உள்ளது என்கிறார். தேவன் ஒளியாயிருக்கிறார், அவரிடத்தில் எவ்வளவேனும் இருளில்லை என்றவர், நாம் அவரிடத்தில் ஐக்கியப்பட்டிருக்கிறோம் என்று சொல்லியும் இருளிலே நடந்தால் நாம் பொய் சொல்லுகிறவர்களாய் இருக்கிறோம் என்கிறார். அத்தோடு அவர் ஒளியில் இருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம் என்கிறார். நாம் ஒளியில் நடப்பதென்பது, நாம் பாவத்தை வெறுத்து நடப்பது. நாம் பாவத்தை வெறுத்து அறிக்கை செய்யும்போது, அவர் சகல பாவங்களையும் மன்னித்து எம்மைச் சுத்திகரிக்க வல்லவராய் இருக்கிறார். ஆனால் நம்மில் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறோம். பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிட்டால் இரக்கம் பெறுவோம். இதுவே சத்தியம்.

கிறிஸ்துவுக்குள்ளான ஐக்கியத்திலே முக்கியமாக பாவத்துக்கு இடமில்லை. நாம் பாவத்தை அறிக்கை செய்து, அவரது மன்னிப்பைப் பெற்று, ஒளியில் நடக்கும்போது, ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். பாவத்தை அறிக்கையிட முதலாவது நாம் பாவியென்பதை ஒத்துக்கொள்ள தாழ்மை அவசியம். தாழ்மையோடு கூட பாவத்தை அறிக்கையிட்டு, மன்னிப்பைப் பெற்று ஒளியின் பிள்ளைகளாகி, ஆண்டவரோடும், அவருடைய பிள்ளைகள் ஒருவரோடொருவருடனும் ஐக்கியமாய் இருப்போம். இன்று எமது கிறிஸ்தவ ஐக்கியங்களுக்கிடையில் பிளவுகள் ஏன்? காரணம், அங்கே கிறிஸ்துவோடுகூடிய ஐக்கியத்தில், கிறிஸ்துவோடுள்ள உறவில் உண்மைத்துவம் கிடையாதது ஏன்? தலைவர் யார், செயலாளர் யார்? காசாளர் யார்? இவற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் ஐக்கியம் கேள்விக்குறியாகிவிட்டது. இன்று ஆலயங்களுக்குள்ளும் அரசியல் வந்துவிட்டதோ என்ற அளவுக்கு பிரச்சனைகள் தலைதூக்குகிறது. ஐக்கியப்பட்டிருக்க வேண்டியவர்களுக்கு இடையில் ஐக்கியக் குலைவுகளும், விட்டுக்கொடாமையும், பெருமையும் தலைதூக்கி நிற்கிறது. இந்த இடத்தில் நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம்? மெய்த்தாழ்மையை நாம் தரித்திருக்கிறோமா? ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும் பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு. தீத்து 3:2

*சிந்தனைக்கு:* ஒருவரையொருவர் மேன்மையானவர்களாய் எண்ணுவதில் நமக்குள்ள பிரச்சனைதான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: 1சாமு 9:1–21

செப்டெம்பர் 17 செவ்வாய்

## பதிலளிப்பதிலும் தாழ்மை

*நான் இஸ்ரவேல் கோத்திரங்களிலே சிறிதான பென்யமீன் கோத்திரத்தான் அல்லவா? ...என் குடும்பம் அற்பமானது அல்லவா? 1சாமுவேல் 9:21*

ஒரு பதவிக்காக ஒருவரைத் தெரிவுசெய்யும்போது, நேர்முகப் பரீட்சை ஒன்றை வைப்பார்கள். அதற்கு முகங்கொடுக்கும் ஒருவர் எவ்வளவுக்குத் தனது திறமைகளைக் காட்டமுடியுமோ அல்லது எவ்வளவாய் தன்னை உயர்த்திப் பேசமுடியுமோ அப்படியே பேசுவார். தனது திறமைகளை வெளிப்படுத்தி, அந்தப் பதவியில் எப்படியாவது உட்கார்ந்து விடவேண்டும் என்றே நினைப்பார். இல்லாதவைகளையும் இருப்பவைகளாய்க் காட்டவே முற்படுவர். ஆனால் இங்கே சவுலோ மிகவும் தாழ்மையாய்ப் பதிலுரைப்பதைக் காண்கிறோம். இஸ்ரவேலரை தேவன்தான் முன்நின்று நடத்தி வந்தார். இஸ்ரவேல் மக்களோ தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாலேயே, தேவன் சவுலை அபிஷேகம்பண்ணும்படிக்கு சாமுவேலை அனுப்புகிறார். சாமுவேல் வந்து சவுலுடன் பேசியபோது, அவன் தான் கோத்திரங்களுக்குள் சிறிய கோத்திரத்தைச் சேர்ந்தவன் என்றும், தன் குடும்பம் அற்பமானது என்றும், தான் இதற்குத் தகுதியற்றவன் என்றும் தன்னைத் தாழ்த்திக்கொள்வதைக் காண்கிறோம்.

தாழ்மையுள்ளவனையே கர்த்தர் உயர்த்த நினைக்கிறார். தாழ்மையுள்ளவனையே கர்த்தர் நோக்கிப் பார்க்கிறவராய் இருக்கிறார். சவுலையே கர்த்தர் இஸ்ரவேலின் முதலாவது ராஜாவாகத் தெரிவுசெய்தார். மற்ற மக்களோடு அவன் நடுவின் நின்றபோது, தோற்றத்தில் உயரமானவனாகவும், சவுந்தரியமுள்ளவனாகவும் இருந்தான். ஆனால் அவனது உள்ளத்திலோ தாழ்மையுள்ளவனாய் இருந்தான்.

இன்று நாமும்கூட எத்தனையோ பொறுப்புக்களிலும், பதவிகளிலும் இருக்கலாம். நாம் திறமையிலும், படிப்பிலும் உயர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் எமக்குக் கீழே பணியாற்றும் எத்தனையோ ஊழியர்கள் இருக்கலாம். அவர்களோடு எமக்குள்ள உறவு எப்படிப்பட்டது? நாம் படித்தவர்கள், உயர்ந்தவர்கள் என்ற பெருமையில் அவர்களை அற்பமாகப் பார்த்து நடந்துகொள்ளுகிறோமா? அல்லது அவர்களும் எம்மோடு பணியாற்றும் சகஊழியர் என்ற எண்ணத்தில் அவர்களோடு தாழ்மையாய் சகஜமாய் நடக்கிறோமா? கிறிஸ்துவின் தாழ்மையின் பண்பு நம்மில் வெளிப்பட நாம் இடமளிப்போமானால், பிறரிடத்தில் அன்பும் பெருகும். பிறரும் நம்மை அணுகுவதற்குத் தயங்கமாட்டார்கள். அங்கே ஒரு ஐக்கியம் தானாய் மலரும். நமக்குள்ள பெருமையான எண்ணங்களைக் கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படுத்தி, தாழ்மையைத் தரித்துக் கொள்வோமாக. "பிரியமான சகோதரனும், உண்மையுள்ள ஊழியக்காரனும், கர்த்தருக்குள் எனக்கு உடன் வேலையாளுமாயிருக்கிற தீகிக்கு என்பவன் என் செய்திகளை எல்லாம் உங்களுக்கு அறிவிப்பான்." கொலோசெயர் 4:7.

***சிந்தனைக்கு:*** அதிகாரியாக பதவி வகிக்கும்போது தாழ்மையுடன் செயற்பட்டால் அது நமது மதிப்பைக் குறைக்கும் என்று எண்ணுகிறோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்

18

புதன்

# எது தாழ்மை?

*அப்பொழுது இயேசு: இம்மட்டில் நிறுத்துங்கள் என்று சொல்லி, அவனுடைய காதைத் தொட்டு, அவனைச் சொஸ்தமாக்கினார். லூக்கா 22:51*

வேத வாசிப்பு: லூக்கா 22:39–51

மறுநாள் லீவு எடுப்பதற்காக முடிக்கவேண்டிய வேலைகளையெல்லாம் முடித்து, மறுநாளில் உயர் அதிகாரியிடம் ஒப்படைக்கும்படிக்குத் தன்னுடைய செயலாளரிடம் கொடுத்துவிட்டு அவர் லீவில் சென்றுவிட்டார். லீவு முடிந்து வந்தபோது எதுவுமே ஒப்படைக்கப்படாமல் இருப்பதைக் கண்டு, செயலாளர் மீது இவர் கோபப்பட்டார். பின்பு தான் கோபப்பட்டதில் எந்த அர்த்தமும் இல்லையென்பதை உணர்ந்தவராய் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். தான் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதின் பின்னர், கிறிஸ்துவை அறியாத அந்த செயலாளர் தன்னோடு பழகுவதில் பெரிய தொரு மாற்றத்தைத் தான் உணர்ந்ததாக ஒருவர் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். மன்னிப்புக்கும், தாழ்மைக்கும், சாந்தத்துக்கும் விரிசலடைந்த உறவுகளை சேர்க்கும் வல்லமையுண்டு. இவ்விதமான குணாம்சங்கள் இயேசுவிடம் நிறையவே இருந்தது.

சீஷரோடு இராப்போசனத்தை முடித்துவிட்டு, தன்னை ஒருவன் காட்டிக்கொடுப்பான், தான் அக்கிரமக்காரர் கையில் ஒப்படைக்கப்படுவார் என்றெல்லாம் சொல்லிவிட்டு, இயேசு சீஷரோடுகூட ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போகிறார். அங்கே இயேசுவைப் பிடிப்பதற்காக யூதாஸ் தலைமையில் யூத தலைவர்கள் வந்தார்கள். அப்போது, அங்கே நின்றவர்களில் ஒருவன், பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் காதற வெட்டினான். யோவான் சுவிசேஷத்தில், இதைச் செய்தவன் பேதுரு என்பதாகவே எழுதப்பட்டுள்ளது. பேதுரு ஏன் இதைச் செய்தான்? தங்கள் எதிர்ப்பைக் காட்டு வதற்காக, அல்லது இயேசுவைப் பிடிப்பதைத் தடைசெய்வதற்காக, அல்லது இயேசு வின் மீதுள்ள பாசத்தினாலே என்றும் சொல்லலாம். அல்லது, யார் இடறலடைந்தா லும் நான் இறுதிவரை உம்மோடே நிற்பேன் என்று பேதுரு சொன்னதினால், இப்போது தனது வீரத்தைக் காட்ட இவ்வாறு செய்திருக்கலாம். அப்படியானால், பேதுரு செய்தது தாழ்மையான செயலா? இயேசுவோ உடனே “நிறுத்துங்கள்” என்று சொல்லி, அவனது காதைச் சொஸ்தமாக்கினார். இங்கே இயேசு செய்தது ஒரு தாழ்மையின் செயலாகும். தம்மைப் பிடிக்க வந்தவர்களுக்கு ஒரு ஆபத்து என்றதும் உடனடியாக காப்பாற்றினார். தம்மைப் பிடிக்க வந்தவர்கள்தானே, தண்டனையை அனுபவிக்கட்டும் என்று எண்ணாமல், உடனடியாகவே சொஸ்தமாக்கினார்.

இயேசுவிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவைகள் ஏராளம் உண்டு. தீமையை நன்மையால் வெல்லு என்ற அவர் அதைச் செய்துகாட்டினார். தமது ஒவ்வொரு செயலிலும் தாழ்மையைக் கற்றுக்கொடுத்தார். “...நீங்களும் அவருடைய அடிச்சுவடு களைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்.” 1பேதுரு 2:21

***சிந்தனைக்கு:*** இப்படியான நெருக்கடி நமக்கு நேரிட்டால் நாம் எப்படி நடந்துகொள்வோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: யோவான் 19:1–12

செப்டெம்பர் 19 வியாழன்

## எது ஆசீர்வாதம்?

*இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமும் இராது... என்றார். யோவான் 19:11*

பணக்காரன் ஒருவனுடைய மகன் வீதியிலே பிச்சையெடுத்தால், பார்ப்போர் என்ன சொல்லுவார்கள். இவன் தகப்பன் இவனை விரட்டி விட்டார்போலும். அல்லது இவருக்குச் சொத்து ஏதும் கொடுக்கவில்லைப் போலும் என்பார்கள் அல்லவா. அதுபோலவேதான் இன்று ஆண்டவருக்கு ஊழியம் செய்கிறோம் என்ற போர்வையில் பணத்தைத் தேடுபவர்களைக் குறித்தும், பணத்தையே எப்போதும் எதிர்பார்த்து கேட்டுக்கொண்டு இருப்பவர்களைக் குறித்தும் சொல்லப்படும் என்று ஒருவர் சொன்னார். இன்னுமொருவரோ, நமது தேவன் ஐசுவரியத்தின் தேவன்; எனவே எவ்வளவு ஐசுவரியத்தை வேண்டுமானாலும் அவரிடத்தில் நாம் கேட்டுக்கொள்ளலாம். நாம் செல்வச் செழிப்புடன் வாழ்வதே தேவ சித்தம் என்றார்.

தேவனுடைய பிள்ளைகள் என்று சொன்னால் சகல உலக ஆசீர்வாதங்களைப் பெற்று செல்வந்தராய், சகல வசதிகளுடனும் வாழ்வதுதான் என்று பலர் நினைக்கிறார்கள். தேவனுடைய ஆசீர்வாதம் என்று சொன்னால், அது உலகத்துக்குரிய ஆசீர்வாதங்கள்தான் என்று தப்பாகக் கணக்குப் போட்டு வாழ்வோரும் உண்டு. அப்படியானால், தேவனுடைய குமாரனாகிய இயேசு, மூன்றரை வருடங்கள் இந்த உலகத்தில் வாழ்ந்தபோது, ஏன் செல்வந்தராக வாழவில்லை. பிதாவிடம் நான் வேண்டிக்கொண்டால் அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்ப மாட்டார் என்று நினைக்கிறாயா? (மத்.26:53) என்று சொன்ன இயேசு, ஏன் தமக்கு வேண்டிய வசதிவாய்ப்புக்களைப் பெற்று சந்தோஷமாய் இவ்வுலகில் வாழவில்லை? காரணம், அது தேவனுடைய ஆசீர்வாதம் அல்ல என்பதையும், அதற்காக அவர் வரவில்லை என்பதையும் அவர் திட்டமாய் அறிந்திருந்தார்.

இங்கே பிலாத்துவுக்கு முன்பாக, இயேசு நிற்கிறார். அப்போது பிலாத்து உலகத்தில் ஒரு அதிகாரத்தில் இருப்பவன். சிங்காசனத்தில் அமர்ந்திருப்பவன். ஆனால் தேவகுமாரனாகிய இயேசுவோ அவனுக்கு முன்பாக, இரத்தம் வடிந்தவராய் காயங்களுடன், கட்டப்பட்டவராய் மௌனமாய் நிற்கிறார். பிலாத்து: "உன்னை சிலுவையில் அறையவும், உன்னை விடுதலையாக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு என்பது உனக்குத் தெரியாதா?" என்று கேட்டபோது, இயேசு அவனுக்கு ஒரு பதில் கொடுத்தார் பார்த்தீர்களா? அங்கேதான் இயேசு பிதாவுக்குப் பிரியமான குமாரனாய் நிற்கிறார். பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமில்லை. இதுதான் தேவபிள்ளைகளுடைய நிச்சயம். இதுதான் தேவஆசீர்வாதம். நமது சகலமும் தேவனுடைய கரத்திலிருந்தே வருகிறது. நாம் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவு பெரிதாயிருக்கிறது. ரோமர் 11:33

***சிந்தனைக்கு:*** ஆசீர்வாதமான வாழ்வைக் குறித்து என் மன எண்ணம் என்ன? தவறானதாக இருந்தால் இன்றே சரிசெய்வேனாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்
20
வெள்ளி

## இலக்கை நோக்கித் தொடருகிறேன்

*கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். பிலிப்பியர் 3:14*

வேத வாசிப்பு: பிலி 3:1-14

நமது இலக்கு எது? நடந்து சென்ற நான் மோட்டார் சைக்கிள் வேண்டுவதும், பின் கார் வேண்டுவதும், வீடு கட்டி குடும்பத்தைத் தங்கவைத்து விட்டு வெளிநாடு செல்வதும்; உலகத்தில் இதுதான் நமது இலக்கா?

"எனக்கு எவைகள் எல்லாம் லாபமாய் இருந்ததோ, அவைகளையெல்லாம் கிறிஸ்துவுக்காக நஷ்டம் என்று எண்ணினேன். அவருடைய அறிவின் மேன்மைக்காக யாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன். இப்படியெல்லாம் செய்து, பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருகிறேன்" என்கிறார் பவுல். அப்படியானால் அவருக்கு ஆண்டவரின் ஆசீர்வாதங்கள் இல்லையா. அவரை ஆண்டவர் அழைத்ததோடு எல்லாம் முடிந்ததா? அவரை தேவன் ஆசீர்வதித்து வழிநடத்தவில்லையா? இந்த உலகில் தேவனுடைய பாதையில் நடந்து, அவருடைய சித்தத்தைச் செய்வதே தன்னுடைய மேன்மையான ஊழியம் எனக் கருதி வாழ்ந்தவர் பவுல். தன்னை அழைத்த தேவனின் இலக்கை நோக்கி அவர் தொடருகிறார். அதற்குத் தடையாக எது வந்தாலும், அவைகள் தனக்கு லாபமானவைகளாக இருந்தாலும், அதையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, பரம அழைப்பின் அந்தப் பந்தயப் பொருளை நோக்கி ஓடுவதாக எழுதுகிறார்.

நாமும் எமது இலக்கைச் சரியாக அறிந்துகொள்ளவேண்டும். உலகில் வந்து பிறந்துவிட்டோம்; எனவே உலக ஆஸ்திகளைப் பெற்று உல்லாசமாய் வாழுவதுதான் எமது இலக்கு என்று தப்புக்கணக்குப் போட்டு எமது வாழ்வை வீணடிக்காது, சரியான இலக்கை நோக்கித் தொடருவோமாக. இந்த உலகத்தில் தேவன் நமக்காக வைத்திருக்கும் நோக்கமென்ன, அவருடைய சித்தம் நம் வாழ்வில் என்ன என்பதை இனங்கண்டு, அவருக்கேற்ற பாத்திரங்காளாய் அவர் நம்மை வனைய விட்டுக்கொடுத்து வாழுவோமாக. கிறிஸ்துவின் பணியாட்களாய், குடும்பத்தை விட்டுப் பிரிந்து, வெகு தூரம் மிஷனரிப் பணிக்காக சென்று, மழையிலும் குளிரிலும் பசியிலும் வாடுவோரும் உண்டு. அதேவேளை கிறிஸ்துவின் ஊழியன் என்ற பெயரில் பணம் சம்பாதித்து, சுகபோகமாய் வாழுவோரும் உண்டு. இதில் யார் மெய்யான இலக்கில் செல்கிறார். நாமே நிதானித்துப் பார்த்து நடந்துகொள்வோம். இடுக்கமான வாசல் வழியாய் செல்லுவோர் சிலர்; அவர்கள் இலக்கை அடைவார்கள். விசாலமான வாசல் வழியாய்ச் செல்லுவோர், அநேகர்; அவர்கள் இலக்கை அடைவது அரிது. இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: "நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" யோவான் 10:7 என்றார்.

***சிந்தனைக்கு:*** முதலில் எனது இலக்கை நான் சரிசெய்யவேண்டும். பின்னர் அந்த இலக்கின் வாசல் இயேசுவண்டை வரவேண்டும். வருவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ஆதி 16:1–6

செப்டெம்பர் 21 சனி

# ஆகார்

*...கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயந்தீர்ப்பாராக என்றாள்.*
*ஆதியாகமம் 16:5*

***தேவனுடைய செய்தி:***

இருப்பதை நினைத்து சந்தோஷப்படாமல், இல்லாததை நினைத்து துக்கப் படுவது தீமைக்கு வழிவகுக்கும்.

***தியானம்:***

ஆகார் சாராய்க்குச் சொந்தமான அடிமைப்பெண். தனக்குச் சொந்தமான ஆகாரை, சாராய், தானாகவே ஆபிராமுக்கு அளிக்கின்றாள். வாக்குத்தத்தம் இருப்பினும் பிள்ளை மகப்பேறு இல்லாமையானது ஆபிராமும் சாராய்க்கும் துயரினைத் தருகின்றது.

***விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:***

உங்கள் கண்ணில் இருக்கும் மரத்துண்டினைக் கவனிக்காது, உங்கள் சகோதரனின் கண்ணில் உள்ள தூசியைக் காண்கிறீர்கள். அது ஏன்?

***பிரயோகப்படுத்தல் :***

நான் பிள்ளைபெறாதபடிக்குக் கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார் என சாராய் நம்பிக்கொண்டிருந்தது சரியானதா?

தன் எகிப்து தேசத்து அடிமைப்பெண்ணை, அவள் ஆபிராமுக்கு கொடுத்தது ஏன்? அவளால் என் வீடு கட்டப்படும் என அவள் நினைத்ததற்கு காரணம் என்ன? வேலைக்காரியின் குழந்தையை தன் குழந்தையாக எண்ணும் அளவுக்கு சாராய் மனம்நொடிந்து போயிருந்தாளா?

ஆகாருக்குப் பெருமை ஏற்பட்டது ஏன்? எஜமானியைவிடச் சிறந்தவளாக தன்னை எண்ணுவதைக் குறித்து உங்கள் கருத்து என்ன?

இது "எனக்கு நேரிட்ட அநியாயம்" என காலங்கடந்து சிந்தித்த அனுபவம் உங்களுக்கு ஏற்பட்டதுண்டா? யாரை குற்றம் சாட்டினீர்கள்?

எஜமானி, தன் வேலைக்காரியை கடினமாகத் தண்டிப்பது சரியானதா? இன்று நீங்கள் அலுவலகத்தில், வீட்டில், உங்களைவிட அதிகாரத்திலுள்ளவர்களி னால் கடினமாக நடத்தப்பட்டதுண்டா? நீங்கள் என்ன செய்வீர்கள்?

தனது தவறை உணரமுடியாதவர்களைக் கண்டதுண்டா? எப்படி?

***எனது சிந்தனை:***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்
22
ஞாயிறு

## பசியிலும் பட்டினியிலும்

*பிரயாசத்திலும் வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புக்களிலும், பசியிலும், தாகத்திலும் அநேகமுறை உபவாசங்களிலும் ... இருந்தேன். 2கொரிந்தியர் 11:27*

வேத வாசிப்பு: 2கொரி 11:21–33

அரிசி வாளியில் சமைப்பதற்கான அரிசியை எடுக்கும்போது, அது குறைவுபட்டிருப்பது தெரியும். கடையில் வாங்கிவைக்க எண்ணினாலும் மறந்துவிடுவேன். என்றாலும், மறு நாள், சமைப்பதற்கு அரிசி போதுமானதாக இருக்குமோ என்று பரபரப்பாக போய் வாளியைப் பார்த்தால், அன்றும் சமைப்பதற்கு அளவாக அரிசி இருக்கும். அப்போது சாரிபாத் ஊர் விதவைக்கு மாவும், எண்ணையும் ஊறியதுபோல, நமக்கும் அரிசி ஊறுகிறதோ என்று எனக்குள் எண்ணிப்பார்த்து, சந்தோஷமடைவேன் என்றார் ஒரு சகோதரி. இப்படியாக ஒவ்வொரு செயலிலும் தேவனின் மகிமையை எண்ணி வாழுவோரும் உண்டு.

இங்கே பவுல் தனது ஊழிய அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளுகிறபோது, அநேக நாட்கள் பிரயாசத்திலும், வருத்தத்திலும், கண்விழிப்புக்களிலும், பசியிலும், உபவாசத்திலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்ததாகக் கூறுகிறார். பவுல் கடவுளுக்காக பெரிய பணிகளைச் செய்த ஒருவர். அவர் எழுதிய நிருபங்கள் அவரது ஊழியப் பயணத்தையும், கிறிஸ்துவின் மீது அவருக்கிருந்த அன்பையும், பக்தியையும் எமக்கு எடுத்துக்காட்டுவதாய் உள்ளது. அப்படிப்பட்ட ஒரு ஊழியன் இவ்வளவு பாடுகளையும் கடந்து வந்திருக்கிறார் என்று சொன்னால், அதிலிருந்து எமக்கு புலப்படுவது என்ன? கிறிஸ்தவ வாழ்வென்பது இலகுவானதொன்றல்ல. சுகபோகமாய் வாழுவதல்ல. உலக ஆஸ்திகளும், இன்பங்களும் பெருகி வாழும் வாழ்வல்ல. கிறிஸ்தவ வாழ்வென்பது, கிறிஸ்துவோடு உறவில், அவருடைய வார்த்தையில் ஒன்றித்து, கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதை முதன்மையாகக் கொண்டு வாழ்வதேயாகும். எந்த சூழ்நிலையிலும், சமாதானத்தோடு, சந்தோஷமாக வாழும் வாழ்வாகும். கிறிஸ்துவோடு வாழும் வாழ்வில் வரும் பாடுகள் யாவும் எம்மை உருவாக்குமேயொழிய, அழிக்காது. கிறிஸ்துவுக்குகந்த பாத்திரங்களாய் எம்மை வனையுமேயொழிய, உடைக்காது.

பிரியமானவர்களே, உங்களது வாழ்வில் வரும் உபத்திரவங்களுக்கு முகங்கொடுக்க முன்நிற்கிறீர்களா? அல்லது பயந்துபோய் என்ன செய்வதென அறியாதவர்களாய் கலங்கி, கிறிஸ்துவின் உறவிலிருந்து விலகிப்போக எண்ணுகிறீர்களா? அல்லது இவ்வுலக ஆசீர்வாதங்களுக்காக மட்டுமே கிறிஸ்துவின் நம்பிக்கையுள்ளவர்களாயிருக்க நாடுகிறீர்களா? இந்த உலகத்தில் எமது வாழ்வென்பது நிரந்தரமற்றது. கிறிஸ்துவோடு வாழும் வாழ்வென்பது என்றும் அழியாத நித்தியமான வாழ்வு. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்ஜியத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்கு பூரணமாய் அளிக்கப்படும். 11பேதுரு 1:11

***சிந்தனைக்கு:*** அழிந்துபோகும் ஆஸ்தியா, அழியாத ஆன்மாவா எது முக்கியம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: யோவான் 13:1–17

## தாழ்மை முக்கியம்

*நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். யோவான் 13:14*

செப்டெம்பர் 23 திங்கள்

ஆண்டவர் இந்த உலகத்தில் வாழ்ந்திருந்தபோது, தம்மைச் சுற்றியிருந்தவர்களுக்கும், தம்மைப் பின்பற்றியவர்களுக்கும், தமது சீஷருக்கும் பலவித போதனைகளைச் செய்தும், தேவனுடைய வார்த்தைகளைக் கற்றும் கொடுத்தும், அவர்களைச் சரியான பாதையில் வழிநடத்தி வந்தார். இப்போது தம்மை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப் போகும் இந்தக் கடைசிவேளையில், தமது சீஷர்களோடு கடைசி இராப்போசனத்துக்காகப் பந்தியிருக்கையில், கடைசிப் போதனையாக ஒரு காரியத்தைச் செய்து காட்டி கற்றுக்கொடுக்கிறார். சீஷர்களை உட்காரவைத்து, பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து, அவர்கள் ஒவ்வொருவருடைய கால்களையும் கழுவி, துணியினால் துடைக்கிறார். இந்த வேளையிலும், பேதுரு வழக்கம்போலவே முந்திக்கொண்டு, "நீர் என்னுடைய கால்களைக் கழுவ நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்" என்றான். அப்பொழுது இயேசு, "நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை" என்கிறார். அதற்குப் பின்னர் அவன், "என் கால்களையும், கைகளையும், என் தலையையும் கழுவும்" என்று தன்னை ஒப்புக்கொடுக்கிறான்.

இந்தச் செயலின் மூலமாக ஆண்டவர் சொல்லிக்கொடுத்த பாடம் என்னவென்றால், "ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" என்பதே. இதன் அர்த்தம் என்ன? ஒருவருக்கொருவர் எப்போதும் கால்களைக் கழுவிக்கொண்டிருப்பது அல்ல. அதற்கும் மேலான ஒரு படிப்பினையையே ஆண்டவர் சொல்லிக்கொடுத்தார். "என்னை ஆண்டவர் என்றும் போதகர் என்றும் சொல்லுகிறீர்களே, நானே உங்களுடைய கால்களைக் கழுவியுள்ளேன்" என்கிறார். அதாவது ஆண்டவராயும், போதகராயும் தலைமைப் பீடத்தில் இருக்கிறவன் தாழ்மையாய்ப் பணிசெய்ய அழைக்கப்பட்டிருக்கிறான். அவன் பணிசெய்வதற்காக எவ்வளவுக்கும் தன்னைத் தாழ்த்த ஆயத்தமுள்ளவனாய் இருக்கவேண்டும் என்பதேயாகும். தலைமைப் பீடத்தில் இருப்பவர்களுக்குப் பொதுவாக எல்லாரும் மதிப்பும் மரியாதையும் கொடுப்பது வழக்கம். எவ்விடத்தில் அவர்கள் இருந்தாலும் அவர்களை உயர்வாகப் பேசி, கனப்படுத்துவர். இது அவர்களைக் குறித்து மற்றவர்கள் நடந்துகொள்ளும் விதங்கள். ஆனால் தலைமைப் பீடத்தில் இருப்பவர்கள் மனதில் எப்போதும் தங்களைக் குறித்ததான எண்ணங்களும், பெருமைகளும் இல்லாமல், தாழ்மையுள்ளவர்களாய் இருக்கவேண்டும். மற்றவர்களைத் தங்களிலும் மேன்மையானவர்களாய் எண்ணும் மனப்பான்மையோடு இருக்கவேண்டும். இதையே இயேசு கற்றுக்கொடுத்தார். நாமும் அதைப் பின்பற்றுவோமா! அகந்தை வந்தால் இலச்சையும் வரும், தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு. நீதி.11:2

***சிந்தனைக்கு:*** நீ உயர்த்தப்படும்போது, தாழ்ந்திருக்க தயாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்
24
செவ்வாய்

## தாழ்ந்த சிந்தை

*அகந்தை வந்தால் இலச்சையும் வரும், தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு.*
*நீதிமொழிகள் 11:2*

வேத வாசிப்பு: நீதி 11:1–31

"பாலர் வகுப்பு எழுத்துப் போட்டியில் நான் பெற்ற பெறுபேறுகளுக்கும், பரிசுகளுக்கும் அளவேயில்லை. எனது கண்முன்னால் நான் பெற்ற சகல பெறுபேறுகளுக்குமான விருதுகள் எல்லாம் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றை ஒவ்வொரு முறையும் பார்க்கும்போது, என்னையறியாமலேயே எனக்குள் ஒரு பெருமையும், அகந்தையும் உருவானது. எனக்குள் பெருமிதம் கொள்வதில் சந்தோஷமாகவே இருந்தேன். ஆனால் நான் உயர் வகுப்புக்குச் சென்றபோது, நான் முதல் பரீட்சையில் குறைந்த பெறுபேறுகளையே பெற்றேன். அடுத்தமுறை நான் தோல்வியடைந்தேன். இதை என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை வாய்விட்டு அழுதேன். அப்பொழுது தான் எனக்குள் ஊறிக்கிடந்த பெருமையை உணர்ந்தேன். நான் தோல்வியடைந்ததை என்னால் ஒத்துக்கொள்ள எனது பெருமை எனக்கு இடங்கொடுக்கவில்லை. ஆனால் ஒரு ஆசிரியர் என்னை அணுகி, நான் விட்ட பிழைகளை எனக்கு உணர்த்தினார். அதன்பின்னர் இன்னமும் திறமையாக எழுதக்கூடிய ஒரு நிலைக்கு நான் வந்தேன். ஆகவே தாழ்ந்துபோவது எமது வாழ்வுக்கும் அநேக பாடங்களையும், முன்னேற்றங் களையும் தரும் என்பதையும், அதேவேளை பெருமை நம்மை தப்பான வழிக்குள் ளேயே தள்ளும் என்பதையும் அறிந்துகொண்டேன்." இப்படியாக ஒரு சகோதரி எழுதியிருந்த அவரது கதையை நான் வாசித்தேன்.

நீதிமொழிகளை எழுதிய சாலொமோன் தேவனால் ஞானம் பெற்ற ஒரு ஞானி. அவர் பல காரியங்களை 11ம் அதிகாரத்தில் குறிப்பிட்டிருந்தாலும், தாழ்ந்த சிந்தையுள்ளவர் களிடத்தில் ஞானம் உண்டு என்கிறார். தாழ்ந்த சிந்தையுள்ளவர்கள் பலதையும் கற்றுக் கொள்ள ஆயத்தமாய் இருப்பார்கள். தங்களைத் திருத்திக்கொள்ள முன்னிற்பார்கள். கர்த்தர் தங்களை அவருடைய சித்தப்படியாக வனைந்துகொள்ள இடமளிப்பவர்களாய் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் என்றைக்கும் இலச்சையடையார்கள். ஆனால் பெருமையுள்ளவர்களோ தங்களுக்கு எல்லாமே தெரியும் என்ற மமதையில் பிறர் சொல்வதையோ, நல்லாலோசனைகளையோ கேட்கமாட்டார்கள். அவர்களுக்கு அது விருப்பமும் கிடையாது. எப்போதும் தாங்கள் செய்வதே சரி, தாங்கள் சொல்வதே நிஜம் என்ற போர்வையில் தங்கள் விருப்பம்போல் நடந்து கடைசியில் இலச்சையும் அடைவார்கள். சாலொமோனும் தன் வழிநடந்து தேவனைவிட்டு அந்நிய வணக்கத் துக்குச் சென்றவரல்லவா! அவருடைய ஞானம் அவருக்கு உதவவில்லைப்போலும்! நாம் எப்பொழுதும் தாழ்மையுள்ளவர்களாய், இருக்கக் கற்றுக்கொள்வோம். அதுவே நமது வாழ்வுக்குப் பயனுள்ளதாய் இருக்கும். இதைக்குறித்து யாக்கோபு எழுதும் போது, கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள் அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார் (யாக்கோபு 4:10) என்கிறார்.

***சிந்தனைக்கு:*** நருங்குண்டதும் நொருங்குண்டதுமான இருதயம் உள்ள வனையே கர்த்தர் நோக்கிப் பார்க்கிறவராய் இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: பிலி 2:1–8

## வெற்றியிலும் தாழ்மை

*சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்.*
*பிலிப்பியர் 2:7–8*

செப்டெம்பர் 25 புதன்

கால்பந்தாட்டப் போட்டி ஒன்று நடைபெற்றது, ஒரு குழு அமோக வெற்றியும் ஈட்டியது. வெற்றியை வெகு விமரிசையாகக் கொண்டாடிக்கொண்டிருந்த சமயத்தில், வெற்றி பெற்ற குழுவின் தலைவர் விலகிச் சென்று, அங்கிருந்தவர்கள் குளிர்பானம் குடித்து விட்டு எறிந்துவிடுகின்ற கோப்பைகளையும், உணவுண்ட பீங்கான்களையும் பொறுக்கி எடுத்து குப்பைத் தொட்டியில் போட்ட வண்ணமாகவே இருந்தார். இதை ஒருவர் படம்பிடித்து யூ-டியூபிலே போட, இதைப் பார்த்த ஒருவர், இவரைப்போல தாழ்மையான நபரை வாழ்வில் சந்தித்ததேயில்லை என்று தனது கருத்தைப் பதிவிட்டிருந்தாராம்.

கிறிஸ்து தமது பரலோக மேன்மைகளையெல்லாம் துறந்தவராய், அவருக்குப் பகைவர் களாகிய நம்மை மீட்பதற்காக, எம்மோடுகூட தம்மை இனங்காணவென்று தம்மை தாழ்த்தி ஒரு மனிதனாக வந்தார், அதாவது தாழ்மையின் உருவாய் வந்தார். அவர் தேவனுடைய ரூபமாய் இருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், அடிமையின் ரூபமெடுத்து மனுஷசாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவும், அவருடைய திட்டத்தை வெற்றியாக முடித்துப்போடவும், கிறிஸ்து தம்மைத் தாழ்த்தி தம்மை ஒப்புக்கொடுத்தார். தமது ஊழிய காலங்களிலும் அதே தாழ்மையைக் கடைப் பிடித்தார். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவர் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தியோ, அல்லது பிதாவை வேண்டிக்கொண்டு, தமக்குத் தீமையான எதுவும் நடைபெறாதபடி தம்மைப் பாதுகாக்கவோ அவர் முயற்சிக்கவில்லை. முற்றிலுமாய் தம்மைத் தாழ்த்தி, தேவசித்தம் செய்வதெற்கென்றே தம்மை ஒப்புக்கொடுத்தார்.

தேவபணி செய்யவும், தேவசித்தம் செய்யவும் அர்ப்பணித்திருக்கிறோம் என்றால், அது பெருமைக்குரிய காரியமா? அல்லது கிறிஸ்துவின் தாழ்மையைத் தரித்துக்கொண்டு செய்யவேண்டிய காரியமா? கிறிஸ்து தம்மைத் தாழ்த்தியதுபோல நாமும் நம்மைத் தாழ்த்தி தேவதிட்டத்துக்கு நம்மை ஒப்புவித்திருக்கிறோமா? பிரசங்கிப்பதும், ஆராதனை நடத்துவதும், சாட்சிபகிருவதும் மட்டும் தேவபணி அல்ல. ஆஸ்பத்திரி ஊழியங்களும், முடியாதவர்களுக்கு உதவுவதும், வயோதிபருக்கு உதவுவதும், அவர்கள் ஆடைகளை துவைத்துக் கொடுப்பதும், அவர்கள் வீசியெறிந்திருக்கும், கடதாசிகளையும், குளிர்பான கோப்பைகளையும் பொறுக்கி, குப்பைத் தொட்டியில் வீசுவதுங்கூட ஊழியங்களே. இவற்றிற்கெல்லாம் தாழ்மையான உள்ளம் வேண்டும். நம்மிடம் அது உண்டா? ஏனெனில், தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கை யையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். பிலிப்பியர் 2:13

*சிந்தனைக்கு:* உயர்விலும் என்னைத் தாழ்த்தி கிறிஸ்துவின் வழி நடக்க எப்போதும் சிந்தையாக இருப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்
26
வியாழன்

## மனத்தாழ்மையுள்ளவன் கனமடைவான்

*மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும், மனத்தாழ்மையுள்ளவனோ கனமடைவான். நீதிமொழிகள் 29:23*

வேத வாசிப்பு: நீதி 29:18–27

வீட்டைத் துடைத்து சுத்தம்பண்ணிய பின்பு, வீட்டின் எஜமானி வந்து, சரியாகச் சுத்தம் செய்யவில்லையே என்று குறை சொன்னபோது, அந்தப் பணிப்பெண் மீண்டும் அந்த இடங்களைப் பொறுமையாக சுத்தம்பண்ணினாள். அப்பொழுது அந்த எஜமானி, "இதற்கு முன்னிருந்த பெண்ணுக்கு நான் இப்படிச் சொன்னால் அவள் என்னோடு சண்டை பிடித்து, வேலையையும் விட்டுவிட்டுச் சென்றுவிட்டாள். ஆனால் நீயோ மிகவும் மனத்தாழ்மையாய் நடந்துகொண்டாய்" எனப் பாராட்டினாள். இதைத்தான் சாலொமோன் இங்கே குறிப்பிடுகிறார். மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும், மனத்தாழ்மையுள்ளவனோ கனமடைவான். நமது குடும்பங்களிலும், சபையிலும், ஐக்கியங்களிலும் நாளாந்தம் நாம் சந்திக்கும் மனிதர்கள் மத்தியிலும் பல்வேறுபட்ட குணாதிசயங்களைக் கொண்டவர்கள் இருக்கலாம். அவர்களையெல்லாம் நாம் அனுசரித்து நடக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் வரலாம். அந்த வேளைகளில்தான் இந்த மனத்தாழ்மை நமக்கு அதிகளவில் தேவைப்படும் எனலாம். யார் எதைச் சொன்னாலும், மறுஉத்தரவு சொல்லும்போது, நாம் எப்படியாகப் பேசுகிறோம், நமது வாயில் இருந்து வெளிவரும் வார்த்தைகள், எப்படியாக மற்றவர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை நாம் உணர்ந்து பேசினால், எத்தனையோ பிரச்சனைகளை நாம் தவிர்த்துக்கொள்ளலாம்.

ஒருமுறை ஆராதனையை வழிநடத்துவோர் ஒன்றாகக் கூடி, அடுத்த காலாண்டுக்கான ஒழுங்குகளைப் போட்டுக்கொண்டிருந்தபோது, ஒரு விடயம் எல்லாருடைய கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது. அதைக்குறித்து, பேசப்பட்டபோது, பெரிய வாக்குவாதங்களும், சிலருக்கு கோபமும் உண்டானது. எந்தவொரு முடிவுக்கு வருவதாகவும் தெரியவில்லை. குருவானவரும் என்ன செய்வதென்று திகைத்தவராய் இருந்தார். அந்நேரத்தில் அக் குழுவில் இருந்த ஒருவர், வாக்குவாதம் செய்வதற்காக இந்த விடயம் முன்வைக்கப்படவில்லை. இதற்கு ஒரு முடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மட்டுமே இது முன்வைக்கப்பட்டது. இதனால் யாருக்காவது மனச்சஞ்சலம் ஏற்பட்டிருந்தால், இதை முன்வைத்தவர் சார்பில் நான் அனைவரிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்றார். சத்தம் அடங்கியது, அந்த இடம் உடனடியாகவே அமைதியானது. அனைவரும் தாங்கள் பேசிய வார்த்தைகளை நினைத்து தலைகுனிந்தனர். இதுதான் மனத்தாழ்மையின் செயற்பாடு. தான் செய்யாத தவறுக்காக, மற்றவர் சார்பில் அவர் மனத்தாழ்மையாய் மன்னிப்புக் கோரினார். அது அனைவரின் மனங்களையும், அந்த சூழ்நிலையையும், ஏன் அந்தப் பிரச்சனையையும் மாற்றிப்போட்டது. மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்குங்கள். எபேசியர் 4:2

***சிந்தனைக்கு:*** மனத்தாழ்மை என்பது பேச்சிலல்ல, செயலில் வெளிப்படும் ஒன்றாகும். எனது செயல் எப்படிப்பட்டது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: நீதி 22:1–5

செப்டெம்பர் 27 வெள்ளி

## கர்த்தருக்குக் கொடுக்கும் கனம்

*தாழ்மைக்கும், கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும், மகிமையும் ஜீவனுமாம்.*
*நீதிமொழிகள் 22:4*

பாடசாலையில் படிக்கும்போது, தான் ஒரு ஆசிரியரைக் கிண்டல்பண்ணி மாட்டிக் கொண்டதாகவும், அதற்குத் தண்டனையாக மதிய உணவு வேளையில் தினமும் வந்து தான் கொடுக்கும் ஒரு கணக்கைச் செய்து காட்டவேண்டும் என்று ஆசிரியர் தனக்குச் சொல்லியதால் தான் அதைச் செய்து, அதனாலேயே கணக்குப் பாடத்தில் தனக்கு ஆர்வம் வந்ததாகவும் ஒருவர் சொன்னார். அதன் பின்னர் தான் தினமும் அவ்விதமாக அந்த ஆசிரியரிடம் சென்று தனது சந்தேகங்களையும், தனக்குத் தெரியாதவற்றையும் கேட்டதாகவும், அவரும் பொறுமையாக தனக்குச் சொல்லிக் கொடுத்ததால் தான் ஒரு பொறியியலாளராக வரக்கூடிய சந்தர்ப்பமும் அமைந்தது என்றார். இவ்விதமாக பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடும் ஆசிரியர்களைக் கண்டுபிடிப்பது அபூர்வம். அது மதிய உணவுவேளை, அந்நேரத்தில் ஆசிரியர்கள் சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுக்கும் வேளை. ஆனால் இவரோ ஒரு மாணவனுக்காகத் தனது ஓய்வுநேரத்தையும் பொருட் படுத்தாது, அவனை உருவாக்குவதையே நோக்காகக் கொண்டார். கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடு வாழுபவர்களிடமே இவ்வித குணாம்சங்கள் இருக்கும்.

இங்கே சாலொமோன் கூறுவது என்னவென்றால், தாழ்மைக்கும், கர்த்தருக்குப் பயப் படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம். இங்கே தாழ்மைக்கும், கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் ஒரு தொடர்புண்டு என்று விளங்குகிறது. கர்த்தருக்கு பயப்படுகிறவன், கர்த்தர் தன்னை எல்லாவேளைகளிலும் கண்ணோக்கிய வண்ணம் இருக்கிறார் என்பதை அறிந்தவனாக, தனது பணியைக் கவனமாகச் செய்வான். பணி யைச் செய்ய தாழ்ந்து போகவேண்டியிருந்தாலும் அவன் அதனைப் பொருட்படுத்த மாட்டான். ஏனெனில் அவன் விருப்பமெல்லாம் கர்த்தருக்குப் பயந்து வாழ்வதே. தனது வாழ்விலே கர்த்தருடைய சித்தத்தைச் செயற்படுத்துவதே.

நமது வாழ்வில் நாம் எப்படிப்பட்ட சிந்தனையைக் கொண்டிருக்கிறோம்? கர்த்தருக்கு பயந்து வாழ நம்மை அர்ப்பணித்திருக்கிறோமா? எதைச் செய்தாலும் அதை மனுஷர் களுக்கென்று செய்யாமல், தேவனுக்கென்று முழுமனதோடு செய்ய நம்மால் கூடுமான வரை செய்வோமாக. அதையே பவுலும் தனது நிருபங்களில் எழுதியிருக்கிறார். நாம் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவர்கள் என்றால், அவர்கள் நம்மைக் காணக்கூடாத வேளையில், நமது இஷ்டப்படி காரியத்தைச் செய்யப் பார்ப்போம். ஆனால் நம்மைக் காண்கிற தேவனைப் பிரியப்படுத்தியும், அவருக்குப் பயந்தும் நடப்பவன் என்றைக்கும் உண்மையுள்ளவனாகவே இருப்பான். நாம் எப்படிப்பட்டவர்கள்? கர்த்தருக்குப் பயப் படும் பயம் சுத்தமும் என்றைக்கும் நிலைநிற்கிறதுமாயிருக்கிறது. சங்கீதம் 19:9

***சிந்தனைக்கு:*** மனுஷருக்குப் பயப்படும் பயம் கண்ணியில் நம்மை சிக்க வைக்கும், கர்த்தருக்குப் பயப்படும் பயமோ கண்ணியமாய் நடக்க நம்மை உந்துவிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்
28
சனி

## இஸ்மவேல்

*தன்னோடே பேசின கர்த்தருக்கு நீர் என்னைக் காண்கின்ற தேவன் என்று பேரிட்டாள்.*
*ஆதியாகமம் 16:13*

வேத வாசிப்பு: ஆதி 16:7–16

***தேவனுடைய செய்தி:***

கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞனாக வாழாதே. தேவ பிள்ளைகளை புறக்கணிக்காதே.

***தியானம்:***

சாராயிடமிருந்து விலகி ஓடிய ஆகார், 86 வயது நிரம்பிய ஆபிராமுக்கு பெற்ற பிள்ளைக்கு இஸ்மவேல் என பெயரிட்டாள். பாலைவனத்திலுள்ள பிர்லாகாய் ரோயீ என்ற கிணற்றருகே கர்த்தர் ஆகாரிடம் பேசினார், "நீர் என்னைக் காண்கிற தேவன்" என்று கூறிய அவள், "இத்தகைய இடத்திலும் தேவன் என்னைக் காண்கிறார், பொறுப்போடு கவனிக்கிறார். நானும் தேவனைக் கண்டேன்" என்கிறாள்.

***விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:***

அவர் நம்மைக் காண்கின்ற தேவன். எல்லாநேரத்திலும், எப்பொழுதும்!

***பிரயோகப்படுத்தல் :***

"எஜமானியிடம் திரும்பிப்போய், அவள் கையின்கீழ் அடங்கியிரு" என கூறப்பட்ட போது ஆகார் செய்தது என்ன? இன்று நாம் யாருக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டியது அவசியமாயுள்ளது?

இயேசுவிடம் அன்பு செலுத்தாத ஒருவரை நான் எப்படி நேசிப்பது?

வசனம் 12ன்படி, இஸ்மவேலின் தன்மைகள் என்ன? அவன் கொடியவனா? அடங்காதவனா? அலைந்து திரிபவனா? ஏன்?

கர்த்தர் நம் அங்கலாய்ப்பைக் கவனித்து கேட்பாரா? கேட்பாராயின் நமது கடமை என்ன?

பலவிதங்களில் தேவனுடைய மக்களைப்போல காணப்படினும், அவ்வாறு இல்லாத இஸ்மவேலரைப்போல இருப்பவர்களைக் குறித்து முழு வேதாகமமும் என்ன கூறுகின்றது?

இன்று நமது பிள்ளைகள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என நான் நிதானித்ததுண்டா?

***எனது சிந்தனை:***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✝ வேத வாசிப்பு: கொலோ 3:8–17

# அப்பாவின் சப்பாத்து

*...தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும் நீடிய பொறுமையையும், தரித்துக்கொண்டு... கொலோ. 3:12*

சிறுபிள்ளைகள், தமது செருப்பு, சப்பாத்துக்களை விட்டுவிட்டு, அப்பாவின் அல்லது அம்மாவின் பெரிய அளவிலான செருப்பு, சப்பாத்துக்களை தங்கள் சின்னப் பாதங் களில் அணிந்து நடக்க முயற்சிப்பதை நாம் பல சந்தர்ப்பங்களில் கண்டிருக்கிறோம். அவர்களுக்கு அது அலாதிப் பிரியம். அப்பாவைப்போல, அல்லது அம்மாவைப்போல தானும் நடப்பதாக ஒரு சந்தோஷமும், திருப்தியும்.

இதுபோலவே, இயேசுவைப்போல நடப்பதில் உண்டாகும் சந்தோஷமும் திருப்தியும் நம்மிடம் உண்டா? அதற்கு நாம் அவரைப்போல நடக்கவேண்டுமல்லவா! இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அவர் நடந்ததுபோல நடக்கவே நாமும் அழைக்கப் பட்டிருக்கிறோம். அது கட்டாயத்தின்படியல்ல, விருப்பத்தோடு நடக்க அழைக்கப்பட் டுள்ளோம். இங்கே பவுல் கொலோசெயருக்கு எழுதும்போது, எல்லா கெட்ட குணங் களையும் களைந்துபோட்டு, பழைய சுபாவங்கள், பாவங்கள் ஆகிய பழைய மனிதனைக் களைந்துபோட்டு, புதிய மனிதனாகிய கிறிஸ்துவின் சுபாவங்களைத் தரித்துக்கொள்ளுங்கள். கிறிஸ்துவின் சுபாவமாகிய சாந்தம், தயவு, மனத்தாழ்மை, உருக்கமான இரக்கம், நீடிய பொறுமை இவற்றைத் தரித்துக்கொள்ளுங்கள் என்கி றார் பவுல். மேலும், "கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். எல்லாவற்றிலேயும், பூரண சற்குணத்தின் அன்பைத் தரித்துக்கொள் ளுங்கள். வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது எதைச்செய்தாலும், அதையெல் லாம் கர்த்தராகிய இயேசு என்னும் நாமத்திலே செய்து, பிதாவாகிய தேவனைச் ஸ்தோத்தரியுங்கள்" என்றும் எழுதுகிறார்.

நாம் கிறிஸ்துவினுடையவர்கள் என்றால், அவரை நாம் பிரதிபலிக்க வேண்டுமல்லவா. நம்மோடு பேசுபவர்கள், பழகுகிறவர்கள், நம்மை அவதானிக்கிறவர்கள் யாவரும் நம்மில் கிறிஸ்துவைக் காணவேண்டும். அப்படியில்லாமல் நாம் கிறிஸ்துவினுடைய வர்கள், அவரைப் பின்பற்றுபவர்கள் என வாய்ப்பேச்சில் எந்த பிரயோஜனமுமில்லை. பிரியமானவர்களே, நம்மை மாற்றிக்கொள்வோம். இந்த உலகத்துக்குரிய வேஷம் தரியாமல், கிறிஸ்துவினுடைய சுபாவத்தை நம்மில் தரித்துக்கொள்வோம். அவருக்கு பிரியமானதையே நம் வாழ்வில் கடைப்பிடிப்போம். நம்மூலமாக கிறிஸ்துவின் நாமம் மகிமையடையட்டும். அவருக்காய் பிரகாசிக்கும் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்வோம். மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர் களாக தேவனுடைய வழிகளிலே நடப்போம். "நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைப் தொடர்ந்து வரும்படிக்கு உங்களுக்கு மாதிரியை முன்வைத்துப் போனார். 1பேதுரு 2:21

*சிந்தனைக்கு:* கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதற்கு அவருடைய சப்பாத்துக்குள் நமது கால்களை விடுவோமா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர்
30
திங்கள்

## தாழ்த்தினான் சுகமடைந்தான்

*தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே, யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது, ...அவன் சுத்தமானான். 2இராஜாக்கள் 5:14*

வேத வாசிப்பு: 2இராஜா 5:1–14

பிரபல்யமான ஒரு ஊழியக்காரரைச் சந்திப்பதற்காக மிகவும் ஆவலோடு இந்தியா சென்றார் ஒரு சகோதரி. ஆனால் அங்கே சென்றபோது, அவரைச் சந்திப்பதற்கு அனுமதி பெறவேண்டும், திடீரென சந்திக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இதனால் மிகவும் மனமொடிந்துபோன அந்த சகோதரி, "அந்த ஊழியர் செய்தி கொடுக்கும்போது, எவ்வளவு உருக்கமாகக் கொடுக்கிறார். ஆனால் நான் நாடு கடந்து வந்ததாக அறிவித்தும், அவர் எனக்கு எந்த இரக்கமும் காட்டவில்லையே" என்று சொல்லி வருத்தப்பட்டார்.

இங்கே நாகமான் என்பவன் பெரியதொரு படைத்தலைவன். அரசனுக்கு மிகவும் வேண்டப்பட்டவன். ஆனால் அவன் நெடுநாளாக ஒரு குஷ்டரோகியாய் இருந்தான். இப்பொழுது அவன் எலிசா தீர்க்கதரிசியைக் குறித்துக் கேள்விப்பட்டதும், மிகவும் நம்பிக்கையோடு, ஆரவாரமாக, அரசனிடமும் அனுமதி பெற்றுக்கொண்டு வருகி றான். அங்கு வந்தபோது, எலிசா வெளியில் வரவில்லை, அவனைப் பார்க்கவில்லை. ஆள் அனுப்பி நீ போய் யோர்தானிலே ஏழுதரம் முழுகினால் உன் மாம்சம் சுத்தமாகி, நீ சிறுகுழந்தையின் மாம்சம் போலாகி விடுவாய் என்று சொல்லி அனுப்பி விட்டான். இதைக் கேட்ட நாகமான் மிகவும் கோபங்கொண்டான். தான் எவ்வளவு பெரிய படைத்தலைவன், தன்னை எலிசா முகங்கொடுத்துக்கூட பார்க்கவில்லையே என்பது அவனது கோபம். அத்தோடு தனக்கு வந்து மரியாதை செய்யாத இவர் சொல்வதை நான் ஏன் கேட்கவேண்டும் என்று அவனது பெருமையும் அவனுக்கு இடங்கொடுக்கவில்லை. இறுதியில் அவனுடைய ஊழியர்கள், "இதைவிடக் கடின மான ஒரு காரியத்தை தீர்க்கதரிசி சொல்லியிருந்தால், நீர் செய்யமாட்டீரோ. இதைச் செய்துபாரும், ஒருவேளை நீர் சுத்தமாவீர்" என்று சொன்னபோது, மனம்மாறிய அவன் யோர்தானில் இறங்கினான். ஏழுதடவை முழுகினான், குணமானான்.

அவன் யோர்தானில் மட்டும் இறங்கவில்லை. தனது பெருமையில் இருந்தும் கீழ் இறங்கினான். தான் பெரிய படைத்தலைவன் என்ற எண்ணத்தில் இருந்து கீழ் இறங்கினான். தேவனுக்குக் கீழ்ப்படிய மனமற்றிருந்ததில் இருந்து கீழ் இறங்கினான். மொத்தத்தில் தாழ்மையாய் இறங்கினான். குணமடைந்தான். பெருமையில் இருக்கும் வரைக்கும் அவனுக்குச் சுகம் கிடைக்கவில்லை. இவ்வண்ணமே நாமும் எதிலெல்லாம் ஏறி உச்சத்தில் இருக்கிறோமோ அவற்றிலிருந்து இறங்குவோமாக. தாழ்மையாய் இறங்குவோமாக. "இகழ்வோரை அவர் இகழுகிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்." நீதிமொழிகள் 3:34

***சிந்தனைக்கு:*** மனத்தாழ்மையோடு, சாந்தத்தோடு, தேவபயத்தோடு தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவரைப் பின்பற்றுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: யோபு 7:1-18

ஒக்டோபர் 1 செவ்வாய்

## வாழ்க்கை பொய்யல்ல!

*என் நாட்கள் ... நம்பிக்கையில்லாமல் முடிந்துபோகும். என் நாட்கள் மாயைதானே. யோபு 7:6,16*

தட்டையான சொக்லேற்றுக்களைத் தவிர்த்துவிட்டு, அழகிய முட்டை வடிவிலான வெளிநாட்டு சொக்லேற்று பெட்டியை வாங்கினேன். முட்டை வடிவம் முழுவதிலும் சொக்லேற்று இருக்கும் என்ற ஒரு எண்ணம். மினுங்கிக்கொண்டிருந்த கவறை நீக்கிவிட்டு, மிகுந்த ஆவலோடு ஒரு கடி கடித்தேன். இது என்ன? வாய்க்குள் அகப்பட்டது ஒரு முட்டைக்கோது அளவிலான சொக்லேற்று மாத்திரமே. உள்ளே பார்த்தால் ஒன்றுமேயில்லை. வெறுமை, அது ஒரு முட்டையின் மாயைத்தோற்றம்தான் என்பதை அறிந்தபோது பெருத்த ஏமாற்றமாய் இருந்தது. இப்படித்தான் இன்று நம்மில் அநேகருடைய வாழ்வும் காணப்படுகிறது. இனிப்பானது சந்தோஷமானது நிறைவானது என்று எண்ணி நாடித்தேடுகிற பலதும், இறுதியில் வெறுமையும் பயனற்றதும், ஒரு அர்த்தமுமே இல்லாததும், ஏமாற்றமுள்ளதாகவுமே காணப்படுகின்றன. ஆவலோடு வேலை தேடுகிறோம். பின்னர், அந்த வேலையே தொல்லையாகிறது. உயிருக்குப் பயந்து வசிப்பிடங்களை மாற்றுகிறோம்; பின்னர் அச்சூழ்நிலையே நமக்குப் பாதக மாகிவிடுகிறது. இன்பங்கள் துன்பங்களாகின்றன. இன்னும் பலருக்கு மாறாத வியாதி, தீர்வு கிடைக்காத ஏன் என்று விளங்காத பல தொல்லைகள், இவற்றால் இனி வாழ்ந்தென்ன என்றதான வெறுமை. ஆம், தேவை, நல்லது என்று நாடித் தேடிய எதுவும் வாழ்க்கைக்கு கைகொடுக்கவில்லை. அது தொல்லையே என அறிந்ததும் எல்லாமே பொய் என்ற முடிவுக்கு வந்துவிடுகிறவர்கள் பலர். நம் தேசத்தில் ஒரு வருடத்திற்கு ஏறத்தாழ 6000 தற்கொலைகள் நிகழ்வதாக ஆய்வுகள் கூறுகின்றன. அப்படியானால் ஒரு நாளைக்கு எத்தனை என்று கணக்கிட்டுப் பாருங்கள். நாம் 'பிறந்தோம், வாழ்ந்தோம், நாளை சாவோம்' என்று பலர் கூறக் கேட்டிருக்கிறோம்.

யோபு பக்தன்கூட ஆரம்பத்தில் கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் என்று சொன் னாலும், தன் வாழ்நாட்களில் நம்பிக்கையிழந்தவராக, அவை வெறும் 'மாயை' என்று அங்கலாய்த்தார் என்று வாசிக்கிறோம்.

செல்வம், அதிகாரம், புகழ், மேன்மை யாவும் இருந்தும், காலம் செல்ல நம்பிக்கை யிழந்து தவிப்பவர் பலர். அன்புகூட பொய்யாகும் அளவுக்கு உறவுகள் தடுமாறு கின்றன! ஆனால் தேவபிள்ளைகளாகிய நாம், இந்த வாழ்வு பொய் என்று மனக் கலக்கத்திலும் மறந்தும் சொல்லக்கூடாது. ஏனெனில் எல்லாவற்றுக்கும் தேவனிடம் பதிலுண்டு. தேவன் தந்த இந்த அழகிய வாழ்வை எந்த சந்தர்ப்பத்திலும் பொய் என்று சொல்லி தேவனைத் துக்கப்படுத்தக்கூடாது. மாறாக வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்து வாழப் பழகிக்கொள்வோமாக.

***சிந்தனைக்கு:*** இந்த அழகிய வாழ்வை மாயை என்று காட்டுகின்ற போலி- களை அடையாளம் கண்டு இன்றே அகற்றிப்போடுவேனா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர்
2
புதன்

## எழுத்தில் என் அனுபவங்கள்

*பிரசங்கியாகிய நான் எருசலேமில் இஸ்ரவேலருக்கு ராஜாவாயிருந்தேன்.*
*பிரசங்கி 1:12*

வேத வாசிப்பு: பிரசங்கி 1:12–17

1980ம் ஆண்டு காலப்பகுதிகளில் எழுதிவைத்த நாளேட்டுப் புத்தகங்கள் கண்களில் பட்டதும் புரட்டினேன். கண்கள் ஈரமாயின. என் தேவனை அறியாத காலத்தில் எழுதிய வரிகள் அவை. நான் மறந்துபோன அல்லது நினைத்துப் பார்க்க விரும்பாத பல சம்பவங்களும், தோல்விகளும், கோர்வையாக எழுதப்பட்டிருந்தன. மிகுந்த வேதனை யோடு மிகுதிப் புத்தகங்களையும் புரட்டினேன். 1990 களின் பின்னர் எழுதப்பட்ட வரிகளையும் கண்டேன். என் கிறுக்கல்கள் மாறவில்லை. ஆனால் எழுதப்பட்டிருந்த அனுபவங்களும், தேவனோடுள்ள உறவின் சாயலும் மாற்றமடைந்திருந்தது. இவற்றை மறுபடியும் பத்திரப்படுத்தி வைத்துள்ளேன். ஏன் தெரியுமா? எனக்குப் பின்னால், இப் பக்கங்களைப் புரட்டுகிறவர்கள் பயன் பெறட்டும் என்ற ஒரே நோக்கம்தான்.

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தனிச் சரித்திரம், ஒரு நோக்கம் இல்லாமல் யாரும் இப் பூமியில் வாழவுமில்லை, வாழ்ந்ததும் இல்லை. வாழப் போவதுமில்லை. தமது அன்றாட வாழ்வைக்குறித்து அலுத்துக்கொள்கிறவர்கள் பலருண்டு. ஆனால் அமர்ந் திருந்து ஆழமாக சிந்தித்தால், வெற்றியோ தோல்வியோ, நமது வாழ்விலும் ஒரு அர்த்தமுண்டு என்பதை நிச்சயம் கண்டு கொள்ளலாம். அர்த்தம் இல்லாததை தேவன் செய்யமாட்டாரே! வேதாகம பாத்திரங்கள் மாத்திரமல்ல, நமக்கு முன்னே வாழ்ந்துபோன பலருடைய வாழ்க்கை சரித்திரங்கள், இன்றும் நமக்கு பெரிய சவா லாக இருக்கின்றன. ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முன்னர் சாலொமோன் ராஜா, தன் முதிர்வயதிலே, தன் அனுபவங்களை அலசி ஆராய்ந்து, இளவயதின் காரியங் களை நினைவுகூர்ந்து, எல்லோருக்கும், முக்கியமாக வாலிபர்களுக்கு பிரயோஜனம் உண்டாக எழுதிவைத்த சுயசரிதைப் புத்தகம், இந்தக் காலத்திலும் பிரயோஜனமா யிருக்கிறது என்றால் எத்தனை ஆச்சரியம். அதுதான் பிரசங்கி புத்தகம். மனித வாழ்வின் இரண்டும்கெட்டான நிலையின் பக்கங்கள் இப்புத்தகத்தில் புரட்டிப் பார்க்கப் பட்டிருக்கிறது. சாலொமோன் ராஜா, தன் வாழ்வில் முயற்சித்து பரீட்சித்து ருசித்துப் பார்த்த சகலத்தையும், அவற்றினால் எவ்வித பயனுமில்லை என்று கண்டதையும், அதன் முடிவையும் கூட தெளிவாக எழுதியுள்ளார். இன்றும் அது நமக்குப் பயன் தருகிறது.

நாமும் இந்த எழுதும் பழக்கத்தை ஏன் ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது? 'என்ன உண்டு எழுதுவதற்கு' என்று எண்ணவேண்டாம். உள்ளதை உள்ளபடியும், தேவ வசனத்தில் கற்றுக்கொண்டதையும் தேவன் நம் உள்ளத்தில் வைக்கும் சிந்தனை களையும் எழுதி வைப்போம். நிச்சயம் இவைகள் யாருக்காவது எப்போதாவது பயனுள்ளதாக இருக்கும்.

***சிந்தனைக்கு:*** என் மாறுபட்ட உணர்வுகள் சிந்தனைகளை, தியான வேளையில் ஆவியானவர் கற்றுத்தருவதை பிறருக்குப் பயனுண்டாக, இன்றைய திகதி இட்டு இன்றே எழுத ஆரம்பிப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ரோமர் 8:28-32

ஒக்டோபர் 3 வியாழன்

## வாழ்வின் ஒரே நோக்கம்

*...அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்.*

*ரோமர் 8:29*

'மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான்.' இன்றும் ஏராளமானோருடைய பிரச்சினையும் இதுதான். நாமும்கூட பல சந்தர்ப்பங்களிலே எல்லாமே பொய் என்று சொல்லிவிடுகிறோம். நமது சூழ்நிலை அப்படி நினைக்கவும் சொல்லவும் செய்கிறது. வாழ்வே வெறுத்து, கடவுள் ஏன் மவுனமாக இருக்கிறார் என்று கேட்குமளவிற்கு சிலசமயம் மனமொடிந்து போகிறோம். திகைக்க வைக்கும் வியாதி, நம்பிக்கைத் துரோகம், மலிந்துவிட்ட மரணம், தொலைந்திடும் உறவு; இப்படிப்பட்டதான நெருக்கடிகளுக்குள் அகப்படுகிறவர்களால் கேள்விகளை எழுப்பாமல் இருக்க முடியாதுதான். அதற்காக அன்றைய பிரசங்கியைப்போல தேவபிள்ளைகளாகிய நாமும் இந்தச் சூழ்நிலைகளில் இன்று தடுமாறலாமா?

நம்மில் பலர் அறிந்ததொரு உதாரணம் இது. தன் வேலையை மகனின் தொந்தரவின்றி செய்வதற்காக, ஒரு உலக வரைப்படத்தை துண்டுதுண்டாகக் கிழித்துவிட்டு, திரும்பவும் ஒன்றுசேர்க்கும்படி மகனிடம் கொடுத்தார் அப்பா. இதனைப் பொருத்துவது சிறுவனுக்குக் கடினம் என்பது அப்பாவின் எண்ணம். ஆனால் ஒரு ஐந்து நிமிடத்துக்குள், 'முடிந்தது' என்ற சத்தம்கேட்டு திடுக்கிட்டார் அப்பா. அவ்வளவு சீக்கிரத்தில் எப்படி முடித்தாய் என்றார் அப்பா. 'அப்பா, இத் துண்டுகளின் மறுபக்கத்தில் ஒரு மனிதனின் பகுதிகளைக் கண்டேன். மனிதனைச் சரியாகப் பொருத்தினேன்; உலகப்படம் வந்துவிட்டது' என்றான் மகன். மனிதன் சரியானால் உலகம் சரியாகும் என்பது உண்மைதான். ஆனால் மனிதன் சரியாக, அவன் தன்னை, தன் நோக்கத்தைத் தானே அறியவேண்டுமே!

சூழ்நிலைகளையும் சூழ இருக்கிறவர்களையும் நோக்குவதால்தான் அநேக குழப்பங்களுக்கு பதில் கிடைப்பதில்லை. முதலாவது நம்மையும் நமது பார்வையையும் சரிப்படுத்தவேண்டும். அதற்கு நமது வாழ்வின் நோக்கத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும். உலகம் பல மாயையான நோக்கங்களை நமக்கு முன்னே வைக்கும். ஆனால், தேவகுமாரனுடைய சாயலுக்கு நாம் ஒப்பாகவேண்டும் என்பதுதான் நம்மை படைத்தவருடைய ஒரே நோக்கம் என்பதை வேதாகமம் நமக்குத் தெளிவாகப் போதித்திருக்கிறது. நமது ஒவ்வொரு அசைவும் மூச்சும் அந்த ஒரே நோக்கத்தையே வெளிப்படுத்தவேண்டும். பாடுகள் துயரங்களுக்கூடாகவும் அந்த ஒரே நோக்கத்தை நோக்கியே நாம் ஓடுகிறோம் என்பதைச் சரியாகப் புரிந்துவிட்டால், இந்த வாழ்வைப் போல ஒரு இனிய அனுபவத்தை, நாம் வேறு எங்கும் காணவேமுடியாது. தேவபிள்ளையே, என் வாழ்வின் நோக்கம் என்ன? என் வாழ்வில் தேவன் கொண்டுள்ள நோக்கம் என்ன? இரண்டும் ஒன்றாயிருக்கிறதா? சிந்திப்போம்.

***சிந்தனைக்கு:*** தேவன் நம்மீது வைத்திருக்கும் அந்த இனிய நோக்கத்தையே நாமும் நோக்குவோமா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர்
4
வெள்ளி

## வேறுபட்ட மனநிலைகள்

*தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும்.*
*பிரசங்கி 3:14*

வேத வாசிப்பு: ரோமர் 7:23–8:2

நமது மனதில் எழுகின்ற நினைவுகளைக்குறித்து நாம் எப்போதாவது ஆராய்ச்சி பண்ணியிருக்கிறோமா? அல்லது சிந்தித்தாவது இருக்கிறோமா? கடிவாளமில்லாத குதிரையைப் போன்றது நமது மனம். நாம் விழிப்போடு அதை அடக்கவில்லையானால் அது எங்கேயோ பறந்துசெல்லும். 'மனதின் யோசனைகள் மனுஷனுடையது' (நீதி.16:1). அதேசமயம், 'பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்' (நீதி.16:32) என்றும் வேதாகமம் சொல்லுகிறது. நமக்குள் எழும் சிந்தனைகளை நினைவுகளை சீர்தூக்கிப் பார்த்தால், அநேகமான வேளைகளிலே இரண்டு நேர் எதிரான நினைவுகளுக்கிடையில் நாம் போராடுவதை நாமே கவனிக்கலாம். "சரியா பிழையா? போவதா இல்லையா? கர்த்தருடைய வார்த்தையா? எனது விருப்பமா?" பவுலுக்கும் இந்தப் பிரச்சனை இருந்தது. தேவ பிரமாணத்தை நிறைவேற்ற நினைக்கும் மனதின் போராட்டத்திற்கும், பாவ பிரமாணத்திற்கு அடிபணிய துடிக்கும் மாம்சத்தின் போராட்டத்திற்கும் இடையே பவுல் போராடினார்.

நமக்கும் சிலசமயம் 'இது என்ன வாழ்வு' என்றிருக்கும்; அதேசமயம் 'வாழ்விற்கு அர்த்தமும் இருக்கும்' என்ற எண்ணமும் வரும். அன்றைய பிரசங்கியும் இப்படித்தான் இருந்தார். பிரசங்கி புத்தகம் முழுவதையும் நாம் படித்தால், இருவேறுபட்ட மனநிலைகளுக்கிடையில் பிரசங்கி போராடியதை புரிந்துகொள்ள முடியும். 'மாயை மாயை மாயை' என்று ஏறத்தாழ 37 முறை புலம்பியிருக்கிறார் பிரசங்கி. அதேசமயம், தேவனுக்குப் பயந்தவர்கள் நன்றாயிருப்பார்கள், தேவன் அதினதின் காலத்தில் சகலத்தையும் நேர்த்தியாகச் செய்திருக்கிறார் போன்ற வார்த்தைகளையும் அவர் தெளிவாகவே எழுதியிருக்கிறார்.

தேவபிள்ளையே, நீயும் குழம்பியிருக்கிறாயா? தேவனை நம்பக்கூடிய விதத்திலே காரியங்களும் இல்லை; அதேசமயம் அவரை நம்பாமல் இருக்கவும் முடியாது எனத் தடுமாறுகிறாயா? ஒருபுறம் விசுவாசம், மறுபக்கம் அவிசுவாசம். குழப்பம் வரட்டும். ஏனெனில் அதுதான் தெளிவைத் தரும். மனதில் குழப்பம் வரும்போதெல்லாம், பவுலடியார், இயேசுவின்மூலம் தான் விடுதலையானதை நினைப்பார். அந்த நினைவே அவருக்கு வெற்றியைத் தந்தது. எல்லாம் மாயை என்ற பிரசங்கிகூட இறுதியில் தேவனுக்குப் பயந்து நடப்பது ஒன்றே நம்மை வாழவைக்கும் என்று எழுதுகிறார். பின்னர் நமக்குள் போராட்டம் எதற்கு? ஏன் இரண்டு நினைவுகள்? எல்லாமே பாதகமாகத் தோன்றினாலும், அவற்றுக்கூடாக சகலத்தையும் சாதகமாக்கும் தேவனுடைய கரத்தை நோக்கிப் பார்க்கப் பழகிவிட்டால், அதுவே நமக்குக் கிடைக்கும் பெரிய வெற்றியாகும்.

***சிந்தனைக்கு:*** போராட்டம் நிறைந்த ஆத்துமாவே, ஆண்டவரிடத்தில் சரணடைந்துவிடு! இன்று ஜெபத்தைச் செய்து என்னை ஒப்புவிப்பேனா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ஆதி 17:1-14

ஒக்டோபர் 5 சனி

உடன்படிக்கை - விருத்தசேதனம்

*நான் சர்வவல்லமையுள்ள தேவன். நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு.*
*ஆதியாகமம் 17:1*

*தேவனுடைய செய்தி:*

நம்மை வாழவைப்பவர் தேவனே. நம்மை உயர்த்துபவரும் அவரே.

*தியானம்:*

1. நான் உன்னைப் பல நாடுகளின் தந்தையாக்குவேன்.
2. நான் உனது பெயரை மாற்றுவேன். இப்போது உனது பெயர் ஆபிராம், இனி உன் பெயர் ஆபிரகாம்.
3. நான் உனக்கு அநேக சந்ததிகளை கொடுப்பேன்.
4. உன்னிடமிருந்து புதிய நாடுகள் உருவாகும். பல அரசர்கள் உன்னிடமிருந்து எழும்புவார்கள்.
5. நான் உனக்கும் உனது சந்ததிக்கும் தேவன்.
6. கானான் நாடு முழுவதையும் தருகிறேன்.

இவை தேவன் ஆபிராமுடன் செய்த உடன்படிக்கை வாக்குறுதிகளாகும்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

இன்று கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும் விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை (கொலோ 3:11)

*பிரயோகப்படுத்தல் :*

திரள் ஜாதிக்கு தந்தையாக ஆபிராமுக்கு தேவன் சூட்டிய பெயர் என்ன? இன்று பெயர் மாற்றம் அவசியம்தானா?

தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கை அவன் சந்ததிக்கும் உரியது. ஏன்? நமக்கான ஆசீர்வாதம் நம் பிள்ளைகளுக்கும் சென்றடைய வேண்டுமா?

தேவன் கொடுத்த வாக்குறுதிக்கு அடையாளமாக ஆபிரகாமின் சந்ததியினர் கடைபிடிக்க வேண்டியிருந்தது என்ன? ஏன் அடிமைகள், தேசத்தில் வாழ்பவர்கள், சகல ஆண்களும் விருத்தசேதனம் செய்தார்கள்?

இன்று கீழ்ப்படிதலுக்கு அடையாளம் என்ன?

கிறிஸ்தவர்களாகிய நாம் எப்படிச் சிந்திக்க வேண்டுமென இவ்வசனங்கள் நமக்கு கூறுகின்றன? சரியான முன்மாதிரியை நான் பின்பற்றுகிறேனா?

*எனது சிந்தனை:*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர்
6
ஞாயிறு

## நாம் நினைப்பது...

*...எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். எபிரேயர் 11:26*

வேத வாசிப்பு: எபிரேயர் 11:23–27

நிம்மதி, சமாதானம், அமைதி இவற்றைத் தேடி இன்று உலகமே அலைமோதிக் கொண்டிருக்கிறது. அதற்காக எடுக்கின்ற முயற்சிகள்தான் எத்தனை? சமாதானத்திற்காக ஒரு யுத்தம்; அமைதிக்காக சில குழப்பம்; நிம்மதிக்காக ஒரு சுரண்டல். நாமும் சந்தோஷமாக இருக்கவே விரும்புகிறோம்; நல்லது. அதற்காக நாம் எடுக்கின்ற பிரயத்தனங்கள்தான் கேள்விக்குறியாக இருக்கிறது.

பிரசங்கியும் தன் சந்தோஷத்திற்காக பல முயற்சிகளை எடுத்தார். அதற்காக தான் முயற்சித்த, ருசித்த அத்தனையும் அர்த்தமற்றது, பிரயோஜனமற்றது, மடமைத்தனமானது, வெறுமையானது என்பதை மனமுடைந்து மனம் திறந்து எழுதியுள்ளார். ஆனால் ஒரு காரியத்தை நாம் கவனிக்கவேண்டும். இதை எழுதிய பிரசங்கியாகிய சாலொமோன் ராஜா எல்லாவற்றிலும் நிறைந்து காணப்பட்ட ஒருவர். வல்லமை, ஞானம், சம்பாத்தியம், செல்வம் எல்லாமே அவருக்கு அளவில்லாமல் நிறைந்திருந்தது. 'இதோ நான் பெரியவனாயிருந்து எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் ஞானமடைந்து தேறினேன். என் மனம் மிகுந்த ஞானத்தையும் அறிவையும் கண்டறிந்தது என்று நான் என் உள்ளத்திலே சொல்லிக்கொண்டேன்' என்று தன்னைக்குறித்து தானே எழுதியுள்ளார். இப்படிப்பட்ட ஒருவர், தான் அனுபவித்த எல்லா காரியமுமே பிரயோஜனமற்றது வெறுமையானது என்று சொல்லுவாரானால், தன் வாழ்வை நிரப்ப உதவுமென்று பிரசங்கி நினைத்த அந்த எல்லாமே, அர்த்தம் அற்றது என்றுதானே அர்த்தம். உண்மை எது என்பதை பிரசங்கி உணர ஆரம்பித்த போது காலம் கடந்துபோயிருந்தது.

ஆனால் மோசே அப்படிப்பட்டவரல்ல. மோசேக்கும் கூட எல்லாமும் நிறைவாக இருந்தது. செத்துப்போகவேண்டிய எபிரேயக் குழந்தையாகிய மோசே அரண்மனை வாசியாகி, அதன் சொத்து சுதந்திரத்துக்கும் உரிமைக்காரராயிருந்தார். மோசே அரண்மனையில் குடித்துப் புசித்து மணமுடித்து பஞ்சு மெத்தையில் படுத்துறங்கி வாழ்வை அனுபவித்திருக்கலாம். ஆனால் தனக்குரிய வாழ்வு அதுவல்ல என்றும், இந்தப் பொக்கிஷங்கள் எல்லாவற்றிலும் பார்க்க, பாடுகளானாலும் பாக்கியம் வேறொன்று உண்டு என்பதையுணர்ந்து, தேவையற்ற சகலத்தையும் உதறித்தள்ளி எழுந்தார். அதன் பலனைக் கண்டடைந்தார்.

நமது வாழ்வை, வாழ்வின் சந்தோஷத்தை, நிம்மதியை யாவையும் நிரப்ப உகந்தது என்று நினைத்து பல முயற்சிகள் செய்கிறோம். அந்த முயற்சியிலே பிரசங்கி வழி நின்று எல்லாமே மாயை என்போமா? அல்லது மோசே வழி நின்று ஏற்ற காலத்தில் நல்ல அறுவடையை அறுப்போமா?

*சிந்தனைக்கு:* கடினபாதையென்றாலும் தேவன் வகுக்கும் வழியா? அல்லது உலகம் காட்டும் இலகு பாதையா? எதை நான் தெரிந்தெடுப்பேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| † வேத வாசிப்பு: | 1கொரி. 9:24–27 |

## நான் எனக்கு ஆகாதவனா?

*மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். 1கொரிந்தியர் 9:27*

ஒக்டோபர் 7 திங்கள்

சாலொமோன், ராஜாவான பின்னர் கர்த்தர் தரிசனமாகி, 'விரும்பியதைக் கேள்' என்றார். நாமென்றால் என்னவெல்லாமோ கேட்டிருப்போம்! ஆனால் சாலொமோனோ, தேவன் தந்த அரசாளுகையைச் சரியாய் செய்ய ஞானத்தையும் அறிவையுமே கேட்டார். கர்த்தரோ இந்த வேண்டுகோளில் பிரியமாயிருந்து கேட்டதையும் கொடுத்து, அவன் கேளாத ஐசுவரியத்தையும் கொடுத்தார். சாலொமோன் கட்டிய ஆலயமோ பிரமிக்கத்தக்கது. அவருடைய ஞானமோ சொல்லிலடங்காதது. அவர் சொன்ன நீதிமொழிகள் மூவாயிரம், அவருடைய பாட்டுகள் ஆயிரத்து ஐந்து (1ராஜா.4:32). சாலொமோனின் புகழ் எங்கும் பரவியது. எல்லா தேசத்தாரும் அவரைப் பார்க்க வந்தார்கள். சாலொமோனைச் சோதிக்க வந்த சேபாவின் ராஜஸ்திரீ, ஆச்சரியத்தால் வாயடைத்துப்போனாள். "உமது தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்தரிக்கப்படுவாராக" என்றாள். இப்படியே, சாலொமோனின் இருதயத்திலே தேவன் அருளிய ஞானத்தைக் கேட்கிறதற்காக, சகல தேசத்தாரும் அவன் முக தரிசனத்தை அன்று தேடினார்கள். (2நாளாகமம் 9:23)

இத்தனை சிறப்பு வாய்ந்த சாலொமோன், இறுதியில் 'அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன்' (பிரசங்கி 1:18) என்று எழுதுவாரானால், அது சிந்திக்கப்படவேண்டிய விடயமல்லவா! தனக்கு ஞானம் அவசியம் என சாலொமோன் நல்ல காரியத்தை சிந்தித்தாலும், தன் தகப்பனின் வார்த்தையை மறந்து, தேவகட்டளையை மறந்து, ஞானமற்ற செயலைச் செய்துவிட்டார். எகிப்திய பெண்ணை விவாகம்பண்ணினார். இந்தப் பெண்ணே சாலொமோனின் எழுநூறு மனைவிகளுக்கும் முந்நூறு மறுமனையாட்டிகளுக்கும் முதலானவள். நடந்தது என்ன? வாழ்க்கையைக்குறித்து பிறருக்கு வகைசொன்ன பிரசங்கிக்கு, தனது அதே வாழ்க்கை தத்துவங்களை தன் வாழ்வில் பிரயோகிக்க முடியாமல்போய்விட்டது. பிறருக்கு அவர் சொன்ன அறிவுரைகள் அவருக்கு உதவவில்லை. பிறர் கேள்விகளுக்குப் பதில் சொன்னவருக்கு தனது கேள்விகளுக்குரிய பதிலைக் கண்டடைய முடியவில்லை. ஆனால் பவுலடியாரோ, என்ன பிரசங்கித்தாரோ, அதன் அடிப்படையில் தன் வாழ்வையும் காத்துக்கொண்டார்.

சாலொமோனைப்போல பிறர் காரியங்களுக்கு பெரிய நியாயம் சொல்ல நாமும் கெட்டிக்காரர். ஆனால் அதே விடயங்களில் நாமும் விழுந்துபோகிறோமே, ஏன்? பிரசங்கி தன் வாழ்வை நிரப்ப எதையெதையோ நாடினார். வாழ்வை இழந்தார். பவுலடியாரோ தன் வாழ்வை நிரப்ப தேவனையே சார்ந்திருந்தார், வாழ்வில் வெற்றி பெற்றார். நாம் ஞானவான்களாக இருக்கலாம். ஆனால் தேவன் இல்லாத ஞானம் வீணே. நாம் யார்? சாலொமோனா? பவுலா?

***சிந்தனைக்கு:*** நான் சாலொமோனா? பவுலா? பிறருக்கு அறிவுரை கூறும் நான் என் வாழ்வை இழந்துவிடாதபடி தேவனையே சார்ந்திருப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர்
8
செவ்வாய்

## வாழ்வுக்கும் ஒரு கணக்கெடுப்பு

*... நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்.*

*ரோமர் 14:12*

வேத வாசிப்பு: எபி 4:12–16

வியாபார ஸ்தலங்களில், தேவைப்பட்டால் வியாபாரத்தையே நிறுத்திவிட்டு, அல்லது வருடத்திற்கு ஒருமுறை கணக்கெடுப்பது வழக்கம். லாப நட்டத்தையும் பொருட்படுத்தாமல் கணக்கெடுப்பதில் இத்தனை கரிசனையாய் இவர்கள் செயற்படுகிறார்கள் என்றால், பெறுமதிமிக்க நமது வாழ்வில் கணக்கெடுத்தல் எவ்வளவு முக்கியமானது! வரவு செலவு கணக்கிட நமது வாழ்வு வியாபாரம் அல்ல. இது வாழ்க்கை. ஆனால், வாழ்வின் சகலமும் கணக்கு ஒப்புவிக்கப்படவேண்டியவை என்பதே வேதாகமம் கற்றுத்தரும் சத்தியம். ஆகவே, வாழ்வைக் குறித்து நாம் கணக்கெடுக்கவேண்டியது அவசியமே. அப்படியானால் எப்போது கணக்கெடுக்கவேண்டும் என்பதுதான் கேள்வி.

கணக்கொப்புவிப்பது இறுதியில் நிகழும் காரியம். ஆனால் அதற்கு முகம்கொடுக்க வேண்டுமானால் அன்றாடம், அல்லது வாரம் ஒருமுறை, அல்லது மாதம் ஒருமுறை யாவது, மற்றைய அலுவல்களைக் குறைத்துவிட்டு நமது வாழ்வின் காரியங்களைக் கணக்கெடுப்பது நல்லது. சகலத்தையும் கடைசியில் பார்ப்போம் என்று இருந்தால் ஏற்படும் நஷ்டங்களை, ஏற்பட்ட இழப்பீடுகளை சரிசெய்ய முடியாமற் போய்விடும். அதன்பின் தருணம் கிடைக்காது.

சாலொமோன் தன் வாழ்வை மனம்போனபடி அனுபவித்தார். ஞானம் அறிவு, பணம், செல்வம், அரசாட்சி, ஆயிரம் மனைவிகள் என்பவற்றில் வாழ்வின் நிறைவைக் காண முயற்சித்த அவர், அதன் சரி பிழையைக் கணக்கெடுக்கத் தவறிவிட்டார். பிறருக்கு தான் சொன்ன அறிவுரைகள் தனக்கே பலனற்றதாகிவிட்டதால், அடிசறுக்கிவிட்ட நிலையில்தானே, வாழ்வின் கடைசிக்கு வந்ததும் சாலொமோன் விழித்தார். பணிவான நொந்துபோன, மனந்திரும்ப ஆயத்தமான மனதுடன், தான் எப்படி இந்த உலகை அனுபவித்தார் என்பதைத் திரும்பிப் பார்த்தார். அதன் பலனாக, தேவனைவிட்டுப் பிரிந்து நின்று அனுபவிக்கும் எதுவும் வெறுமையும் அர்த்தமற்றதும் என்பதைத் தன் சொந்த அனுபவத்தில் கற்றுக்கொண்ட நல்ல பாடமாக, அதை நமக்காக எழுதியும் வைத்துள்ளார்.

இன்று நாம் என்ன சொல்லுவோம்? வாழ்வை அனுபவித்துப் பின்னர் யோசிப்போம் என்போமா? அல்லது அன்றாடம் வாழ்வை ஆராய்ந்து கணக்கெடுத்து சரிசெய்வோமா? பிந்தியது நல்லது. ஏனெனில் நமது காலம் நமது கைகளில் இல்லையே! நாம் யாரிடம் கணக்கொப்புவிக்க வேண்டுமோ அவருக்கு எதுவும் மறைவாயில்லை. அதே சமயம் அவர் இரக்கமுள்ளவர். நமது வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளை இப்போதே சரிசெய்ய வல்லவர். அவரிடம் இன்றே மனம் திரும்பினால் பின்னர் வெட்கப்பட வேண்டியதில்லையே!

***சிந்தனைக்கு:*** என் கணக்கை நானே சரிபார்க்கவேண்டும் என்ற சிந்தனை என்னில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் என்ன? கணக்கொப்புவிக்கும் நாளிலே தலைநிமிர்ந்து நிற்பேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| † வேத வாசிப்பு: | ஏசாயா 45:18-23 | |

## நோக்கமின்றி எதுவுமில்லை

*இருக்கிறவன் எவனும் தோன்றுமுன்னமே பேரிடப்பட்டிருக்கிறான்.*

*பிரசங்கி 6:10*

ஒக்டோபர்
9
புதன்

'வாழ்ந்து எதைக் கண்டோம்?' கிறிஸ்தவர்களாகிய நாமும் இதுவரை ஒரு தடவை யாவது இப்படியான வார்த்தைகளைச் சொன்னதில்லையா? மேன்மையானவற்றை அள்ளி வழங்கவேண்டிய வேதாகமம், 'மாயை மாயை' என்று வாழ்வைக்குறித்து சலிப்படையும் வார்த்தைகளைக் கூறும் பிரசங்கி நூலைக் கொண்டிருக்கலாமா? ஆறுதல் வார்த்தைகளையும் வாக்குத்தத்தங்களையுமே தேடி வாசிக்கும் மக்களுக்கு இப்புத்தகத்தில் என்னதான் கிடைக்கப்போகிறது? ஏற்கனவே சலிப்படைந்திருக்கும் நமக்கு, 'ஆமாம்' சொல்லும் புத்தகமாக அல்லவா பிரசங்கி நூல் தெரிகிறது. அதிலும் வாழ்வில் தோற்றுவிட்ட ஒரு ஞானி எழுதிய இந்த நூல் எதற்கு? என்பது சிலரது வாதம். ஒரு இரகசியம் தெரியுமா? இவ்வுலகிலே எந்தவொரு நோக்கமும் இன்றி எதுவுமே இல்லை. நாம் தோன்றுமுன்னமே நம்மைத் தேவன் பெயரிட்டார் என்பதை இந்த ஞானிதானே எழுதிவைத்துள்ளார்! அர்த்தமில்லாத எந்தவொரு புத்தகமோ, வாக்கியமோ, சொல்லோ வேதாகமத்திலே இல்லை. தேவன் நம்மை ஒரு நோக்கத்தோடேயே படைத்திருக்கிறார். எவருடைய வாழ்வும் வீண் அல்ல. வானத்தையும் பூமியையும் வெறுமையாய் அல்ல; நாம் குடியிருக்கவே அதைப் படைத்தார். 'நான் விருதாவாக எதுவும் செய்வதுமில்லை, என்னை விருதாவாகத் தேடுங்கள் என்று சொன்னதுமில்லை' என்று தேவன் சொல்லுகிறார்.

வேதாகமத்திலே புரிந்துகொள்ளக் கடினமான, வாசிக்க இதமற்ற சில பகுதிகளில் பிரசங்கி புத்தகமும் ஒன்று என்றால் மறுக்கமுடியாது. பலருடைய வேதாகமங்களில் இதன் பக்கங்கள் புதிதாகவே இருக்கிறது. ஆனால், இந்நூலைக் குறித்த தேவ நோக்கத்தை அறியவேண்டுமானால், 'பிரசங்கி நூலின் உள்ளே செல்ல, முன்வாசலை விட பின்வாசலே மிகவும் வசதியானது' என்று வேத அறிஞர் ஒருவர் எழுதியுள்ளது எவ்வளவு உண்மையானது. சாலொமோன், தன் வாழ்வை நிரப்ப பல வழிகளை நாடி தோற்றுப்போனாலும், இறுதியில் தான் தேடிய காரியங்கள் வீண் என்பதை அல்ல; தேவனை மையமாகக் கொள்ளாத எதுவும் வீணும் மாயையுமே என்ற உண்மையையே கண்டுபிடித்தார்.

தேவபிள்ளையே, உன் வாழ்வு வீண் அல்ல. இதுவரை நீ எந்தக் கண்ணோட்டத்தில் உன் வாழ்வைப் பார்த்தாயோ தெரியாது. ஆனால் சாலொமோன் கடைசியில் கண்டு கொண்டதை இன்னும் தாமதிக்காமல் இன்றே நீயும் கண்டுகொள். உன் வாழ்விற்கும் தேவன் ஒரு நோக்கம் வைத்திருக்கிறார். எதையும் தேவகண்ணோட்டத்தில் பார்க்கப் பழகிக்கொள். நீ பிறக்கும் முன்பே உன் பெயரை அறிந்தவர் உன் வாழ்வு பாழாய்ப்போக விடுவாரா!

***சிந்தனைக்கு:*** என்பேரில் தேவன் கொண்டுள்ள நோக்கத்தை நான் அறிந்திருக்கிறேனா? அறியாததால்தான் பல போராட்டங்கள். இன்றே தேவபாதம் பணிவேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர்

10

வியாழன்

## நடைமுறை ஞானம்

*சொல்லப்படும் எல்லா வார்த்தைகளையும் கவனியாதே.*
*பிரசங்கி 7:21*

வேத வாசிப்பு: பிரசங்கி 7:20–23

சில வாரங்களுக்கு முன்னே ஒரு பழைய பத்திரிகையில் சிறுவருக்கான பக்கத்தில் தற்சமயமாக வாசித்த ஒரு வார்த்தை என் மனதிலே அப்படியே பதிந்துவிட்டது. 'கேட்கிற யாவையும் நம்பாதே; நம்புகிற யாவையும் சொல்லாதே.' காது இருந்தால் கேட்கத்தான் செய்யும். கேட்கிறதை அடுத்தவனுக்குச் சொல்லாமல் இருப்பது நம்மில் பலருக்கு இயலாத காரியம். அப்படிச் சொல்லி நம்மில் எத்தனைபேர் எத்தனை பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்திருக்கிறோம்! ஆம், நாம் வாழவும் வேண்டும்; அதேசமயம் இந்த வாழ்வில் வரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து தப்பவும் வேண்டும், இல்லையா? யாரோ எழுதிய ஒரு வரி வாழ்வில் தப்பிக்கொள்ள வழி காட்டுமானால், ஞானம் அறிவு என்பவற்றின் இருப்பிடமாகிய தேவாதி தேவனுடைய ஜீவவார்த்தைகள் நமக்கு என்னவாயிருக்கும் என்பதை ஏன் நாம் சிந்திப்பதில்லை! பிரசங்கியின் வார்த்தைகள், எதிரிடையாகவும், சலிப்பு தொனிக்கும் வார்த்தைகளாகவும், நம்பிக்கையின்மையாகவும் தெரிந்தாலும், அப்படியல்ல; மாறாக, வாழ்வுக்கு பெரிய அர்த்தத்தை விளங்க வைக்கும் ஒரு புத்தகமாகவே அது இருக்கிறது.

இந்நூலின் ஆங்காங்கே சில வார்த்தைகளும், கடைசி அதிகாரமுமே வாசிக்க ஏற்புடையதாக இருக்கிறது என்று பலர் நினைக்கலாம். ஆனால் அப்படி அல்ல. புத்தகம் முழுவதுமே மனுஷன் தன் நாளாந்த வாழ்வில் சாதாரணமாக சந்திக்கக்கூடிய நிகழ்வுகளையே சித்தரிக்கிறது. இந்தப் புத்தகத்தில் முக்கியமாக இரு காரியங்கள் காணப்படுகிறது. ஒன்று, 'நடைமுறை ஞானம்.' அதில், இவ்வுலக காரியங்களை நாம் எப்படி நிறைவேற்றவேண்டும்; அதேசமயம், அதனால் வரக்கூடிய பிரச்சனைகளுக்கு எப்படி விலகி நடக்கவேண்டும் என்பதை கற்றுத்தரும்; இது மிக முக்கிய பாடம். உதாரணத்திற்கு, பேசப்படும் வார்த்தைகள் காதிலே கேட்கத்தான் செய்யும். ஆக, எல்லாவற்றையும் கவனத்துக்கு எடுத்தால், வேலைக்காரன் நிந்திப்பதையும் நாம் கேட்க நேரிடும் என்று பிரசங்கி எழுதுகிறார். அதைக் கவனத்திற்கு எடுத்தால் என்னவாகும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

தேவபிள்ளையே, நாம் உலகில் வாழத்தான் பிறந்திருக்கிறோம். இந்த வாழ்வுக்கு பணம் அவசியம், வசிக்க வீடு அவசியம். பொருட்கள் அவசியம். ஆனால் நம் நடைமுறை வாழ்வில் இவை நமக்குப் பிரச்சினைகளாகிவிட இடமளிக்கக்கூடாது. நாம் பேசிப் பழகத்தான் வேண்டும், உதவி செய்யத்தான் வேண்டும். ஆனால் உபத்திரவங்களைச் சம்பாதிக்கக்கூடாது. நடைமுறை ஞானத்தைக் கற்றுத்தரும் பிரசங்கி நூலைத் தொடர்ந்தும் படிப்போமாக.

***சிந்தனைக்கு:*** நடைமுறை வாழ்வில் அறிவு இருந்தால் போதாது; ஞானமாய் வாழவும் கற்றிருக்க வேண்டும் என்ற சிந்தனை இன்று எனக்குள் இருக்கின்ற ஞானத்தைச் சீர்தூக்கிப் பார்க்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: சங்கீதம் 33:1-22

# ஆவிக்குரிய ஞானம்

*...எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவை-களைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்.*
*பிலிப்பியர் 3:7*

ஒக்டோபர் 11 வெள்ளி

'மனமகிழ்ச்சிக்கு முக்கிய தேவை பணம்', ஆராய்ச்சி செய்து இதனைக் கண்டுபிடித்துள் ளார்கள் என ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டது. இதைக் கண்டுபிடித்தவர் சமகால சாலொமோனோ என்று எண்ணத் தோன்றியது. நேற்று பிரசங்கி புத்தகத் தில் நடைமுறை ஞானத்தைக் குறித்து கவனித்தோம். அடுத்ததாக, இப்புத்தகத்தில் 'ஆவிக்குரிய ஞானம்' நிறைந்துள்ளதை நாம் கவனிக்கலாம். அதாவது, நித்தியத் தின் பெறுமதியைக் குறித்த ஞானம் அது.

பிரசங்கி 3:11 இல் "உலகத்தையும் அவர்கள் உள்ளத்தில் வைத்திருக்கிறார்" என்று படிக்கிறோம். "காலத்தைப் பற்றிய உணர்வை தேவன் மனிதருக்குத் தந்திருக்கி றார்" என்று திருவிவிலிய மொழிபெயர்ப்பு கூறுகிறது. ஆங்கில மொழிபெயர்ப்பிலே, "மனிதருடைய இருதயத்திலே நித்தியத்தை வைத்திருக்கிறார்" என எழுதப்பட்டுள்ளது. எப்படிப் பார்த்தாலும், நமக்குள் தேவன் நித்தியத்தின் வாஞ்சையை வைத்திருக்கி றார் என்பதே வெளிச்சம். உலகில் பெறும் அனைத்தையும் நித்தியத்தின் வெளிச்சத் தில் வைத்துப் பார்க்கும் வரை, எதுவும் நமக்குத் திருப்தி தராது.

நித்தியத்தின் பெறுமதியை அறியவேண்டுமானால் இவ்வுலகின் காரியங்களை நாம் நித்திய மகிமை நிறைந்த வாழ்வுடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். 'நித்தியத்தின் வெளிச்சத்தில் ஜீவிக்கும்போது காரியங்களுக்கு நீங்கள் கொடுக்கும் மதிப்புக்கள் மாறுகின்றன. நேரம், பணம் என்பவற்றை மிகவும் ஞானமாகப் பாவிப்பீர்கள். புகழ், செல்வம், சாதனை, பொழுதுபோக்கு போன்றவற்றிலும் பார்க்க, உறவுகளுக்கும் குணாதிசய வளர்ச்சிக்குமே உயரிய மதிப்பைக் கொடுப்பீர்கள். அதாவது எவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கிறீர்கள் என்னும் பட்டியலின் வரிசைக் கிரமம் மாற்றமடையும். நவீன பாங்குகளையோ, ஆடை அலங்காரங்களையோ, பிரசித்தமான நவீன பாணி களையோ பின்பற்றுவது இப்போது முக்கியமற்றுப்போகும்' இப்படியாக றிக் வாரன் அவர்கள் தமது நூலில் எழுதுகிறார்.

நித்தியத்தோடு ஒப்பிடும்போது, இவ்வுலக வாழ்நாட்கள் ஒரு சில மணித்துளிகளே. நித்திய வாழ்வை இலகுவில் நாம் புரிந்துகொள்ள அதன் நிச்சயத்தைத் தேவன் தருகிறார். அந்த நிச்சயம் பவுலுக்கு இருந்ததால்தான் தனக்கிருந்த சகலத்தையும் குப்பையாக எண்ணினார். இவ்வுலகத்தின் பெரிய காரியங்களிலும் பார்க்க, தேவன் நமக்காக வைத்திருக்கும் நித்தியம் மிக விசாலமானது. கர்த்தருடைய ஆலோசனை நித்திய நித்திய காலமாக உள்ளது (சங்.33:11). இந்தப் பெரிய பெறுமதியை நாம் கண்டு அறியவேண்டாமா?

***சிந்தனைக்கு:*** முடிவில்லா நித்தியம் நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்க, இந்த அநித்திய உலக பிரச்சனைகளில் நாம் ஏன் மூழ்கிடவேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாரிசு**

*என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன். ஆதியாகமம் 17:19*

வேத வாசிப்பு: ஆதி 17:15–25

*தேவனுடைய செய்தி:*

எமது விண்ணப்பத்தை தேவன் கேட்பார். நிச்சயமாகவே பதிலளிப்பார்.

*தியானம்:*

தொண்ணூறு வயதான சாராள் தாய்மை அடைவாள் என்பதை அன்று அவளாலேயே நம்ப முடியவில்லை. எனினும் உறுதியான வாக்குறுதி திட்டமாக அளிக்கப்படுகின்றது. ஈசாக்கின் பிறப்பு வாக்களிக்கப்பட்ட போதிலும் இஸ்மவேல் கைவிடப்படவில்லை. ஆபிரகாமும் இஸ்மவேலும் ஒரேநாளில் விருத்தசேதனம் செய்துகொண்டார்கள்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

தேவனுடைய ராஜ்யத்தில் பெரிய காரியங்களைச் செய்யப் போகிறீர்கள் என்றால், அது உங்கள் சொந்த பலத்தினாலும் திறமையினாலும் நடக்காது.

*பிரயோகப்படுத்தல் :*

"சாராயை இனி சாராய் என்று அழையாதிருப்பாயாக; சாராள் என்பது அவளுக்குப் பேராயிருக்கும்." நாம் மற்றவர்களை என்ன சொல்லி அழைக்கிறோம்? பெயர்சூட்டுதல், ஆசீர்வாத வார்த்தையாக இருக்குமா?

இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக! என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணினான். நமது ஜெபம் எப்படிப்பட்டது?

வசனம் 15ன்படி சாராளுக்கு கிடைக்கும் ஆசீர்வாதம் என்ன?

வசனம் 18, 20ன்படி இஸ்மவேலுக்கு கிடைத்த ஆசீர்வாதம் என்ன?

வசனம் 19, 21ன்படி ஈசாக்குடன் தேவன் என்ன செய்வார்?

சுயமாக சாதிக்க திறமையற்றவர்களை பயன்படுத்த தேவனால் கூடுமா? ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பது யாருடைய ஈவு?

தேவ சந்நிதியில் உண்மையாக நடந்து, நீதிமானாக இருப்பதே நாம் நிறைவேற்ற வேண்டிய கடமை என்பதை உணர்ந்துள்ளீரா? எப்போது?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: 1கொரி. 3:18–23

ஒக்டோபர் 13 ஞாயிறு

## ஞானியாகவேண்டுமா? பைத்தியமாகு!

*இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது.*
*1கொரிந்தியர் 3:19*

'சந்தோஷமாயிருக்கிறீர்களா' என்று யாராவது கேட்டால் உங்கள் பதில் என்ன? ஒருவிதத்தில் நாம் யாவருமே வாழ்வோடு போராடுகிறோம் என்பதுதான் உண்மை. 'சந்தோஷம் பொங்குதே' என்று பாடுவோம். பாட்டு முடிந்ததும் சந்தோஷம் மறைந்து விடுகிறது. மகிழ்ச்சி ஆரவாரத்துடன் ஆரம்பிக்கும் பல விருந்துக் கொண்டாட்டங்கள் குழப்பத்திலே முடிகிறதை கண்டதுண்டா? நமக்கு ஏன் இத்தகைய தத்தளிப்பு? கர்த்தருக்குள் சந்தோஷம், கர்த்தருக்குள் வாழ்வு, கர்த்தருக்குள் நிறைவு என இவற்றை அறிந்திருந்தால் மட்டும் போதாது; அதன் அடிப்படையில் வாழ்வை அமைக்கத் தவறும்போதுதான் தத்தளிப்பு ஏற்படுகிறது.

அறிவு, ஞானம், உறவு, வேலை, வருமானம், கொண்டாட்டம் இவை யாவும் நல்லது தான். ஆனால் வாழ்வின் உயரிய நோக்கத்தின் அத்திபாரத்தை இவை தகர்க்க முடியும் என்ற உண்மையை மறக்கக்கூடாது. ஒருவன் தன்னை ஞானவான் என்று எண்ணினால் அவன்தானே பைத்தியக்காரனாய் மாறக்கடவன் என்கிறார் பவுல். ஏன் தெரியுமா? இவ்வுலக ஞானம் தேவனுக்கு முன்னே பைத்தியமாயிருக்கிறது. ஆம், மனிதன் எதையெதையோ கண்டுபிடிக்கிறான். வானத்தை எட்டுவேன் என்று சவால் விடுவதுபோல நடக்கிறான். ஆனால் மனிதனால் தேவனோடு போராட முடிவதில்லை. பெரிய பெரிய காரியங்களை தன் ஞான அறிவினால் சாதித்த எந்தவொரு மனிதனாவது படுக்கையில் விழும்போது, அவனது ஞானம் அவனைக் காப்பாற்றுமா? இந்த உலக ஞானம் நம்மைத் தேவனிடத்திலிருந்து பிரித்துப்போடுமானால் அது ஞானமே அல்ல. தேவனுடைய வழிகளும் சிந்தனைகளும் இந்த உலகத்திற்கு பைத்தியமாகத் தெரியலாம்; ஆனால் அவற்றின் பெறுமதியை யாரால் அளவிடக்கூடும்? தேவஞானம் உலகிற்குரியதல்ல; அது நித்தியத்திற்குரியது. ஆகவே ஞானியாவதற்கு, நாம் இந்த உலகிற்குப் பைத்தியமாகவேண்டும்.

நாம் உண்மையான மகிழ்ச்சியை எங்கே காணலாம்? கர்த்தருக்குள்ளானவற்றிலேயே காணலாம். நமது நம்பிக்கையை நாம் எங்கே வைக்கலாம்? அதனை முழுமையாக நிறைவேற்றுபவரிடத்திலேயே வைக்கலாம். அறிவு, ஞானம், உறவுகள், வேலை, பணம், பொருள், சந்தோஷங்கள் இவற்றை நாம் எப்படி தகுதியாக அனுபவிக்கலாம்? இவற்றுக்கெல்லாம் ஊற்றுக் காரணராகிய கர்த்தருக்குள் இவை வைக்கப்பட்டால் மாத்திரமே அவற்றை சிறப்பாக அனுபவிக்கலாம். தேவன் இல்லாத எதுவும் ஒன்றுமேயில்லை. ஆகவே, நம்முடைய மகிழ்ச்சி, நம்பிக்கை, மற்றும் நமக்கிருக்கும் சகலத்தையும் சோதித்துப் பார்ப்போமாக. நாம் தேவ ஞானத்தில் வளரவேண்டுமானால் உலகிற்குப் பைத்தியமாக வேண்டியது அவசியம்.

***சிந்தனைக்கு:*** மெய்யான மகிழ்ச்சி, மெய் ஞானம், மெய் வாழ்வு, மெய் விசுவாசம் இவற்றின் ஊற்றுக்காரணராகிய கர்த்தரையே சார்ந்துள்ளேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர்
14
திங்கள்

# மூத்தோரின் அறிவுரைகள்

*எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம்.*
*சங்கீதம் 39:5*

✝ வேத வாசிப்பு: சங்கீதம் 39:1-13

'நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே; உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது?' 'அது புகையைப்போன்றது' என்று யாக்கோபு அன்று எழுதினார். ஆனால் இன்றைய சூழ்நிலையில், அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என்றே தெரியாத நிலையில் நாம் வாழுகிறோம். அப்படியானால் இந்த வாழ்க்கைக்கு அர்த்தம் உண்டா? வாழ்ந்தென்ன, வாழ்வில் எதை அனுபவித்தென்ன என்று மனம் சோர்ந்துபோய் இருக்கும் சகோதரனே, சகோதரியே, உன்னுடைய இந்த மனநிலை ஏதோ புதினமானதல்ல. அன்று தாவீதுக்கும் இதே சோர்வு உண்டாயிருந்தது. ராஜாவாய் கெம்பீரமாய் வீற்றிருக்கவேண்டிய அவர், ஜீவனுக்குத் தப்ப, காடுமேடு என்று அலைந்து திரிந்தால் யாருக்குத்தான் வெறுப்பு வராது! ஆனால் தாவீது தேவனுக்குள் தன்னைத் திடப்படுத்த அறிந்திருந்தார். 39 ம் சங்கீதத்தில் தாவீதுக்கு வியாதி கண்டிருக்கலாம் என்று விளங்குகிறது (சங்.39:10). எனினும் அந்த நிலையிலும் தன் நம்பிக்கை தேவனே என்று பாடியது, அவர் தேவனையே சாா்ந்து நின்று தன்னைத் திடப்படுத்தினார் என்பதை சுட்டுகிறது.

சாலொமோன் ராஜாவின் அரசாட்சிக் காலம் சரித்திரத்திலே ஒரு பொற்காலம். ஞானம், அதிகாரம், வல்லமை, செல்வம், நற்கீர்த்தி, தேவ அநுக்கிரகம் எல்லாமே ஒருங்கிணைந்து விளங்கியவர் தாவீதின் மகன் சாலொமோனே. இவரது அரசாட்சிக் காலத்திலே தேசமும் அமைதியாயிருந்தது. அப்படியிருக்க, உலகம் தரும் எல்லாவற்றின் முடிவும் வெறுமையே என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தவரும் இந்த சாலொமோனே. ஆனால் தாவீது ஏற்கனவே அறிந்துகொண்டிருந்த இதேவிடயத்தை, மகன் சாலொமோன் அறிந்துகொள்ள, முதிர்வயதுவரைக்கும் காலத்தை வீணாக்க வேண்டியிருந்தது. என்றாலும் உணர்ந்துகொண்டதும் அதனை அவர் மறைத்து வைக்கவில்லை. தான் தன் தகப்பனின் அனுபவத்தை அறியாதிருந்த மாதிரி, பின்வரும் சந்ததியும் இருந்துவிடாமல், சுய முயற்சியும் சுய நீதியும் அல்ல, தேவனைச் சார்ந்து வாழுவதே வாழ்வுக்கு அர்த்தத்தைத் தரும் என்ற உண்மையை முக்கியமாக வாலிப வயதினருக்கு உணர்த்த மிகுந்த முயற்சி எடுத்தார் இந்த சாலொமோன்.

அனுபவப்பட்டவர்கள் புத்தி சொல்லி எச்சரித்தாலும் நாம் கேட்டு நடப்பது மிகக் குறைவு. பின்னர் நாம் அனுபவப்படும்போதுதான் புத்தி தெளிகின்றது. சாலொமோனாவது தன் முதிர்வயதிலே உண்மையைக் கண்டறிந்தார். நாம் காணாமலேயே அழிந்துபோக நேர்ந்தால் எத்தனை பரிதாபம். ஆகவே நமக்கு முன்னே வாழ்ந்தவர்களின் அனுபவங்களை, அறிவுரைகளை கவனத்தில் எடுத்து நமது வாழ்வை இப்போதே சீர்ப்படுத்திக் கொள்வோமாக.

***சிந்தனைக்கு:*** நமது பெற்றோர், முன்னோர் சொல்லும் அறிவுரைகளை நல்லாலோசனைகளை நாம் மதிக்கிறோமா? அல்லது அது அந்தக் காலம், இது இந்தக் காலம் என்று அசட்டை பண்ணுகிறோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ரோமர் 8:19–25

ஒக்டோபர் 15 செவ்வாய்

## நமக்கு ஒரு நம்பிக்கை உண்டு!

*...சிருஷ்டியானது ...மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.*
*ரோமர் 8:21*

பிரசங்கி நூலில் குறிப்பிடப்பட்ட 'மாயை' என்ற சொல்லின் பொருள், 'குளிர்காலத்தில் தென்பட்டு மறையும் சுவாசம்' என்பதாகும். நமது கடந்த காலங்களைச் சற்று சிந்தித்துப் பார்த்தால், எல்லாமே தோன்றி மறைந்துவிட்ட மாயையாகத்தானே தெரியும்! ஏன் இந்த நிலைமை? இதற்கு ஒரே பதில், 'பாவம்'. தேவன் சிருஷ்டித்த பூரண நிலைமையிலிருந்து சகல சிருஷ்டியையும் பாவமானது கீழே தள்ளிவிட்டது. அதனால் முழு உலகமும் தன் மீட்புக்காக தவிக்கிறது.

உலகமே தன் மீட்புக்காகத் தவிக்கும்போது, அதே உலகம் நமது தேவையைப் பூர்த்தியாக்குவது எப்படி? ஆவியானவருக்குள்ளான சகல ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கின்ற நாமும்கூட பாவ உலகின் வேதனைகளிலிருந்து வெளிவரவும், ஆவியின் நிறைவை அடைந்து, கிறிஸ்துவோடு வாழும் வாழ்க்கைக்காகவும் தவிக்கிறோம். இந்தத் தவிப்பானது, நமது உள்ளுணர்வில் கலந்திருக்கும்போது இந்த உலக காரியங்கள் வேறு எவ்விதத்தில் நமக்கு திருப்தியளிக்கக்கூடும்?

கிறிஸ்தவர்களாகிய நாம், இவ்வுலகையும் அதன் காரியங்களையும் எப்படிப் பார்க்கிறோம் என்பதிலேதான் நமது வாழ்வின் வெற்றி தோல்வி தங்கியிருக்கிறது. தோற்றத்தில் அழிவுக்குள்ளான, ஆவிக்குரிய விதத்தில் பாவத்தால் கறைப்பட்டதான இந்த உலகைப் பார்த்து நாம் சோர்ந்துபோக வேண்டியதில்லை. ஏனெனில் நமக்கு ஒரு நம்பிக்கை உண்டு. ஏற்கனவே நாம் தியானித்தபடி நாம் எதையும் நித்தியத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கப் பழகவேண்டும். தேவனுடைய அநாதி திட்டம், புதிய வானம், புதிய பூமி, பாவம் துன்பம் வியாதி கண்ணீர் தீமை எதுவுமற்ற ஒரு புதிய வாழ்வு நமக்காக வைக்கப்பட்டிருக்கிறது. அதேசமயம், கிறிஸ்துவைக் கொண்டிருக்கும் நாம் இவ்வுலகில் வாழும்வரைக்கும், என்றும் கிறிஸ்துவோடு வாழுவோம் என்ற நம்பிக்கையைச் சுமந்துகொண்டு வாழவும், நம்பிக்கையற்ற மக்கள் மத்தியில், தீமையோடு எதிர்த்துப் போராடவும் கிருபை பெற்றிருக்கிறோம்.

தேவபிள்ளையே, நம்பிக்கையற்ற உலகுக்கு நம்பிக்கை கொடுக்கவேண்டிய நாமே, இவ்வுலகத்தின் அற்பமான பயமுறுத்தல்களையும் மாயைகளையும் கண்டு நம்பிக்கையற்றுப் போகலாமா? எல்லாவற்றுக்கும் நல்ல முடிவு உண்டு என்ற நம்பிக்கையோடே எழுந்து நிற்போம். பிசாசானவன் கொண்டுவரும் எந்தக் காரியத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. நமக்குள் இருக்கும் நம்பிக்கையை ஒருபோதும் இழந்துபோகக்கூடாது. அப்போது மாயையாகத் தோன்றுவதெல்லாம் நமக்கு அர்த்தமுள்ளதாக மாறுவது நிச்சயம்.

*சிந்தனைக்கு:* நித்திய நம்பிக்கையை நினைந்து, இவ்வுலக வாழ்விலேயே கர்த்தருக்குள்ளாக உறுதியோடும் அர்த்தத்தோடும் வாழ என்னை ஒப்புவிப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர்
16
புதன்

## அலுப்பான வாழ்வும் அர்த்தம் பெறும்

*இதைப் பார், இது நூதனம் என்று சொல்லப்படத்தக்க காரியம் ஒன்றுண்டோ? பிரசங்கி 1:10*

வேத வாசிப்பு: பிரசங்கி 1:3-11

ஒடுக்கமான வாடகை அறையிலே உட்கார்ந்து, அறையின் கூரையை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு சகோதரியிடம், 'ஏன் இப்படி இருக்கிறீர்' என்று கேட்டேன். 'இந்த வாழ்க்கை வெறுப்பாய் இருக்கிறது. ஏதோ காலையில் எழும்பி, சமையல் செய்து, வேலைக்குப்போய், அங்கேயும் ஒரே முகங்களைப் பார்த்து, களைத்துப் போய், வீடு வந்து, திரும்பவும் அதே சாப்பாடு நித்திரை. விடியுது இருளுது, வாழ்வும் உருளுது. மனதிலேயோ ஆறுதலில்லை' என்றாள் அவள். இப்படியே, நமக்கும் சிலசமயம் வாழ்க்கையே அலுத்துப்போனதுபோல தோன்றக்கூடும். தினம் தினம் நடப்பவையே பின்னும் தொடருகின்றன. எதிலும் திருப்தியில்லை. எதுவுமே புதினமான தாக இல்லை. இன்று எந்த நாளும் கொலை செய்திகளை கேட்டே வாழ்க்கை வெறுத்து விடும் போலிருக்கிறது. மாத்திரமல்ல, திரும்பத் திரும்ப ஒரே கஷ்டங்கள்தான். மாற்றம் வேண்டும் என்பதற்காக எத்தனைபேர் வெளியூர் வெளிநாடு என்று போகிறார் கள். ஆனால் பின்னர் திரும்பி அதே இடத்திற்குத்தானே வரவேண்டும்; எங்கே மாற்றம்? அதுமாத்திரமல்ல, இதுவரை நாம் வாழ்ந்து முடிந்துவிட்ட நாட்கள் யாவும் நமது மனதில் இருக்கிறதா? அதுவும் இல்லை. இதைத்தான் சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமே இல்லை என்று பிரசங்கி எழுதுகிறார்.

ஒரு மனிதன் இருந்தான். படிப்பு, செல்வம், நல்ல தொழில், கௌரவம், எல்லாம் இருந்தது. ஒவ்வொருநாளும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களைக் கவனிப்பது தான் அவனது பிரதான தொழில். காலையில் எழுந்தால் கிறிஸ்தவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தேடி, அவர்களை அடித்து, கட்டி இழுத்து வரவேண்டும். இவனுடைய வாழ்வில் மாற்றம் வந்தபோது, துன்பப்படுத்துவதற்காக கிறிஸ்தவர் களைத் தேடினவன் இப்போது கிறிஸ்துவுக்காகத் துன்பப்பட தைரியமாய் அவர்க ளிடமே சேர்ந்துகொண்டான். 'கிறிஸ்துவே தேவன்' என்று தைரியமாக பிரசங்கித் தான். மாத்திரமல்ல, இதுவரை சவுல் என்று அழைக்கப்பட்ட அந்த மனிதன் இப்போது பவுல் என்று அழைக்கப்படுகிறான். வாழ்வில் ஒரு மாற்றம். வித்தியாசமான சிந்தனை, வித்தியாசமான செயல்கள். பவுல் தன் வாழ்வுக்குரிய புதிய அர்த்தத்தைப் புரிந்து கொண்டார். இடையில் நடந்ததென்ன? அவருடைய வாழ்விலே உயிர்த்த இயேசு வந்தார். எல்லாம் மாற்றமடைந்தது. எல்லாம் புதிதானது.

தேவபிள்ளையே, நம் வாழ்வில் ஆண்டவரை வரவழைப்போமாக. அவரை அறிந்திருந் தால் போதாது. கடமை ஜெபமும் போதாது. ஆண்டவர் பார்க்கும் கண்களால் நாமும் பார்க்கப் பழகவேண்டும். உடனே புதினமான காரியங்கள் நடக்காது. எனினும், அலுப்புக்கொடுத்த அத்தனையும் அர்த்தமுள்ளதாக மாறும்.

***சிந்தனைக்கு:*** கர்த்தர் தந்த இந்த அழகிய வாழ்வை கர்த்தருக்காகவே வாழ்ந்து சிறப்பிக்க இன்றே என்னை அர்ப்பணிப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: எபேசியர் 2:1-13

ஒக்டோபர் 17 வியாழன்

## நான் அறியாத ஒரு வெற்றிடம்

*காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை. கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை.*
*பிரசங்கி 1:8*

அங்கலாய்ப்பும் மனஉளைச்சலும் ஏற்படக்கூடிய சூழ்நிலையிலேயே நாம் வாழுகிறோம். ஒரு பக்கத்தில் நாம் எதையோ சாதிக்கையில் இன்னொரு பக்கத்தில் இரு மடங்கு வீழ்ச்சியைச் சந்திக்க நேரிடுகிறது. பலவித கேள்விகள் நமக்குள் எழும்புகின்றன. நான் கர்த்தருடைய சித்தத்துக்குள் இருக்கிறேனா? இருந்தால் ஏன் இந்த வெறுமையும் சலிப்பும்? எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் தோல்வியில் முடிந்தால், இனி என்ன செய்வது? ஒரு சகோதரி இவ்விதம் சொன்னாள்: 'நான் நன்றாக உழைக்கிறேன். ஆனால் எனக்குத் திருமணமாகவில்லை. நான் வாழ்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது?' இன்னொருவர் கேட்டார், 'நான் இதுவரை சாதிச்சு சந்தோஷப்பட்டவை ஏராளம். ஆனால் அவற்றில் ஏதாவது முதுமையில் எனக்கு ஆறுதலைத் தருமா?' ஆம், "இனி நமக்கு என்ன நடக்கப்போகிறது" என்பதுதான் நம் எல்லாருக்குள்ளும் ஒளிந்து இருக்கின்ற ஒரு கேள்வி. இந்த நிலையில்தான் நம்மில் பலர் போராடிக் கொண்டிருக்கிறோம்! இதற்கெல்லாம் என்ன காரணம்? பிரசங்கி சொல்லுகிறார், நமது கண்களும் ஒருபோதும் திருப்தி அடைவதில்லை. காதுகளும் கேட்டது போதும் என்று நிறுத்திவிடுவதில்லை. அதாவது நமக்குள்ளேயே நம்மையும் அறியாத, நம்மை மீறிய ஒரு வெற்றிடமிருக்கிறது. குண்டு வெடித்த இடத்திலுள்ள பாரிய கிடங்கைத்தான் நிரப்பினாலும், மனதில் தோன்றும் வெற்றிடத்தை நிரப்புவது கடினம்.

ஆனால் சாலொமோன் ராஜா, அதை நிரப்பும் வழியைக் கண்டறிந்தார். கர்த்தருக்கு சேவை செய்வதால் இந்த வெற்றிடம் யாவையும் கர்த்தருக்குள் நிரப்பலாம் என்ற உண்மையை அவர் காலம் கடந்து கண்டுகொண்டதால், அதனை நமக்கு ஒரு சவாலாக விடுக்கிறார். இந்த சவாலுக்கு நாம் பயப்படவேண்டியதில்லை. ஏனெனில், நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டவர்கள்; அவருக்குள்ளே உயிர்த்தெழுந்தவர்கள். முன்னே தூரமாயிருந்த நாம் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தாலே தேவனுக்கு சமீபமாயிருக்கிறவர்கள். சாலொமோனுக்குக் கிடைக்காத பெரிய பாக்கியம் இன்று நமக்குண்டு. அப்படியிருக்க ஏன் இந்தத் தடுமாற்றம்? "ஆண்டவர், தம்முடைய குமாரனை நமக்குக் கொடுத்து தமது அன்பை வெளிப்படுத்தினார்" என்பது உண்மை. அதை அறிந்துகொண்டும், மேலும் பாவத்தோடு விளையாடும் நம்மை இன்னமும் ஆண்டவர் பொறுத்துக் கொண்டிருக்கிறாரே; அவரது அன்பை நாம் அசட்டைபண்ணலாமா? சாலொமோனைப்போல நமது வாழ்வைத் திரும்பிப் பார்க்கும்படி தேவன் இன்று நம்மை அழைக்கிறார். நமக்குள் உள்ள வெற்றிடங்களை நிரப்ப அவர் தயாராகவே இருக்கிறார்! நாம் அவரைக் கிட்டிச் சேருவோமா!

***சிந்தனைக்கு:*** நமக்குள் ஒரு வெற்றிடம் உண்டு என்பதை அது நிரப்படும் போதே நம்மில் அநேகர் உணருவதுண்டு. ஆனால் நாம் இன்றே நம்மை உள்ளபடி கர்த்தரிடம் விட்டுவிடுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர்
18
வெள்ளி

## நாய்வாலை யார் நிமிர்த்துவார்?

*கோணலானதை நேராக்கக் கூடாது. குறைவானதை எண்ணிமுடியாது.*
*பிரசங்கி 1:15*

வேத வாசிப்பு: பிரசங்கி 1:12–18 யாக் 3:13–18

அழகிய நாய்க்குட்டியின் சுருண்டுபோயிருந்த வாலை நிமிர்த்திவிடவேண்டும் என்று சிறுவன் குமார் அரும்பாடுபட்டான். ஒரு சிறு கல்லை வால்நுனியில் கட்டிப் பார்த்தான். பலன் கிடைத்ததா? இல்லை. நாயோ மறுபடியும் வாலை சுருட்டி, ஆட்டியது. இதுபோல வாழ்க்கையில் பல கேள்விகளுக்கு நம்மாலே விடை காணமுடியாது. நமது சொந்த முயற்சியால் பலவற்றைச் சரிப்படுத்தவும் முடியாது. சாலொமோனுக்கும் இவ்வித மான அனுபவம்தான் ஏற்பட்டது. யாவற்றையும் கவனித்து, ஞானமாய் விசாரித்து, ஆராய்ச்சி செய்துதான், அவர் ஒரு உண்மையைக் கண்டுகொண்டார். கோணலாய்ப் போனதை யாராலும் நேராக்க முடியாது என்பதே அந்த உண்மை. நமது வாழ்வின் நோக்கத்தைக் கண்டுகொள்ள முடியாமற்போவதால் மனதிலே சஞ்சலம், குழப்பம், தவிப்பு என்பவைதான் மிஞ்சுகிறது. ஞானம் தவறா? இல்லை. ஆனால் அந்த ஞானம் எதைச் சார்ந்திருக்கிறது என்பதே காரியம். அதிகமதிகமாக அறிய அறிய அதிகமதிக மான பிரச்சினைகளும் நோவுகளும்தான் மிஞ்சும் என்பதுதானே பிரசங்கியின் கண்டுபிடிப்பு. அதாவது, அதிக அறிவு, நம்மைச் சூழ்ந்திருக்கிற குறைகளையும், தீமைகளையுமே அதிகமாக நமக்கு அறியத்தருகிறது.

சாலொமோனுக்கு இப்படியான அனுபவங்கள் வரக் காரணமென்ன? இன்று நம்மை சூழ்ந்திருக்கிற தீமைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் முடிவு என்ன? சாலொமோன் எழுதியுள்ள ஒரு வாக்கியத்தைக் கவனியுங்கள். 'சூரியனுக்குக் கீழே பார்த்தேன்' அல்லது 'வானத்தின் கீழே பார்த்தேன்' என்று எழுதுகிறார். இதுதான் பிரசங்கிக்கு குழப்பங்கள் ஏற்பட முக்கிய காரணம். இதே தவறைத்தான் இன்றைய சூழ்நிலை களில் நாமும் செய்கிறோம். எல்லாவற்றையும் மனித ஞானத்தினாலும் மனித சித்தத்தினாலும் கணக்கிடுகின்றோம், செய்து முடிக்கப் பிரயாசப்படுகிறோம். அதிக அறிவும், ஞானமும், கோபத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்குமானால் பலன் என்ன? எவ்வளவு படித்தும் நல்ல நடக்கை இல்லாவிட்டால் அந்த படிப்பறிவு எதற்கு?

தேவனுடைய பிள்ளையே, எதையும் உனக்கிருக்கும் அறிவைக்கொண்டு காண முற்படாதே. சூரியனுக்குக் கீழேயல்ல. பரத்திலிருந்து வெளிப்படும் ஞானத்தையே நாம் வாஞ்சிக்கவேண்டும். அது தேவனிடத்திலிருந்து வருகிறது. மனித ஞானம் பிரச்சினைகளைக் காட்டும், தீர்க்காது. ஆனால் தேவஞானம் நல் நடக்கையைத் தரும். குழப்பங்களைத் தீர்க்கும். தேவனைச் சார்ந்து சிந்திக்கிற மனப்பக்குவத்தை யும் தரும். நாய்வாலை நாம்மால் நிமிர்த்தமுடியாது. நம்மால் செய்யமுடியாத எதையும் செய்துமுடிக்கிற தேவனால் எதுவும் முடியுமல்லவா!

***சிந்தனைக்கு:*** என் சொந்த முயற்சிகளால் இளைத்து களைத்துப்போன இன்றே தேவசமுகத்திற்கு வருவேனாக. அவர் தமது பரம ஞானத்தி னால் என்னை நடத்துவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| † வேத வாசிப்பு: | ஆதி 18:1-16 |

# மகிழ்ச்சியாயிருப்பது எப்படி

*கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?*
*ஆதியாகமம் 18:14*

ஒக்டோபர் 19 சனி

*தேவனுடைய செய்தி:*

வாழ்க்கை எப்படியாயிருந்தாலும், எப்பொழுதும் எல்லாவற்றிலும் மகிழ்ச்சி அவசியமாயினும், உண்மையைப் பேசுவதே மிக மிக அவசியமானது.

*தியானம்:*

வெப்பம் மிகுந்த ஒருநாளில், ஆபிராம் மூன்று மனிதர்களைக் கண்டு, அன்புடன் அழைத்து, இறைச்சி பால் வெண்ணை பரிமாறி உபசரிக்கிறான். மீண்டும் அடுத்த வருடம் வசந்தகாலத்தில், திரும்பி வருவதாக கூறிய அவர்கள், அப்போது உன் மனைவி சாராள் ஒரு மகனோடு இருப்பாள்" என்றனர். இதைக் கேட்ட சாராள் சிரிக்கிறாள். ஆனால் சிரிக்கவில்லை என பொய் கூறுகின்றாள்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு என்பதை அறிக்கையிடுவேனாக.

*பிரயோகப்படுத்தல் :*

குறைவிலும் மகிழ்ச்சியடைந்த அனுபவமுண்டா? அல்லது யாராவது எதையாவது கூறியதால் மகிழ்ச்சியடைந்த அனுபவம் உங்களிடமுண்டா? அல்லது பொய்யுரைத்த அனுபவம் உண்டா? எவ்வாறு? எங்கே?

வசனம் 2-8 ன்படி ஆபிரகாம் மூன்று மனிதர்களை எவ்வாறு உபசரித்தான்? இன்று நாம் அறியாத நபர்களை வீட்டிற்குள் அழைத்துவந்து அன்புடன் உபசரித்து உணவு பரிமாறியதுண்டா? இல்லாவிட்டால் ஏன்?

கர்த்தர் வல்லமையுள்ளவர். நாம் மதியீனமாக சிரித்தாலும், பொறுமையுள்ள கடவுள் எங்களிடம் அன்புடன் நடந்துகொண்டது உண்டல்லவா?

தம்மைவிட அதிகாரத்தில் குறைந்தவர்கள் தம்மை குறித்து சிரிப்பதைக் கண்ட தலைவர்கள் கண்டிக்கவோ, பதவி இறக்கவோ, சிறையிலடைக்கவோ, கொலை செய்யவோ முற்பட்டதுண்டல்லவா?

மனதளவில் நிந்திப்பவர்கள், எள்ளிநகையாடுபவர்களைக் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்? சாராள் ஏன் ஆசீர்வதிக்கப்பட்டாள்?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடிப்பழக்கம் சந்தோஷம் தருமா?

*என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான்... தடைபண்ணவில்லை. ...முயற்சிகளிலெல்லாம் என் மனம் மகிழ்ச்சிகொண்டிருந்தது. பிரசங்கி 2:10*

வேத வாசிப்பு: பிரசங்கி 2:1–3

சந்தோஷமாயிருக்க யாருக்குத்தான் விருப்பமில்லை. ஓயாத உழைப்பு, சொத்து, சுகங்கள், குடும்பத்தையும் விட்டுவிட்டு வெளிதேசங்களில் போய் உழைப்பது, இவை யாவும் எதற்காக? சிலர் குடிக்கு அடிமையாவது எதற்காக? கவலையை மறந்து, சந்தோஷமாக சுகமாக ஜீவிக்கத்தானே. ஆம், சந்தோஷம், சமாதானம், நிம்மதி, இவற்றைத் தேடி மனிதன் அலைகிறான். அது அவனுக்குத் தேவை என்பதும் உண்மை. ஆனால் அவனது சுய முயற்சி அவனுக்கு மெய்சந்தோஷத்தைக் கொடுக்கிறதா? சிலருக்கு தாம் நினைப்பதைச் சாதிப்பது கடினமாக இருக்கும். ஆனால் பலருக்கு தாம் நினைப்பதை, சரியோ தவறோ, எப்படியோ சாதித்துவிடுகிறார்கள். ஆனாலும் அதனால் திருப்தி கிடைக்கிறதா என்பதே கேள்வி. பதிலுக்கு 'இன்னும் இன்னும்' என்றுதான் மனம் அலறும்.

சாலொமோனும் சந்தோஷத்தையே நாடினார். வாழ்வின் அர்த்தத்தை அவர் தன் சொந்த முயற்சியால் தேடினார். தேடியவைகள் அவருக்குக் கிடைத்தன. மனிதனது வாழ்வில் தேடிப் பெற்று அனுபவிக்கத்தக்கது என்ன என்று ஆராய்ச்சி செய்த அதே வேளையிலே, மதுபானத்தால் தன் தேகத்தை சீராட்டிக்கொண்டிருந்தாராம் சாலொமோன். அத்தோடு சேர்ந்து மதியீனமும் அவரைத் தொற்றிக்கொண்டது. ஒரு ஞானி; தேவனிடமிருந்து ஞானத்தைப் பெற்றுக் கொண்டவர்; இப்போது குடித்து, வெறித்து, இதனால் மனிதன் சந்தோஷமாய் இருக்கலாமா என்று ஆராய்ச்சி செய்கிறார். இந்த ஆராய்ச்சியில் சந்தோஷமும் நிம்மதியும் கிடைத்ததா? 'மதுபானத்தால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல. மதுபானத்தை விரும்புகிறவன் ஐசுவரியவனாவதில்லை.' இவை சாலொமோன் தன் அரசாட்சியின் ஆரம்ப காலத்தில் கூறிய நீதிமொழி. இப்படிப் பட்டவர் அதே மதுபானம் சந்தோஷம் தருமா என்று குடித்து ஆராய்ச்சி செய்தார்.

அன்று அறியாமையில் குடித்த பலர், ஒரு கிறிஸ்தவன் குடிப்பது சாட்சியைக் கெடுக்கும் என்று தெரிந்தும், குடிக்கு இன்றும் அடிமையாகவே இருப்பது ஏன்? இவர்களில் சிலர் துக்கத்தை மறக்கக் குடிக்கிறார்களாம்; பலர் கொண்டாட்டங்களிலே மரியாதைக் காகக் குடிக்கவே வேண்டுமாம். அது மரியாதையான சந்தோஷமாம். ஆனால் இன்று, குடிப்பதில் என்ன தவறு என்று கேட்குமளவிற்கு கிறிஸ்தவன் வளர்ந்துவிட்டான். இது எவ்வளவு பரிதாபம். இன்று கிறிஸ்தவ திருமணங்கள் சில மதுபான சந்தோஷத்தை அள்ளி வழங்குவதை நாகரீகமாக்கி விட்டார்கள். ஒரு வெளிநாட்டு சகோதரி, "எமது சபையினரில் பாதிக்கும் மேலே குடிக்கிறவர்கள், அப்போது கிறிஸ்தவனுக்கு என்ன வித்தியாசம்" என கேட்டாள். தேவபிள்ளையே, இதற்கு உன் பதில் என்ன?

***சிந்தனைக்கு:*** மெய்சந்தோஷம் எங்கே இருக்கிறது என்பதை நான் என் வாழ்வில் கண்டுகொண்டிருக்கிறேனா? தவறான இடத்தில் அதைத் தேடாதபடிக்கு ஜாக்கிரதையாக இருப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ✝ வேத வாசிப்பு: | ஆதி. 9:18–29 |

## மகிழ்ச்சியல்ல இகழ்ச்சி!

*மதுபானம் ... பளபளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப் பாராதே. அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும். விரியனைப்போல் தீண்டும்.*

*நீதி. 23:31,32*

ஒக்டோபர் 21 திங்கள்

வைபவங்களில் குடிப்பது தவறா? கொஞ்சம் குடிக்கலாமா? கொஞ்சம் திராட்சை ரசமும் கூட்டிக்கொள் என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதியுள்ளாரே. வெறிகொள்ளும் அளவுக்குக் குடிக்கக்கூடாது என்றுதானே 1தீமோத்தேயு 5:23ல் பவுல் எழுதியுள்ளார்' இப்படியாக சாட்டுப்போக்கு கேள்விகள் எழுப்புகிறவர்கள் பலர்! 'இராப் போசனத்தில் இயேசு திராட்சை ரசம்தானே பரிமாறினார்; இன்று நாங்களும் திருவிருந்தில் அதைத்தானே குடிக்கிறோம்' என்று குதர்க்கமாகப் பேசுபவர்களும் உண்டு. இப்படியான கேள்விகள் கேட்பவர்கள் தங்கள் சந்தேகத்தைத் தீர்க்கும் நல்மனப்பாங்கு உடையவர்கள் என்று சொல்லமுடியாது. மாறாக, இவர்கள் குடிப்பதற்கு அனுமதிச் சீட்டுத் தேடுகிறவர்கள்.

'ஏன் மனிதனைச் சிருஷ்டித்தேன்? என்று தேவன் மனஸ்தாபப்படும்' அளவிற்கு மனிதனது பாவம் பெருகியிருந்த காலத்திலே, அத்தனை ஜனங்களுக்கும் மத்தியிலே 'நீதிமான், உத்தமன்' என்று பெயர் வாங்கியவர் நோவா. அவர் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தவர். பூமியிலே தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டு சீர்கெட்டுப்போயிருந்த மனிதர் உட்பட சகல தீமைகளும் அழிக்கப்பட்ட பின்னர் எஞ்சி நின்றவர் இந்த நோவாவே. பூமியிலே ஒரு நல்ல சந்ததியை உருவாக்கும் பாரிய பொறுப்பை சுமந்து நின்றவரும் இந்த நோவாதான். இவர் ஒரு பெரிய கதாநாயகன் என்றும் சொல்லலாம். இப்படிப்பட்ட நோவா என்ன செய்தார். 'திராட்சை ரசத்தைக் குடித்து வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் படுத்திருந்தான்.' இது எவ்வளவு துக்கத்துக்குரியது. மொத்தத்தில் பிறர் முன்னிலையில் ஒரு தேவபிள்ளை, தன் சாட்சியை இழந்தார். இந்தக் காரியம் அவரது பிள்ளைகளைத்தான் பாதித்தது.

வெளிநாடுகளில் உணவோடுகூட தண்ணீருக்குப் பதிலாக குடிவகையைப் பாவிப்பது வழக்கம். ஆனால் இந்த வழக்கம் ஏற்படுத்திய பாதிப்புகள் ஏராளம். 'புகைப்பதும் குடிப்பதும் நம்மையும் பிறரையும் பாதிக்கும். அவையிரண்டும் சமூக, ஆன்மீகத் தீங்குகள்' என்று சகோ.ஸ்டான்லி எழுதியுள்ளார். இரவு குடித்துவிட்டு, காலையில் திருவிருந்துக்குப் போய் கை நீட்டுகிறவர்கள் எத்தனைபேர்! எத்தனை துணிவு! இன்று பெண்களும் அந்தப் போதையை நாடுவது அருவருப்பாயிருக்கிறது. மதுபானத்தைப் பாராதே என்று எழுதிய சாலொமோனுக்கு, தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தேவபிள்ளையே, வீண் தர்க்கங்கள் வேண்டாம். 'வெறியர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை' (1கொரி.6:10). போதை உண்டாக்கும் எல்லாமே மகிழ்ச்சியை அல்ல, இகழ்ச்சியையே உண்டாக்கும். இது தேவைதானா?

***சிந்தனைக்கு:*** "மதுபானம் கேடானது" என்று தெரிந்தும் மனிதன் அதையே தேடுகிறான்? இதனால் உண்டாகும் கேட்டை அறிந்த நான் என்னையும் பிறரையும் இதன் அழிவினின்று பாதுகாப்பேனா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர்
22
செவ்வாய்

## கர்த்தர் கட்டாவிட்டால்...

*கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா.*
*சங்கீதம் 127:1*

வேத வாசிப்பு: பிரசங்கி 2:4–9 சங்கீதம் 127

முன்பு குடியிருந்த என் சின்னஞ்சிறிய வீட்டிலிருந்த சந்தோஷம், சமாதானம், குடும்ப உறவு, கஷ்டத்திலும் ஒருவித சுகம், இவை எதுவுமே இந்த மாளிகை வீட்டில் எனக்கு இல்லை. நானும் என் மனைவியும் முதியோர் இல்லத்திற்குப் போக ஆயத்தமாகிறோம்' என்று கண்ணீர் மல்க ஒரு முதியவர் என்னிடம் பகிர்ந்துகொண்டார்.

'பார்த்துக்கொண்டிருக்கும்போதே உயர்ந்துவிட்டான்' என்று சிலரைக்குறித்து நாமே பெருமூச்சு விட்டிருக்கிறோம். அவனது உயர்ச்சி நல்லது, ஆனால் அந்த உயர்ச்சிக்கு காரணர் யார்? கர்த்தர் இல்லாத உயர்ச்சியினால் என்ன பயன்? 'கோபாக்கினை நாளில் ஐசுவரியம் உதவாது', 'தன் ஐசுவரியத்தை நம்புகிறவன் விழுவான்' என்று நீதிமொழி எழுதிய சாலொமோனும் உலகம் வியக்கத்தக்கதாக உயர்ந்தார். தான் செய்த காரியங் களைக் குறித்து தானே ஒரு பட்டியல் போட்டிருக்கிறார். வீடுகள், திராட்சைத் தோட்டங்கள், சகல பழமரங்களும் அடங்கிய அழகிய தோட்டங்கள், குளங்கள், அதுமாத்திரமல்ல, வேலைக்காரர், ஆடு மாடு, திரளான செல்வம், வெள்ளி பொன், உல்லாசமாக பொழுதைக் கழிக்க சங்கீதக்காரர் வாத்தியங்கள் இப்படி ஏராளம். 'எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் நான் பெரியவனும் திரவிய சம்பன்னனுமானேன்; என் ஞானமும் என்னோடேகூட இருந்தது' என்று அவர் தன்னைப் பற்றி தானே எழுதியுள்ளார். நடந்தது என்ன? இவற்றில் மனதை வைத்த சாலொமோ னின் வாழ்வில் கர்த்தர் இருந்தாரா? அவர் தேடி வைத்த ஒரு பகுதியை அவருடைய மகன் ரெகொபெயாம் எகிப்தியரிடம் இழந்தான் (1ராஜா.14:26). தொடர்ந்து சகலமும் அழிந்துபோனது. இறுதியில் சாலொமோன், 'கர்த்தர் வீட்டைக் கட்டாவிட்டால் எல்லா முயற்சிகளுமே பலனற்றவை' என்று தன் அனுபவத்தையே எழுதிவைத்தார்.

பணமும் செல்வமும் வாழ்வில் சுகத்தையும் உயரிய அந்தஸ்தையும் வசதிகளை யும் நிச்சயம் தரும். அதற்காக, அதுதான் வாழ்வின் வெற்றியல்ல. ஐசுவரியம், 'போதும்' என்று ஒருபோதும் சொல்லாது. கிடைக்கக் கிடைக்க ஆசையோடு தேவை களையும் கூட்டும். இந்த வழியில் கர்த்தர் எங்கே? கர்த்தர்தான் தருகிறார் என்று சொல்லுவோமானால் நமது வாழ்வில் அவர் எங்கே? ஐசுவரியம் ஆத்துமாவுக்கு சுகம் தருமா? நல்ல தூக்கத்தைத் தருமா? அருமையான தேவனுடைய பிள்ளையே, பணம் அல்ல, தேவனே நமது வாழ்வை உயர்த்தவேண்டும். அப்போது செல்வம் தீமையாக இராது. புகழ் அல்ல, தேவனே நமக்கு கனத்தைத் தரவேண்டும். அப்போது அது நிரந்தரமானதாக இருக்கும். நமது நோக்கங்களைச் சரிப்படுத்துவோம். ஏனெ னில், கர்த்தரில் அத்திபாரமிடாத எதுவும் அழிந்தேபோகும்.

***சிந்தனைக்கு:*** நீர் இல்லாத வாழ்வு வாழ்வாகுமா? என்று பாடுகிறோம். அப்படியே நமது வாழ்வில் கர்த்தருக்கே முதலிடத்தைக் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| † வேத வாசிப்பு: | பிரசங்கி 2:10–11 பிலி 3:1–7 |

# நம்மைவிட்டு எடுபடாத ஒன்று

*....எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். பிலிப்பியர் 3:7*

ஒக்டோபர் 23 புதன்

நான் செய்த செயல்கள் யாவற்றையும் ...நினைத்துப் பார்த்தபோதோ, அவை யாவும் வீண் என்பதைக் கண்டேன். அவை அனைத்தும் காற்றைப் பிடிக்க முயல்வதற்கு ஒப்பாகும்'(பிரசங்கி 2:11 திருவிவிலியம்). செல்வத் திரட்சிக்குள் வாழ்ந்தும், தேவன் தந்தது போதாதென்று மேலும் செல்வத்தைச் சேர்த்துக்கொண்டவரும், குறைவுபடாத ஞானத்தைக் கொண்டிருந்தவரும், தான் நினைத்த எந்த மகிழ்ச்சிக்கும் தடைவிதிக் காதவருமாகிய சாலொமோன் ராஜா, இறுதியில் எல்லாமே வீண் "மாயை" என்றார். ஆனால், சந்தோஷம் ஒன்றுதான் தான் கண்ட பலன் என்றும், தன் வாழ்வில் அனுபவித்த சகலமும், 'காற்றைத் துரத்திப் பிடிப்பதைப் போன்றது' என்றுகூட உணர்ந்த தாகவே எழுதுகிறார். எங்கிருந்தோ வந்து எங்கேயோ கடந்துபோகிற காற்றை நமக்கென்று பிடித்து வைத்திருக்க முடியுமா?

வெளிநாட்டுப் பணம் தொடங்கி, சகலமும் நிறைவாயிருக்கிற ஒரு கிறிஸ்தவ சகோதரி, 'தனக்கு வேதாகமம் வாசிக்க நேரமில்லை' என்று சொன்னபோது பிரசங்கியின் வார்த்தைகள்தான் ஞாபகம் வந்தது. அதேசமயம், பணம், மாளிகை வீடு என்று எல்லா வசதிகளும் கொண்ட இன்னுமொரு சகோதரி, 'இவை எனக்குரிய தல்ல; என் இயேசுவே எனக்குப் போதும்' என்று வாழ்ந்து காட்டுவதை என் கண் களால் பார்த்தபோது என் தேவனைத் துதிக்காமலும் இருக்க முடியவில்லை. திறமை யான, இதுவரை யாரும் செய்யாத பெரிய அதிசய செயல்களை நாம் செய்து முடித்திருக்கலாம். ஆனால் அவையும் அவற்றால் அப்பப்போது கிடைத்த சந்தோஷங் களும் தற்காலிகமானவையே என்று உணர்ந்திருக்கிறோமா? இதை நான் எழுதுவ தற்கு முந்தின தினம் இரவு, கொழும்புப் பிரதேசத்தில் நடக்கக்கூடாதவை நடந்தன. விடியற்காலையில் சம்பவங்களைக் கேள்விப்பட்டபோது, மனதில் தோன்றிய சிந்தனை என்னவெனில், "நமக்கிருக்கும் எதுவும் நமக்கு உதவாது. நமது பாதுகாப்பும் இளைப் பாறுதலும் நித்திரையும் நமது தேவனுடைய கரத்தில்தான் இருக்கிறது" என்பதே.

தேவனுடைய பிள்ளையே, பெறுமதி வாய்ந்தது, பாதுகாப்பானது, மகிழ்ச்சி தரக் கூடியது என்று நாம் எதிலே நமது மனதை, நேரத்தை, பலத்தை விட்டு வைத்தி ருக்கிறோம்? பெருமைக்குரிய பவுலடியார், தன் வாழ்வின் ஒரு கட்டத்திலே தனக்கு இருந்த பெருமை யாவையும் குப்பையாகக் கண்டார். எப்படி? இவ்வுலகோடு முடிந்து போகும் அவை யாவுக்கும் மேலாக தன்னைவிட்டு எடுபடாத ஒன்றைக் கண்டார். அது வேறு எதுவுமில்லை. ஆண்டவருடைய சிலுவைதான். இன்று நாம் என்ன சொல்லப்போகிறோம். காலம் கடந்து உண்மையை அறிந்து துக்கப்படுவோமா? அல்லது இப்போதே தேவனிடம் திரும்புவோமா!

***சிந்தனைக்கு:*** இவ்வுலகில் எனக்கென்று கர்த்தர் தந்த சகலத்துக்காகவும் நன்றி சொல்லுவதோடு நிறுத்திவிடாமல், 'இவற்றுக்கும் மேலாய் நீர் எனக்கிருப்பதால் கோடி நன்றி' என்பேனா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர்
24
வியாழன்

## கர்த்தருக்குள்....

*...இதோ, ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம், பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி...*
*யோபு 28:28*

வேத வாசிப்பு: பிரசங்கி 2:12–17
யோபு 28:12–28

அறிவுக்கடல் என பெயர் பெற்ற ஒருவருடைய மனைவியைச் சந்திக்கப் போனேன். ஆனால், அந்தக் குடும்பத்துக்குள் இருந்த போராட்டங்கள் மிகுதி என்று அங்கே சென்ற பின்புதான் அறிந்துகொண்டேன். அந்தப் பெரியவருடைய அறிவு அவருக்கோ அவருடைய குடும்ப வாழ்வுக்கோ உதவவில்லை என்பது சாலொமோனை ஞாபகப் படுத்தியது. தேவன் இல்லாத செல்வத் திரட்சியினாலும், தான் சாதித்த பெரிய காரியங்களினாலும் பலனில்லை என்று கண்டுகொண்ட சாலொமோன், தனக்கிருந்த ஞானத்தைக் குறித்தும் மதியீனனைக் குறித்தும் சிந்திக்கிறார். ஞானியின் கண்கள் அவன் முகத்திலே இருக்கிறது. மூடனோ இருளிலே நடக்கிறான். ஆனால் இருவருக்கும் ஒன்றுதானே நடக்கிறது. பின்னர் ஞானத்தினாலே என்ன பலன் என்று அலுத்துக் கொள்கிறார் இந்த ஞானி.

பலத்த காற்று; மரங்கள் முறிந்து விழுகின்றன. கூரைகள் பறக்கின்றன. பலமான சுவர்கள் இடிந்து விழுகிறது. கடல் மலைபோல எழுந்து தரையை விழுங்குகிறது. மொத்தத்தில் தரையில் எழுந்து நின்றவையெல்லாம் விழுந்து போயின. ஆனால் தரையோ அப்படியே இருக்கிறது. இந்த சுழல்காற்று எல்லாவற்றையும் வீழ்த்தி ஒய்ந்த பின்பும், யாவுக்கும் அத்திபாரமாய் இருந்த தரையோ, மறுபடியும் யாவையும் கட்டியெழுப்ப ஏதுவாய் கலங்காமல் அப்படியே இருக்கிறது. இந்த உண்மையை சாலொமோனுக்கு முன் அநேக ஆண்டுகளின் முன்பு யோபு கண்டறிந்திருந்தார். யோபு சொன்ன ஓப்பீரின் தங்கமும், கோமேதகமும், இந்திர நீலக்கல்லும், இந்த ஞானி சாலொமோன் தன் காலத்தில் தனக்கென்று சேர்த்துக்கொண்டவை. ஆனால் யோபுவோ இவை எதுவும் ஞானத்திற்கு நிகரல்ல. உண்மையான ஞானமோ தேவனுக்குள் இருக்கிறது என்றும், கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானம் என்றும் ஏற்கனவே சொல்லிவிட்டார். தனக்குரிய யாவும் அழிந்தபோதும் இந்த யோபு கலங்காமல் இருந்தார். அழிந்துபோனவைகளை அல்ல, இன்னும் கட்டியெழுப்ப ஏதுவாய் இருந்த அத்திபாரமாகிய தேவனையே இறுகப் பற்றிக்கொண்டார்.

தேவபிள்ளையே, சாலொமோனின் தவறும், யோபுவின் உறுதியும் இன்று நமக்கு பாடங்களாக இருக்கின்றன. அழிந்துபோகும் காரியங்களில் நமது வாழ்வைக் கட்டியெழுப்ப எத்தனிக்கக்கூடாது. எல்லாமே அழிந்துபோனாலும் இன்னும் நம்பிக்கை தருகின்ற அழியாத அத்திபாரமாகிய தேவனை நாம் சார்ந்து நிற்கவேண்டும். அப்போது எல்லா நம்பிக்கைகளும் அற்றுப்போக நேர்ந்தாலும் சாலொமோனைப் போல எல்லாம் மாயை என்று புலம்புகிறவர்களாக அல்ல; மாறாக, 'எனக்கு தேவன் இருக்கிறார்' என்று முழங்கலாம் அல்லவா!

***சிந்தனைக்கு:*** என்ன வந்தாலும் எதை இழந்தாலும் கர்த்தருக்குள் நிலைத்திருக்கிற வாழ்வு வாழ நான் என்ன செய்யவேண்டும் என்பதை சிந்தித்து அதற்கு என்னை ஒப்புக்கொடுப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: பிரசங்கி 2:17–23 1தீமோ. 6:6–11



## கடின உழைப்பும் கருகிப்போகும்

*நாங்கள் ... சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. யாக்கோபு 4:13,14*

சாலொமோன், தன் கடின உழைப்பையும், சேர்த்துவைத்த சம்பாத்தியங்களையும் பார்க்கிறார். அவர் கொள்ளையடிக்கவில்லை. அயல்நாடுகளுடன் போரிட்டு உடைமைகளைக் கைப்பற்றவில்லை. அவர் கடினமாக உழைத்தார். தன் மனதிலே தோன்றியதையெல்லாம் செய்தார். சாலொமோன் கேளாத ஐசுவரியத்தைத் தேவன் அள்ளிக் கொடுத்திருந்தும், மேலும் மேலும் சேர்த்தார். ஐசுவரியம் பெருகப் பெருக அவர் மனதுக்கு அது மகிழ்ச்சியாகவே இருந்தது. ஆனால் இப்போது அவைகளும் ஒன்றுமில்லாத, அர்த்தமில்லாத மாயையாக அவருக்குத் தெரிகிறது. ஏன்? சாகும்போது இவைகளெல்லாம் கூட வரப்போவதில்லை என்பது உண்மைதான். ஆனால், அதிலும் மேலாக, இன்னொருவருக்கு அவற்றை வைத்துப்போகவேண்டுமே என்ற எண்ணம் அவருக்கு வெறுப்பாயிருந்தது. அவன் இந்த ஐசுவரியத்தைக் பாதுகாக்கத்தக்க புத்திமானோ, அழித்துப்போடும் மூடனோ யாரறிவார்? எந்தவொரு பிரயாசமும் இல்லாமல் இன்னொருவன் இந்த சம்பாத்தியத்தை அனுபவிக்கிறான். மேலும், அது கவனிக்கப்படாமலும், பின்னர் அழிக்கப்பட்டும் போகிறது. இது சாலொமோனின் வாழ்வில் உண்மையாகவே நடந்தது. அவரது மகன் ரெகோபெயாம் ராஜாவாகி, மூடத்தனமாக நடந்து, ஜனங்களின் வெறுப்புக்கு ஆளாகி, ராஜ்யமும் பிரிந்து, தகப்பன் சேர்த்துவைத்த சம்பாத்தியத்தின் பெரும்பகுதியை அவனே அழித்துப்போட்டான்.

சம்பாதிப்பது தவறா? ஐசுவரியம் தவறா? இல்லையே! இன்று நாம் ஒன்றை உணரவேண்டும். நாம் கடினமாக உழைக்கவேண்டும். ஆனால் அதன் நோக்கம் சரியாக இருக்கவேண்டும். நமது குடும்பத்தைக் காப்பாற்ற, தேவனுடைய காரியங்களைக் கவனிக்க நாம் உழைக்கவேண்டும். தேவன் நமது பராமரிப்பில் கொடுத்திருப்பவர்களின் சரீர, ஆத்மீக தேவைகளை நாம்தானே கவனிக்கவேண்டும். மாறாக, சுயநோக்கோடும், பிறரை முந்திக்கொள்ளும் நோக்குடனும், தவறான நோக்கத்துடன் படுகின்ற பிரயாசங்கள் நிச்சயம் மனசஞ்சலத்தையே கொடுக்கும். இன்று நாம், ஓடி ஓடி உழைக்கிறோம். அந்த உழைப்பு எங்கே? வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பது உண்மைதான். ஆனால் ஆசைகளும் அதிகரித்திருப்பதை யார் யார் உணருகிறார்கள். சம்பாத்தியம் ஒன்றையே இலக்காக வைத்து ஓடுகிறவர்கள் அழிவிலும் கேட்டிலும் அகப்பட்டுப் போகிறார்கள் என்று பவுல் எழுதுகிறார். "நீ திட்டங்கள் போடுகிறாயே; நாளைக்கு நீ இருப்பாயோ?" என்று சவால் விடுகிறார் யாக்கோபு. பிரியமானவனே, சம்பாத்தியம் பாவமல்ல. உன் சம்பாத்தியத்தை தருகின்ற தேவன் உன்னுடன் இருக்கிறாரா? என்பதே முக்கியம். சம்பாத்தியத்துக்காக நான் இதுவரை ஓடித் திரிந்தது உண்டானால் இன்று சற்று யாவையும் நிறுத்தி தேவசமுகத்தில் என்னை ஆராய்ந்து பார்ப்பேனாக.

***சிந்தனைக்கு:*** உன் உயர்வும் அழிவும் உன்னுடைய தெரிந்தெடுப்பில்தான் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர்
26
சனி

# பரிந்து பேசுதல்

*நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன். ஆதியாகமம் 18:19*

வேத வாசிப்பு: ஆதி 18:17–33

***தேவனுடைய செய்தி:***

நீதியுள்ளவரான ஒரே தேவ குமாரனால் முழு உலகத்தையும் மீட்க முடியும்.

***தியானம்:***

ஆபிரகாம் சோதோமுக்காகப் பரிந்துபேசுகிறார். 50 நீதிமான்கள் இருந்தால் அழிப்பீரோ என ஆரம்பித்தவர், 45, 40, 30, 20 என மன்றாடி, பத்துடன் நிறுத்திவிட்டார். மேலும் குறைப்பது சிறந்ததன்று. பத்து நீதிமான்கள் நிமித்தம் தேவன் தேசத்தை அழிக்கப்போவதில்லை என்றார்.

***விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:***

தேவனுக்கு அஞ்சி வாழும் ஒரு சில நீதிமான்களின் ஜெபத்தினால், பாவம் நிறைந்த சமூகம் பாதுகாக்கப் படக்கூடும் அல்லவா!

***பிரயோகப்படுத்தல் :***

தேவன் நம்மைக் கவனிக்கிறார் அல்லவா? சோதோமை அதன் தீமைக்காக அழிக்கப்போவதை தேவன் ஆபிரகாமுக்குக் கூறுவதன் காரணம் என்ன?

சோதோமிலுள்ள நீதிமான்களையும் தேவன் அழிப்பாரோ என்பது ஆபிரகாமின் சிந்தனையிலிருந்து ஜெபத்தில் வெளிவந்தது ஏன்? இன்று நீதிமான்களைக் காப்பாற்றும்படி நாம் மன்றாடுகிறோமா? ஏன் மன்றாட வேண்டும்?

பிறருக்காக ஜெபிக்கின்றீர்களா, அதுவே சிறந்தது. இவ்வனுபவம் உண்டா? கிறிஸ்துவின் மக்கள் ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பது அவசியமா? ஏன்?

நீதியோடும், நேர்மையோடும் வாழும்படி, எமது பிள்ளைகளுக்கும் எமது சந்ததியினருக்கும் கட்டளையிடுவது அவசியமானதா?

இன்று நாம் வாழும் தேசத்தின் அழிவு, யுத்தம், சூழல் மாசடைதல், தொற்றுநோய் பரவுதல், கலப்படம் இவற்றிற்கு யார் காரணம்? இதில் எனது பங்கு என்ன? நான் என்ன செய்யலாம்?

எனது தேசத்திற்காக, பிற நாடுகளுக்காக தேவனிடம் ஜெபிக்கின்றேனா? அங்கு வாழும் தேவ மக்களுக்காக, நீதிமான்களுக்காக ஜெபித்ததுண்டா?

***எனது சிந்தனை:***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: பிரசங்கி 2:24–26

# இந்த நாள்

*இதுவும் தேவனுடைய கரத்திலிருந்து வருகிறது.*
*பிரசங்கி 2:24*

ஒக்டோபர் 27 ஞாயிறு

ஒரு ஏழைக் குடும்பம் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பின் ஆலயத்திற்கு வர ஆரம்பித்தார்கள். சில மாதங்களுக்குள் அவர்களுடைய எளிய வாழ்வில் மாற்றங்கள் தெரிந்தன. உடைகள் மாறின. அலங்காரங்கள் மாறின. எல்லாமே மாறின. நல்லது. எல்லோருக்கும் சந்தோஷம். ஆனால், ஆலயத்திற்கு வருகின்ற மற்ற கிறிஸ்தவர்களுக்குச் சமமாக இருக்கவேண்டுமே என்ற எண்ணத்தில் பணம் கடன் வாங்கித்தான் காரியங்களைச் செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டபோது, அவர்களில் அல்ல, கிறிஸ்தவர்களைக் குறித்தே மனதில் சோர்வுண்டானது.

கிறிஸ்தவன் சந்தோஷமாய் இருக்கக்கூடாதா? கொண்டாட்டங்கள் வைக்கக்கூடாதா? அழகாய் உடுத்தக்கூடாதா? அலங்காரம் பண்ணக்கூடாதா? உழைக்கிறோம் அனுபவிக்கிறோம்; இதிலென்ன தவறு? என்றெல்லாம் பலர் கேள்விகள் எழுப்புவதுண்டு. இன்றைய வாசிப்புப் பகுதியில், சாலொமோனும், புசித்துக் குடித்து, தான் உழைத்ததின் பலனை உல்லாசமாய் கழிப்பதிலும் பார்க்க மனுஷனுக்கு வேறு என்ன சந்தோஷம் என்று கேள்வி எழுப்புவதுபோலத் தெரிகிறது. ஆனால் அப்படியல்ல. வசனத்தின் பின்பகுதியையும் ஊன்றிக் கவனித்தால், நமது உழைப்பில் நாம் சந்தோஷப்படுவதும், நமது வாழ்வை அனுபவிப்பதும்கூட தேவன் நமக்கு அருளும் கிருபையின் ஈவு என்பதையே சாலொமோன் வலியுறுத்துகிறார். வாழ்வின் உண்மையான சந்தோஷம் தேவனுடைய வழிநடத்துதலில் வாழ்வதிலேதான் கிடைக்கிறது. தேவன் இல்லாத எதுவுமே வீண். அந்த வாழ்வில் திருப்தியே இராது.

ஒவ்வொரு நாளும் தேவனுடைய ஈவு என்று எண்ணி துதியோடும் ஸ்தோத்திரத்தோடும் அந்தந்த நாளைத் தொடங்குகிறவனே தன் வாழ்வை சரியாக அனுபவிக்கத் தெரிந்தவன். அடுத்தவனோ, திருப்தியற்று, தன் வேலையில் சலிப்புற்று, தன் வாழ்வுக்கு சரியான நடத்துதல் இல்லாதவனாக இறுதியில் வாழ்வில் விரக்தியுற்றுப் போய்விடுவான். கஷ்டங்கள் வரும்போது தடுமாறிப்போவான். இதில் நாம் எந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்? நம்முடைய ஒவ்வொரு உழைப்பையும் தேவபாதத்தில் வைத்து தேவனுக்கு நன்றி செலுத்துவோம். ஒவ்வொரு நாளையும் அவரது பொற்கரங்களில் வைத்து, ஜெபித்து, ஆரம்பிப்போம். நமது சந்தோஷங்களிலும் தேவனுடைய பிரசன்னத்தை நாடுவோம். தேவனுக்கு முதல் நன்றி செலுத்தி கொண்டாட்டங்களை ஆரம்பிப்போம். அந்த சந்தோஷம் வித்தியாசமானது. தேவபிள்ளையே, இந்த நாள் தேவன் தந்த நாள். அவர் தந்த நாளை அவருக்கென்று வாழ, அவருடைய கரத்திலேயே நாம் அதனை ஒப்புவிப்போமா!

***சிந்தனைக்கு:*** கர்த்தர் கிருபையாய் தந்த இந்த நாளை அவர் கரத்திலேயே திரும்பக் கொடுத்து, அவருக்குள் வாழ, உழைக்க, சந்தோஷமாய் இருக்க நம்மை ஒப்புவிப்போமா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர்
28
திங்கள்

## காலம் தேவனுடையது

*ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு.*
*பிரசங்கி 3:1*

வேத வாசிப்பு: பிரசங்கி 3:1–10

'ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு என்றால், அது அது நடக்கவேண்டிய நேரம் நடந்துதான் தீரும்; அவற்றிலிருந்து தப்பவும் முடியாது என்றால் கடவுளை ஏன் நான் கும்பிடவேண்டும்' என்று தன் உடைமைகளை இழந்துபோயிருந்த ஒருவர் அலுத்துக்கொண்டார். 'இழந்துபோகும் காலத்திலே இப்படிப் பேசுகின்ற நீங்கள், புதியவற்றைத் தேடிச் சேர்த்துக்கொள்ளும்போது மவுனமாய் இருப்பது ஏன்' என்று கேட்டபோது, அவர் மவுனமாகிவிட்டார். அதேசமயம், 'என் தேவன் தவறு செய்கிறவர் அல்ல; இந்த அநியாயத்தின் மத்தியிலும் தேவனுடைய நியாயம் விளங்கும் காலம் வரும்' என்று வீதியிலே குருதி வெள்ளத்தில் கிடந்த தன் கணவனுக்கு அருகில் முழங்காலிட்டு ஜெபித்தாளாம் ஒரு இளம் மனைவி. இவளைக் குறித்து என்ன சொல்லுவோம்!

'காலம்' என்பது மிகவும் முக்கியம். சாலொமோன் குறிப்பிட்டுள்ள பல சம்பவங்களும் அவருடைய அனுபவங்களும் அந்தந்த காலத்தில் நமது வாழ்விலும் நடக்கத்தான் செய்கின்றன. "ஆகாயத்திலுள்ள நாரை முதலாய்த் தன் வேளையை அறியும்; காட்டுப்புறாவும், கொக்கும், தகைவிலான் குருவியும் தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும்; என் ஜனங்களோ கர்த்தரின் நியாயத்தை அறியார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே. 8:7) நமக்கு நடக்கும் பாதகமான சம்பவங்களைக் குறித்து நாம் அதிகமாகக் கலங்கிப்போவதுண்டு. அதேசமயம் அவற்றுக்கு எதிர்மாறாக நன்மைகளும் நிகழுகின்றன என்பதை சிந்திப்பது குறைவு. நாம் எந்தக் காலத்திலும் தேவனுக்குள் சந்தோஷமாக திருப்தியாக இருக்கவேண்டுமானால் ஆண்டவருடைய சரியான வேளையை அறிந்துகொண்டு, அதை ஏற்றுக்கொண்டு, கர்த்தர் சரியாகவே செய்கிறார் என்று மெச்சி வாழப் பழகவேண்டும். மாறாக, சந்தேகப்பட்டு, ஆத்திரப்பட்டு, தேவன் பிழைவிட்டார் என்று அதைரியப்படுவோமானால், அது நமக்கு ஆபத்தாகிவிடும். மாத்திரமல்ல, அது தேவனைவிட்டு நம்மைப் பிரித்து, தேவனுக்கு விரோதமாக போர்செய்யும் ஆபத்திலும் நம்மைச் சிக்கவைக்கும்.

கடந்து வந்த காலங்களை சற்று திரும்பிப் பார்ப்போம். சிலர் வாழ்வில் ஒரே கஷ்டம் என்று சொல்லலாம். அதற்காக ஒருவேளையாவது நன்மையாக இருக்கவில்லை என்று சொல்லமுடியுமா? துயரங்களையும் அழுகைகளையும் தோல்விகளையும் கூட தேவனுக்குள் வைப்போமானால், அவற்றுக்குள்ளும் நன்மையான தருணங்களை ஏற்படுத்த தேவனால் கூடும். ஏனெனில் காலங்கள் அவருடைய கரத்தில் இருக்கிறது (சங்.31:15). அதை யாராலும் மாற்றமுடியாது. ஆகையால் எக்காலத்திலும் எவ்வேளையிலும் தேவனையே நம்புவோமாக!

***சிந்தனைக்கு:*** காலங்களையெல்லாம் ஆளுகை செய்கிற ஆண்டவர் ஒருவரே என் ஆண்டவர்; ஆகையால் எக்காலத்திலும் அவரை நான் ஸ்தோத்தரித்து வாழுவேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| † வேத வாசிப்பு: | பிரசங்கி 3:1-4 எபே 5:15-16 |

## முடிவு வேண்டும்!

*பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு.*
*பிரசங்கி 3:2*

ஒக்டோபர்
29
செவ்வாய்

அறுபது வயதுக்கும் மேற்பட்ட சிலர் மத்தியில் செய்யப்பட்ட ஒரு மதிப்பீட்டிலே, அநேகர் "மரணத்தை" விரும்பவில்லை என்பது தெரியவந்தது. இவர்களுக்குள் சிலர், மரணம் வரட்டும், ஆனால் இப்போது வேண்டாம் என்றனர். சிலர் மரணத்திற்கு முகங்கொடுக்கவே பயப்பட்டனர். முதல் கூட்டத்தார், கடந்த 60 ஆண்டுகளில் தாம் செய்து முடித்தவற்றின் பலன்களைக் காணவிரும்பினர். மற்றவர்கள், தம் கடந்த வாழ்வைக் குறித்தோ, சாவின் பின் என்னவாகுமோ என்றுமே பயப்பட்டார்களோ, என்னமோ அவர்கள் பொதுவாக மரணத்தையே வெறுத்தனர்.

வயது முதிர்வதை யாரால் தடுக்கமுடியும்? அது இயல்பாகவே நடக்கும். ஆனால் இன்றைய சமுதாயம் இளமையாக என்றும் வாழலாம் என்ற மாயையைப் போதிக் கிறது. இந்த விற்றமின், அந்த முககிறீம் என்று இளமைத் தோற்றத்திற்கான யுக்தி களும் இன்று ஏராளம். ஆனால், அடிமையாக அல்லது வறுமையின் பிடியில் இருக் கிற ஒருவன் அந்த வாழ்வைத் தொடர நினைப்பானா? அல்லது ஓய்வின்றி உழைக் கிறவன், ஓய்வை விரும்பமாட்டானா! ஒரு பொல்லாத மேலதிகாரியின் கீழ் வேலை செய்கிறவன், இவரைவிட்டு ஓடவேண்டும் என்று சொல்லமாட்டானா? மறுபக்கத்தில், சுதந்தரமாய் உழைத்து அநேகருக்குப் பிரயோஜனமாயும் நாம் ஜீவிக்கலாம். ஆனால் அதிலும்கூட ஒரு களைப்பு, ஒரு அலுப்பு உண்டாகத்தான் செய்கிறது. எந்த நாளும் ஒரே மனநிலையில் நாம் வாழமுடியாது. அது நமக்கு வெறுப்பைத் தரும். ஆனால் எந்த நிலையையும் நாம் பிரயோஜனப்படுத்தலாம். முத்திரைகளைச் சேர்ப்பவர், தன் முத்திரை அல்பம் நிரம்பியவுடனே அதை வியாபாரியிடம் கொடுத்து அந்தப் பெறுமதிக்கு வேறு பொருளை மாற்றிக்கொள்வார். பிறக்கவும் வேண்டும்; பின்னர் இறக்கவும்தான் வேண்டும். ஒவ்வொன்றுக்கும் ஒரு காலம்.

நமது தேவன் வியாபாரி அல்ல; அவர் உயர்ந்தவர். இங்கே நமது வாழ்வை நாம் முடிக்கும்போது அதிலும் மேலான நித்திய வாழ்வை நமக்குத் தருகிறார். இவ்வுலக வாழ்வு, ஒரு குறித்த காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பது ஆசீர்வாதமானதே. எவ்வளவு காலத்திற்குத்தான் வயது முதிர்ந்துகொண்டே போவது? எத்தனை காலத் துக்குத்தான் தேவனைவிட்டுப் பிரிந்து வாழுவது? கண்ணீர், பாடுகள், வேதனைகள் நீங்கி தேவசமுகத்திலே நாம் ஜீவிக்கவேண்டாமா? இந்த வாழ்வு ஒரு புகையைப் போல மறைந்துபோகும். ஆனாலும் நமக்கொரு நிஜ நம்பிக்கை உண்டு. இந்த வாழ்வு முடிந்தால்தான் அந்த மகிமையான வாழ்வை நாம் சென்றடையலாம். ஆகவே, கிடைத் திருக்கும் நாட்களை நம்பிக்கையோடே பிரயோஜனப்படுத்திக் கொள்வோமாக.

***சிந்தனைக்கு:*** கர்த்தர் அன்பாக நமக்கு நியமித்திருக்கும் நாட்களைப் பிரயோஜனப்படுத்தி, பிறருக்கு பயனுள்ளவர்களாகவும், இறுதியில் தேவசமுகம் செல்லும் நம்பிக்கையுடனும் வாழுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர்
30
புதன்

## புதிய பெலத்தோடு எழும்பு!

*தேட ஒரு காலமுண்டு, இழக்க ஒரு காலமுண்டு, காப்பாற்ற ஒரு காலமுண்டு, எறிந்துவிட ஒரு காலமுண்டு.*
*பிரசங்கி 3:6*

வேத வாசிப்பு: ஏசாயா 43:18-25

தற்போதைய நெருக்கங்கள் மத்தியிலும், பழைய நாட்களை நினைவுகூருவது உண்டல்லவா! தேடித் தேடிச் சேர்த்துவைத்த கடந்தகால சாமான்கள், பழைய வாழ்த்துமடல்கள், சின்ன வயதுப்படங்கள் இவற்றை எறிந்துவிட மனம் வருவதில்லை பலருக்கு. சிலவேளைகளில் அந்த நாட்களுக்குள் கடந்துபோய் மீண்டும் வாழவேண்டும் போல மனம் துடிக்கும். ஆனால் அது முடியாது. நாம் பிறந்து வளர்ந்த ஊருக்குப் போனால், பழைய நினைவுகள் அலைமோதும். பசுமையான நினைவுகளுக்குள்ளும் வேறுபட்ட பல மாற்றங்களைக் காணலாம். ஆனால் பழைய ஊரையே நமது கண்கள் தேடும். ஆனால் கிடைக்காது. சில நபரின் நினைவுகள் நமக்குள் புதைந்து கிடக்கும். சில சந்தர்ப்பங்களில் அவற்றைத் திரும்ப நினைக்கும்போது கோபம் ஆத்திரம் நமக்குள் பொங்கி எழுகிறது. அதேசமயம் சிலபேரின் நினைவுகள் இனிய நினைவு களாகவே தொடர்ந்தும் இருக்கிறது. ஆனால் அவர்களைக் காண இன்று விரும்பினா லும் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தெரியாது.

ஆம், இந்த அனுபவங்கள் நமக்கும் நேரிடலாம். இது இயல்பு. ஆனால் எவ்வளவு காலத்துக்கு நாம் தேடிக்கொண்டிருப்போம்? எவ்வளவு காலத்துக்கு நமது இருதயத் திற்குள் பழைய காரியங்களைச் சேர்த்து வைத்திருப்போம்? முடிந்தவை முடிந்தவை களே. அவற்றை நாம் திருப்பிக்கொள்ளவே முடியாது. ஒருவன் தற்சமயமாக சாக்கடை கால்வாய் அருகே நூறு ரூபாய் நோட்டைக் கண்டெடுத்தான், நல்லது. ஆனால் அதன்பின் அவன் தலைகுனிந்தவனாக, சாக்கடைக் கால்வாயைப் பார்த்தவனாகவே, இன்னும் கிடைக்குமா என்ற நினைவோடு நடந்து திரிந்தானாம். இதனால் அவன், அழகிய இயற்கையையும், அன்பான மனிதர்களையும் காணத் தவறிவிட்டான். இறுதி யில் அவனது முதுகு கூனி, அவனால் தலை நிமிரக்கூட முடியாமல் போய்விட்டது.

அன்பான தேவபிள்ளையே, நாம் தேடிக்கொண்டது போதும். போனது போனதுதான். பழைய கசப்புகளை மனதிலே சேர்த்து வைத்து, சமயங்களிலே அவற்றைத் தேடித் தேடி, அலசி ஆராய்வதும் போதும். கர்த்தர் சொல்லுகிறார்: 'நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப் போடுகிறேன்; உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்.' 'முந்தியவைகளை நினைக்கவேண்டாம். ...இதோ நான் புதிய காரியங்களைச் செய்கிறேன், இப்பொழுதே அது தோன்றும்' என்கிறார் கர்த்தர். இப்படியிருக்க, மாயையைத் தேடுவதை விட்டுவிடவும், சேர்த்து வைத்திருப்பதை எறிந்துவிடவும் தேவன் காலங்களை நியமித்தது நல்லதல்லவா! நாமும் எறிந்து விட்டு, புதுப்பெலத்தோடு எழும்புவோமாக.

***சிந்தனைக்கு:*** கர்த்தர் என்னை மன்னித்துவிட்டிருக்க, பழைய கசப்புகளை எப்படிச் சுமப்பது? புதிய காரியங்களைக் கர்த்தரிடத்தில் எதிர்பார்த்து, புதிய சந்தோஷத்தை அனுபவிப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வேத வாசிப்பு: | சங்கீதம் 30 |

## துயருற்றது போதும்!

*கிழிக்க ஒரு காலமுண்டு, தைக்க ஒரு காலமுண்டு.*

*பிரசங்கி 3:7*

ஒக்டோபர் 31 வியாழன்

இரத்தம் தோய்ந்த அங்கியை அடையாளம் கண்ட யாக்கோபு, மகன் மிருகத்தால் பீறுண்டுபோனான் என்று புலம்பி, தன் வஸ்திரங்களைக் கிழித்து, அரையில் இரட்டுக் கட்டிக்கொண்டு, அநேகநாள் தன் மகனுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தாராம். சவுலும் யோனத்தானும் செத்துப்போனதைக் கேட்ட தாவீதும் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, புலம்பி அழுது சாயங்காலம்வரைக்கும் உபவாசமிருந்தார். அந்த நாட்களிலே தங்கள் துயரங்களை இப்படியாக வெளிப்படையாகக் காட்ட இயலுமாயிருந்தது. அதற்காக யாக்கோபும், தாவீதும் வாழ்க்கை முழுவதும் அழுதுகொண்டே இருந்தார்களா? யாக்கோபு, யோசேப்பை உயிரோடே பார்க்கப்போனபோது என்ன உடுத்துப் போயிருப்பார்! தாவீதுதான் தன் வாழ்வில் தேவன் செய்த மகத்தான கிரியைகளைக் கண்டபோது எப்படிக் களிகூர்ந்திருப்பார்!

இன்று நமது சூழ்நிலை சற்று வித்தியாசமானது. வெளிப்படையாக துயரத்தை வெளிப்படுத்துவது கடினம். கணவனை இழந்துவிட்ட விதவை, தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, நாளாந்தம் வாழ்க்கைப் போராட்டத்தை நடத்தியாகவேண்டும். ஒரு பாடல், ஒரு புத்தகம், ஒரு சின்னக் காட்சி எதுவோ நாம் இழந்துபோனவைகளை அல்லது இழந்துபோனவரை ஞாபகப்படுத்தும்போது நமது உள்ளம் சுக்குநூறாய் உடைந்துவிடுகிறது. அதையும் மறைத்துக்கொண்டு அடுத்த காரியத்தைக் கவனித்துத்தான் ஆகவேண்டும். எது எப்படியிருந்தாலும், சாவின் அனுபவங்களுக்கூடாக நாம் கடந்து செல்லும்போது, கிழிக்கப்படுவது, அதாவது துயரப்பட்டு வாய்விட்டு அழுவது, எத்தனை ஆறுதலான வைத்தியம் என்பதை அதற்கூடாகக் கடந்து சென்றவர்கள் ஒத்துக்கொள்வார்கள். என் தாயார் இறந்தபோது, குழம்பிப்போயிருந்த தந்தையோடு நான் என்ன செய்வேன் என்று திகைத்தவேளை எனக்கு அழுகை ஒன்றுதான் சுகமான மருந்தாக இருந்தது. அதன்பின் அழுகையை நிறுத்திவிட்டேன். கர்த்தர் தமது ஆறுதலைத் தந்தார். என்னைச் சுமந்த தந்தையை நான் சுமக்க தேவன் பெலன் தந்தார்; தைரியத்தைத் தந்தார். துயரப்பட்ட நாட்கள் போய் மகிழ்ச்சியோடு கடமையைச் செய்ய ஞானத்தைத் தந்தார். அன்று நான் துயரப்பட்டபடியால்தான் இந்த சந்தோஷம் இன்று அதிக மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது. கிழிந்துபோனாலும் தைக்கப்படும்போது சந்தோஷமல்லவா!

துயரத்தில் தோய்ந்துபோயிருக்கும் தேவபிள்ளையே, துடைத்துவிட்டு எழுந்திரு. நீ தைக்கப்படும் காலம் வந்துவிட்டது. தாவீதுடன் சேர்ந்து, "நான் அமைதியாயிராமல் உம்மைப் பாடித் துதிக்கும்படி என் துயரத்தின் உடையைக் களைந்து மகிழ்ச்சியால் என்னை நிரப்பினீர்" என்று பாடுவோமா!

***சிந்தனைக்கு:*** நான் கிழிந்து அழிந்துபோகாமல், மறுபடியும் என் வாழ்வைத் தைத்து சீர்ப்படுத்த கர்த்தர் காலத்தை தந்ததால் அவரைத் துதிப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தா
விபரங்கள்

***சத்தியவசன வாசகர்களின் கவனத்திற்கு:***

***ஒரு வருடத்திற்கான சந்தா***

"அனுதினமும் தேவனுடன்" தியானநூலுக்கு மாத்திரம்:
இலங்கை, இந்தியாவில் உள்ளவர்களுக்கு - ரூ. 1,500.00
ஏனைய சகல நாடுகளில் உள்ளவர்களுக்கு - ரூ. 4,000.00

"சத்தியவசனம்" சஞ்சிகையுடன் "அனுதினமும் தேவனுடன்" தியானநூல் (இரண்டுக்கும் சேர்த்து)
இலங்கை, இந்தியாவில் உள்ளவர்களுக்கு - ரூ. 3,000.00
ஏனைய சகல நாடுகளில் உள்ளவர்களுக்கு - ரூ. 10,000.00

***உங்கள் சந்தா பணத்தை***

**இலங்கைக்குள் மணியோடர் மூலம் சந்தா பணம் அனுப்புவதாயின்:** "கொடுபட வேண்டிய இடம்" என்ற இடத்தில் சினமன் கார்டின்ஸ் (CINNAMON GARDENS POST OFFICE) என்றும், பணம் பெறுபவரின் பெயர் என்ற இடத்தில் (BACK TO THE BIBLE) என்றும் குறிப்பிட்டு அனுப்பவும். (வெளிநாட்டிலுள்ளவர்கள் இச்சேவையை பயன்படுத்த இயலாது).

**உள்நாடு மற்றும் வெளிநாட்டவர்கள் காசோலை மூலம் சந்தா பணம் அனுப்புவதாயின்:** (BACK TO THE BIBLE) என்ற பெயருக்கு காசோலை எழுதவும். (தயவுசெய்து சத்தியவசனம் என்றோ அல்லது எமது தனிப்பட்ட ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டோ காசோலை எழுதவேண்டாம் என அன்போடு கேட்டுக் கொள்கிறோம்).

***கிரடிட் அட்டை:*** http://www.backtothebible.lk/donateonline/

நீங்கள் சந்தா மற்றும் நன்கொடைகளை
மணியோடர் அல்லது காசோலை மூலமாக தபாலில் அனுப்பும்போது,
உங்களது பெயர், விலாசம், கணனி இலக்கம்
போன்ற விபரங்களை குறிப்பிட மறவாதிருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்த வேதாகமத்தை ஓராண்டிற்குள்
வாசித்து முடிப்பதற்கான கால அட்டவணை

| ஜூலை காலை | ஜூலை மாலை | | ஆகஸ்ட் காலை | ஆகஸ்ட் மாலை |
|---|---|---|---|---|
| 2நாளா. 21-23 | அப். 7:41-60 | 01 | யோபு 32-34 | அப். 27:21-44 |
| 2நாளா. 24,25 | அப். 8:01-25 | 02 | யோபு 35-38 | அப். 28 |
| 2நாளா. 26-28 | அப். 8:26-40 | 03 | யோபு 39-42 | ரோமர் 1 |
| 2நாளா. 29,30 | அப். 9:01-25 | 04 | சங் 1-7 | ரோமர் 2 |
| 2நாளா. 31,32 | அப். 9:26-43 | 05 | சங் 8-14 | ரோமர் 3 |
| 2நாளா. 33,34 | அப். 10:1-22 | 06 | சங் 15-18 | ரோமர் 4 |
| 2நாளா. 35,36 | அப். 10:23-48 | 07 | சங் 19-24 | ரோமர் 5 |
| எஸ்றா 1,2 | அப். 11 | 08 | சங் 25-30 | ரோமர் 6 |
| எஸ்றா 3,4,5 | அப். 12 | 09 | சங் 31-34 | ரோமர் 7 |
| எஸ்றா 6,7 | அப். 13:1-13 | 10 | சங் 35-37 | ரோமர் 8:1-17 |
| எஸ்றா 8,9 | அப். 13:14-39 | 11 | சங் 38-42 | ரோமர் 8:18-39 |
| எஸ்றா 10 | அப். 13:40-52 | 12 | சங் 43-48 | ரோமர் 9 |
| நெகே 1,2,3 | அப். 14 | 13 | சங் 49-52 | ரோமர் 10 |
| நெகே 4,5,6 | அப். 15:1-18 | 14 | சங் 53-58 | ரோம 11:1-12 |
| நெகே 7,8 | அப். 15:19-41 | 15 | சங் 59-65 | ரோம 11:13-36 |
| நெகே 9,10 | அப். 16:1-24 | 16 | சங் 66-69 | ரோமர் 12 |
| நெகே 11,12 | அப். 16:25-40 | 17 | சங் 70-73 | ரோமர் 13 |
| நெகே 13 | அப். 17 | 18 | சங் 74-77 | ரோமர் 14 |
| எஸ்தர் 1,2 | அப். 18 | 19 | சங் 78,79 | ரோமர் 15 |
| எஸ்தர் 3,4,5 | அப். 19:1-22 | 20 | சங் 80-85 | ரோமர் 16 |
| எஸ்தர் 6,7,8 | அப். 19:23-41 | 21 | சங் 86-89 | 1கொரி 1 |
| எஸ்தர் 9,10 | அப். 20:1-16 | 22 | சங் 90-94 | 1கொரி 2 |
| யோபு 1,2,3 | அப். 20:17-38 | 23 | சங் 95-101 | 1கொரி 3 |
| யோபு 4,5,6 | அப். 21:1-26 | 24 | சங் 102-104 | 1கொரி 4 |
| யோபு 7,8,9 | அப். 21:27-40 | 25 | சங் 105,106 | 1கொரி 5 |
| யோபு 10-13 | அப். 22 | 26 | சங் 107-110 | 1கொரி 6 |
| யோபு 14-16 | அப். 23 | 27 | சங் 111-117 | 1கொரி 7:1-24 |
| யோபு 17-20 | அப். 24 | 28 | சங் 118-119:72 | 1கொரி 7:25-40 |
| யோபு 21-23 | அப். 25 | 29 | சங் 119:73-176 | 1கொரி 8 |
| யோபு 24-28 | அப். 26 | 30 | சங் 120-131 | 1கொரி 9 |
| யோபு 29-31 | அப். 27 | 31 | சங் 132-138 | 1கொரி 10 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்த வேதாகமத்தை ஓராண்டிற்குள் வாசித்து முடிப்பதற்கான கால அட்டவணை

| | செப்டெம்பர் | | ஒக்டோபர் | |
|---|---|---|---|---|
| | காலை | மாலை | காலை | மாலை |
| 01 | சங். 139-144 | 1கொரி 11 | ஏசாயா 35-37 | எபேசியர் 3 |
| 02 | சங். 145-150 | 1கொரி 12 | ஏசாயா 38-40 | எபேசியர் 4 |
| 03 | நீதி. 1,2,3 | 1கொரி 13 | ஏசாயா 41-43 | எபேசியர் 5 |
| 04 | நீதி. 4-7 | 1கொரி 14:1-22 | ஏசாயா 44,45 | எபேசியர் 6 |
| 05 | நீதி. 8-10 | 1கொரி 14:23-40 | ஏசாயா 46-48 | பிலிப்பியர் 1 |
| 06 | நீதி. 11-13 | 1கொரி 15:1-19 | ஏசாயா 49-51 | பிலிப்பியர் 2 |
| 07 | நீதி. 14-16 | 1கொரி 15:20-34 | ஏசாயா 52-54 | பிலிப்பியர் 3 |
| 08 | நீதி. 17-19 | 1கொரி 15:35-58 | ஏசாயா 55-58 | பிலிப்பியர் 4 |
| 09 | நீதி. 20-22 | 1கொரி 16 | ஏசாயா 59-61 | கொலோ 1 |
| 10 | நீதி. 23-25 | 2கொரி 1 | ஏசாயா 62-64 | கொலோ 2 |
| 11 | நீதி. 26-28 | 2கொரி 2 | ஏசாயா 65,66 | கொலோ 3 |
| 12 | நீதி. 29-31 | 2கொரி 3 | எரேமி. 1-3 | கொலோ 4 |
| 13 | பிரசங்கி 1-3 | 2கொரி 4 | எரேமி. 4,5 | 1தெசலோ 1 |
| 14 | பிரசங்கி 4-6 | 2கொரி 5 | எரேமி. 6,7 | 1தெசலோ 2 |
| 15 | பிரசங்கி 7-9 | 2கொரி 6 | எரேமி. 8-10 | 1தெசலோ 3 |
| 16 | பிரசங்கி 10-12 | 2கொரி 7 | எரேமி. 11-13 | 1தெசலோ 4 |
| 17 | உன்னத 1-5 | 2கொரி 8 | எரேமி. 14-16 | 1தெசலோ 5 |
| 18 | உன்னத 6-8 | 2கொரி 9 | எரேமி. 17-19 | 2தெசலோ 1 |
| 19 | ஏசாயா 1,2 | 2கொரி 10 | எரேமி. 20-22 | 2தெசலோ 2 |
| 20 | ஏசாயா 3-5 | 2கொரி 11 | எரேமி. 23,24 | 2தெசலோ 3 |
| 21 | ஏசாயா 6-8 | 2கொரி 12 | எரேமி. 25,26 | 1தீமோத். 1 |
| 22 | ஏசாயா 9-10 | 2கொரி 13 | எரேமி. 27-29 | 1தீமோத். 2 |
| 23 | ஏசாயா 11-13 | கலாத்தியர் 1 | எரேமி. 30,31 | 1தீமோத். 3 |
| 24 | ஏசாயா 14-16 | கலாத்தியர் 2 | எரேமி. 32,33 | 1தீமோத். 4 |
| 25 | ஏசாயா 17-20 | கலாத்தியர் 3 | எரேமி. 34,35 | 1தீமோத். 5 |
| 26 | ஏசாயா 21-23 | கலாத்தியர் 4 | எரேமி. 36,37 | 1தீமோத். 6 |
| 27 | ஏசாயா 24-26 | கலாத்தியர் 5 | எரேமி. 38,39 | 2தீமோத். 1 |
| 28 | ஏசாயா 27-29 | கலாத்தியர் 6 | எரேமி. 40-42 | 2தீமோத். 2 |
| 29 | ஏசாயா 30-31 | எபேசியர் 1 | எரேமி. 43,44 | 2தீமோத். 3 |
| 30 | ஏசாயா 32-34 | எபேசியர் 2 | எரேமி. 45-48 | 2தீமோத். 4 |
| 31 | | | எரேமி. 49-50 | தீத்து 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சத்தியவசன வாசகர்களின் கவனத்திற்கு:*




## உங்கள் சந்தா பணத்தை

*வங்கி மூலம் சந்தா பணம் அனுப்புவதாயின்:*

**வெளிநாட்டிலுள்ளவர்களுக்கு:** வங்கி : NDB BANK, 103, Dharmapala Mawatha, Colombo 7 என்ற விலாசத்தில், BACK TO THE BIBLE பெயருக்கு, கணக்கு இலக்கம் : 101000086518 மற்றும் Swift code: NDBSLKLX க்கு எழுதவும்.

**இலங்கையிலுள்ளவர்களுக்கு:** வங்கி : HNB BANK, Cinnamon's Garden Branch, Dharmapala Mawatha, Colombo 7 என்ற விலாசத்தில், BACK TO THE BIBLE பெயருக்கு, கணக்கு இலக்கம் : 076010001921 க்கு எழுதவும்.

## *eZpayment:*

You can pay through the 'eZ Cash' easy-cash system from your Dialog mobile or eZ Cash service points. **Steps to follow:**

a. Dial #111# and you will receive a category
b. Select Category 6: Institutional Payment.
c. Enter 4-digit PIN number (This will be your own easy-cash PIN No.).
d. Thereafter it will ask for our code
e. Enter our code: BTTB
f. It will then ask you for an account number.
Type your phone number or BTTB reference number
g. Then type the amount that you wish to donate
h. Then send i. Then you will get a confirmation of your transaction

**நீங்கள் வங்கி மூலமாக சந்தா செலுத்திய பின் கடிதம் மூலம் அல்லது** sathiyavasanam@backtothebible.lk **என்னும்** e-mail **மூலம் சந்தாதாரரின் கணனி இலக்கத்துடன் பெயர், விலாசம், செலுத்திய தொகை போன்ற விபரங்களை எமக்கு அறியத்தருவது அவசியமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சத்தியவசன
நிறுவனமானது
'அனுதினமும் தேவனுடன்'
தியானநூல்
உட்பட பல்வேறு
ஊழியங்களையும்
உங்களுக்காக வழங்கி
வருகிறது....

- வேதாகம வார்த்தையைப் போதிக்கும் சஞ்சிகை
- புத்தகசாலை ஊழியம் / வெளியீடுகள்
- வானொலி ஊழியம்
- தொலைக்காட்சி ஊழியம்
- தலைவர்களுக்கான மாநாடுகள்
- வாலிபர் கருத்தரங்குகள்
- இணையத்தள ஊழியம்
- வேதபாட ஊழியம்
- சிறுவர், வாலிபர் ஊழியம்
- ஜெபம் மற்றும் ஆலோசனை ஊழியங்கள்
- அருட்பணி ஊழியம்
- விஷேட வெளிக்கள ஊழியங்கள்

BACK TO THE BIBLE
SRI LANKA
ජීවනාලෝකය சத்தியவசனம்


சத்தியவசனம்
த. பெ. 1012,
கொழும்பு, இலங்கை
+94 11 4691 500

நேரில் எமது முகவரி
*120A ,Dharmapala Mawatha,*
*Colombo 7, Sri Lanka.*


**எமக்காக ஜெபியுங்கள்! எம்மோடு கரங்கோருங்கள்!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org